457	கருஞ்சாம்பல் வாலாட்டி Grey Wagtail *Motacilla cinerea*	209
458	மஞ்சள் வாலாட்டி Western Yellow Wagtail *Motacilla flava*	209
459	எலுமிச்சை தலை வாலாட்டி Citrine Wagtail *Motacilla citreola*	209
460	கறுப்பு வெள்ளை வாலாட்டி White-browed Wagtail *Motacilla maderaspatensis*	210
461	வெள்ளை வாலாட்டி White Wagtail *Motacilla alba*	210
462	ரிச்சர்டு நெட்டைக்காலி Richard's Pipit *Anthus richardi*	211
463	வயல் நெட்டைக்காலி Paddyfield Pipit *Anthus rufulus*	211
464	கருஞ்சிவப்பு மலை நெட்டைக்காலி Long-billed Pipit *Anthus similis*	211
465	பிளீத் நெட்டைக்காலி Blyth's Pipit *Anthus godlewskii*	213
466	பழுப்பு மஞ்சள் நிற நெட்டைக்காலி Tawny Pipit *Anthus campestris*	213
467	நீலகிரி நெட்டைக்காலி Nilgiri Pipit *Anthus nilghiriensis*	213
468	மர நெட்டைக்காலி Tree Pipit *Anthus trivialis*	214
469	கரும்பச்சை முதுகு நெட்டைக்காலி Olive-backed Pipit *Anthus hodgsoni*	214
470	சிட்டுக்குருவி House Sparrow *Passer domesticus*	214

471	மஞ்சள் தொண்டை சிட்டுக்குருவி Yellow-throated Sparrow *Gymnoris xanthocollis*	215
472	கருங்கீற்று தூக்கனாங்குருவி Streaked Weaver *Ploceus manyar*	215
473	தூக்கனாங்குருவி Baya Weaver *Ploceus philippinus*	217
474	கருமார்பு தூக்கணாங்குருவி Black-breasted Weaver *Ploceus benghalensis*	217
475	சிவப்பு சில்லை Red Avadavat *Amandava amandava*	218
476	வெண் தொண்டைச்சில்லை Indian Silverbill *Euodice malabarica*	218
477	வெண்முதுகுச்சில்லை White-rumped Munia *Lonchura striata*	219
478	கருந்தொண்டை சில்லை Black-throated Munia *Lonchura kelaarti*	219
479	புள்ளிச்சில்லை Scaly-breasted Munia *Lonchura punctulata*	219
480	கருந்தலைச்சில்லை Tricolored Munia *Lonchura Malacca*	220
481	செங்கூம்பலகுச்சில்லை Common Rosefinch *Carpodacus erythrinus*	220
482	அரிதாகக் காணப்பட்ட பறவைகள்	223
483	ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பு முறையும், முக்கியத்துவமும்	228

1. கௌதாரி

Grey Francolin *Francolinus pondicerianus* 33 cm.

கருஞ்சிவப்பு தொண்டையும் மெல்லிய கறுப்பு கழுத்து வளையமும் உடலின் மேற்பகுதி மற்றும் கீழ்பகுதியும் சிறுகோடுகளுடனும். பழுப்பு நிற மேல் கண்கோடுகளுடன் காணப்படும். ஆண், பெண் உருவத்தில் வேறுபாடில்லை. ஆனால் பெண்ணிற்கு முள்முளைகள் இல்லை, ஆண் பறக்கும் போது செங்கல் நிறவாலும், கறுப்பு முதல் நிலை இறக்கை சிறகுகளும் தெளிவாக தெரியும். விவசாய நிலங்கள் வறண்ட புல்வெளிகள் மற்றும் முட்புதர்கள், உயர்ந்த மலைகாடுகளை தவிர்த்து தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் காணலாம்.

2. மஞ்சள்கால் குறுங்காடை

Yellow-legged Buttonquail *Turnix tanki* 15-16 cm.

Quail எனப்படும் குறுங்காடைகள் மிகச்சிறிய பறவைகள். இந்த இனத்தில் இயல்புக்கு மாறாக, பெண் பறவைகள் நல்ல நிறமுடன் அழகாகவும், பல துணவர்களோடு வாழும் தன்மை கொண்டவை. சிவந்த பிடரிப்பாகமும், கொண்டை வெண்ணிற பழுப்பும் கொண்டிருக்கும். ஆண் கருந்தலையும், புள்ளிகளுடைய உடலும் கொண்டு காணப்படும். அடைகாக்கும் பொறுப்பு ஆணைச் சார்ந்தது! அலகு மங்கிய மஞ்சள் நிறமும், கால் மற்றும் பாதம் நல்ல மஞ்சள் நிறமும் கொண்ட காடைகள் இவை. கண் வெள்ளையாக இருக்கும்.

3. வரிமார்பு குறுங்காடை

Barred Buttonquail *Turnix suscitator* 15 cm.

சிட்டுகுருவியை விட சற்று பெரிதான பறவைக்கு அலகு மற்றும் கால்கள் சாம்பல் நிறம் மற்றும் தெளிவான கறுப்பு பட்டைகள் கழுத்து பக்கங்களிலும் மார்பு மற்றும் இறக்கை இறகுகளில் காணப்படும். இளஞ்சிவப்பு மஞ்சள்-கருஞ்சிவப்பு விலா பக்கங்கள் மற்றும் வயிறு பட்டைகளோடு கூடிய மார்பில் இருந்து தனித்து காணப்படும். புதர்கள்,புல்வெளிகள் வயல் ஓரங்கள்.

4. கருங்காடை

Rain/Black-breasted Quail ***Coturnix coromandelica*** 18 cm.

ஆணின் தலையும், கழுத்தும் மிக தெளிவான கறுப்பு வெள்ளை வடிவமைப்புடனும், மார்புப்பகுதி கறுப்புடனும், விலாப் பகுதியில் நேர் கீற்றுடனும் காணப்படும். முதனிலை இறக்கை இறகுகள் பட்டைகளின்றி காணப்படும். மலைப் பாங்கான காடுகளில் காணப்படும்.

5. காட்டுப்புதர் காடை

Jungle Bush-Quail ***Perdicula asiatica*** 17 cm.

ஆண் பெண் இரண்டுமே சிகப்பு வெள்ளை கலந்த கோடுகளை தலையில் கொண்டிருக்கும் காடை. ஆண் பட்டைகளுடன் கூடிய அடிபக்கங்களும் கருஞ்சிகப்பு - மஞ்சள் கலந்த சிவப்பு நிற தொண்டையும், கருஞ்சிவப்பு புருவக்கோடுகள் வெள்ளை நிற ஓரங்கள், காது - மூடு தூவிகள் பழுப்பு நிறம், சிவந்த மஞ்சள் நிற வாலடியுடன் இருக்கும். பெண்ணிற்கு கருஞ்சிகப்பு லேசான மஞ்சள் நிறத்துடன் கூடிய அடிப்பக்கங்களும் கருஞ்சிவப்பு தொண்டை அடிப்பக்கங்களை விட வேறுபட்டு காணப்படும். தமிழகத்தில் பரவலாக ஒன்று அல்லது இரண்டு காணப்படும். காய்ந்த புல் மற்றும் வரண்ட இலையுதிர்காடுகள். வலசை வருவதில்லை. மூங்கில் காடுகள், சமவெளி காடுகளிலும், தமிழகத்தில் மேற்குதொடர்ச்சி மலை தொடர் களிலும் காணப்படும்.

6. வர்ண புதர்காடை

Painted Bush-Quail ***Perdicula erythrorhyncha*** 17 cm.

கரும்பழுப்பு நிறத்தில், சிவந்த அலகுடனும், கால்களுடனும் காணப்படும் காடை. ஆணுக்கு இவற்றுடன் வெள்ளைத் தொண்டையும் தலையில் வெள்ளைக் கோடும் காணப்படும். பெண்ணுக்கு இவை இல்லை, சிவந்த அடிவயிறு மட்டும் தெளிவாகத் தெரியும். கூட்டமாகத் திரியும் இவை காட்டுப் பாதைகளிலும் திறந்த புல்வெளிகளிலும் அதிகாலையிலும், அந்தியிலும் வந்து மண்குளியல் போடும். தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலை தொடர்களில் மட்டும் காணப்படும்.

7. **நீலமயில்**

Indian Peafowl *Pavo cristatus* ஆண் 180-230 cm. பெண் 90-100 cm.

ஆண் நீல நிற கழுத்து மற்றும் நெஞ்சுடனும், அழகான கண்ணாடி போன்ற வழவழப்புடன் கூடிய பச்சைநிற நீண்ட வால் இறகுகள் நிறைய கண்கள் போன்ற அமைப்புடன் இருக்கும். பெண்ணிற்கு வெண்மை நிற முகம் தொண்டை மற்றும் வயிற்று பகுதியுடன் நீண்ட வால் இறகுகள் இல்லாமல் இருக்கும். அடர்ந்த ஆற்று பகுதிகள் தாவரங்கள் உள்ள பகுதி, திறந்த சமவெளி காடுகள், நாட்டுப் புறங்களிலும் காணப்படும்.

8. **சிவப்பு சுண்டாங்கோழி**

Red Spurfowl *Galloperdix spadicea* 36 cm.

ஆண் பெண் இரண்டிற்கும் முகத்தோல்கள், கால்பாதங்கள் உட்பட சிவப்பாகவும் ஆணின்தலை, கழுத்து பழுப்பு சாம்பல் கலந்ததாகவும், உடல் கருஞ்சிவப்பாகவும் இருக்கும். பெண்ணின் மேல் பாகங்களில் கறுப்பு திட்டுகளும் கீழ்பகுதியில் பட்டை கோடுகளும் காணப்படும். உடல் முழுவதும் செம்பழுப்பு நிறமாக காணப்படும், கோழியினத்தை சேர்ந்தது. ஆண்களுக்கு முன் இறகு முள் 2 காணப்படும். பெண்ணிற்கு கிடையாது. ஆண் பெண் இரண்டிற்கும் மேல் தலையில் நீண்ட இறகுகள் கொண்டை போன்றும் இறகுகளை சிலிர்க்கும் போது தெரியும். குன்றிய காடுகளிலும், மலைகாடுகளில் 5000 அடி உயரம் வரைக்கும் காணப்படும்.

9. **வர்ண சுண்டாங் கோழி**

Painted Spurfowl *Galloperdix lunulata* 32 cm.

சிவப்பு சுண்டாங் கோழி போன்று இவற்றிற்கு இறகில்லா முகத்தோல்காணப்படும். ஆண் பெண் இரண்டிற்கும் அலகு, கால் பாதங்கள் கருமை, ஆணின் தலை கரும் பச்சை, பருமனான வெள்ளை புள்ளிகளுடன் கூடிய நெற்றியும், இளங்காவி நிற கீழ்ப்பகுதி. பெண் பறவை கரும்பழுப்பு நிறத்துடன், பழுப்பு நிற புருவக்கோட்டுடன் கூடிய நெற்றியும், வெளிர் மஞ்சள் நிறத்தில் தாடைபகுதி கோடுகளுடன் இருக்கும். ஆணிற்கு காலில் 2 முதல் 4 முட்களும், பெண்ணிற்கு

1. Grey Francolin

Balaji P B

2. Yellow-legged Buttonquail

CC Lonelyshripmp

3. Barred Buttonquail

Balaji P B

4. Rain Quail

Yuvaraj Patil

5. Jungle Bush-Quail

Byju H

6. Painted Bush-Quail

Balaji P B



7. Indian Peafowl

Balaji P B

8. Red Spurfowl

Balaji P B

கருஞ்சிகப்பு - மங்கலான பழுப்பு இளமஞ்சள் நிறத்தில் நெளி நெளியான மேல்பாகங்கள் இருக்கும். மலை அடிவார காடுகளில் இருந்து 4000 அடி உயரமுடைய காடுகள்.

10. காட்டுக்கோழி

Grey Junglefowl *Gallus sonneratii* 38 cm.

நமது வீட்டுக் கோழியின் முன்னோர். ஆண் வீட்டில் வளர்க்கும் சேவல் கோழியைப் போன்று இருக்கும். ஆணுக்கு தலையில் சதையாலான கொண்டை காணப்படும். செம்பழுப்புப் புள்ளிகள் மற்றும் சாம்பல் நிற கோடுகளுடைய உடல் என்று அழகிய அமைப்பில் காணப்படும். நீண்ட கழுத்து இறகுகள் மஞ்சள் தகடுகளாக முடியும் அமைப்பு கவர்ச்சிகரமாக இருக்கும். பெண் மங்கிய நிறத்தில் பெரும்பாலும் கறுப்பு வெள்ளையாக இருக்கும். அடிவயிற்றில் வெண்மை நிற கீறல் புள்ளிகள் காணப்படும். இரண்டுக்கும் மஞ்சள் நிறக் கால்கள் இருக்கும். தமிழ்நாட்டில் மேற்கு மலைத் தொடர்ச்சியில் மட்டும் காணப்படும் (7000 அடி உயரம் வரை).

11. பெரிய சீழ்க்கை வாத்து

Fulvous (Large) Whistling-Duck *Dendrocygna bicolor* 51 cm.

பெரும்பாலும் செம்பழுப்பு உடலும், நீண்ட கால்களும், நீண்ட சாம்பல்நிற அலகும் கொண்ட சீழ்க்கை ஒலி எழுப்பும் வாத்து. பறக்கும் போது வெள்ளைப் பட்டை அதன் கறுத்த வால் பகுதியில் தெளிவாகத் தெரியும். நெல் வயல்கள் மற்றும் நிறையத் தாவரங்கள் உள்ள நீர்நிலைகள் இவற்றின் விருப்பமான இடங்கள். பெரும்பாலும் வடதமிழ்நாட்டில் சமீப காலமாக, குறிப்பாக சென்னை பள்ளிக்கரணையில் காணப்படுகிறது.

12. சிறிய சீழ்க்கைசிரவி

Lesser Whistling-Duck *Dendrocygna javanica* 42 cm.

பெரிய சீழ்க்கை சிரவியை விட சிறியது மற்றும் அந்த வகையில் இருந்து சாம்பல்-மஞ்சள் கலந்த பழுப்பு நிற உச்சந்தலை, நன்றாக வரையறுக்கப்பட்ட கோடு பின்புற கழுத்தில் இருக்காது, பிரகாசமான பழுப்புநிற திட்டு முன்

இறைக்கையிலும், பழுப்புநிற வால் மேற்போர்வை இறகுகள் இருக்கும். சீழ்க்கை குரலில் சத்தமாக கத்தும். நன்னீர் ஈர நிலைகளில் காணப்படும். வலசை, அதிக தூரத்திற்கு செல்ல முடியாவிட்டாலும், குறுகிய தூரத்திற்கு இடம் பெயர்ந்து செல்லும்.

13. வரித்தலை வாத்து

Bar-headed Goose *Anser indicus* 71-76 cm.

வீட்டுவாத்தை விட இரட்டிப்பான அளவிலுள்ள இந்த வாத்துக்கு கறுப்பு பட்டையுடைய வெள்ளை தலை மற்றும் சாம்பல் நிற கழுத்துக்கு கீழே வெள்ளை கோடு இருக்கும். கறுப்பு முனையுடன் கூடிய மஞ்சள் நிற அலகு மற்றும் மஞ்சள் நிற கால்கள் இருக்கும். முழுவளர்ச்சியடையாததற்கு, கறுத்த சாம்பல் நிற உச்சந்தலை மற்றும் பின்புற கழுத்து இறகுகள் வெளுத்த இரும்பு-சாம்பல் நிறம், முன் இறக்கை வெளுத்த சாம்பல் நிறத்தில் இருக்கும். பெரிய ஆறுகள், அணைகள் மற்றும் ஏரிகளில் காணப்படும். சீனா, மங்கோலிய நாடுகளில் இருந்து வரும் வலசை பறவை. உலகிலேயே அதிக உயரத்தில் பறக்கும் பறவை.

14. சாம்பல் வாத்து

Greylag Goose *Anser anser* 70-80 cm.

வலசை வரும் இந்த பெரிய வாத்தினம் வீட்டில் வளர்க்கும் பெரிய வாத்தைப் போல ஆனால், மங்கிய சாம்பல் நிற உடலுடன் காணப்படும். சிறகின் நுனி இறகுகள் வெண்மையாய் இருக்கும். ரோஜா நிற அலகு இனம்பிரித்துக் காட்டும். தமிழ்நாட்டிற்கு அரிதாக சமீப காலத்தில் காணப் பட்டுள்ளது.

15. செண்டு வாத்து

Knob-billed Duck/Comb Duck *Sarkidiornis melanotos* 56-76 cm.

வீட்டு வாத்தை விட மிகபெரிய வாத்து. வெள்ளை தலை, கறுப்பு வெள்ளை புள்ளிகளுடன் கூடிய மேற்பாகங்கள் மற்றும் முற்று பெறாத குறுகிய கறுப்பு மார்பு பட்டை, மேல் கீழ் (இறகுகள்) இறக்கைகள் கறுப்புநிறம். ஆணிற்கு சதையுடன்

9. Painted Spurfowl



10. Grey Junglefowl

11. Fulvous Whistling-Duck

12. Lesser Whistling-Duck

13. Bar-headed Goose

14. Greylag Goose

15. Knob-billed Duck



16. Ruddy Shelduck

கூடிய தலை பகுதி செண்டுபோல் தோற்றமளிக்கும். பெண்ணிற்கு இது இல்லாமல் இருக்கும் மற்றும் பெண்ணானது சிறியதாக மங்கிய மேல்பாகங்களுடன் இருக்கும். மரங்கள் நிரம்பிய கிராமப்பகுதியில் உள்ள குட்டைகள். தமிழ்நாட்டிலேயே இனவிருத்தி செய்யும் பெரியவாத்து.

16. செவலை வாத்து

Ruddy Shelduck ***Tadorna ferruginea*** 61-67 cm.

சீனா, மங்கோலியா பகுதியிலிருந்து வலசை வரும் வாத்து. ஆண், பெண் சிவந்த மஞ்சள் நிறம், மஞ்சள் கலந்த பழுப்பு நிற தலை, வெள்ளை நிற மேல் இறக்கைகள் மற்றும் கீழ் இறக்கைகள் பறக்கும் போது கருமை நிற பகுதியுடன் வேறுபட்டிருக்கும், இனப்பெருக்க காலத்தில் ஆணின் கழுத்தில் கறுப்பு பட்டை இருக்கும். பொதுவாக நன்னீர் நிலைகளில் காணப்படும். வடதமிழ்நாட்டில் அரிதாகக் காணப்பட்டுள்ளது.

17. பஞ்சு வாத்து

Cotton Pygmy-goose ***Nettapus coromandelianus*** 30-37 cm.

ஆணிற்கு அகலமான வெள்ளை பட்டை இறக்கையின் குறுக்கே இருக்கும். பெண்ணிற்கு இறக்கையின் ஓரங்களில் வெள்ளை நிறம் இருக்கும். ஆணிற்கு வெள்ளை தலை மற்றும் கழுத்து, கறுப்பு உச்சந்தலை மற்றும் மார்பு கறுப்புப்பட்டையுடன் இருக்கும். ஆண் மற்றும் பெண்ணிற்கு கறுத்த கோடு கண்ணின் குறுக்கே காணப்படும். தாவரங்களுடன் கூடிய ஈர நிலங்களில் காணப்படும்.

18. நீலச்சிறகு வாத்து / பனங்கொட்டை சிரகி

Garganey ***Anas querquedula*** 37-41 cm.

வலசை வரும் மிகச்சிறிய வாத்துகளில் ஒன்று. ஆணிற்கு கண்ணிற்கு பின்னால் வெள்ளை கோடு மற்றும் பழுப்பு நிற மார்பு பகுதி சாம்பல் நிற பக்கங்களிலிருந்து வேறுப்பட்டு காணப்படும். முன் இறக்கையில் பறக்கும் போது நீல-சாம்பல் நிற பகுதி காணப்படும். பெண்ணிற்கு, பெண் கிளுவையை விட நிறைய கோடுகளுடன் கூடிய தலையும், பிரதானமான புருவக்கோடுகளும், வெள்ளை கண் அலகிடைப்பகுதி

வெளுத்த கோடு - கறுத்த கண் கோட்டிற்கு கீழேயும் மற்றும் கறுத்த கன்னக் கோடு காணப்படும். வெளுத்த சாம்பல் நிற முன் இறக்கையும் மற்றம் பரந்த வெள்ளை ஓரங்கள் பறக்கும் போது காணப்படும். ஈர நிலங்கள். ஆர்டிக் பகுதியிலிருந்து வலசை வரும் பறவை. ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் உள்ள குளங்களில் அதிகம் காணப்படும்.

19. தட்டை அலகு வாத்து

Northern Shoveler ***Spatula clypeata*** 44-52 cm.

இந்த வலசை வரும் வாத்துக்கு கரண்டி போன்ற குவிந்து விரிந்த அலகினால் இந்தப் பெயர். பருவகால ஆண் கரும்பச்சை தலையும், வெள்ளை மார்பு, செம்பழுப்பு வயிறும் மற்றும் விலாப்பகுதியும் கொண்டது. மஞ்சள் நிறக் கண்கள். பெண் வாத்து பழுப்பு நிறத்தில் மற்ற வாத்துகள் போல இருந்தாலும் தட்டையான அலகினாலும் முன்னிறகுகள் சாம்பல் நிறத்தில் இருப்பதாலும் எளிதில் இனம் பிரிக்கப்படும். கால்களும் பாதங்களும் ஆரஞ்சு நிறத்தில் இருக்கும். அலகு வெளிறிய மஞ்சள் நிறத்தில் இருக்கும். தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான நீர்நிலைகளில் காணப்படும்.

20. கறுப்பு வால் வாத்து

Gadwall ***Mareca strepera*** 39-43 cm.

வலசை வலம் மற்றொரு துளையும் (dabbling) வாத்து. பருவ ஆண் சாம்பல் நிறமும் கறுத்த வாலும், செம்பழுப்பு இறகுகளும் கொண்டது. சிறகு வண்ணத் திட்டு வெள்ளையாக காணப்படும். இது பறக்கும் போதும், அமர்ந்திருக்கும் போதும் தெரியும். பெண் பறவை பழுப்பு நிறத்தில் இருந்தாலும், மூக்கிலுள்ள ஆரஞ்சு நுனியால் மற்ற இனங்களிலிருந்து அறியலாம். வட தமிழ்நாட்டில் பள்ளிக்கரணை சதுப்புநில பகுதியில் ஒரு சில எண்ணிக்கையில் காணப்படுகிறது.

21. சந்தனத் தலை வாத்து

Eurasian Wigeon ***Mareca penelope*** 45-51 cm.

நீரில் துளையும் வலசை வாத்து. பருவ ஆண் வாத்து சாம்பல் நிற பக்கவாட்டு இறகுகளும், கறுத்த வால் பகுதியும், கொண்டு

வெள்ளை நிறத் திட்டும் கரும்பச்சை பட்டையும் கொண்டு இருக்கும். இப்பட்டை பறக்கும் போதும் அமர்ந்திருக்கும் போதும் நன்கு தெரியும் நீண்ட சீழ்க்கை ஒலி (Whistle) மூலம் இவை இருப்பதை அறியலாம். தமிழகத்தின் பெரும்பாலான நீர்பரப்புகளில் காணப்படும்.

22. புள்ளி அலகுத் தாரா

Indian Spot-billed Duck *Anas poecilorhyncha* 58-63 cm.

நீரில் துளையும் வாத்து. நம் நாட்டில் காணப்படும் வாத்து. மேல் அலகின் அடிப்பாகத்தில் காணப்படும். ஆரஞ்சு சிவப்புப் புள்ளியால் இந்தப் பெயர் பெற்றது புள்ளிகளுடைய உடலில் கரும்பச்சை இறகுப் பட்டை ஒளிரும் வெண் இறகுகளுக்கு இடையில் காணப்படும். கால்களும் பாதமும் ஆரஞ்சு அல்லது நல்ல சிவப்பு நிறமாக இருக்கும். மூன்றாம் நிலை இறகுகள் நல்ல வெள்ளையாக இருக்கும்.

23. ஊசிவால் சிரவி (வாத்து)

Northern Pintail *Anas acuta* 51-56 cm.

வீட்டில் வளர்க்கும் வாத்துக்கு சமமான அளவுடைய வலசை வரும் வாத்து. வெள்ளை விழி மேற்கோடு ஆண், பெண் இரண்டிற்கும் காணப்படும். நீரில் துளையும் வாத்து சாம்பல் நிற அலகும் கால்களும் கொண்டது. பறக்கும் போது நீல வண்ண இறகுப் பட்டை வெள்ளைக் கோடுகளுக்கு இடையில் பளீரெனத் தெரியும். மூன்றாம் அடுக்கு இறகில் வெள்ளை நுனி மிதக்கும் போது நன்கு தெரியும். தமிழ்நாட்டில் அனைத்து வகையான நீர் நிலைகளிலும் பரவலாகக் காணப்படுகிறது.

24. கிளுவை

Green-winged (Common) Teal *Anas crecca* 34-38 cm.

ஆர்க்டிக் பகுதியிலிருந்து வலசை வரும் இந்த சிறிய வாத்திற்கு ஆணின் தலை செம்பழுப்பு மற்றும் பச்சை நிற பட்டை கண்ணிற்கு பின்னேயும், தோழை மூடிய சிறகுகளில் வெள்ளை கோட்டுடனும் மற்றும் வால் கீழ் போர்வை இறகுகளில் மஞ்சள் நிற திட்டும் காணப்படும். பெண்ணிற்கு சீரான தலையும், பெண் நீலச்சிறகு வாத்தைப் போல் வெளுத்த கண்

Balaji P B

17. Cotton Pygmy-Goose

Balaji P B

18. Garganey

Balaji P B

19. Northern Shoveler

Balaji P B

20. Gadwall

Balaji P B

21. Eurasian Wigeon

Balaji P B

22. Indian Spot-billed Duck

Balaji P B

23. Northern Pintail



Udayakumar B

24. Green-Winged Teal

அலகிடைப்பகுதியில் புள்ளி இருக்காது. பறக்கும் போது ஆண், பெண் இரண்டிற்கும் பரந்த வெள்ளை பட்டை பெரிய போர்வை இறகுகளை ஒட்டி காணப்படும். மேலும் வண்ண சிறகுப் பட்டை பச்சை நிற பட்டைகளுடன் குறுகிய வெள்ளை ஓரங்களுடன் இருக்கும். பெண்ணின் முன் இறக்கை பழுப்பு நிறம். நன்னீர் ஈரநிலங்களிலும், ஆழம் குறைந்த உவர்நீர் நிலைகளிலும் காணப்படும்.

25. செங்களயன்

Red-crested Pochard *Netta rufina* 53-57 cm.

வலசை வருபவை. ஆண் மற்றும் பெண் இரண்டிற்கும் பெரிய சதுர தலை. பறக்கும் போதும், உட்கார்ந்து இருக்கும் போதும் உருவம் துளையும் வாத்து போல் தோன்றும். ஆணிற்கு, பழுப்பு சிவப்பு - சிவந்த மஞ்சள் தலை, கறுப்பு தலை மற்றும் மார்பு வெள்ளை பக்கங்கள். பெண்ணின் வெளுத்த கன்னங்கள் பழுப்பு நிற உச்சந்தலையில் இருந்து வேறுபட்டு இருக்கும். ஆண் பெண் இரண்டு பறக்கும் போது பெரிய வெள்ளை இறகுகள் மேல் இறக்கைகளிலும் மற்றும் வெள்ளை கீழ் இறக்கைகளும் இருக்கும். ஏரிகள் மற்றும் பெரிய ஆறுகளில் காணப்படும். இந்த வாத்து வடதமிழ்நாட்டில் மட்டும் குறைந்த எண்ணிக்கையில் காணப்பட்டுள்ளது.

26. களியன்

Common Pochard *Aythya ferina* 42-49 cm.

வலசை வருபவை. பெரிய மற்றும் குவிந்த தலை. வெளுத்த சாம்பல் பறக்கும் இறகுகள் மற்றும் சாம்பல் முன் இறக்கைகள். ஆண் தலை செம்பழுப்பு, மார்பு கறுப்பு, மேல்பாகங்கள் மற்றும் பக்கங்கள் கறுப்பு. பெண் பழுப்பு நிற தலை மற்றும் மார்பு வெளுத்த பழுப்பு - சாம்பல் நிற மேல் பாகங்கள் மற்றும் பக்கங்களிலிருந்து வேறுபட்டு இருக்கும். வெள்ளை வால் கீழ் இறகுகள் இருக்காது, கறுத்த கண் மற்றும் சாம்பல் நிற பட்டையுடன் கூடிய அலகு. ஏரிகள் மற்றும் பெரிய ஆறுகள். சமீபத்தில் தென்தமிழ்நாட்டில் நாங்குநேரி வரைக்கும் நூற்றுக்கணக்கில் வந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

27. வெள்ளைக் கண் வாத்து

Ferruginous Duck (Ferruginous Pochard)

Aythya nyroca 38-42 cm.

இந்தியாவிற்கு அரிதாக வருகை தரும் இந்த வாத்து தமிழ்நாட்டிலும் மிக அரிதாகக் காணப்படும் வலசை வாத்து. நீரில் மூழ்கி நீந்தும் தன்மை உடையது. நல்ல சாக்லேட் கலர், தலை மார்பு மற்றும் விலாப் பகுதியும், வாலின் அடிப்பாகம் நல்ல வெண்மையும் கொண்டது. ஆண் வெள்ளை கண்ணும், பெண் கறுத்த கண்ணும் உடையவை. இந்த வாத்து தமிழ் நாட்டில் ஒன்று இரண்டு இடங்களில் காணப்பட்டுள்ளது.

28. குடுமி வாத்து

Tufted Duck *Aythya fuligula* 40-47 cm.

வட இந்தியாவிற்கு அதிக எண்ணிக்கையில் வலசை வரும் வாத்தாக இருந்தாலும், தமிழ்நாட்டில் அரிதாகக் காணப்படும். நீரில் மூழ்கும் தன்மை உடையது. பருவகால ஆண் வாத்து முற்றிலும் கறுத்த நிறமும், விலாப் பகுதிகளில் மட்டும் வெள்ளையும் கொண்டது. வெளிறிய நீல நிற அலகும், பொன் மஞ்சள் கண்களும் கொண்டது. தலையில் உள்ள சிறிய குடுமி போன்ற இறகமைப்பால் இந்தப் பெயர் பெற்றது. கரைவெட்டி பறவைகள் சரணலாயத்தில் கூட்டமாகக் காணப்பட்ட தகவல் உண்டு. பொதுவாக நன்னீர் நிலைகள், அணைக்கட்டுகளில் காணப்படும்.

29. கழுத்துசுற்றி

Eurasian Wryneck *Jynx torquilla* 16-17 cm.

சாம்பல் நிறத்துடன், மங்கலான பழுப்பு மஞ்சள் நிறத்துடன் இருக்கும். பிடரியிலிருந்து கரும்பட்டைக் கோடுகள் தோள்ப்பட்டையை சார்ந்த பகுதி நோக்கி செல்லும் மற்றும் நீண்ட பட்டைகளோடு கூடிய வால். தலையை 360° கோணத்தில் சுழற்றக் கூடியது. முட்புதர், சமவெளி காடுகள், சாகுபடி நில ஓரங்களில் காணப்படும். வலசை வரும் பறவை.

30. குட்டி மரங்கொத்தி

Speckled Piculet *Picumnus innominatus* 10 cm.

முதுகு மற்றும் கன்னங்கள் மஞ்சள் பச்சை, முன்நெற்றி சிவப்பு கலந்த கருமை, குட்டையான கறுப்பு வெள்ளை வால், என்று மிகச் சிறிய பூங்கொத்தி அளவிலான ஒரு மரங்கொத்தி. பெரும்பாலும் காடுகளில் மட்டும் காணப்படும்.

31. கரும்புள்ளி மரங்கொத்தி

Heart-spotted Woodpecker *Hemicircus canente* 16 cm.

ஆண் பெண் இரண்டிற்கும் பிரதான தொண்டை, மிகச்சிறிய வால், கறுப்பு மற்றும் வெள்ளை சிறகுகள், இதய வடிவ கறுப்பு புள்ளிகள் மூன்றாம் நிலை இறக்கை இறகுகளில் காணப்படும். ஆண் கறுப்பு நிற கொண்டையும், பெண் வெள்ளை நிற கொண்டையும், சிறிய பறவைக்கு கறுப்பு புள்ளிகளோடு கூடிய கொண்டையும் இருக்கும். பரந்த சமவெளி காடு, காப்பி தோட்டங்களில் காணப்படும். தமிழ்நாட்டில் மேற்குதொடர்ச்சி மலைக் காடுகளில் மட்டும் காணப்படும்.

32. சின்ன மரங்கொத்தி

Brown-capped/Indian Pygmy Woodpecker
Yungipicus nanus 13 cm.

சிட்டுக்குருவியை விட சிறிய மரம் கொத்திக்கு சற்று மஞ்சள் கலந்த பழுப்பு நிறக் கொண்டை மற்றும் வெள்ளை கண்-கோடு, பழுப்பு நிற மேல் பாகங்களில், சாம்பல் நிறத்திலிருந்து பழுப்புநிற வெள்ளை கீழ் பாகங்கள் (பழுப்பு நிற கோடுகள்) கொண்டிருக்கும். ஆணிற்கு உச்சந்தலையின் பக்கங்களில் சிகப்பு கீறல் காணப்படும். மலைக்காடுகளில் உள்ள மரங்களில், குறிப்பாக மேற்குமலைத் தொடர்ச்சியில் காணப்படும்.

33. மஞ்சள் நெற்றி மரங்கொத்தி

Yellow-crowned Woodpecker
Leiopicus mahrattensis 17-18 cm.

ஆண் பெண் இரண்டிற்கும் முன் தலை மஞ்சள் மற்றும் முன் கொண்டை வெள்ளை புள்ளிகளோடு கூடிய மேல் பாகங்கள் ஒடுங்கி வரையறுக்கப்பட்ட மீசை கோடு, அழுக்கான

Udhayakumar B

25. Red-crested Pochard

Rama Neelamegam

26. Common Pochard

Rama Neelamegam

27. Ferruginous Duck

CC Adrian Snood

28. Tufted Duck

Balaji P B

29. Eurasian Wryneck

Balaji P B

30. Speckled Piculet

Balaji P B

31. Heart-spotted Woodpecker

Balaji P B

32. Brown-capped Pygmy Woodpecker

கீழ்பக்கங்களில் கனமான, ஆனால் சிதறிப் பரவிய கோடுகளாக கொண்டிருக்கும். அடிவயிற்றியில் சிகப்பு திட்டும் மற்றும் மைய வால் இறகில் தெளிவான வெள்ளை பட்டைகளும் காணப்படும். திறந்த மரங்கள் நிறைந்த இடங்கள் சிதறிய மரங்களோடு கூடிய திறந்த நாட்டுப் பகுதியிலும் காணலாம்.

34. பெரிய பொன்முதுகு மரங்கொத்தி

Greater Flameback (Large Golden-backed Woodpecker)
Chrysocolaptes guttacristatus 33 cm.

சிறு பொன்முதுகு மரம் கொத்தியை போன்று உருவம். ஆனால் அதைவிட பெரிய அளவு மற்றும் நீண்ட அலகு கழுத்தின் பின்புறம் மேல் தோள்பட்டை சார்ந்த பகுதி வெள்ளையும், கறுப்பு அல்லது வெள்ளை புள்ளிகளோடு இருக்கும். கறுப்பு மார்பில் வெள்ளை புள்ளிகள் தெளிவாக பிரிக்கப்பட்ட மீசைகோடு (தெளிவான வெள்ளை நீண்ட முட்டை வடிவ மையத்துடன்) வெளுத்த கண்கள் மற்றும் நான்கு விரல்கள். பெண்ணிற்கு வெள்ளை புள்ளிகளுடைய கறுப்பு கொண்டை, ஆணிற்கு கருஞ்சிவப்பு தலை கொண்டை. காடு, தோப்புகள், உயரம் குறைந்த மலைக் காடுகளிலும் காணப்படும்.

35. வெண்பிடரி மரங்கொத்தி

White-naped Woodpecker *Chrysocolaptes festivus* 29 cm.

கழுத்து பின்புறம் மற்றும் தோள்பட்டை சார்ந்த பகுதி வெள்ளை, கறுப்பு தோளை மூடிய இறகும், நன்றாக பிரிக்கப்பட்ட மீசைக்கோடுகள் வால் பின்புறம் கறுப்பு, பெண்ணிற்கு மஞ்சள் கொண்டையும், ஆணிற்கு சிகப்பு கொண்டையும், அடிப்பாகம் செதில்கள் போன்ற அமைப்புடனும் இருக்கும். பரந்த சமவெளி காடு கலந்த மரங்களுடைய பகுதிகளில் காணப்படும். தமிழ்நாட்டில் மலைப்பகுதிகளில் அதிகம் காணலாம்.

36. கருங்சிவப்பு மரங்கொத்தி

Rufous Woodpecker *Micropternus brachyurus* 25 cm.

உடல் முழுவதும் சாக்லெட் கலர் பூசியது போன்ற நிறமுடையது. சிறிய கறுப்பு அலகு மற்றும் கரடு முரடான மயிரடர்ந்த தொண்டை கருங்சிவப்பு-பழுப்பு, பிரதான கறுப்பு

வளையத்துடன் காணப்படும். ஆணிற்கு காது மூடு தூவிகளில் சிகப்பு திட்டு இருக்கும். தமிழ்நாட்டில் மலைப்பகுதிகளில் அதிகம் காணலாம்.

37. பொன்முதுகு மரங்கொத்தி

Common Flameback (Golden backed Three-toed Woodpecker) ***Dinopium javanense*** 28-30 cm.

பெரிய பொன் முதுகு மரம் கொத்தியை விட சிறிய அளவு மற்றும் சிறிய அலகு புள்ளியில்லாத கறுப்பு நிற பின்புற கழுத்து, மைய தொண்டைக்கு கீழே கறுப்பு புள்ளியோடு கூடிய ஒழுங்கற்ற கோடு, தெளிவான பிரிக்கும் மீசைக்கோடு இருக்காது. பெண்ணின் கொண்டை அழகான வெள்ளை புள்ளிகளோடு காணப்படும். ஆணிற்கு கருஞ்சிகப்பு கொண்டை இருக்கும். மலைகாடுகளில் காணப்படும்.

38. சிறிய பொன்முதுகு மரங்கொத்தி

Black-rumped Flameback (Lesser Goldenbacked Woodpecker) ***Dinopium benghalense*** 26-29 cm.

முதுகில் தங்கநிறம் போன்ற மஞ்சள் நிறத்தையும், கறுப்பு கண் கோடு மற்றும் தொண்டை (கருத்த மீசை கோடு இருக்காது). இறக்கை இறகுகளில் புள்ளிகள் மற்றும் கறுத்த வால் மற்றும் பிட்டம், பின்புறம் கன்னத்தில் இரண்டு வெள்ளைக்கோடுகள், ஆணிற்கு முன் நெற்றியிலிருந்து பிடரி வரைக்கும், பெண்ணிற்கு பிடரி மட்டும் சிவப்பாக சிறிய கொண்டை தென்படும். சிறிய காடு, தோப்பு, திறந்தவெளி நாட்டுப்புற மரங்கள்.

39. மஞ்சள்பிடரி சிறுமரங்கொத்தி

Lesser Yellownape ***Picus chlorolophus*** 27 cm.

மஞ்சள் நிற கொத்தான பிடரி மற்றும் கீழ் பாகங்களில் வெள்ளை புள்ளிகள், ஆண் - முக்கியமாக நல்ல சிவந்த நிறமுள்ள கொண்டையும் மற்றும் மீசையுடன் காணப்படும், பெண்ணிற்கு ஆணை விட குறைந்த சிவந்த நிறமுள்ள கொண்டை மற்றும் நல்ல சிவந்த நிறமுள்ள மீசைகள் இருக்காது. முதுகு மற்றும் மேல் இறகு பாகங்கள் மஞ்சள் கலந்த கரும் பச்சை நிறத்துடன்

காணப்படும். பரந்த சமவெளி காடுகளிலும், உயரம் குறைந்த மலைகளிலும் காணப்படும்.

40. செதில்வயிற்று மரங்கொத்தி

Streak-throated Woodpecker *Picus xanthopygaeus* 30 cm.

சின்னானைவிட பெரிய அளவிலான மரங்கொத்திக்கு மஞ்சள் கலந்த பச்சை செதில்கள் மேல் பாகங்களிலும், வெள்ளை புருவக்கோடு மற்றும் மீசைக் கோடு இருக்கும். ஆணிற்கு சிகப்பு உச்சந்தலை இருக்கும். பெண் பறவைக்கு கறுப்பு சாம்பல் நிற கோட்டுடன் இருக்கும். மார்பு, தொண்டைப் பகுதிகள் செதில் போன்ற அமைப்பைக் கொண்டிருக்கும். பரந்த சமவெளி காடுகள், மலைக்காடுகளில் 3000 அடி வரை உயரம் வரை காணலாம்.

41. பெரிய கறுப்பு மரங்கொத்தி

White-bellied Woodpecker (Great Black Woodpecker)
Dryocopus javensis 48 cm.

எல்லா மரங்கொத்திகளைவிட மிகப்பெரியது. ஆண், பெண் இரண்டுமே வெள்ளை நிற வயிற்றுடன் இருக்கும். ஆணிற்கு சிகப்பு கொண்டையும் மற்றும் மீசை கோடு பின்புற கொண்டை வரை நீண்டிருக்கும். சிகப்பு நிறம் பெண்ணிற்கும் இருக்கும். பறக்கும் போது வெள்ளை வால் அடிப்புறமும், வெள்ளை கீழ் இறக்கை இறகுகள் மற்றும் முதனிலை இறக்கை இறகுகளில் வெள்ளை திட்டு காணப்படும். உயர்ந்த மரங்களுடன் கூடிய மலைக்காடுகளில் காணப்படும்.

42. செந்நெற்றி குக்குருவன்

Malabar Barbet (Crimson-throated Barbet)
Psilopogon malabaricus 17 cm.

சிறிய அளவிலான குக்குருவனுக்கு நன்றாக சிவந்த முகம், தொண்டை, மார்பு, தலை மற்றும் மார்புக்கு கீழ் நீல நீறப்பட்டை காணப்படும். புள்ளியில்லாத பச்சைநிற வயிறு மற்றும் விலாப் பக்கங்கள் கொண்டிருக்கும். முழு வளர்ச்சியடையாத பறவை மங்கிய நிறத்தில் ஆனால் தலை அமைப்பு முழு வளர்ச்சி அடைந்ததைப் போல் காணப்படும்.



Balaji P B

33. Yellow-crowned Woodpecker

Balaji P B

34. Greater Flameback

Balaji P B

35. White-naped Woodpecker

Balaji P B

36. Rufous Woodpecker

Balaji P B

37. Common Flameback

Balaji P B

38. Black-rumped Flameback

Balaji P B

39. Lesser Yellownape

Balaji P B

40. Streak-throated Woodpecker

செம்மார்பு குக்குருவனிலிருந்து சிகப்பு தொண்டை, முன்பரப்புகளால் பிரித்து காணலாம். குரலானது செம்மார்பு குக்குருவனைப் போல் இருக்கும். மிருதுவாக விரைவாக விரைந்து வெளியிடும் பூப், பூப், பூப். திறந்த மரங்கள் நிறைந்த மேற்குத் தொடர்ச்சி மலையில் மட்டும் காணலாம்.

43. செம்மார்பு குக்குருவன்

Coppersmith Barbet *Psilopogon haemacephalus* 17 cm.

சிறிய குக்குருவன் நன்றாக சிவந்த தலை மற்றும் மார்பு திட்டு கண்ணிற்கு மேல், கீழே மஞ்சள் திட்டுகள் மஞ்சள் தொண்டை மற்றும் கோடுடைய அடிப்பாகங்கள். முழு வளர்ச்சியடையாத பறவைக்கு சிகப்பு தலையிலும் மார்பிலும் இருக்காது. குரலானது உலோக சப்தமாக திரும்ப திரும்ப ஒரே மாதிரியாக குக், குக் என ஒலிக்கும். திறந்த மரங்கள் உள்ள நாட்டுபுறம், தோப்புகள், மரங்கள் அடங்கிய தோட்டங்களிலும் காணலாம்.

44. பழுப்பு தலை குக்குருவன்

Brown-headed Barbet (Large Green Barbet)
Psilopogon zeylanicus 27 cm.

பச்சை பழுப்பு நிற தலை மற்றும் மார்பில் அழகான கோடுகள், பழுப்பு தொண்டை, சிவந்த மஞ்சள் நிற வளைந்த வட்ட விழித் தோல் மற்றும் அலகு (இனப்பெருக்க காலத்தில்) வெள்ளை புள்ளிகளோடு கூடிய இறக்கை இறகுகள், வயிறு மற்றும் பக்கவிலாவில் கோடுகள் பெரும்பாலும் இருக்காது. குரல் ஒரே மாதிரியாக கொட்ரு கொட்ரு அல்லது குட்ருக், குட்ருக் என ஒலிக்கும். குறைந்த உயரத்திலுள்ள மலைக்காடு, மரங்கள் நிறைந்த பகுதி மற்றும் குடியிருப்பு அருகில் உள்ள மரங்களில் காணலாம்.

45. வெண்கன்ன குக்குருவன்

White-cheeked Barbet (Small Green Barbet)
Psilopogon viridis 23 cm.

மேல்பக்கும் கரும்பச்சை நிறத்திலும், பழுப்பு அலகு புருவக்கோடு மற்றும் கன்னங்கள் வெள்ளை நிறத்திலும், பழுப்பு நிற உச்சந்தலை மற்றும் பிடரியிலிருந்து

வேறுபட்டிருக்கும். வெள்ளை தொண்டை மற்றும் தெளிவான வெள்ளை கோட்டுடன் கூடிய மார்பு. மரங்கள் நிறைந்த பகுதி, மேற்கு மலை தொடர்ச்சி காடுகளில் 3000 அடிக்கு மேல் உள்ள பகுதியில் இருக்கும்.

46. பெரிய இருவாயன்

Great Hornbill (Great Pied Hornbill)

Buceros bicornis 95-105 cm.

ஆணிற்கு மிகப்பெரிய மஞ்சள் தலைகவசம் மற்றும் அலகு, வெள்ளை நுனிவாலிற்கு முன்பு கறுப்பு பட்டை காணப்படும். கழுத்து வெள்ளை இறக்கை மேல்புறம் மற்றும் பின்புற ஓரங்கள் வேறுபடுகின்ற மஞ்சள் கறையுடன் இருக்கும். ஆண் பெண் ஒரே மாதிரியாக இருந்தாலும் பெண்ணிற்கு விழி வண்ணப்படலம் வெள்ளை (ஆணிற்கு சிகப்பு) மற்றும் தலைகவசம் முடிவில் கறுப்பு நிறம் இருக்காது. உயர்ந்த மலைக்காடுகளில் காணலாம். தமிழ்நாட்டில் மேற்கு தொடர்ச்சி மலைக்காடுகளில் மட்டும் காணப்படும்.

47. சாம்பல் இருவாயன்

Indian Grey Hornbill *Ocyceros birostris* 56 cm.

சின்ன இருவாயன். செம்பட்டை பழுப்பு-சாம்பல்நிற மேல்பாகங்களுடன் இருக்கும் நீண்ட வால் முடியும் இடத்தில் கறுப்பு நிற பட்டையோடும் நீண்ட மைய சிறுகோடு இருக்கும். மற்றும் இறக்கையின் முடியும் பின்புற ஓரங்கள் வெள்ளை நிறம் பிரதானமான கறுப்பு தலை கவசம் மற்றும் அலகின் அடிப்பாகம் பரந்த கறுப்பு நிறம். பெண் ஆணை போல் இருக்கும், ஆனால் சிறிய அலகு மற்றும் தலை கவசத்துடன் காணப்படும். ஒரே இடத்தில் வசிப்பவை, மலை அடிவாரங்கள், காடுகள், தோப்புகள் மற்றும் பழ மரங்கள் உள்ள தோட்டங்கள்.

48. மலபார் இருவாயன்

Malabar Grey Hornbill *Ocyceros griseus* 45 cm.

முழுவளர்ச்சியடையாததற்கு சிகப்பு மஞ்சள், மஞ்சள் அலகு தலை (தொப்பி போன்ற அமைப்பு) இன்றி காணப்படும். சாம்பல்-வெள்ளை புருவக்கோடு கருஞ்சாம்பல் மேல்பாகங்கள்,



Balaji P B

41. White-bellied Woodpecker

Balaji P B

42. Malabar Barbet

Balaji P B

43. Coppersmith Barbet

Balaji P B

44. Brown-headed Barbet

Balaji P B

45. White-cheeked Barbet



Lajapathi Roy

46. Great Hornbill



Balaji P B

47. Indian Grey Hornbill

Balaji P B

48. Malabar Grey Hornbill

சாம்பல் இருவாயணைவிட உச்சந்தலை மற்றும் தலையின் பக்கவாட்டில் வெழுத்த கோடுகள் சிறிய கருஞ்சாம்பல் வால் மற்றும் கருஞ்சிவப்பு வால் கீழ் இறகுகள். பெண்ணிற்கு கீழ் தாடையில் கறுப்பு நிற திட்டு காணப்படும். முழுவளர்ச்சி அடையாத பறவைக்கு கருஞ்சிவப்பு ஓரங்கள் உள்ள மேல்பாகங்கள் இருக்கும், திறந்த வெளிகளுடைய மேற்கு மலை தொடர்ச்சியிலுள்ள இலையுதிர் மற்றும் பசுமை மாறாக் காடுகளில் மட்டும் காணப்படும்.

49. மலபார் கறுப்புவெள்ளை இருவாயன்

Malabar Pied-Hornbill ***Anthracoceros coronatus*** 65 cm.

கோடாரி போன்ற தலை கவசத்துடன் பெரிய பழுப்பு திட்டு மேல் பக்க ஓரத்தில் காணப்படும். வால் இறகுகள் வெள்ளை நிறம் (முழுவளர்ச்சி அடையாததிற்கு அடிபாகம் கறுப்பு வெள்ளைநிறம்) கொண்ட பெரிய கழுகு அளவிலுள்ள மொத்தத்தில் கறுப்பு வெளிவால் இறகுகளும் அடிப்பாகம் வெண்மையாக இருக்கும். இறக்கை முடியும் பின்புற ஓரம், அகலமான அலகு இளமஞ்சள் நிறத்திலும், அலகு கொம்பு கறுப்பு நிறத்திலும் காணப்படும். திறந்த காடு மற்றும் கிராமங்களுக்கு அருகே உள்ள உயர்ந்த பழ மரங்கள் அடங்கிய தோட்டங்களில் காணலாம்.

50. மலபார் தீக்காக்கை

Malabar Trogon ***Harpactes fasciatus*** 31 cm.

ஆணிற்கு தலை மற்றும் மார்பு கறுப்பு வெளிர் சிகப்பு அடிப்பாகங்கள் மற்றும் கறுப்பு-சாம்பல் நெளி நெளியான இறக்கை இறகுகள். பெண்ணிற்கு கறுத்த இலவங்கப்பட்டை நிற தலை மற்றும் மார்புடனும், வெழுத்த இலவங்கப்பட்டை அடிப்பாகங்கள் மற்றும் பழுப்பு-மங்கலான மஞ்சள் நிற நெளிநெளியான இறகுகள். முழுவளர்ச்சியடையாத ஆணிற்கு கறுப்பு தலை மற்றும் மார்பு, இலவங்கப்பட்டை நிற அடிப்பாகங்கள். இறகுகள் முழுவளர்ச்சியுற்ற பறவைகளில் சாம்பல் நிறத்தில் நெளி நெளியாக இருக்கும். அடர்ந்த இலையுதிர், பசுமை மாறாக்காடுகள், 7000 அடி உயரம் வரைக்கும் உள்ள மலைகாடுகளில் காணலாம்.

51. கொண்டலாத்தி

Common / Eurasian Hoopoe ***Upupa epops*** 31 cm.

மஞ்சள் கலந்த சிகப்பு-மங்கலான மஞ்சள் நிற கறுப்பு மற்றும் வெள்ளை இறக்கைகள், வால் மற்றும் உச்சியிலுள்ள இறகு கொத்து விசிறி போல் கறுப்பு முனையுடன் இருக்கும். குரல் திரும்பத் திரும்ப மென்மையாக பூப், பூப், பூப் என ஒலிக்கும். திறந்த நாட்டு புறம், பயிர் நிலம் மற்றும் கிராமங்கள். மலை காடுகளில் 7000 அடி உயரம் வரைக்கும் காணலாம்.

52. ஐரோப்பிய பனங்காடை

European Roller ***Coracias garrulus*** 31 cm.

சாதாரணப் பனங்காடையை விடக் கூடுதல் நீல நிறமுடைய வயிறு மற்றும் அடிப்பாகங்கள், கருமை கலந்த நீல நிறச் சிறகுகள், கனத்த தலை மற்றும் அலகு பனங்காடையிலிருந்து வேறுபடுத்தும். வலசை வரும் மற்றொரு அழகிய பறவை. அரிதாக நீர் நிலைகள், மலை அடிவாரங்களில் காணலாம்.

53. பனங்காடை

Indian Roller ***Coracias benghalensis*** 33 cm.

பிடரி மற்றும் அடிப்பாகங்கள் கருஞ்சிகப்பு பழுப்பு, காது மூடுதூவிகள் மற்றும் தொண்டையில் கோடுகள், தோள்ப்பட்டை சார்ந்த பகுதி பச்சை நிறம். பறக்கும் போது முதன்மை இறக்கை இறகுகளின் குறுக்கே வெளிர் நீல பட்டை, கருநீல பட்டை வால் முடியும் இடங்களில் காணப்படும். மொத்தமாக நீலம், சாம்பல் வெள்ளை கலந்த ஒரு அழகிய பறவை. திறந்த மரவெளி தோப்புகள் மற்றும் தோட்டங்கள், வறண்ட விளை நிலங்களில் காணலாம். ஐந்து மாநிலங்களுக்கு மாநில பறவையாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள பறவை. வலசை வருவதில்லை.

54. பருத்த அலகு பனங்காடை

Oriental Dollarbird ***Eurystomus orientalis*** 28 cm.

முழுவளர்ச்சியுற்ற பறவை கரும்பச்சை நிறமுடையது. ஆனால் தூரத்தில் இருந்து பார்க்கும் போது கறுப்பாக காணப்படும். பனங்காடையை விட சற்று சிறியது. சிகப்பு அலகு மற்றும் கண்

வளையம் பறக்கும் போது வெளிர் நீல திட்டு முதன்மை இறக்கை இறகுகளில் காணப்படும். வெப்பமான காடு, இலையுதிர்காடுகள் மற்றும் காட்டினிடையே உள்ள வெட்டவெளியிலும், சமவெளி பகுதிகளில் (எப்போதாவது) காணப்படும்.

55. சிறிய நீல மீன்கொத்தி

Common Kingfisher (Small Blue Kingfisher)
Alcedo atthis 16 cm.

சிட்டுகுருவியை விட சற்றே பெரிதான இந்த மீன் கொத்தியின் வளர்ச்சியடைந்த பறவைக்கு காது மூடுதூவிகள் மஞ்சள் கலந்த சிகப்பு நிறம், தோளை மூடிய இறகுகள் மற்றும் இறக்கைகள் வெளிர் நீலக்கோடும், செம்பழுப்பு நிறத்திலும் கீழ்பக்கத்திலுள்ள இளம் கருநீலம் குளிர் காலத்தில் வலசை வரும் நீல அலகு மீன்கொத்தியுடன் ஒப்பிடும் போது குறைந்த பச்சை நிற மேல்பாகங்கள். திறந்த நாட்டுப்புறத்தில் உள்ள தூய்மையான நீர்களில் காணப்படும்.

56. குட்டை மீன்கொத்தி

Black-backed Dwarf-Kingfisher (Oriental Dwarf Kingfisher) ***Ceyx erithaca*** 14 cm.

சிறிய அளவிலான மீன் கொத்திக்கு மஞ்சள் கலந்த சிகப்பு தலையுடன் ஒளிரும் ஊதா நிறம் வேறுபட்ட கோணங்களில் இருந்து பார்க்கும் போது மாறக் கூடியதாக இருக்கும். மாறக்கூடிய நீலக்கோடுகளையுடைய கறுப்பு மேல்பாகங்கள். முழுவளர்ச்சியடையாதது மங்கிய நிறத்தில் வெளறிய மேல்பாகங்களுடன் (மஞ்சள் சிகப்பு மார்பட்டையுடன்) மற்றும் சிகப்பு -மஞ்சள் அலகுடன் காணப்படும். பரந்த சமவெளி காட்டின் நிழலான ஓடைகளிலும், மலைக் காடுகளிலும் காணப்படும்.

57. பருத்த அலகு மீன்கொத்தி

Stork-billed Kingfisher ***Pelargopsis capensis*** 38 cm.

பெரிய அளவிலான மீன்கொத்தி மிகப்பெரிய சிகப்பு அலகுடன் காணப்படும். தலை, கழுத்து அடிப்பாகம் பழுப்பு கலந்த

Balaji P B

49. Malabar Pied Hornbill

Udhayakumar

50. Malabar Trogan

Balaji P B

51. Eurasian Hoopoe

Balaji P B

52. Eurasian Roller

Balaji P B

53. Indian Roller

Rama Neelamegam

54. Oriental Dollarbird

Balaji P B

55. Common Kingfisher

Balaji P B

56. Oriental Dwarf-Kingfisher

மஞ்சள், தொப்பி மஞ்சள் கலந்த சிகப்பு, மங்கலான மஞ்சள் நிற தோள் மற்றும் அடிப்பாகங்கள், நீல மேல் பாகங்கள். கால் அடர்சிகப்பு. ஓடும் ஆறுகள் மற்றும் ஓடைகள், சதுப்பு நிலக்காடுகளில் காணப்படும்.

58. வெண்மார்பு மீன்கொத்தி

White-throated (White-breasted) Kingfisher

Halcyon smyrnensis 28 cm.

தொண்டை மற்றும் மைய மார்பு வெள்ளை நிறம், தலை மற்றும் பெரும்பாலும் கீழ்பாகங்கள் செம்பழுப்பு நிறத்திலும், மேல்பாகங்கள் வெளிர் நீலம். பறக்கும் போது இறக்கையில் பிரதானமான வெள்ளை பட்டை காணப்படும். அகன்ற கூர்மையான கருஞ்சிகப்பு அலகு, இளஞ்சிகப்பு கால்கள் கொண்டிருக்கும். பயிர்த் தோட்டங்கள், காட்டு ஓரங்கள் தோட்டங்கள் மற்றும் ஈர நிலங்களில் காணப்படும். தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் காணப்படும்.

59. கருந்தலை மீன்கொத்தி

Black-capped/White collared Kingfisher

Halcyon pileata 30 cm.

வலசை வரும் பறவை. கறுப்புத் தொப்பி, வெள்ளை தோள், சிகப்பு கலந்த நீல மேல் பாகங்கள், வெழுத்த மஞ்சள் கலந்த சிகப்பு கீழ்பாகங்களை கொண்டிருக்கும். பறக்கும் போது வெள்ளை இறக்கை பட்டை காணப்படும். சிகப்பு அலகு, வெள்ளை தொண்டை, மார்பு பகுதி, தோளின் கறுப்பு பகுதி சிறகுகளை மூடியிருக்கும். கழுத்தில் வெண் வளையம் காணலாம். நிலங்கள் மற்றும் கடற்கரையோரம் உள்ள புதர் மற்றும் சதுப்புநிலங்களில் காணலாம்.

60. சிறிய கறுப்பு வெள்ளை மீன்கொத்தி

Pied Kingfisher *Ceryle rudis* 31 cm.

கறுப்பு-வெள்ளை மீன்கொத்தி, உச்சியில் உள்ள இறகு கொத்து பிரதானமாக காணப்படும். பெண்ணிற்கு ஒற்றை மார்பு பட்டை (ஆணிற்கு இரண்டு) கறுத்த கோடுகளாலான மேல்பாகங்கள். அடிக்கடி நீர்பரப்புக்கு மேலே மீனை தேடி அலையும் மெதுவாக

ஓடும் ஆறுகள், ஓடைகள் மற்றும் திறந்த நாட்டுப்புற குட்டைகள், சதுப்பு நிலங்களில் காணலாம்.

61. நீலக்காது மீன்கொத்தி

Blue-eared Kingfisher *Alcedo meninting* 16 cm.

காது மூடுதூவிகள் நீலசிறிய மீன் கொத்தியை விட ஆழ்ந்த நீல மேல்பாகங்கள், ஆழ்ந்த மஞ்சள் கலந்த சிகப்பு அடிப்பாகங்கள் இருக்கும். முழுவளர்ச்சியடையாத பறவைக்கு மஞ்சள் கலந்த சிகப்பு காது மூடுதூவிகள் சிறிய நீல மீன்கொத்திக்கு போன்று இருக்கும். ஆனால் மற்ற எல்லா நிறங்களும் முழுவளர்ச்சியடைந்ததற்கு போல இருக்கும். அடர்ந்த காடுகளில் உள்ள ஓடைகளில் காணலாம். வலசை வரும் மீன்கொத்தி.

62. காட்டு பஞ்சுருட்டான் Blue-bearded Bee-eater

Nyctyornis athertoni 31-34 cm.

சதுர வால் உடைய பெரிய பஞ்சுருட்டான், நீல நிற தாடை இறகு, வயிறு மற்றும் விலாபக்கங்கள் மஞ்சள்-மங்கலான இளம்மஞ்சள் நிறத்துடன் பச்சைநிற கோடுகள் கொண்டு இருக்கும். பரந்தசமவெளி காடுகளின் ஓரங்கள் மற்றும் திறந்த காடு, தமிழ்நாட்டில் பெரும்பாலும் மேற்குதொடர்ச்சி மலையில் தான் காணப்படுகின்றன.

63. சிறிய பச்சை பஞ்சுருட்டான்

Green Bee-eater

Merops orientalis 16-18 cm.

நீல நிற கன்னங்கள் உள்ள சிறிய பஞ்சுருட்டான், தொண்டை திட்டு நிறம் கறுப்பு மற்றும் உச்சந்தலை வரை தங்க மஞ்சள் நிற ஜொலிப்பு, நீண்ட மைய இறகுகள் உள்ள பச்சை வால். முழுவளர்ச்சி அடையாத பறவையின் உச்சந்தலை மற்றும் பிடரி பச்சை நிறம் பச்சை நிற தொண்டை திட்டு இருக்காது. சதுர முடிவுள்ள வால். நீண்ட மைய இறகுகளுடன் இருக்கும். சிதறிய மரங்கள் உள்ள திறந்த நாட்டுப்பறம் மலை அடிவாரங்கள். தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும் காணலாம்.

Balaji P B

57. Stork-billed Kingfisher

Balaji P B

58. White-throated Kingfisher

Renuka Vijayaraghavan

59. Black-capped Kingfisher

Balaji P B

60. Pied Kingfisher



Balaji P B

61. Blue-eared Kingfisher

Balaji P B

62. Blue-bearded bee-eater

Balaji P B

63. Green Bee-eater

Balaji P B

64. Blue-cheeked Bee-eater

64. நீலக்கன்ன பஞ்சுருட்டான்

Blue-cheeked Bee-eater *Merops persicus* 24-26 cm.

நமது ஊரில் காணப்படும் பச்சை பஞ்சுருட்டானை விடப் பெரியது. அரிதாக வலசை வருவது. கன்னத்தில் நீலம், நீண்ட பச்சை நிற மைய வால் மற்றும் கறுப்புக் கண்கோடு என மாறுபடும். கூட்டமாகக் காணப்படும். பொதுவாக மலைகாடுகளில் மற்றும் தமிழ்நாடுகளில் காணப்படுகிறது.

65. நீல வால் பஞ்சுருட்டான்

Blue-tailed Bee-eater *Merops philippinus* 23-26 cm.

சிறிய பச்சை பஞ்சுருட்டானை விட பெரியதாகவும் பச்சை நிற தொண்டை, உச்சந்தலை மற்றும் பிடரி, நீல நிற மைய இறகுகளுடன் வால் பச்சை மேல்பாகங்கள் பழுப்பு மற்றும் நீல கீழ்பாகங்கள். முழுவளர்ச்சியடையாதது வளர்ந்ததை போல் இருந்தாலும் வெளிறியதாக இருக்கும். நீண்ட மைய வால் இறகுகள் இருக்காது. தண்ணீர்க்கு அருகே மற்றும் திறந்த மரங்கள் நிறைந்த நாட்டுப்புறம், மலை அடிவாரங்களில் காணப்படும். வலசை வரும் பறவை.

66. ஐரோப்பிய பஞ்சுருட்டான்

European Bee-eater *Merops apiaster* 26-30 cm.

மஞ்சள் தொண்டை, கறுப்பு மேல்பாகங்கள், நீல உச்சந்தலை மற்றும் தோள்பட்டை சார்ந்த பகுதி செம்பழுப்பு. தோளை மூடிய இறகுகள் தங்க-மஞ்சள் நிறம். கறுப்புத் தொண்டை திட்டு காணப்படும். முழுவளர்ச்சியடையாதது வளர்ந்ததை விட மங்கிய நிறம், ஆனால் செம்பழுப்பு உச்சந்தலை மற்றும் நன்றாக வரையறுக்கப்பட்ட மஞ்சள் தொண்டையுடன் காணப்படும். வலசை வரும் அரிய பறவை.

67. செந்தலை பஞ்சுருட்டான்

Chestnut-headed Bee-eater *Merops leschenaulti* 18-20 cm.

உச்சந்தலை பிடரி மற்றும் தோள்பட்டை சார்ந்த பகுதி செங்கல் பழுப்பு நிறத்திலும், தொண்டை மஞ்சள் நிறத்துடன் தறிபரவிய கறுப்பு தொண்டை திட்டுடன் இருக்கும். வால் சிறிய கிளையாக பிரிந்து நீண்ட மைய வால் இறகுகள் இருக்காது.

முழுவளர்ச்சியடையாத பறவை முழு வளர்ச்சியடைந்தது போன்றிருந்தாலும் மங்கலாக இருக்கும். ஆனால் சிலவற்றில் உச்சந்தலையும் சிலவற்றில் செங்கல் பழுப்பு உச்சந்தலை மற்றும் பிடரி கரும்பச்சையாக இருக்கும். பெரும்பாலும் மலைக்காடுகளில் 3000 அடி உயரம் வரைக்கும் காணப்படும். தப்பித்தவறி ஏதேனும் ஒன்று சமவெளி பகுதிகளில் தென்படும்.

68. பெரிய செண்பகம்

Greater Coucal *Centropus sinensis* 48 cm.

குயிலை விட சற்று பெரியதுமான செங்கல் பழுப்பு நிற மேல்பகுதியையும், மிக சீரான பளிச்சென்று செங்கல் பழுப்பு நிற இறக்கைகள். ஏனைய பாகங்கள் கறுப்பு நிறத்தில் காணப்படும். தலை வால், தொண்டை மார்பு வயிறு, விலா பக்கங்கள் கறுப்பு நிறத்தில் காணப்படும். உயர்ந்த புல்வெளி மற்றும் பயிர்தொழில் உள்ள அடர்ந்த பகுதி, மனிதன் குடியிருப்பு பகுதிகளிலும் காணப்படும்.

69. செவ்வலகு செண்பகம்

Sirkeer Malkoha *Taccocua leschenaultia* 42 cm.

குயிலின் அளவிலான செண்பகம் போன்ற பறவை. வளைந்த செம்பழுப்பு மஞ்சள் நுனியுடைய சிகப்பு அலகு, வெள்ளை ஓரங்கள் உடைய கறுத்த காது மூடுதூவிகள், எடுப்பான வெள்ளை நுனியுடைய நீண்ட வால். மேல்பாகம் இளம்பச்சை கலந்த பழுப்பு முட்புதர் மற்றும் உலர்ந்த இடங்களில் உள்ள வேலமரம், மலை அடிவாரங்களில் காணப்படும். தமிழ்நாட்டில் கொஞ்சம் அரிதாகத்தான் காணப்படும்.

70. நீலமுக செண்பகம்

Blue-faced Malkoha *Phaenicophaeus viridirostris* 39 cm.

குயிலின் அளவை விட சற்றே சிறிதான செம்பழுப்பு நிறம் பச்சை, அலகு பச்சை, கண் திட்டு நீலம், எடுப்பான வெள்ளை நுனியுடைய வால். புதர்கள் மற்றும் மலையடிவார காடுகள், தோட்டங்களிலும் காணப்படும்.

71. கொண்டைக் குயில்

Chestnut-winged Cuckoo *Clamator coromandus* 47 cm.

குயிலின் அளவிலான இந்த பல வண்ண குயில் பிராதனமான கறுப்பு உச்சிக்கொண்டை இறகுகள், வெள்ளை கழுத்துப்பட்டை, மற்றும் செண்பகத்தை போன்ற செங்கல்பழுப்பு இறக்கைகள் கொண்டு இருக்கும். முழுவளர்ச்சி அடையாதத்திற்கு கருஞ்சிகப்பு விளிம்புகள் உள்ள மேல்பாகங்கள் இருக்கும். நீண்ட அடுக்குகளாலான கறுப்பு வால். உலோக ஜொலிக்கும் கறுப்பு முதுகு. தொண்டை, நாடியை தவிர அனைத்து அடிபாகங்களும் வெண்மையாக இருக்கும். பரந்த சமவெளி காடுகளுக்கு வலசை வரும் குயில்.

72. சுடலைக் குயில்

Pied Cuckoo (Jacobin Cuckoo) *Clamator jacobinus* 33 cm.

வளர்ந்ததற்கு பிரதானமான கறுப்பு மற்றும் வெள்ளை நிறம். உச்சிக்கொண்டை, இருக்கும். முழுவளர்ச்சியடையாத பறவைக்கு உச்சி கொண்டை இறகுகள் சிறியதாகவும், பழுப்பு மேல் பாகங்கள், மற்றும் மிகவும் மங்கலான பழுப்பு இளமஞ்சள் நிற கீழ்பாகங்கள். பரந்த சமவெளி காடு, நிறைந்த மரங்கள் உள்ள பகுதிகளில் காணப்படும்.

73. குயில்

Asian Koel *Eudynamys scolopaceus* 43 cm.

ஆணிற்கு உடல் முழுவதும் கறுப்பு நிறமாகவும், கரும்பச்சை நிறத்துடன் பச்சை அலகுடனும், சிகப்பு கண்களுடனும் காணப்படும். பெண்ணிற்கு வெள்ளை சாம்பல் புள்ளிகள் மற்றும் பட்டைகள் இருக்கும். தோட்டங்கள் மற்றும் அடர்ந்த காடுகள், முட்புதர்களில் காணப்படும். தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் (உயர்ந்த மலைக்காடுகளை தவிர) காணப்படும்.

74. செம்பழுப்புவரிக்குயில்

Banded Bay Cuckoo *Cacomantis sonneratii* 24 cm.

வெள்ளை புருவங்கோடுகள், அழகான வெள்ளை பட்டையுள்ள கீழ்பாகங்கள், மற்றும் அலகு மற்றும் ஒழுங்கான கறுத்த

Balaji P B

65. Blue-tailed Bee-eater

Balaji P B

66. European Bee-eater



Balaji P B

67. Chestnut-headed Bee-eater

Balaji P B

68. Greater Coucal

Renuka Vijayaraghavan

69. Sirkeer Malkoha

Balaji P B

70. Blue-faced Malkoha

Rama Neelamegam

71. Chestnut-winged Cuckoo

Balaji P B

72. Pied Cuckoo

பட்டையுடைய மேல்பாகங்கள். தமிழ்நாட்டிற்கு குறைந்த எண்ணிக்கையில் வலசை வருபவை.

75. சாம்பல்வயிற்று குயில்

Grey-bellied Cuckoo *Cacomantis passerinus* 23 cm.

முழுவளர்ச்சியுற்ற பறவை சாம்பல் நிறத்தில் வெள்ளை வாலடி மற்றும் வால் கீழ் இறக்கைகளுடன் காணப்படும். கரும்பழுப்பு பருவ பெண்ணிற்கு கறுத்த பட்டைகளோடு கூடிய வெள்ளை கீழ்பாகங்கள், செம்பழுப்பு வரிகுயில் போல் வெள்ளை புருவக்கோடுகள் இருக்காது. மேல்பாகங்கள் பிரகாசமான கருஞ்சிகப்பு உச்சந்தலையுடன் நெருக்கமற்றப் பட்டைகள் பிடரியில் காணப்படும். வாலில் பட்டைகள் இல்லை. முழுவளர்ச்சியடையாதது சாம்பல் நிறத்தில் வெழுத்த பட்டைகள் கீழ்பாகங்களில் அல்லது கரும்பழுப்பு பெண்ணை போல் அல்லது இடைப்பட்டதாக இருக்கும். சீழ்க்கை குரலில் பாடும். தோப்புகள் மற்றும் திறந்த காடு, மலை அடிவாரத்திற்கு வலசை வருபவவை.

76. கரிச்சான் குயில்

Fork-tailed Drongo-Cuckoo *Surniculus dicruroides* 25 cm.

கரிச்சான் போன்ற இந்த கருங்குயிலுக்கு முழு கறுப்பு நிறம், அதில் வெள்ளை கீறல்கள் உடைய வால் கீழ் இறக்கை இறகுகள். கீழ்நோக்கி வளைந்த அழகான அலகு, வால் ஓரங்கள் நெளிநெளியாக இருக்கும். முழுவளர்ச்சியடையாத பறவை வெள்ளைப்புள்ளிகள் காணப்படும். கரிச்சானை போன்ற நீளபிளவு பட்டவால், உயரும் சீழ்க்கை குரலில் பாடும். காடுகளின் ஓரங்கள், திறந்தவெளி காடுகள் மற்றும் தோப்புகளிலும், தமிழ்நாட்டில் அரிதாகவும் காணப்படும்.

77. பெரிய அக்காகுயில்

Large Hawk-Cuckoo *Hierococcyx sparverioides* 38 cm.

அக்கா குயிலை விட பெரியதாகவும், பழுப்பு நிற மேல்பாகங்களுடன் திடமான கோடுகள் உடைய கீழ்பாகங்களையும், அகலமான வால் பட்டைகளுடன் காணப்படும். முழுவளர்ச்சியடையாத பறவைக்கு கோடுகள்

உடைய விலாப்பக்கங்கள் மற்றும் அகலமான வால் பட்டை. முழுவளர்ச்சியடைந்த பறவைக்கு கறுத்த சாம்பல் தலை. அடர்ந்த காடுகள் குறிப்பாக மலைகாடுகளில் காணப்படும்.

78. அக்காகுயில்

Common Hawk-Cuckoo ***Hierococcyx varius*** 34 cm.

ராஜாளியை போன்று தோற்றமுடைய இந்த குயிலுக்கு பழுப்பு நிற மேல்பாகங்களுடனும், கீழ்பாகங்களில் நிறைய கருஞ்சிகப்பு, வயிறு மற்றும் விலாபக்கங்களில் வேறுபாடில்லாத பட்டைகள், மற்றும் குறுகிய வால் பட்டைகள் இருக்கும். முழுவளர்ச்சியடைந்த பறவைக்கு சாம்பல் தலை, முதுகு, மஞ்சள் கண்வளையம் காணப்படும். முழுவளர்ச்சியடையாத பறவைக்கு புள்ளிகளுடைய விலாபக்கங்கள் மற்றும் குறுகிய வால்பட்டைகள் இருக்கும். மரங்கள் நிறைந்த நாட்டுப்புறம் மற்றும் மலைக்காடுகள். குறுகிய தூரத்திற்கு வலசை வரும் வகைளும் இருக்கின்றன.

79. சிறுகுயில்

Lesser Cuckoo ***Cuculus poliocephalus*** 25 cm.

சாம்பல் வயிற்று குயிலை விட பெரியதாக இருக்கும், கரும்பழுப்பு பருவ பெண்ணிற்கு பிரகாசமான கருஞ்சிகப்பு மற்றும் மங்கிய கோடுகள், உச்சந்தலை மற்றும் பிடரியில் காணப்படும். செம்பழுப்பு பருவ ஆணிற்கு செங்கல் நிற பழுப்பு மற்றும் கறுப்பு கலந்த கோடுகளுடன் காணப்படும். மஞ்சள் கண்வளையம் இருக்கும், காடு மற்றும் நிறைய மரங்கள் உள்ள நாட்டுப்புறங்களில். வலசை வரும் இனம்.

80. வரிக்குயில்

Indian Cuckoo ***Cuculus micropterus*** 33 cm.

பழுப்பு நிறத்திலிருந்து சாம்பல் நிற மேல்பாகங்கள் மற்றும் வால். கீழ்பாகங்களில் அகலமான பட்டைகள், மற்றும் குறிப்பிடத்தகுந்த வெள்ளை பட்டைகள், புள்ளிகளுடைய வால், இளைய பறவைக்கு அகலமான மற்றும் ஒழுங்கற்ற வெள்ளை ஓரங்கள் உள்ள சிறகுகள். உச்சந்தலை மற்றும் பிடரியில் காணப்படும், தோளை மூடிய இறகுகள் மற்றும்

Balaji P B

73. Asian Koel

Thirumoothy N V

74. Banded Bay Cuckoo

Balaji P B

75. Grey-bellied Cuckoo

Balaji P B

76. Fork-tailed Drongo-Cuckoo

Balaji P B

77. Large Hawk-Cuckoo

Balaji P B

78. Common Hawk-Cuckoo

Balaji P B

79. Lesser Cuckoo

Rama Neelamegam

80. Indian Cuckoo

இறக்கை இறகுகளில் வெள்ளை ஓரங்கள். வலசை வரும் பறவை. காடு மற்றும் மரங்கள் நிறைந்த நாட்டுப்புறங்களில்.

81. அக்காக் குயில்

Common Cuckoo *Cuculus canorus* 32-34 cm.

வல்லூறைப் போன்ற தோற்றம் உடையது. மேல்புறம் சாம்பல், நீண்ட பழுப்பு வாலில் கோடுகள் என மற்றக் குயிலினங்கள் போலத் தோன்றும். குரல் "அக்-கு" என்று ஒலிக்கும். அரிதாக வலசை வரும் குயில். அடர்ந்த காடுகள் மற்றும் தமிழக மலைப் பகுதிகளில் காணலாம்.

82. செந்தலைக்கிளி

Plum-headed Parakeet *Psittacula cyanocephala* 42 cm.

பச்சைக்கிளியின் அளவிலே ஆன இந்த கிளியின் ஆணிற்கு தலை ப்ளம்ஸ் பழ சிகப்பு நிறம், பெண்ணிற்கு வெளறிய சாம்பல் நிறம், மேல் தாடை மஞ்சள் மற்றும் நீல-பச்சை வால் முடியும் இடம் வெள்ளை நிறத்தில் இருக்கும். பரந்த சமவெளி காடு மற்றும் மரங்கள் நிறைந்த இடங்களில் காணப்பட்டாலும் 3000 அடி உயரம் வரை உள்ள மேற்கு மலை தொடர்ச்சியில் தான் காணப்படுகிறது.

83. நீல இறக்கைக்கிளி

Malabar Parakeet (Blue-winged Parakeet)
Psittacula columboides 38 cm.

பச்சைக் கிளியின் அளவை விட சற்று சிறிய இந்த கிளி, நீல-சாம்பல் நிற தலை, மார்பு மற்றும் தாடை கொண்டிருக்கும். சிறகுகளின் முதன்மை இறக்கைகள் மஞ்சள் நிறத்திலும், பெண்ணிற்கும், ஆணிற்கும் வால் முடியும் இடத்தில் மஞ்சள் நிறம் காணப்படும். பெண்ணிற்கு நீல-பச்சை கழுத்துப்பட்டை இருக்காது. ஆண் பறவைக்கு இருக்கும். பசுமை மாறாத மற்றும் இலையுதிர் ஈர காடுகள், மேற்கு தொடர்ச்சி மலையில் 5000 அடி உயரம் வரை மட்டுமே காணப்படும்.

84. குட்டைக்கிளி

Vernal Hanging-Parrot (Indian Lorikeet)

Loriculus vernalis 14 cm.

சிறிய பச்சை கிளி. முழுவளர்ச்சியடையாததற்கு அலகு சிகப்பு மற்றும் குட்டையான வால். வாலின் பின்புறம் சிகப்பு. ஈரமான பரந்த சமவெளி காடுகள், மலை உச்சி காடுகளில் 5000 அடி உயரம் வரை காணலாம்.

85. பச்சைக்கிளி

Rose-ringed Parakeet *Psittacula krameri* 42 cm.

பச்சை நிற தலை, மேல் மற்றும் கீழ் பாகங்கள். வால் முடியும் இடம் நீல-பச்சை நிறம். ஆணிற்கு கறுப்பு கன்னக் கோடு மற்றும் ஊதா கழுத்துப்பட்டை, அலகு வளைந்து இருக்கும். பரந்த சமவெளி காடு மரங்கள் உள்ள பகுதி மற்றும் பயிர்தொழில் இடங்கள். தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும், மலையடிவாரங்கள் வரைக்கும் காணப்படும்.

86. வெண்பிட்ட முள்வால் உழவாரன்

White-rumped Needletail (White-rumped Spinetail)

Zoonavena sylvatica 11 cm.

இந்த முள்வால் உழவாரன் சிறியதாகவும் மற்றும் நல்ல உடற்கட்டோடு காணப்படும். இறக்கைகள் நீள் வட்டவடிவம். வாலின் மேல்புறம் (பிட்டம்) வெள்ளை நிறம். வெள்ளை நிற அடிவயிறு மற்றும் வால் கீழ் இறக்கை இறகுகள் நாட்டு உழவாரனிலிருந்து வேறுபடுத்திகாட்ட உதவும். வேகமாக விரைவாக இறக்கையடித்து, இறக்கையை பக்கங்களிலிருந்து பக்கங்களுக்கு அசைத்து பறக்கும். தமிழ்நாட்டில் பெரும்பாலும் மலைப்பிரதேசங்களில் உள்ள நீர்நிலைகளுக்கு அருகில் மட்டும் காணப்படுகிறது.

87. பழுப்புமுதுகு முள்வால் உழவாரன்

Brown-backed Needletail *Hirundapus giganteus* 23 cm.

பெரிய அளவிலான உழவாரன் வேகமாகவும், பலமாகவும் பறக்கக்கூடியது. பொதுவாக பழுப்பு நிறத்தில் (தொண்டையும்

சேர்த்து) வெள்ளை கண் அலகிடை பகுதி மற்றும் வெள்ளை வால் கீழ் இறக்கை இறகுகள். பரந்த சமவெளிக்காடுகளிலும், மலை உச்சிவரையும் காணப்படும்.

88. சின்னஉழவாரன்

Indian Swiftlet ***Aerodramus unicolor*** 21 cm.

மேல்பாகங்கள் பழுப்பு நிறத்துடனும், அடிப்பாகம் மங்கிய பழுப்பு நிறத்துடனும், மங்கிய நெளி நெளியான ஓரங்கள் உடைய வாலுடனும் இருக்கும். வாலின் பிளவு மிக சிறியதாக இருக்கும். குன்றுகள், மலைபிரதேச காடுகளில் காணப்படும். இதனுடைய வாய் உமிழ் நீரால் கட்டப்படும் கூடுகள் உணவுக்கு சுவை ஏற்றுவதற்கான மசால்களைப் போன்று பயன்படுத்தப்படும். அதிக விலைக்கு விற்கப்படும்.

89. அல்பைன் உழவாரன்

Alpine Swift ***Apus melba*** 22 cm.

குட்டையான கால்களை உடைய இந்த பெரிய உழவாரன், கால்களை செங்குத்து பாறைகளில் தொங்குவதற்கு பயன்படுத்தும். வெள்ளை தொண்டையுடன், பழுப்பு மார்பு-பட்டையுடன் மற்றும் பரந்த வெள்ளை திட்டு அடிவயிற்றிலும் காணப்படும். முக்கியமாக குன்றுகள் மற்றும் மலை பகுதிக்கு வலசை வருபவை. ஏழு மாதங்கள் வரை ஆகாயத்திலே இரைதேடி, சிறகில் நீர் அருந்தி வசிக்கும் ஆற்றல் உடையவை.

90. பசிபிக் உழவாரன்

Blyth's Swift (Fork-tailed Swift) ***Apus leuconyx*** 16-17 cm.

கருமை நிற இந்த உழவாரனில் வால் பின்புறம் வெள்ளை நிறத்திலும், மேல்பாகங்களில் வெள்ளை செதில்களும் காணப்படும். ஒடுங்கிய உடம்பு மற்றும் நாட்டு உழவாரனை விட நீண்ட இறக்கைகள் மற்றும் ஆழமாக பிளவுபட்ட வால், வெள்ளைப் பின்முதுகு கொண்டிருக்கும். திறந்த மலை தொடரின் உச்சி மற்றும் குன்றின் உச்சிகளில் காணப்படும்.

81. Common Cuckoo

82. Plum-headed Parakeet

83. Malabar Parakeet

84. Vernal Hanging-Parrot

85. Rose Ringed Parakeet

86. White-rumped Needletail



87. Brown-backed Needletail



88. Indian Swiftlet

91. நாட்டு உழவாரன்

Little Swift (Indian House Swift) *Apus affinis* 15 cm.

அகலமான வெள்ளை பிட்டம் கொண்ட இந்த சிறிய கறுப்பு உழவாரன் பசிபிக் உழவாரனுடன் ஒப்பிடும் போது இதன் உடல் நல்ல தேக கட்டோடும், சிறிய இறக்கைகளுடனும் மெல்லிய பிளவுபட்ட வால் சதுர வால் போன்று தோற்றமளிக்கும். கூரிய நீண்ட அரிவாள் போன்ற இறகு மற்றும் வெண் தொண்டையும் இருக்கும். நகர்புறங்கள் மற்றும் கிராமங்களில் காணலாம்.

92. பனை உழவாரன்

Asian Palm-Swift *Cypsiurus balasiensis* 13 cm.

சிட்டுக்குருவியை விட சிறிய அளவிலான இந்த உழவாரன், சிறிய மற்றும் மிக ஒடுங்கிய வளைந்த கதிர் அரிவாள் போன்ற இறக்கைகள் மற்றும் நீண்ட பிளவுபட்ட வாலுடன் காணப்படும் (வால் இறகுகள் பொதுவாக மிக நெருக்கமாக அடுக்கப்பட்டு இருக்கும்). படபடவென்று இறக்கையை விசிறி விட்டு இடையே சிறிது நேரம் இறக்கையடிக்காமலும் பறக்கும். பொதுவாக பழுப்பு நிறத்தில் வெழுத்த தொண்டையுடன் காணப்படும். பனைமரத்து இலைகளின் அடியில் கூடுகளை உமிழ்நீரால் ஒட்டி அமைக்கும். திறந்த நாட்டுப்புறம் மற்றும் பனைமரங்கள் உள்ள இடங்களில் காணப்படும்.

93. கொண்டை உழவாரன்

Crested Treeswift *Hemiprocne coronata* 23 cm.

இந்த பெரிய அளவிலான உழவாரன் பெரிய அளவில், வளைந்த கதிர் அரிவாள் போன்ற இறக்கைகளுடனும், நீண்ட பிளவுபட்ட வாலுடன் காணப்படும். நீல-சாம்பல் நிற மேல்பாகங்கள் மற்றும் வெழுத்த கீழ்பாகங்கள், அடிவயிறு மற்றும் வாலடி வெள்ளை நிறத்தில் இருக்கும். ஆணிற்கு மங்கிய மஞ்சள் கலந்த சிகப்பு நிறத்தில் காது மூடுதூவிகள் (பெண்ணிற்கு கறுத்த சாம்பல் நிறம்) இருக்கும். காடுகள் மற்றும் நாட்டுப்புறங்களிலும் காணப்படும்.

94. கூகை ஆந்தை

Barn Owl *Tyto alba* 36 cm.

வெள்ளை முகம், வெள்ளை கீழ்பாகங்கள் மற்றும் மங்கலான பழுப்பு மஞ்சள் நிற மற்றும் சாம்பல் மேல்பாகங்கள். கண்கள் கறுப்பு. வெவ்வேறு விதத்தில் கீச் என்றும் உஸ் என குரல் கொடுக்கும். பொதுவாக இரவில் வெளிப்படும். பறக்கும் போதே வேட்டையாடும், தரைக்கு சற்று மேலே சாய்ந்து சுற்றி சுற்றி வந்து இரையை கண்டுபிடிக்கும். தங்குமிடம், பழைய கட்டிடங்கள் மற்றும் விளை நிலங்களின் அருகிலுள்ள மரங்கள்.

95. இலங்கை ஆந்தை

Sri Lanka Bay-Owl *Phodilus assimilis* 29 cm.

சிவந்த பழுப்பு நிறத்தில் புள்ளிகளோடு காணப்படும் சிறிய ஆந்தை. முகத்தில் ஒரு வட்டத்தகடு போன்ற அமைப்பு லேசான ரோஜா நிறத்தில் புள்ளிகளோடு காணப்படும். பசுமை மாறாக் காடுகளில் அரிதாக காணப்படும்.

96. பட்டைக்கழுத்து சிறுஆந்தை

Indian Scops-Owl (Collared Scops-Owl)
Otus bakkamoena 23-25 cm.

புறாவை விட சற்று சிறிதான ஆந்தை. மங்கிய பழுப்பு இளமஞ்சள் நிற பின் கழுத்துப்பட்டை, நேர்த்தியான கோடுகளுடைய கீழ்பாகங்கள், மங்கிய பழுப்பு இளமஞ்சள் நிற தோள்பட்டை, விழிவண்ணபடலம் கருமஞ்சள் கலந்த சிகப்பு அல்லது பழுப்பு. இரவில் வெளிப்படும். தாழ்ந்த குரலில் தவளையை போல் ‘வக்’ என வேறுபட்ட இடைவெளியில் திரும்பத் திரும்ப கத்தும். காடு, மரங்கள் நிறைந்த பகுதி மற்றும் தோப்புகளில் காணப்படும்.

97. சிறுஆந்தை

Oriental Scops-Owl *Otus sunia* 19 cm.

கருஞ்சிகப்பு, சாம்பல் நிற மற்றும் பழுப்பு நிற இறகுகள் உள்ளது. பிரதானமான காது போன்ற குடுமி மற்றும் தோளை மூடிய இறக்கையில் வெள்ளை பகுதி காணப்படும். கோடுகள் உள்ள

89. Alpine Swift

Balaji P B

90. Blyth's Swift

Rob Hutchinson

91. Little Swift

Balaji P B

92. Asian Palm-Swift

Balaji P B

93. Crested Treeswift

Balaji P B

94. Barn Owl

Byju H

95. Sri Lanka Bay-Owl

E Bird Files

96. Indian Scops-Owl

Balaji P B

கீழ் மற்றும் மேல்பாகங்கள், பிரதானமான பின் கழுத்துப்பட்டை இருக்காது. மஞ்சள் விழி வண்ணப்படலம். நாட்டுப் புறங்களிலும், மலை அடிவார காடுகளிலும் காணப்படும்.

98. யூரேசிய கழுகு பருந்துஆந்தை

Rock Eagle-Owl (Indian Eagle-Owl)

Bubo bengalensis 56-66 cm.

செம்பருந்தை விட பெரிய அளவிலான இந்த ஆந்தை நிமிர்ந்த தோன்றமுடைய காது கொம்புகளுடைய மிகப்பெரிய ஆந்தை. மேல் பாகங்கள் வேவ்வேறு நிறங்களுடைய கரும்பழுப்பு மற்றும் பழுப்பு கலந்த மஞ்சள் நிற புள்ளிகளுடனும், கீழ்பாகங்கள் திடமான கோடுகளுடனும் காணப்படும். ஆரஞ்சு நிற கண்கள், கால்கள் இறகுகளால் மூடப்பட்டிருக்கும். முக்கியமாக இரவு நேரங்களில் வெளிப்படும். உயரமான இடத்தில் பிராதமானமாக இருக்கும். செங்குத்தான பாறை முனை மற்றும் பாறைகள். தமிழ்நாட்டில் மலைகளுக்கிடையே உள்ள ஆழமான பள்ளம் மற்றும் மரங்கள் நிறைந்த அனைத்து பகுதிகளில் அதிகம் காணலாம்.

99. புள்ளி வயிற்று கழுகு பருந்துஆந்தை

Spot-bellied Eagle-Owl *Bubo nipalensis* 63 cm.

செம்பருந்தை விட பெரிய அளவிலான இந்த ஆந்தை நிமிர்ந்து நிற்கும். காது கொம்புகளுடைய மிகபெரிய ஆந்தை, அழுத்தமான கவிழ்ந்த V என்ற ஆங்கில எழுத்தை போன்ற இடங்கள் கீழ்பாகங்களில் காணப்படும். மேல்பாகங்கள் கரும்பழுப்பு, மெல்லிய பழுப்பு இளமஞ்சள் நிற பட்டைகளோடு இருக்கும். கண்கள் கரும்பழுப்பு. இரவு நேரங்களில் வெளிப்படும். ஆழமாக அலறும் குரல் மற்றும் வருத்தம் தோய்ந்த வீரிடும் சப்தம். பரந்த சமவெளி காடுகள் மற்றும் மலைக் காடுகளிலும் காணப்படும்.

100. மீன்பிடி ஆந்தை

Brown Fish-Owl *Ketupa zeylonensis* 56 cm.

கருங்கழுகு பருந்து ஆந்தையை விட அதிக பழுப்பு நிறத்தில் இருக்கும். மங்கிய பழுப்பு இளம்மஞ்சள் நிற கீழ்பாகத்தில்

கறுத்த கோடுகள், அவைகளின் குறுக்கே நேர்த்தியான கறுப்பு பட்டைகளோடு காணப்படும். கறுத்த கோடுகளுடன் கூடிய பழுப்பு மேல்பாகங்கள். அவ்வப்போது பகல் நேரங்களில் வெளிப்படும். பெரிய வெள்ளைப்பகுதி தொண்டை மற்றும் முன்கழுத்தில் காணப்படும். தங்கியிருக்கும் இடத்தை விட்டு சூரிய அஸ்தமனத்திற்கு வெகுமுன்பாகவே புறப்பட்டுவிடும். சில நேரங்களில் பகலிலும் வேட்டையாடும். காடு மற்றும் நீருக்கு அருகேயுள்ள மரங்கள் அடங்கிய பகுதிகளில் காணப்படும்.

101. பொரிப்புள்ளி ஆந்தை

Mottled Wood-Owl *Strix ocellata* 48 cm.

செம்பருந்து அளவிலான இந்த ஆந்தை, முகவட்டத்தில் பொதுவான மையம் உள்ள பட்டைகள், மற்றும் வெள்ளை, கருஞ்சிகப்பு மற்றும் கரும்பழுப்பு என வெவ்வேறு நிறத்தில் மேல்பாகங்கள், வெள்ளை கீழ்பாகத்தில் கரும்பழுப்பு பட்டைகள் கருஞ்சிகப்புடன் கலந்து காணப்படும். பேய் போன்று பயமுறுத்தும் நடுக்கம் உள்ள குரலில் ஹ்ஆ-ஆ-ஆஹா என கத்தும். திறந்த மரங்கள் நிறைந்த பகுதி, கிராமங்களில் உள்ள தோப்புகள் மற்றும் விளை நிலங்களில் காணலாம்.

102. பழுப்பு காட்டு ஆந்தை

Brown Wood-Owl *Strix leptogrammica* 47-53 cm.

செம்பருந்து அளவிலான இந்த ஆந்தை, சாக்லெட் நிற கருஞ்சிகப்பு-மங்கிய பழுப்பு இளமஞ்சள் நிற முகவட்டத்தில் பிரதானமான வெள்ளை கண் புருவங்கள் காணப்படும். சீரான பழுப்பு நிற மேல் பாகங்களுடன் நேர்த்தியான பழுப்பு பட்டைகள் உள்ள மங்கலான பழுப்பு இளம் மஞ்சள் நிற கீழ்பாகங்களும் இருக்கும். தொண்டையில் வெள்ளைப்பகுதி காணப்படும். சிறகு இறகுகளிலும் வால் மேல் இறகுகளில் வெள்ளைக் கோடுகள் இருக்கும். இரவில் வெளிப்படும். குரல் ஹீ-ஹீஹீஹீ (ஹீ) மற்றும் சப்தமாக க்கீச்சென கத்தும். அடர்ந்த

பரந்த சமவெளி காடு மற்றும் மலை பிரதேச காடுகளில் காணப்படும்.

103. குட்டைகாது ஆந்தை

Short-eared Owl *Asio flammeus* 37-39 cm.

வலசை வரும் ஆந்தை. புறாவின் அளவிலிருக்கும் இந்த சிறிய ஆந்தைக்கு காது குடுமியுடன் கோடுகளுடைய அடிபாகங்கள் இருக்கும். முகவட்டங்கள் மெல்லிய பழுப்பு இளமஞ்சள் நிறம் மற்றும் கண்கள் மஞ்சள் நிறம். பறக்கும் போது இறக்கை முதன்மை இறகுகளின் அடிப்பகுதியில் மெல்லிய பழுப்பு இளமஞ்சள் நிற திட்டு மற்றும் பழுப்பு நிற திட்டு காணப்படும். அடிக்கடி பகலிலும் வேட்டையாடும். தரைக்கு சற்று மேலே சாவகாசமாக சுற்றி திரியும். 'V' வடிவில் இறக்கையடிக்காமலும் பறக்கும். புல்வெளிகள் மற்றும் திறந்த நாட்டுபுற புதர்கள், நீர் நிலைகளுக்கு அருகில் உள்ள புதர்களில் காணலாம்.

104. வேட்டைகார ஆந்தை

Brown Hawk-Owl *Ninox scutulata* 32 cm.

புறாவைவிட சற்றே பெரிய அளவிலான இந்த ஆந்தைக்கு ராசாளி போன்ற முகச்சாயல். கறுத்த முகம் மற்றும் கருஞ்சிகப்பு-பழுப்பு கோடுகளுடன் கூடிய கீழ்பாகங்கள். வெள்ளை முன் நெற்றி, முன் கழுத்து தொண்டையில் பழுப்பு நிற கோடுகள் இருக்கும். இரவில் வெளிப்படும், மிக உயர்ந்த இடத்திலிருந்து வேட்டையாடும். குரல் இனிமையான ஓ-ஒகே ஓ-ஒகே என கூவும். காடு மற்றும் நிறைய மரங்கள் உள்ள பகுதிகளில் வசிக்கும்.

105. காட்டு சிறுஆந்தை

Jungle Owlet *Glaucidium radiatum* 20 cm.

புள்ளி சிறு ஆந்தையின் அளவிலான இந்த ஆந்தை, அதனிலிருந்து நிறத்தில் வேறுபட்டும், நேர்த்தியான பட்டைகளோடு கூடிய மேல் மற்றும் கீழ்பாகங்கள், இறக்கைகளில் கருஞ்சிகப்பு பட்டைகள் மற்றும் தெளிவான முகம். இவை கருஞ்சிகப்பு நிறத்தில் காணப்படும்.

Balaji P B

97. Oriental Scops-Owl

Balaji P B

98. Rock Eagle-Owl

Balaji P B

99. Spot-bellied Eagle-Owl

Balaji P B

100. Brown Fish-Owl



Balaji P B

101. Mottled Wood-Owl

Balaji P B

102. Brown Wood-Owl



Rama Neelamegam

103. Short-eared Owl

Balaji P B

104. Brown Hawk-Owl

பெரும்பாலும் அந்தி சாயும் நேரங்களில் வெளிப்படும். திறந்த காடு மற்றும் மலைக்காடுகளிலுள்ள ஆற்றோர பகுதிகளில் பொதுவாக காணப்படும்.

106. புள்ளிச் சிறுஆந்தை

Spotted Owlet *Athene brama* 21 cm.

புறாவைவிட சிறிய இந்த ஆந்தைக்கு உச்சந்தலை மற்றும் மேல் பாகங்களில் வெள்ளை புள்ளிகள், சிதறி பரவிய பழுப்பு புள்ளிகள் கீழ்பாகங்களில் காணப்படும். பெரும்பாலும் அந்தி சாயும் நேரம் மற்றும் இரவில் வெளிப்படும். குடியிருப்பு பகுதி மற்றும் விளை நிலங்கள் அடங்கிய பகுதிகளில் காணப்படும்.

107. சிலோன் தவளைவாயன்

Sri Lanka Frogmouth *Batrachostomus moniliger* 23 cm.

கரிந்து போன இலைகளைப் போன்ற நிறத்தையும், தவளை வாயைப் போன்ற வாயையும் கொண்ட அரிதான பறவை. ஆணுக்கு பழுப்பு கலந்த சாம்பல், பெண்ணிற்கு மேல்பாகம் கருஞ்சிகப்பு மற்றும் குறைந்த பட்டை கோடுகள் காணப்படும். குரல் தொடர்ந்து சப்தமாக அடக்கமாக இருக்கும். அடர்ந்த வெப்பமான பகுதி மற்றும் அதன் கீழ் உள்ள மித வெப்பமான என்றும் பசுமை மாறாத காடுகளில் இருக்கும். தமிழ்நாட்டில் டாப்சிலிப் மலை பகுதியில் மட்டும் காணப்படும்.

108. பெருங்காது பக்கி

Great-eared Nightjar *Lyncornis macrotis* 40-41 cm.

பல வண்ணங்களுடன், பிரதானமாக காது குடுமிகள், கறுப்பு காது மூடுதூவிகளில் மற்றும் தொண்டையில் நேர்த்தியான கருஞ்சிகப்பு பட்டைகளும், கரும்பழுப்பு பட்டைகள், மங்கலான பழுப்பு மஞ்சள் நிறம், கீழ்பாகங்களில் வாலில் பழுப்பு இளமஞ்சள் நிறம் மற்றும் கரும்பழுப்பு பட்டைகள் காணப்படும். இறக்கைகள் அல்லது வாலில் வெழுத்த இடம் இருக்காது. குரல் புலம்புவது போல் பீ-லீவு என குரல் எழுப்பும். உயர்ந்த மலைக் காடுகளில் மட்டும் காணப்படும்.

109. காட்டுப்பக்கி

Jungle Nightjar (Indian Jungle Nightjar)

Caprimulgus indicus 27-32 cm.

ஆண், பெண் இரண்டிற்கும் சாம்பல்-பழுப்பு, நன்கு புலப்பட கூடிய வகையில் கறுப்பு நிற பட்டைகள் புள்ளிகளோடு காணப்படும். ஆணிற்கு வெள்ளை தொண்டை பகுதி மத்தியில் பிளவுபட்டிருக்கும். பெண்ணிற்கு சிகப்பு தொண்டைப் பகுதியுடன் கீழ் மீசைகோடு இருக்கும். சப்தமாக எதிரொலிக்கும். காட்டினிடையே உள்ள வெட்டவெளி புதர்களில் காணப்படும்.

110. ஜெர்டான் பக்கி

Jerdon's Nightjar *Caprimulgus atripennis* 28 cm.

ஆண் காட்டு பக்கியை விட பார்வைக்கு அழகான மற்றும் திடமான கோடுகளுடன் காணப்படும். பிடரி மேல் தோள்பட்டை சார்ந்த பகுதியின் குறுக்கே கருஞ்சிகப்பு பட்டை இருக்கும். தோளை மூடிய சிறகுகளின் ஓரங்கள் நன்றாக வரையறுக்கப்பட்டு மங்கலான பழுப்பு இளமஞ்சள் நிறத்தில், அகல மங்கலான பழுப்பு இளமஞ்சள் நிற நுனியுடைய கறுப்பு மைய இறகுகளுடன் கூடிய இறக்கை பட்டைகளுடன் இருக்கும். ஈர காடுகளின் ஓரங்கள் மற்றும் சமவெளிக்காடுகளிலும் காணப்படும்.

111. சிறுபக்கி

Indian Nightjar *Caprimulgus asiaticus* 24 cm.

காட்டு பக்கியை விட சிறியதாக காணப்படும். அழுத்தமான கோடுகளையுடைய உச்சந்தலை கருஞ்சிகப்பு, மங்கலான பழுப்பு இள மஞ்சள் நிறமுடைய பின் கழுத்துப்பட்டை, அழுத்தமான கறுப்பு மையங்கள் மற்றும் அகலபழுப்பு இளமஞ்சள் விழும்புகளுடைய தோள்பட்டை சார்ந்த இறகுகள், மைய வால் சிறகுகளில் கோடுகள் மற்றும் பட்டைகளின்றி காணப்படும். குரலானது தொலைவிலிருந்து சக்-சக்-சக் -சக்-டுக்அரூ என கூவும். புதர்கள் அடங்கிய சமவெளி

பகுதிகள், தோட்டங்கள் மற்றும் மலை அடிவார பகுதிகளில் காணப்படும்.

112. ப்ராங்க்ளின் பக்கி

Savanna Nightjar *Caprimulgus affinis* 23 cm.

மற்ற பக்கிகளைப் போன்ற பழுப்பு நிறத்தில் கருங்கோடுகள், புள்ளிகள் என்று ஒரு மண்தரை நிறப்பறவை என்றாலும், அமர்ந்திருக்கும் போது முதுகில் 'V' போன்ற வெள்ளைக்கோடு தோளிலிருந்து பின் முதுகு வரை செல்வது இதை அடையாளம் காட்டும். வறண்ட தரிசு நிலங்கள், பாறைப் பாங்கான நிலம்.

113. மாடப்புறா

Rock Pigeon (Blue Rock Pigeon) *Columba livia* 33 cm.

சாம்பல் கலந்த நீலத்தலையும், கழுத்தும், மார்பும் கொண்டிருக்கும். வெகு சாதாரணமாகக் காணப்படும் புறா. வீட்டின் அடுத்தும், மனிதர்கள் வாழும் பகுதிகளிலும், கோயில்களிலும் காணப்படும். கழுத்தின் பின்புறம் மற்றும் முன்புறம் ஒளிரும் பச்சை, ஊதா, மஞ்சள் என்று பல வண்ணங்களில் ஜொலிக்கும். சிவந்த கண்களும், வெள்ளைப்புடைப்பு உள்ள மூக்கும், சிவந்த கால்களும் உண்டு. தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும், குடியிருப்பு பகுதிகளிலும் அதிகமாக காணப்படும்.

114. நீலகிரி காட்டுப்புறா

Nilgiri Wood-Pigeon *Columba elphinstonii* 42 cm.

அடர்ந்த காடுகளில், உயர் மட்டக்காடுகளில், காணக் கூடிய ஒரு பழந்தின்னிப் புறா. பெரிய உருவம் (கிட்டத்தட்ட மாடப்புறா விட இருமடங்கு) கொண்டது. கழுத்தில் சதுரங்க மேடை போன்ற அமைப்பு இதனைத் தெளிவாகக் கண்டறிய உதவும். சிவந்த அடி அலகும், பாதங்களும் கொண்டது. ஆணுக்கு வெளறிய சாம்பல் தலையும், பெண்ணுக்கு ஆழ்ந்த சாம்பல் நிறத்தலையும், வெளறிய தொண்டையும் இனம் காண உதவும். மேற்குமலைத் தொடர்ச்சியில் மட்டும் காணப்படும். தமிழகத்தில் பழநி மலைத்தொடர்ச்சி, நீலகிரி மலைத் தொடர்ச்சி

Balaji P B

105. Jungle Owlet

Balaji P B

106. Spotted Owlet

Balaji P B

107. Sri Lanka Frogmouth

Biju P B

108. Great Eared-Nightjar

Balaji P B

109. Jungle Nightjar

Balaji P B

110. Jerdon's Nightjar

Balaji P B

111. Indian Nightjar

OMprakash

112. Savanna Nightjar

பகுதிகளில் 5000 அடி உயரத்திற்கு மேல் காணப்படும். உயர்ந்த மரங்கள் உள்ள பகுதி மற்றும் பாழடைந்த வீடுகளிலும் தங்கும்.

115. செஞ்செதில் தவிட்டுப்புறா

Oriental Turtle-Dove *Streptopelia orientalis* 32 cm.

கருஞ்சிகப்பு நிற செதில்கள் போன்ற தோளை மூடிய இறகுகள் மற்றும் இறக்கை இறகுகள் உள்ள பருத்த புறா. கறுப்பு மற்றும் நீல-சாம்பல் நிற பட்டைகள் கழுத்து பக்கங்களில் காணப்படும். கீழ் இறக்கைகள் மங்கிய சாம்பல் நிறம். இடம் பெயர்ந்து குடியேறும் இனமான இதற்கு பக்கங்கள் மற்றும் வால் நுனி வெள்ளையாக இருக்கும். கீழ்பாகங்கள் கருஞ்சிகப்பு - வெளிர்சிகப்பு. வலசை வரும் துணையினத்திற்கு வால் நுனி வெள்ளையாக இருக்கும். சிறந்த காடு, குறிப்பாக விளைநிலத்திற்கு அருகில் காணலாம். தமிழ்நாட்டில் மலைப் பகுதியில் மட்டும் அரிதாக காணலாம்.

116. பட்டைக்கழுத்து புறா

Eurasian Collared-Dove *Streptopelia decaocto* 32 cm.

புள்ளி புறாவை விட சற்று பருத்த புறாவிற்கு, கறுப்பு அரை கழுத்துப் பட்டையுடன் இளம்சாம்பல் நிறத்தில் காணப்படும். செந்தவிட்டு புறாவை விட பெரியதாகவும், நீண்ட வாலுடனும் இருக்கும். மேல்பாகங்கள் மற்றும் கீழ் இறக்கை இறகுகள் வெளுத்த சாம்பல் நிறம். வறண்ட, திறந்த நாட்டுப்புறத்தில் உள்ள விளைநிலம் மற்றும் தோப்புகளில் காணலாம்.

117. செந்தவிட்டுப் புறா

Red Collared-Dove (Red Turtle-Dove)

Streptopelia tranquebarica 23 cm.

பட்டை கழுத்து புறாவை விட ஒடுங்கிய வாலுடைய பருத்த சிறிய புறா. ஆணிற்கு தலை நீல-சாம்பல், மேல்பாகங்கள் வெளிர் சிகப்பு - கரும்பழுப்பு, கீழ்பாகங்கள் வெளிர்சிகப்பு. பெண், பட்டைக்கழுத்து புறாவைப் போல் இருக்கும், ஆனால் மிக கச்சிதமாகவும், சிறியதாகவும் கீழ்பாகங்கள் கறுத்த மங்கலான பழுப்பு இளமஞ்சள் சாம்பல் நிறம். மேல்பாகங்கள் மஞ்சள் கலந்த பழுப்பு, கீழ் இறக்கை இறகுகள் சாம்பல் நிறம்.

மரங்கள் உள்ள பகுதி மற்றும் திறந்த நாட்டுபுறமரங்கள், வரண்ட விளைநிலங்களின் அருகாமையிலும் காணப்படும்.

118. புள்ளிப்புறா

Spotted Dove *Streptopelia chinensis* 30 cm.

மிகப்பரவலாகக் காணப்படும் காட்டுப்புறா, வெளறிய பழுப்பு நிறத்தில், நீண்ட வாலுடன் பிடரியில் புள்ளிகளுடன் கூடிய அமைப்போடு இருக்கும். சாம்பல் நிறமான தலை மற்றும் அடிவயிறு கொண்டது. மரங்கள் உள்ள பகுதி மற்றும் திறந்த நாட்டுபுறமரங்கள், வரண்ட விளைநிலங்களின் அருகாமையிலும் காணப்படும். மலைக்காடுகளில் 7000 அடி உயரம் வரைக்கும் காணப்படும்.

119. சிறிய தவிட்டுப்புறா (சிரிக்கும் புறா)

Laughing Dove (Little Brown Dove)

Streptopelia senegalensis 27 cm.

வறண்ட பிரதேசங்களிலும், காடுகளிலும் காணப்படும் சிறிய புறா. சிவந்த கறுப்பு ஆரம் போன்ற அமைப்பு கழுத்தில் காணப்படும். அதன் குரல் (சிரிப்பு போல) மற்ற புறாக் களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும். மேற்புறம் பழுப்பு நிறமாகவும், சிறகின் ஓரங்கள் வெளறிய நீலநிறமாகவும் இருக்கும். கால்கள் சிவப்பாக இருக்கும். வித்தியாசமான உடலமைப்பு உள்ளது.

120. பஞ்சவர்ணப்புறா

Asian Emerald Dove *Chalcophaps indica* 27 cm.

மரகதபுறா, புள்ளி புறாவின் அளவிலான இந்த புறா மிக வேகமாக பறக்க கூடிய அகலமான இறக்கையுடைய பருத்த புறா. மேல்பாகங்கள் பழுப்பு நிறம் கலந்த ஊதா பறவைக்கு பிரகாசமான உலோக பச்சை முதுகுபுறத்தில் கறுப்பு மற்றும் வெள்ளை பட்டைகள் காணப்படும். ஆணிற்கு சாம்பல் உச்சந்தலை வெள்ளை முன் நெற்றி, புருவகோடுகள் மற்றும் தோள்பட்டையில் வெள்ளை திட்டு இருக்கும். ஈரமான காடுகள் மற்றும் மிதவெப்பமான பரந்த சமவெளி காடுகள், ஆற்றோர காடுகளில் அதிகம் காணப்படும். தமிழ்நாட்டின் மாநில பறவை.



Balaji P B

113. Rock Pigeon



Balaji P B

114. Nilgiri Wood-Pigeon

Balaji P B

115. Oriental Turtle-Dove

Balaji P B

116. Eurasian Collared-Dove

Balaji P B

117. Red Collared-Dove

Balaji P B

118. Spotted Dove



Balachandran S

119. Laughing Dove

Balaji P B

120. Asian Emerald Dove

121. ஆரஞ்சுமார்பு பச்சைப்புறா

Orange-breasted Green-Pigeon

Treron bicinctus 29 cm.

மாட புறா அளவிலான இந்த பச்சை புறாவின் ஆண் பெண் இரண்டிற்கும் மைய வால் சிறகுகள் சாம்பல் நிறத்தில் காணப்படும். ஆணிற்கு சிகப்பு கலந்த மஞ்சள் மார்பு, அதற்கு மேல் வெளுத்த வெளிர்சிகப்பு - ஊதா நிற பட்டை, பின் உச்சந்தலை மற்றும் பிடரி சாம்பல் நிறம் மற்றும் பச்சை தோளை மூடிய இறகுகள். பெண்ணிற்கு மஞ்சள் மார்பு மற்றும் அடிவயிறு, பின் உச்சந்தலை மற்றும் பிடரி சாம்பல் நிறம். கால்கள் சிகப்பு நிறம் சாம்பல் நெற்றி பச்சைப்புறாவிலிருந்து வேறுபட்டு காணப்படும். கருஞ்செங்கல் பழுப்பு நிற மேல் பாகமும் சாம்பல் முன்நெற்றியும் இருக்காது. மலைகளிலேயே பெரும்பாலும் வசிக்கும் இப்பறவை சமவெளி பகுதிகளுக்கு குளிர்காலங்களில் வருகை தரும்.

122. சாம்பல்நெற்றி பச்சைப்புறா

Grey-fronted Green-Pigeon (Pompadour Green-Pigeon)

Treron affinis 28 cm.

தோள்பட்டை சார்ந்த இறகுகள் பழுத்த சிகப்பு நிறம் மற்றும் சாம்பல் உச்சந்தலை. மீதி மேல்பாகம் மஞ்சள் கலந்த பச்சை நிறம். அடிபாகம் பச்சை கலந்த மஞ்சள். மேல் மார்பு மங்கலான ஆரஞ்சு சாயல் கூடுதலாக இருக்கும். இளஞ்சிவப்பு கால்கள் மற்றும் பெண்ணின் வால் அமைப்பு, ஆரஞ்சு மார்பு புறாவின் பெண்ணிலிருந்து வேறுபடுத்தி காட்ட உதவும். அடர்ந்த மலைகாடுகள் மற்றும் ஆறுகள் உள்ள காடு.

123. மஞ்சள் கால் பச்சைப்புறா

Yellow-footed Green-Pigeon *Treron phoenicopterus* 33 cm.

மாடப்புறாவின் அளவிலான இந்த பச்சை புறாவுக்கு இளம் பச்சை கலந்த அகலமான மஞ்சள் கழுத்துப்பட்டை, வெளுத்த சாம்பல்-பச்சை மேல்பாகங்கள், வெளிர் செந்நிற தோள்திட்டு, கால் மற்றும் பாதம் மஞ்சள். இலையுதிர் காடு மற்றும் கிராமங்கள் மற்றும் விளை நிலங்களில் உள்ள பழமரங்கள்.

124. பச்சை அரசப்புறா

Green Imperial-Pigeon *Ducula aenea* 43-47 cm.

மாடப்புறாவை விட இந்த புறாவுக்கு மொத்தத்தில் ஊதா பச்சை கலந்த சாம்பல் நிறம். பெரும்பாலான மேல்பாகங்கள் மற்றும் வால் உலோகப்பச்சை நிறம். கீழ் இறக்கை இறகுகள் பழுத்த சிகப்பு நிறம் (அடிவயிற்றை விட கறுத்ததாக). தமிழ் நாட்டில் மலைக்காடுகளில் மட்டும் காணப்படும்.

125. மலை அரசப்புறா

Mountain Imperial-Pigeon *Ducula badia* 43-51 cm.

தலை சாம்பல் நிறத்திலும், பெரிய அளவில் மேல்பாகங்கள் இளம் பச்சை கலந்த பழுப்பு, வாலின் அடிப்பாகத்தின் குறுக்கே கரும்பழுப்பு பட்டை மற்றும் கீழ் இறக்கை இறகுகள் மங்கிய பழுத்த இளமஞ்சள் நிறம். தமிழ்நாட்டில் மலைக்காடுகளில் மட்டும் அரிதாக காணப்படும்.

126. கானல் மயில்

Indian Bustard *Ardeotis nigriceps* 92-122 cm.

பெரிய சாம்பல் நிற மயில் போன்ற பறவை. எல்லா வகையிலும் சிறகுகள் சாம்பல், வெள்ளை கழுத்து, கறுப்பு உச்சந்தலை மற்றும் சிறகு கொத்து, சீரான பழுப்பு மேல்பாகங்கள், வெள்ளை புள்ளிகளுடைய கறுப்பு இறக்கை இறகுகள் காணப்படும். பரந்த வெள்ளை இடங்கள் மேல் இறக்கையில் இருக்காது. ஆணிற்கு பெரிய கறுப்பு மார்புப் பட்டை மற்றும் கழுத்து பெரும்பாலும் வெள்ளை நிறத்தில் மிக நேர்த்தியான கறுத்த சாம்பல் நிறத்தில் நெளிநெளியாக காணப்படும். பெண் சிறியதாகவும் அபரிமிதமான கருத்த சாம்பல் நெளிவுகளினால் கழுத்து சாம்பல் நிறத்தில் காணப்படும். கறுத்த மார்புப்பட்டை இருக்காது. உலர்ந்த புல்வெளி மற்றும் புதர்கள். தமிழ் நாட்டில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக இது காணப்படவில்லை. அதற்கு முன்பு திருநெல்வேலி பகுதிகளில் காணப்பட்டதாக அறியப்படுகிறது.

127. வரகு கோழி

Lesser Florican ***Sypheotides indica*** 46-51 cm.

சிறிய, மெலிந்த நீண்ட கழுத்துப்பட்டை உடைய சிறு மயில் போன்ற பறவை. இனப்பெருக்கத்திற்கு தயாராக உள்ள ஆணிற்கு சதுர முனையுடைய தலை சிறகுகள் காணப்படும். தலை/கழுத்து மற்றும் கீழ்பாகங்கள் கறுப்பு, மேல் தோள்ப்பட்டை இறகுகளின் குறுக்கே வெள்ளை கழுத்துப்பட்டை உடையது. இறக்கைகள் மூடியிருக்கும் போது வெள்ளை இறக்கை இறகுகள் ஓர் திட்டு போல் காணப்படும். இனப்பெருக்கத்திற்கு தயாராகாத ஆண் பெண்ணை போல் இருக்கும், ஆனால் வெள்ளை இறக்கை இறக்குகள் காணப்படும். பெண் மற்றும் முழுவளர்ச்சியடையாததிற்கு பழுப்பு அல்லது இலவங்கப்பட்டை - மங்கலான பழுப்பு மஞ்சள் நிறத்தில் நிறைய கோடுகள், புள்ளிகள் போன்று அமைப்பு மேல்பாகத்தில் காணப்படும். பறக்கும் சிறகுகள் கருஞ்சிகப்பு நிறத்தில் பட்டைகளோடு காணப்படும். புல்வெளிகள் மற்றும் விளைநிலங்கள். கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இப்பறவை தமிழ்நாட்டில் காணப்படவில்லை. ஆனால், 20 வருடங்களுக்கு முன்னால் கோவை சூலூரில், திருநெல்வேலி பகுதிகளில் கண்டதாகவும் அறியப்படுகிறது.

128. வெண்மார்பு கானாங்கோழி

White-breasted Waterhen ***Amaurornis phoenicurus*** 32 cm.

புறாவைவிட சற்று பெரியது. முழு வளர்ச்சி அடைந்ததற்கு மேல்பாகங்கள் சாம்பல் நிறம் மற்றும் முகம், முன்கழுத்து மற்றும் மார்பு வெள்ளை நிறம். கீழ்வால் இறகுகள் கருஞ்சிகப்பு - இலவங்கப்பட்டை நிறம் கொண்டவை. முழு வளர்ச்சி அடையாத பறவைக்கு முகம், முன்கழுத்து மற்றும் மார்பு சாம்பல் நிறம், மேல்பாகங்கள் இளம்பச்சை-பழுப்பு நிறம். சதுப்புநிலம் மற்றும் குட்டைகளுக்கு அருகேயுள்ள அடர்ந்த பகுதி, ஏரிகள் மற்றும் சாக்கடைகளில் காணப்படும்.



Balaji P B

121. Orange-breasted Green-Pigeon

122. Grey-fronted Green-Pigeon

Balaji P B

123. Yellow-footed Green-Pigeon

124. Green Imperial-Pigeon

Balaji P B

125. Mountain Imperial-Pigeon

Vijayaditya Rathore

126. Indian Bustard

Saevus wild life gallery

127. Lesser Florican

Balaji P B

128. White-breasted Waterhen

129. சாம்பல்கால் கானாங்கோழி

Slaty-legged Crake *Rallina eurizonoides* 25 cm.

வளர்ந்த பறவைக்கு பச்சை அல்லது சாம்பல் கால்கள், நீண்ட விரல்களையும், கட்டையான வாலையும், காடையளவை விட சற்று பழுப்பு மேற்பகுதியையும், செங்கல் நிற தலை கழுத்து மற்றும் மார்பு பகுதிகள். வெள்ளை பட்டை கீழ் இறக்கை இறகுகளில் காணப்படும். பறக்கும் போது குரல் உராய்வது போல் உயர்ந்த சுருதியில் கூவும். சதுப்பு நிலம் மற்றும் வெட்டப்பட்ட ஈரவிளை நிலம்.

130. செம்மார்பு கானாங்கோழி

Ruddy-breasted Crake *Zapornia fusca* 22 cm.

சின்னான் அளவிலான இந்த கானாங்கோழிக்கு சிகப்பு கால்கள், செம்பழுப்பு கீழ்பாகங்கள் மற்றும் விலாபின்பக்கங்கள், கீழ்வால் இறக்கை இறகுகளில் கருப்பு-வெள்ளை பட்டைகள் காணப்படும். சாம்பல் கால் கானாங்கோழியை விட அவை சற்று குறைவாக பரந்திருக்கும். முழு வளர்ச்சி அடையாத பறவை கறுத்த இளம்பச்சை-பழுப்பு நிறத்தில், வெள்ளை பட்டைகளுடைய கீழ்வால் இறக்கை இறகுகள் மற்றும் நேர்த்தியான சாம்பல் கலந்த-வெள்ளை பட்டைகள் கீழ்பாகங்களிலும், கால்கள் சிகப்பு நிறத்திலும் காணப்படும். சதுப்புநிலம் மற்றும் ஈரமான பயிர் நிலங்களில் காணலாம்.

131. பைலான் கானாங்கோழி

Baillon's Crake *Zapornia pusilla* 17-19 cm.

வளர்ந்த பறவை பழுப்பு மேற்பாகமும், சாம்பல் நீல முகம் மற்றும் அடிப்பாகமும் கொண்டிருக்கும். மேல்பாகத்தில் வெண் புள்ளிகள் இருக்கும். நீண்ட பச்சை கால்களும், விரல்களும், குட்டையான கோடிட்ட வால்புறம் இருக்கும். வலசை வரும் கானாங்கோழி. நன்னீர் நிலங்களிலும், நாணற் புதர்களிலும் காணப்படும்.

132. சாம்பல்மார்பு சம்பங்கோழி

Slaty-breasted Rail *Lewinia striata* 27 cm.

சிகப்பு அடிபாகத்துடன் கூடிய நீண்ட அலகு. ஆலிவ்-சாம்பல் கால்கள். வளர்ந்தற்கு செம்பழுப்பு உச்சந்தலை மற்றும் பிடரி, சிலேட்-சாம்பல் முன்கழுத்து மற்றும் மார்பு, வெள்ளை பட்டைகள் மற்றும் புள்ளிகளுடைய மேல்பாகங்கள், பட்டையோடுடைய விலாபக்கங்கள் மற்றும் கீழ்வால் இறக்கை இறகுகள். இளைய பறவைக்கு கருஞ்சிகப்பு-பழுப்பு உச்சந்தலை மற்றும் பிடரி மற்றும் வெள்ளை பட்டைகள் இறக்கை இறகுகளில் காணப்படும். சதுப்புநிலம், அலையாத்தி காடுகள் மற்றும் நெல் வயல்கள்.

133. தாழைக்கோழி

Eurasian Moorhen *Gallinula chloropus* 32-35 cm.

கீழ்வால் இறக்கை இறகுகள் வெள்ளை நிறத்திலும், விலா பக்கத்தில் கோடுபோன்றும் காணப்படும். மஞ்சள் முனையுடைய சிகப்பு அலகு மற்றும் சிகப்பு பாதுகாப்பு மூடியுடன் காணப்படும். இளைய பறவைக்கு மங்கிய பச்சை அலகு, மற்றும் முக்கியமாக பழுப்பு நிறத்தில் காணப்படும். சதுப்புநிலம் மற்றும் நாணல் கரை குட்டைகளில் காணப்படும்.

134. நாமக்கோழி

Eurasian Coot *Fulica atra* 36-38 cm.

மொத்தமாக கறுப்பு நிறத்தில் காணப்படும் சிறிய வாத்து போன்ற பறவை. கறுப்பு கலந்த வெள்ளை அலகு மற்றும் வெள்ளை அலகு மூடியுடன் காணப்படும். அது பறவையின் நெற்றியில் நாமம் போல் காணப்படும். நாணல் நிறைந்த ஏரி ஓரங்கள் மற்றும் குட்டைகள்.

135. நீல தாழைக்கோழி

Grey-headed Swamphen (Purple Swamphen)

Porphyrio poliocephalus 45-50 cm.

ஊதா கலந்த நீல நிறத்தில், பெரிய சிகப்பு அலகு மற்றும் முன் பாதுகாப்பு மூடி போன்ற அமைப்புடன் காணப்படும். இளைய

Balaji P B

129. Slaty-legged Crake

Balaji P B

130. Ruddy-breasted Crake

Balaji P B

131. Baillon's Crake

Balaji P B

132. Slaty-breasted Rail

Balaji P B

133. Eurasian Moorhen

Balaji P B

134. Eurasian Coot



Balaji P B

135. Grey-headed Swamphen



Gangaiamaran

136. Watercock

பறவை சாம்பல் நிறத்தில் மங்கிய நிற அலகுடன் இருக்கும். நாணல் கரை மற்றும் சதுப்புநிலம்.

136. தண்ணீர் கோழி

Watercock ***Gallicrex cinerea*** 43 cm.

ஆண் முக்கியமாக சாம்பல் கலந்த-கருப்பு நிறத்தில், மஞ்சள் முனையுடைய சிகப்பு அலகு மற்றும் சிகப்பு பாதுகாப்பு மூடி மற்றும் கொப்புடன் காணப்படும். இனப்பெருக்கத்திற்கு தயாராக இல்லாத ஆண் மற்றும் பெண்ணின் கீழ்பாகங்கள் நேர்த்தியான பட்டைகளோடு இலேசான பழுப்பு மஞ்சள் நிறத்திலும், கரும்பழுப்பு மேல்பாகத்தில் இளம் பழுப்பு மஞ்சள் நிறத்தில் நெளிநெளியாக காணப்படும். இளயை பறவை சீரான கருஞ்சிகப்பு-லேசான பழுப்பு மஞ்சள் நிற கீழ்பாகங்கள், கருஞ்சிகப்பு-இளம் பழுப்பு மஞ்சள் நிறத்தில் நெளிநெளியான மேல்பாகங்கள் இருக்கும். பெண் பறவையை விட ஆண் பெரிய அளவில் இருக்கும். சதுப்புநிலம் மற்றும் வெள்ளபாங்கான நிலங்கள்.

137. கல் கௌதாரி

Chestnut-bellied Sandgrouse ***Pterocles exustus*** 31-33 cm.

ஆண் பெண் இரண்டிற்கும் நீளமான கூரான மைய வால் இறகுகள் மற்றும் வெள்ளை விரல்களுடன் கூடிய கறுப்புகலந்த அடி இறகு இறக்கைகள் காணப்படும். ஆணிற்கு கறுப்பு கலந்த-செம்பழுப்பு நிற அடிவயிறு மற்றும் கறுப்பு குறுக்கு மார்பு கோடு இருக்கும். வண்ணகால் கௌதாரி ஆணுடன் ஒப்பிடும்போது சீரான தலை மற்றும் மேல்பாகங்கள், பெண்ணிற்கு அகலமான மங்கலான பழுப்பு இளமஞ்சள் நிற மார்பு பட்டை ஆகியவை வண்ணகால் கௌதாரியிலிருந்து வேறுபடும் விசேஷ அம்சம். பாலைவனம் மற்றும் அடர்த்தியில்லாத முட்புதர்களில் காணலாம். திருநெல்வேலி, இராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களில் அதிகமாக காணலாம்.

138. வர்ண கல்கௌதாரி

Painted Sandgrouse *Pterocles indicus* 28 cm.

ஆண் பெண் சிறிய குண்டான பருத்த கனமான கோடுகள் உடையது. நீண்ட மைய வால் இறகுகள் இருக்காது. சாம்பல் கீழ் இறக்கை இறகுகள். ஆணிற்கு முன் நெற்றியில் கறுப்பு-வெள்ளை பட்டைகள், செம்பழுப்பு, மங்கலான பழுப்பு மஞ்சள் நிறம் மற்றும் கறுப்புப்பட்டைகள் மார்பின் குறுக்கேயும், பட்டைகள் இல்லாத மஞ்சள் கலந்த சிகப்பு, லேசான பழுப்பு மஞ்சள் நிற கழுத்து மற்றும் உள் இறக்கை இறகுகள், கனமான குறியீடுகளுடைய மேல்பாகங்கள். பெண்ணிற்கு உடல் முழுவதும் கனமான கோடுகளுடன் மஞ்சள் கலந்த தொண்டை மற்றும் முகம். வறண்ட புல் வெளிகள் மற்றும் பாறைகள் அடங்கிய சமவெளி.

139. மலை மூக்கன்

Eurasian Woodcock *Scolopax rusticola* 33-35 cm.

கௌதாரியின் அளவிலான இந்தப் பறவை உயர்ந்த மலைக் காடுகளுக்கு குறைந்த எண்ணிக்கையில் வலசை வரும் ஒரு உள்ளான் பறவை. பருத்த, அகலமான வட்டவடிவ இறக்கைகளுடைய பறவை. கறுப்பு பட்டைகளுடைய மங்கலான பழுப்பு இளமஞ்சள் தலை, கோரை உள்ளான் போன்று நன்றாக வரையறுக்கப்பட்ட தோள்பட்டை சார்ந்த மற்றும் தோளை மூடிய இறகு கோடுகள் இருக்காது. ஆண் பெண்ணை விட சிறிது பெரிதாக காணப்படும். அந்திக்கருக்கல் மற்றும் இரவில் வெளிப்படும். அடர்ந்த, ஈரமான காடுகள் அடங்கிய மலை பகுதி.

140. சின்ன கோரைஉள்ளான்

Jack Snipe *Lymnocryptes minimus* 17-19 cm.

பறக்கும்போது அளவில் சிறியதாக குட்டையான அலகுடன் காணப்படும். வட்டவடிவ இறக்கை நுனியுடன் விசிறிவால் கோரை உள்ளானை விட (பலகீனமாகவும்) மிருதுவாகவும் பறக்கும். பிளவுபட்ட புருவக்கோடுகள் இருக்கும். ஆனால் வெளுத்த பழுப்புக் கோடு இருக்காது. தோள்பட்டை சார்ந்த

பகுதி மற்றும் தோளை மூடிய இறகுகளில் பிரதானமான பட்டைகள் காணப்படும். வேகமாக பீரிட்டு பறக்கும்போது நேராக செல்லும். சதுப்பு நிலம் மற்றும் வெட்டப்பட்ட ஈர பயிர் நிலம். வலசை வரும் பறவைகள்.

141. விசிறிவால் கோரைஉள்ளான்

Common Snipe *Gallinago gallinago* 24-26 cm.

பறக்கும் நிலையில், ஊசிவால் கோரை உள்ளானிடம் ஒப்பிடும்போது, இறக்கைகள் கூராகவும் மற்றும் வேகமாக, தாறுமாறாக பறக்கும். பிரதானமான வெள்ளை விளிம்புகள் இறக்கைகளிலும் மற்றும் வெள்ளை பட்டை கீழ் இறக்கை இறகுகளில் காணப்படும். வால் விரிக்கும்போது விசிறிபோல் தோற்றமளிக்கும். சதுப்புநிலம் மற்றும் வெட்டப்பட்ட ஈர விளை நிலங்களில் காணலாம். வலசை வரும் பறவைகள்.

142. பெரிய கோரை உள்ளான்

Great Snipe *Gallinago media* 28-32 cm.

மற்றைய கோரை உள்ளான்களைப் போன்ற பழுப்பில் கறுப்பு கலந்த தோற்றம் கொண்டாலும், உருவத்தில் பெரியது. பறக்கும் போது வாலடியில் பளீரெனத் தெரியும் வெண்பட்டை அடையாளம் காட்டும். சதுப்பு நிலங்களில் மற்றும் வயல் வெளிகளில் வரும் வலசைப் பறவை.

143. ஊசிவால்கோரை உள்ளான்

Pin-tailed Snipe *Gallinago stenura* 25-27 cm.

பறக்கும்போது விசிறிவால் கோரைஉள்ளான் போன்ற உருவத்தில் இருப்பினும் அதனைவிட நன்றாக வட்ட வடிவ கூர்மை குறைந்த இறக்கைகளோடு மெதுவாக மற்றும் நேராக பறக்கக் கூடியது. இரண்டாம் நிலை இறக்கைகளில் வெள்ளை நிற ஓரங்கள் இருக்காது. சாம்பல் நிற கால் மற்றும் இளங்கறுப்பான நீண்ட அலுகுடையது. வாலில் 26 முதல் 28 வரை முளை வடிவத்திலான இறகுகள் வாலை விரிக்கும் போது தெரியும். அடர்த்தியான கோடுகளுடைய கீழ் இறக்கை இறகுகள் மற்றும் வெளுத்த (மங்கலான பழுப்பு இளம்மஞ்சள் நிற செதில்கள்) மேல் இறக்கை இறகுகள். கால்கள்

137. Chestnut-bellied Sandgrouse

Balaji P B

138. Painted Sandgrouse

Balaji P B

139. Eurasian Woodcock

Udhayakumar

140. Jack Snipe

Amish Parekh

141. Common Snipe

Balaji P B

142. Great Snipe

CC Andyh75

143. Pin-tailed Snipe

Balaji P B

144. Greater Painted Snipe

Balaji P B

பறக்கும்போது வாலிற்கு வெளியே நீட்டிக்கொண்டிருக்கும். மத்திய ரஷ்ய பகுதிகளிலிருந்து வலசை வரும் பறவை. சதுப்புநிலம், ஈரமான பயிர் நிலம், புற்கள் அடங்கிய ஆழம் குறைந்த நீர் நிலைகளில் காணப்படும்.

144. மயில் உள்ளான்

Greater Painted Snipe ***Rostratula benghalensis*** 17-19 cm.

நீண்ட கால்களுடையதும், அகலமான, வட்டவடிவ இறக்கைகள் மற்றும் நீண்ட கீழ்நோக்கி வளைந்த அலகுடன் காணப்படும். முழு வளர்ச்சி அடைந்த பெண் பழுத்த சிகப்பு தலை, கழுத்து மற்றும் இறக்கை இறகுகள் பச்சை நிறம். முழு வளர்ச்சி அடைந்த ஆண் மற்றும் முழு வளர்ச்சி அடையாத பெண்ணிற்கு மங்கிய பழுப்பு இளம்மஞ்சள் நிறத்திலான புள்ளிகள் இறக்கை இறகுகளில் காணப்படும். வேகமாக பறக்கும்போது கால்களை பின்நோக்கி வைத்துக்கொண்டு உயர்ந்து பறக்கும். சதுப்பு நிலம், பயிர்கள் நிரம்பிய குட்டைகள் மற்றும் ஓடைகரைகள். வலசை செல்லாது.

145. பட்டைவால் மூக்கான் / கண்ணாடி மூக்கு உள்ளான்

Bar-tailed Godwit ***Limosa lapponica*** 37-41 cm.

கண்ணாடி மூக்கு உள்ளான் ஆழங்குறைந்த நன்னீர் நிலைகள், உவர்நீர் நிலைகளில் அதிக எண்ணிக்கையில் காணலாம். வடகிழக்கு ஆசிய பகுதி அலாஸ்கா போன்ற இடங்களிலிருந்து உலகிலேயே அதிக தூரம் நிற்காமல் (11000 கி.மீ. வரை) பறக்க கூடியவை. குளிர்காலத்திற்காக வலசை வரும் உள்ளான். இறக்கைப் பட்டைகள் இருக்காது, பட்டைகளோடு கூடிய வால் மற்றும் பின்புறத்தில் வெள்ளை நிறத்தில் V வடிவம் காணப்படும்.

146. கருவால் மூக்கான்

Black-tailed Godwit ***Limosa limosa*** 36-44 cm.

கோழியை விட சற்று சிறிதான நீண்ட அலகு, கால்களை கொண்ட உள்ளான். இறக்கை பட்டைகள், வெள்ளைவால் முடியும் பகுதி கறுப்பு பட்டையோடு காணப்படும். பறக்கும் போது இறகு வெள்ளைப் பட்டையும், கறுப்பு, வெள்ளை

பட்டையுடன் கூடிய வாலும் பளிச்சென தெரியும். இனப்பெருக்க காலத்தில், ஆணிற்கு கழுத்து மற்றும் மார்பு கருஞ்சிகப்பு-மஞ்சள் கலந்த சிகப்பு நிறமும், கீழ்பாகங்களில் கறுப்புக் கலந்த பட்டைகள் மற்றும் வெள்ளை அடிவயிறுடன் இனப்பெருக்கம் அல்லாத காலத்தில் தோன்றும், இனப்பெருக்கம் செய்யும் பெண் மங்கிய நிறத்தில் இருக்கும். இனப்பெருக்கம் செய்யாத காலத்தில் மேல்பாகங்கள் சாம்பல் நிறத்திலும், மார்புகள் இளஞ்சாம்பல் நிறத்தில் காணப்படும். ஆண்களை விட பெண் பெரிதாகவும் நீண்ட அலகும் கொண்டதாக இருக்கும். வயல் கரைகள் மற்றும் ஆழம் குறைந்த ஏரிகள், ஆறுகள், சதுப்பு நிலங்கள், உவர்நீர் நிலங்களில் காணப்படும்.

147. சிறிய அரிவாள்மூக்கு உள்ளான்

Whimbrel ***Numenius phaeopus*** 40-46 cm.

குதிரை கோட்டானை விட சிறியதாகவும் மற்றும் சற்று குட்டையான அலகுடனும் காணப்படும். வித்தியாசமான தலையமைப்புடன், வெள்ளை புருவக்கோடுகள் மற்றும் உச்சந்தலை கோடுகள், கறுத்த கண் கோடு மற்றும் உச்சந்தலையின் பக்கங்கள் கறுப்பு. பறக்கும்போது வித்தியாசமாக முதுகு பக்கம் கரும்பழுப்பு நிறத்தில் இருப்பதைக் காணலாம். புல் நிறைந்த இடங்கள், கடற்கரை ஓரங்கள், கடல் தீவுகள், நன்னீர் நிலைகளில் அரிதாகக் காணப்படும். வெகுதூரத்திலிருந்து வலசை வரும் பறவை.

148. பெரிய அரிவாள்மூக்கு உள்ளான் , குதிரைக் கோட்டான்

Eurasian Curlew ***Numenius arquata*** 50-60 cm.

கோழியின் அளவிற்கு சமமான இந்த வலசை வரும் உள்ளான் நீண்டு வளர்ந்த அரிவாள் போன்ற அலகுடன் பெரிய அளவில் இருக்கும். சீரான கோடுகளை தலையிலும் மற்றும் இறகுகளிலும் கொண்டிருக்கும். ஆறு மற்றும் ஏரிக்கரைகள், புல் நிறைந்த இடங்கள், கடற்கரை சதுப்பு நிலங்களில் அதிகம் காணப்படும்.

149. சிகப்புகால் புள்ளி உள்ளான்

Spotted Redshank *Tringa erythropus* 29-32 cm.

வடகிழக்கு ஆசியாவிலிருந்து வலசை வரும் பறவை. கௌதாரியின் அளவிலுள்ள இந்த பறவைக்கு நீளமான அலகு, சீரான மேல் இறக்கைகள். இனபெருக்கம் இல்லாத காலத்தில் இறக்கை மேல் புறம் வெளுத்த சாம்பல் நிறம், மேல்புறம் சிகப்புகால் உள்ளானைவிட வெள்ளையாக இருக்கும். இனபெருக்க காலத்தில் கீழ்பாகங்கள் முக்கியமாக கறுப்பு நிறத்தில் காணப்படும். கரைகள் மற்றும் ஆழம் குறைவான ஆறுகள் மற்றும் ஏரிகள், நன்னீர் மற்றும் உவர்நீர் நிலைகளிலும் காணப்படும்.

150. சிகப்புகால் உள்ளான்

Common Redshank *Tringa totanus* 27-29 cm.

மத்திய ரஷ்யா மற்றும் வடகிழக்கு ஆசியா பகுதியிலிருந்து வலசை வரும் உள்ளான். சிகப்பு நிற கால்களைக் கொண்ட உள்ளான் இனம். மஞ்சள் கலந்த சிகப்பு நிறம் அலகு முடியும் இடத்தில் காணப்படும். கால்கள் மஞ்சள் கலந்த சிகப்பு. சிகப்புகால் புள்ளி உள்ளானைவிட குட்டையான அலகு மற்றும் கால்கள், இறக்கை இறகுகள் முடியும் ஓரங்களில் அகலமான வெள்ளை நிறம், இனபெருக்கம் இல்லாத காலத்தில் மேல் பக்கம் சாம்பல்-பழுப்பு, சாம்பல் நிற மார்புடன் காணப்படும். இனபெருக்க காலத்தில் இறகுகளில் கனமான கீற்றுகள் கழுத்து மற்றும் கீழ்பாகங்களில் காணப்படும். முழுவளர்ச்சி அடையாத பறவை பழுப்பு மேல்பாகங்கள் மற்றும் புள்ளிகளுடன் காணப்படும். ஆறுகள், ஏரிக் கரைகள், சதுப்பு நிலங்களில் கூட்டமாக காணப்படும்.

151. சீட்டிஉள்ளான்

Marsh Sandpiper *Tringa stagnatilis* 22-25 cm.

புறா அளவில் ஒடுங்கி, நீண்டு உயரம் கூடுதலாக உள்ள இந்த உள்ளான் இனம், அடியேன் என்றுசொல்லப்படும் பச்சைகால் உள்ளானை விட உருவ அமைப்பில் சிறியதாக இருக்கும். நீண்ட மஞ்சள் கலந்த பச்சை நிற கால்களை கொண்டுள்ள

இந்த பறவை, குளிர்காலத்தை போக்க தமிழ்நாட்டு பகுதிக்கு வரும் பொழுது வெண்மையான வயிறு மற்றும் வால் பகுதியையும், சாம்பல் நிற கழுத்து மேற்பகுதியை கொண்டு இருக்கும். இனம் விருத்தி காலங்களில் இளம்பழுப்பு நிற இறகுகளிலும், மார்பு பகுதிகளிலும் பழுப்பு நிற புள்ளிகள் காணப்படும். இது கூட்டமாக ஆயிரக்கணக்கில் காணப்படும். பொதுவாக உவர் நீர் நிலைகளிலும், சதுப்பு நிலங்களிலும் காணப்படும்.

152. பச்சைக்கால் உள்ளான், அடியேன்

Common Greenshank ***Tringa nebularia*** 30-34 cm.

கௌதாரியின் அளவிலான இந்த பறவை மத்திய ரஷ்ய பகுதியிலிருந்து வலசை வருபவை. முழு வளர்ச்சி அடையாத பறவைக்கு நீளமான குண்டான அலகு மற்றும் பச்சை கால்களுடையது. மேல் நோக்கி வளைந்த அலகு. இனபெருக்கம் இல்லாத காலத்தில் சாம்பல் மேல்பாகங்கள் மற்றும் வெள்ளை முன்கழுத்து மற்றும் கீழ்பாகங்கள். இனபெருக்கக் காலத்தில் கோடுகளுடைய முன்கழுத்து, மார்பு மற்றும் மேல்பாகங்கள் கோடுகளுடன் இருக்கும். முழு வளர்ச்சி அடையாத பறவைக்கு கறுத்த கோடுகளுடைய மேல்பாகங்கள் மங்கிய பழுப்பு மஞ்சள் நிற வெள்ளை ஓரங்களுடன் காணப்படும். சதுப்பு நிலங்கள், உவர் நீர்நிலைகள், கடற்கரை பகுதிகளில் காணப்படும்.

153. வாலாட்டி உள்ளான்

Common Sandpiper ***Actitis hypoleucos*** 19-21 cm.

காடை அளவிலான, மித வெப்பநாடுகளில் இருந்து, வலசை வரும் பறவை. சாம்பல் கலந்த பழுப்பு நிற மேற்பகுதியும், வெள்ளை அடிபகுதியும், குறுகிய கரு-மஞ்சள் கால் மற்றும் பாதங்களையும், வெளிரியபின் அலகும், கறுத்தமுன் அலகும் கொண்டிருக்கும். இறகுகளில் வெண்பட்டை காணப்படும். இறகுகள் மூடிக்கொண்டு இருக்கும் நிலையில், பளிச்சென தெரியும் வெண் தோள்பகுதி, இந்த பறவைக்கு உரித்தான குணாதிசயம். கடற்கரை ஓரம், தனியாகவும் குறைவான

Balaji P B

145. Bar-tailed Godwit

Balaji P B

146. Black-tailed Godwit

Balaji P B

147. Whimbrel

Balaji P B

148. Eurasian Curlew

Balaji P B

149. Spotted Redshank

Balaji P B

150. Common Redshank



Balaji P B

151. Marsh Sandpiper

Balaji P B

152. Common Greenshank

எண்ணிக்கையில் காணப்படும். கரை ஒரம் பெரும்பாலும் உணவு தேடும் பறவை. நீருக்குள் சென்று வேட்டையாடுவது அரிது.

154. ஆற்றுச்சுழி உள்ளான்

Green Sandpiper *Tringa ochropus* 21-24 cm.

காடை அளவில் உள்ள அதிதூரத்தில் இருந்து வரும் இந்த உள்ளான் கருஞ்சிகப்பு கலந்த பழுப்பு நிற மேற்பகுதியையும், இறகுகளையும், சாம்பல் நிறத்தலை மற்றும் மார்பு, அடிப்பாகம் வெள்ளை நிறத்தையும் கொண்டு இருக்கும். கால் மற்றும் குறுகிய அலகும் கரும்பச்சை நிறத்தில் இருக்கும். பறக்கும் பொழுது, சாக்லேட் நிற முன்பகுதியும், தூய்மையான வெள்ளைபிட்டமும் மற்றும் வால் பகுதியும், தெளிவாக வேறுபட்டு காணப்படும். பொதுவாக நந்நீர் பகுதிகளிலும், சிறிய குட்டைகளிலும் வாலை ஆட்டிகொண்டு மேய்வதை காணலாம். இது ஒன்று அல்லது இரண்டு எண்ணிக்கையில் தான் காணப்படும்.

155. வயல் உள்ளான்

Wood Sandpiper *Tringa glareola* 18-21 cm.

காடை அளவில் உள்ள வெகுதூரத்திலிருந்து (ஆர்க்டிக் பகுதி) வலசை வரும் இந்த உள்ளான், ஆற்றுசுழி உள்ளானை விட சிறிது. நீண்டமஞ்சள் நிறம் கலந்த பச்சை கால்களையும், கூர்மையான அலகுகளையும், பழுப்பு நிற முதுகையும், மங்கலான வெண்ணிற வால் பகுதியும் கொண்டு இருக்கும். முதுகு இறகு வெண் புள்ளிகளுடன் காணப்படுவதால், இதனை புள்ளி உள்ளான் என்றும் அழைப்பர். கண்ணிற்கு பின்னால் சிறிய வெள்ளைகோடு இந்த இனத்திற்கு உரிய குணாதிசயம். இது வயல் மற்றும் நந்நீர் பகுதியில் சிறுகுழுக்களாக காணப்படும்.

156. கடற்கரை உள்ளான் / கடற்பீச்சான்

Terek Sandpiper *Xenus cinereus* 22-25 cm.

ஆர்க்டிக் பகுதியில் இருந்து வலசை வரும் பறவை. காடையை விடசற்று பெரிதாக உள்ள இந்த வகை உள்ளான், நீண்டு

மேல்நோக்கி வளைந்த அலகு காணப்படுவதால். சிறுகூனி அரிச்சான் என்றும் அழைக்கப்படும். பழுப்பு நிறத்தில் மேற்பக்க தலை மற்றும் மார்பும், கண்மேற்கோடு வெண்மை நிறத்திலும், வெள்ளை வயிறும், மஞ்சள் நிற கால்களும், அலகின் பின்பகுதி மஞ்சள் நிறமும், மீதி பகுதி கறுப்பாகவும் காணப்படும். கடற்கரை ஓரங்களிலும், மணல் பரப்பு நிறைந்த, உவர்நீர் நிலைகளிலும் சிறிய எண்ணிக்கையில் காணப்படும். ஒருசில எண்ணிக்கை முதல் 50 வரை அடங்கிய சிறுகுழுக்களாக காணப்படும். நன்னீர் நிலங்களில் காணப்படுவது அரிது.

157. கல்புரட்டி உள்ளான்

Ruddy Turnstone ***Arenaria interpres*** 23 cm.

புறா வடிவ உருவத்திலும், தோற்றத்திலும் உள்ள இந்த உள்ளான் குட்டையான அலகு மற்றும் மஞ்சள் கலந்த சிகப்பு கால்கள் உடையது. பறக்கும் போது இறக்கைகளில் கறுப்பு வெள்ளை பட்டையும், கறுப்பு வாலும் பளிச்சென தெரியும். இனபெருக்க காலத்தில் குறுகிய கருப்பு-வெள்ளை அமைப்பு, கழுத்து மார்பு மற்றும் மேல்பாகங்கள் செம்பழுப்பு - சிகப்பு நிறத்தில் காணப்படும். பாறைகள் நிறைந்த கடற்கரை மற்றும் அலைகளுடன் கூடிய சேறு, சகதி நிறைந்த கடற்கரை ஓரங்களில் காணலாம். ஆர்க்டிக் பகுதியிலிருந்து வலசை வரும் பறவைகள்.

158. ஆசிய மூக்கான்

Asian Dowitcher ***Limnodromus semipalmatus*** 34-36 cm.

கண்ணாடி மூக்கு உள்ளானைவிட சிறியது. கறுப்பு அலகு முடியும் இடம் அகலமாகவும் வீங்கிய முனையுடன், தலை சதுர வடிவம், சிதறி பரவிய வெளுத்த இறக்கைப் பட்டையும், சாம்பல் நிற வாலும் பறக்கும் போது தெளிவாக தெரியும். கீழ்பாகங்கள் செங்கல்-சிகப்பு நிறத்தில் இனபெருக்க காலத்தில் காணப்படும். இனபெருக்கம் இல்லாத காலத்தில் அடர்ந்த கோடுகளுடைய மேல் மற்றும் கீழ்பாகங்கள். சதுப்பு நில பகுதிகளில் காணப்படும். வடகிழக்கு ரஷ்யாவிலிருந்து வலசை வரும் இப்பறவை கிழக்கு கடற்கரை ஓர கடல் சார்ந்த நீர் நிலைகளில்

குறைந்த எண்ணிக்கையில் காணப்படும். அழிவை நெருங்கும் இனமாகும்.

159. பச்சைக்கால் உருண்டை உள்ளான் / மடுவு

Great Knot *Calidris tenuirostris* 26-28 cm.

கௌதாரியின் அளவிலான இந்த உள்ளான் வடகிழக்கு ஆசியாவிலிருந்து வலசை வரும் பறவை. கறுப்புக் கால் உருண்டை உள்ளானைவிட பெரியது. பெரும்பாலும் சற்று கீழ் நோக்கி வளைந்த அலகுடன் காணப்படும். இனபெருக்கத்திற்கு தயாராக உள்ள வளர்ந்த பறவைக்கு கறுப்பு நிறத்தில் கனமான குறியீடுகள், மார்பு மற்றும் விலாப்பக்கங்களிலும், தோளை மூடிய சிறகுகளில் செம்பழுப்பு நிறத்தில் இருக்கும். முழு வளர்ச்சி அடைந்த பறவை இனப்பெருக்கம் அல்லாத காலத்தில் கறுப்புக் கால் உருண்டை உள்ளானை விட கனமான கோடுகளை மேல்பாகங்களில் கொண்டிருக்கும். கடற்கரை ஓர கடல் சார்ந்த நீர் நிலைகளில் குறைந்த எண்ணிக்கையில் காணப்படும்.

160. கறுப்புகால் உருண்டை உள்ளான்

Red Knot *Calidris canutus* 23-25 cm.

கௌதாரியின் அளவிலான இந்த பறவைக்கு நேரான குட்டை குண்டு அலகும், இனப்பெருக்கத்திற்கு தயாராகும் போது செங்கல்-சிகப்பு நிறம் கீழ்பாகங்களில் காணப்படும். மற்ற காலங்களில் வெள்ளை கீழ்பாகங்கள் மற்றும் சாம்பல் பழுப்பு மேல்பாகங்களில் இருக்கும். முழு வளர்ச்சி அடையாத பறவைக்கு மங்கிய பழுப்பு மஞ்சள் நிற செதில்கள் போன்ற மேல்பாகங்கள், அலகும் காலும் அடர்ந்த கறுப்பு நிறத்தில் காணப்படும். கடற்கரை ஓர கடல் சார்ந்த நீர் நிலைகளில் குறைந்த எண்ணிக்கையில் காணப்படும். ஆர்க்டிக் பகுதியிலிருந்து குறைந்த எண்ணிக்கையில் மன்னார் வளைகுடா, கோடியக்கரை பகுதிகளுக்கு வலசை வரும் பறவைகள்.

Balaji P B

153. Common Sandpiper

Balaji P B

154. Green Sandpiper

Lajapathi Roy

155. Wood Sandpiper

Rama Neelamegam

156. Terek Sandpiper

Balaji P B

157. Ruddy Turnstone

CC Dominic Sherony

158. Asian Dowitcher

Balaji P B

159. Great Knot

Giridharan V

160. Red Knot

161. வெள்ளை மணல் உள்ளான்

Sanderling *Calidris alba* 20 cm.

குட்டையான பருத்த அலகுடைய பறவை. மிக அகலமான வெள்ளை இறக்கைப்பட்டை. இனபெருக்கத்திற்கு உள்ள பறவைக்கு பொதுவாக கருஞ்சிகப்பு தலை. மார்பு மற்றும் மேல்பாகங்கள். இனபெருக்கம் செய்யாத வளர்ந்தது வெளுத்த சாம்பல் மேல் மற்றும் கீழ்பாகம் மிக வெள்ளையாக இருக்கும். இளைய பறவைக்கு மேல்புறம் கறுப்பு-வெள்ளை திட்டுகளோடு காணப்படும். மணற்பாங்கான கடற்கரையில், குறிப்பாக தனுஷ்கோடி பகுதியில் காணலாம். ஆர்க்டிக் பகுதியிலிருந்து குறைந்த எண்ணிக்கையில் மன்னார் வளைகுடா, கோடியக்கரை பகுதிகளுக்கு வலசை வரும் பறவைகள்.

162. சிறு கொசு உள்ளான்

Little Stint *Calidris minuta* 13-15 cm.

சிட்டுக்குருவியை விட சற்றே பெரிய இந்த கொசு உள்ளான், மஞ்சள் கால் கொசு உள்ளானை விட மிக உருண்டையான கருஞ்சாம்பல் கால்களுடன் காணப்படும். வாலின் பக்க இறகுகள் சாம்பல் நிறத்தில் இருக்கும். இனபெருக்கத் தோற்றத்தில் கருஞ்சிகப்பு வர்ணம் பூசியது போன்றமுகம், கழுத்துப் பக்கங்கள் மற்றும் மார்பு, மேல்பக்க இறகுகள் கருஞ்சிகப்பு நிறத்தில் செதில்கள் போல் காணப்படும். சேறு நிறைந்த ஏரி ஓரங்கள், ஓடைகள் மற்றும் ஆறுகளில் காணப்படும். ஆர்க்டிக் பகுதியிலிருந்து அதிக எண்ணிக்கையில் (லட்ச கணக்கில்) மன்னார் வளைகுடா, கோடியக்கரை பகுதிகளுக்கு வலசை வரும் பறவைகள்.

163. செங்கழுத்து , கறுப்புக் கால் கொசுஉள்ளான்

Red Necked Stint *Calidris ruficollis* 13-16 cm.

இந்தியாவிற்கு அரிதாக ஆர்க்டிக் பகுதியிலிருந்து வலசை வரும் இந்த உள்ளான் கொசு உள்ளான் அளவிலேதான் காணப்படும். இனப்பெருக்கத்திற்கு தயாராகும் முதிர்ச்சி அடைந்த பறவைக்கு தொண்டை, முன் கழுத்து மற்றும் மார்பு கருஞ்சிகப்பு - மஞ்சள்

கலந்த சிகப்பு நிறம். அடி மார்பின் வெள்ளை பக்கங்களின் கறுத்த கோடுகள் மற்றும் மூன்றாம் நிலை இறக்கை இறகுகளில் சாம்பல் நிறம் காணப்படும். குளிர் காலத்தில் கொசு உள்ளானைப் போன்று காணப்பட்டாலும் அதனைவிட சற்றே பருமனான கறுத்த அலகும், அலகு நுனி கூர்மை குறைந்தும் அடர் கறுப்பு கால்களும் வேறுபடுத்திக் காட்டும். கடற்கரை சார்ந்த பகுதிகளில் அரிதாக காணப்படும்.

164. மஞ்சள்கால் கொசு உள்ளான்

Temminck's Stint *Calidris temminckii* 13-15 cm.

கொசு உள்ளானைவிட மிக நீண்டும், குன்றியும் காணப்படும். பறக்கும் போது வாலின் இரு பக்கங்களிலும் வெள்ளை நடுவில் பழுப்பு நிறமாக இருக்கும். மஞ்சள் நிறகால்கள் மேற்புற பகுதி எந்தவித புள்ளி பட்டைகள் இன்றி பழுப்பு நிறத்தில் இருக்கும். மார்பு பகுதியும் பழுப்பு நிறத்தில் இருக்கும். நன்னீர் நிலைகளில் அதிகமாகவும், உவர்நீர் பகுதிகளில் ஒன்று இரண்டுமாக காணலாம். தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளுக்கும் வலசை வரும் உள்ளான்.

165. நீளக்கால் , பச்சைக்கால் கொசுஉள்ளான்

Long-toed Stint *Calidris subminuta* 13-15 cm.

கொசு உள்ளான்களிலே மஞ்சள் கலந்த பச்சை நிறமுடைய ஒரே இனம் இதுதான். நீளமான கழுத்து மற்றும் நேராக நிமிர்ந்து நிற்கும் தோரணை, எல்லா பருவ கால தோற்றங்களிலும் பிரதான புருவ கோடுகள், கனமான கோடுகளுடைய முன்கழுத்து மற்றும் மார்பு. குளிர் காலங்களில் மேல் பாகங்களில் கொசு உள்ளானைவிட அடர்த்தியான குறியீடுகள் காணப்படும். காலின் நடுவிரல் காலின் நீளத்தை விட அதிகமாக இருக்கும். நன்னீர் நிலைகள், புல்வெளிகளுடைய நீர்நிலைகளில் பெரும்பாலும் காணப்படும். உவர் நீர்நிலைகளுக்கு அரிதாக குறைந்த எண்ணிக்கையில் வலசை வரும் பறவை.

166. கறுப்பு வால் மூக்கு உள்ளான்

Dunlin *Calidris alpina* 16-22 cm.

ஆர்டிக் பகுதியில் இருந்து வலசை வரும் பறவை. மூக்கு உள்ளான் போன்று உருவமைப்புடன் காணப்படும். ஆனால் அலகு நேராகவும் கால் சற்று நீளம் குறைந்தும் காணப்படும். கறுப்பு நடு முதுகு, வால் நுனி, வரை நீண்டு வரும். இனவிருத்திகாலத்தில் அடிவயிறு கறுப்பாக காணப்படும். மூக்குஉள்ளானோடு சேர்ந்து காணப்படும். இப்பறவை குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே காணப்படும். நன்னீர் நிலைகளில் காண்பது அரிது.

167. மூக்குஉள்ளான்

Curlew Sandpiper *Calidris ferruginea* 18-23 cm.

இந்த பறவை காடை அளவிலானது. ஆர்க்டிக் பகுதியில் இருந்து வலசை வரும். பழுப்பு நிறம் கலந்த மேற்பகுதியையும், வெள்ளை நிறபிட்டமும், நீண்டு வளைந்த கறுப்பு அலகும், கறுப்பு கால்களையும் கொண்டிருக்கும். இனவிருத்திக்கு தயார் ஆகும் காலத்தில், செம்பழுப்பு கலந்த இறகுகளுடன், கவர்ச்சிகரமாக காணப்படும். கண் மேற்கோடு தெளிவாக தெரியும். உவர் நிலப்பகுதிகளில் (குறிப்பாக கோடிக்கரை ராமேஸ்வரம்) பல்லாயிரம் முதல் லட்சம் வரைக்கும் கூட்டமாக காணப்படும். நன்னீர்நிலைகளில் காணப்படுவது அரிது.

168. கரண்டி மூக்கு உள்ளான்

Spoon-billed Sandpiper *Calidris pygmea* 14-16 cm.

வடகிழக்கு சைபீரியவில் இருந்து வலசை வரும் பறவை. அதனுடைய துடுப்பு போன்ற அகன்ற அலகுகள் மூலம் வேறுபட்டு காணப்படும். குளிர்காலங்களில் பழுப்பும் வெள்ளையும் காணப்படும் பறவை, இனவிருத்தி காலங்களில் செம்பழுப்பு இறகுகள் தொண்டைமார்பு பகுதியில் காணப்படும். அழியும் நிலையில் இருக்ககூடிய ஓர் இனம். கொசு உள்ளானின் அளவு உள்ள பறவை. தமிழ்நாட்டில் கோடியக் கரையில் மட்டும் வந்ததாக பதிவிடபட்டுள்ளது.

Balaji P B

161. Sanderling



Balaji P B

162. Little Stint

CC Laurie Boyle

163. Rednecked Stint

Balaji P B

164. Temminck's Stint

Balaji P B

165. Long-toed Stint

Balaji P B

166. Dunlin

Balaji P B

167. Curlew Sandpiper

Sayam Chowdhry

168. Spoon-billed Sandpiper

169. குறு மூக்கு உள்ளான்

Broad-billed Sandpiper *Calidris falcinellus* 16-18 cm.

ஆர்க்டிக் பகுதியில் இருந்து வலசைவரும் இந்த காடை அளவில் உள்ள பறவை, மூக்கு உள்ளானை விட சிறியதாக காணப்படும். மேற்பகுதி பழுப்பு நிறத்தையும், அடி பகுதி மற்றும் விலாபகுதி வெண்மையாகவும் காணப்படும். தலையில் மங்கிய வெண் கோடுகளும், கறுப்பு கோடுகளும் கண் மேற்கோடுகளையும் கொண்டிருக்கும். கறுத்த அலகுபின் பக்கம் விரிந்தும், முன் பக்கம் சிறிது ஒடுங்கியும் கீழ் நோக்கி வளைந்தும் காணப்படும். சேறு கலந்த கடற்கரை பகுதிகளில் அதிகமாக காணப்படும் (1000 கணக்கில்). மற்ற உவர் நிலங்களில் சற்று குறைவாக காணப்படும். இன விருத்தி காலங்களில் கரும்பழுப்பு கோடுகள் தொண்டை மற்றும் மார்ப்பு பகுதி காணப்படும். மேற்பகுதியில் கறுப்பு மற்றும் செம்பழுப்பு இறகுகளும் காணப்படும்.

170. வரசிரகி உள்ளான்

Ruff *Calidris pugnax* 20-25 cm.

ஆர்க்டிக் பகுதியிலிருந்து கூட்டமாக வலசை வரும் பறவை. கவுதாரி அளவிலான இந்த பறவை நீண்ட கழுத்தையும், புள்ளிகள் நிறைந்த மார்பு பகுதியும், வெள்ளை வயிற்று பகுதியும், செதில்கள் போன்ற பழுப்பு நிற மேற்பகுதியையும் கொண்டது. ஆண் பறவை, பெண் பறவையை விட பெரியது. முதிர்ச்சி அடைந்த ஆண், பெண் பறவைகளுக்கு மஞ்சள் நிற கால்களும், காணப்படும். முதுகு கரும்பழுப்பு, நிறத்திலும் வால் வெள்ளையாகவும் இருக்கும். உயரத்திற்கு ஏற்ப அலகின் நீளம் அதிகம் இருக்காது. நன்னீர் நிலைகளிலும், நெல் வயல்களிலும், அதிகமாக காணப்படும். உவர்நீர் பகுதியில் கூட்டமாக காணப்பட்டாலும், கடற்கரை பகுதியில் பல்லாயிரகணக்கில் மழைகாலங்களில் காணப்படும்.

171. பஞ்சு உள்ளான்

Red-necked Phalarope *Phalaropus lobatus* 18-19 cm.

அழகான கூர்மையான அலகு நேர்த்தியாக வடிவமைக்கப் பட்டது. இனப்பெருக்கத்திற்கு தயாரானதிற்கு வெள்ளை

தொண்டை மற்றும் சாம்பல் நிற கழுத்துக்கு கீழ்பக்கங்களில் சிகப்பு கோடுகள் இருக்கும். இனப்பெருக்கத்திற்கு தயாராக இல்லாத முழு வளர்ச்சி அடைந்த பறவைக்கு சாம்பல் மேல்பாகங்கள், வெள்ளை ஓரங்கள் உள்ள தோள்பட்டை. குளிர்காலங்களில் கடலில் கூட வசிக்கும். நீந்தி இரை தேடும் வித்தியாசமான இந்த உள்ளான் ஆர்க்டிக் பகுதியிலிருந்து வலசை வருபவை.

172. நீளவால் இலை கோழி

Pheasant-tailed Jacana *Hydrophasianus chirurgus* 31 cm.

பரந்த வெள்ளை நிறம் மேல் மற்றும் கீழ் இறக்கைகளில் காணப்படும். கழுத்து பக்கங்களில் மஞ்சள் நிற திட்டு காணப்படும். இனப்பெருக்கத்திற்கு தயாரான வளர்ந்த பறவைக்கு பழுப்பு கீழ்பாகங்கள் மற்றும் நீண்ட வால் இருக்கும். இனப்பெருக்கத்திற்கு தயாராக இல்லாத பறவைக்கு வெள்ளை கீழ் பாகங்கள், கறுத்த கோடு கழுத்துக்கு கீழ் பக்கத்திலும் மற்றும் கறுத்த மார்பு பட்டையும் இருக்கும். சதுப்பு நிலம், மிதக்கும் தாவரங்கள் நிறைந்த ஏரிகள் மற்றும் குட்டைகள்.

173. கரும்பச்சை இலைகோழி

Bronze-winged Jacana *Metopidius indicus* 28-31 cm.

கறுத்த மேல் மற்றும் கீழ் இறக்கைகள். வளர்ந்த பறவைக்கு வெள்ளை புருவக்கோடுகளும், வெங்கலம்-பச்சை நிற மேல்பாகங்கள் மற்றும் கருப்பு கலந்த கீழ்பாகங்கள். இளைய பறவைக்கு மஞ்சள் கலந்த சிகப்பு, லேசான பழுப்பு மஞ்சள் நிற வர்ணம் பூசப்பட்டது போன்ற மார்பு, சின்ன வெள்ளை புருவக்கோடுகள் மற்றும் அலகு மஞ்சள் நிறம். சதுப்புநிலம், மிதக்கும் தாவரங்கள் உள்ள குட்டைகள், ஏரிகளில் காணலாம்.

174. மங்கோலிய பட்டாணி உப்புகொத்தி

Lesser Sand-Plover *Charadrius mongolus* 19-21 cm.

சட்டித் தலை உள்ளானைவிட பெரியது மற்றும் நீண்ட கால்களுடன், வெள்ளை பின் கழுத்துப்பட்டை இல்லாமல் காணப்படும். அன்னா மண்டை உள்ளானில் இருந்து வேறுபடுத்தி பார்ப்பது மிக கடினம், இருந்தாலும் சிறிய மற்றும்

பருத்த அலகு (மழுங்கிய முனையுடன்) மற்றும் குட்டையான கருஞ்சாம்பல் அல்லது பச்சை கலந்த கறுப்பு கால்கள். பறக்கும் போது வழக்கமாக கால்கள் இறக்கையை விட்டு வெளியே நீண்டு இருக்காது. இனப்பெருக்க ஆணிற்கு அன்னாமண்டை உள்ளானிடம் ஒப்பிடும் போது முழு கறுப்பு முகதிரையும் மற்றும் முன் தலை மற்றும் நன்றாக பரந்த கருஞ்சிகப்பு மார்பும் இருக்கும்.

175. அன்னாமண்டை உள்ளான்

Greater Sand-Plover *Charadrius leschenaultii* 22-25 cm.

இனப்பெருக்கத்திற்குத் தயாராக இல்லாத வளர்ந்தது, மண்டை உள்ளானை விட பெரியதாகவும் மற்றும் நெட்டையாகவும், நீளமான மற்றும் பெரிய அலகுடன், வழக்கமாக நீண்ட கால்கள் வெளுத்து, தெளிவான மஞ்சள் அல்லது பச்சை நிறத்தில் இருக்கும். இனப்பெருக்க பறவைக்கு மார்பில் செங்கல் பழுப்பு நிற பட்டை காணப்படும். கடற்கரையோர ஈர நிலங்களில் மட்டும் தான் காணப்படும்.

176. காஸ்பியன் உள்ளான்

Caspian Plover *Charadrius asiaticus* 23-26 cm.

மண்டை உள்ளானைப் போலத் தோன்றும் மற்றொரு உள்ளான். சற்றே நீண்ட கால்கள், கன்னம் மற்றும் நெற்றி மங்கிய மஞ்சள் நிறம், கண்ணின் பின் காதுவரை பழுப்புக் கோடு போன்றவை மங்கோலிய உள்ளானில் இருந்து வேறுபடுத்தும். வெகு அரிதாக வரும் வலசைப் பறவை. கோடியக்கரையில் சில சமயம் காணப்பட்டுள்ளது.

177. சட்டித்தலை உள்ளான்

Kentish Plover *Charadrius alexandrines* 14-17 cm.

இனப்பெருக்கத்திற்குத் தயாராக உள்ள வளர்ந்த ஆண் சிறு அளவில் பருமனாக தோற்றமளிக்கும். பொதுவாக சிறிய வெள்ளை பின்புற கழுத்துப்பட்டை, நன்றாக வரையறுக்கப்பட்ட தட்டுகள் மார்பின் பக்கங்களில் காணப்படும். இனப்பெருக்க காலத்தில் முன்தலை கறுப்பு

169. Broad-billed Sandpiper

CC Hans Norelius



170. Ruff

Balaji P B

171. Red-necked Phalarope

Udayakumar B

172. Pheasant-tailed Jacana

Balaji P B

173. Bronze-winged Jacana

Balaji P B

174. Lesser Sand-Plover

Balaji P B

175. Greater Sand-Plover

Rama Neelamegam

176. Caspian Plover

Biju P B

பட்டை தோன்றும். ஆறுகள் மற்றும் ஏரிகளின் கரைகள், சதுப்புநில பகுதி, கடற்கரைப் பகுதிகளில் காணப்படும்.

178. மஞ்சள் கால் மண்டை உள்ளான்

Common Ringed Plover *Charadrius hiaticula* 18-20 cm.

மண்டை உள்ளான் அளவிலே உள்ள இந்தப் பறவைக்கு பிரதானமான மார்புப் பட்டை மற்றும் வெள்ளை பின்புற கழுத்துப்பட்டை இருக்கும். பறக்கும் போது பிரதானமான இறக்கை பட்டை காணப்படும். வளர்ந்த இனப்பெருக்கத்திற்குத் தயாராக உள்ள பறவைக்கு மஞ்சள் கலந்த சிகப்புக் கால்கள் மற்றும் அலகின் அடிபாகம் (இது இனப்பெருக்கத்திற்குத் தயாராக இல்லாத பறவைக்கு மங்கலாகவும், முழுவளர்ச்சி அடையாத பறவை இளம்பச்சை-மஞ்சளாக இருக்கும்) தூய தண்ணீர் உள்ள மண் கரைகள் மற்றும் கடற்கரையோர ஈர நிலங்கள். ஐரோப்பிய பகுதியிலிருந்து அரிதாக வலசை வரும் பறவை.

179. மஞ்சள்கால் சட்டித்தலை உள்ளான்

Little Ringed Plover *Charadrius dubius* 14-17 cm.

சிறிய அளவில், நீண்ட மற்றும் சிறிய தலையுடன் மற்றும் சீரான மேல் இறக்கையில் குறுகிய இறக்கைப் பட்டை காணப்படும். கால்கள் மஞ்சள் கலந்து அல்லது வெளிர் சிகப்பு. இனப்பெருக்கத்திற்குத் தயாராக உள்ள வளர்ந்த பறவைக்கு தெளிவான மஞ்சள் கண் வளையம் இருக்கும். ஆறுகளின் சேற்றுக் கரைகள், குட்டை மற்றும் ஏரிகளில் காணப்படும். தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளில் காணப்படும்.

180. மஞ்சள் மூக்கு ஆள்காட்டி

Yellow-wattled Lapwing *Vanellus malabaricus* 26-28 cm.

புறாவை விட சற்று பருமமனான இதை ஆள்காட்டிக்கு மஞ்சள் நிறத்தில் வெளியே அலகிற்கு கீழே தொங்கும் சதை மற்றும் கால்கள், வெள்ளை புருவக்கோடுகள், கறுத்த தொப்பி மற்றும் பழுப்பு மார்புப்பட்டையுடன் காணப்படும். இறக்கை மற்றும் வால் அமைப்பு சிகப்பு மூக்கு ஆள்காட்டியைப் போல் இருக்கும்.

வறண்ட ஆற்றாங்கரை, புல்வெளிகள் மற்றும் உலர்ந்த திறந்த நாட்டுப்புறம்.

181. சாம்பல்தலை ஆள்காட்டி

Grey-headed Lapwing ***Vanellus cinereus*** 29-32 cm.

புறாவைவிட பெரிய உருவத்தில் உள்ளது சாம்பல் நிற ஆள்காட்டி. சாம்பல் நிற கழுத்து, தலையும், கருஞ்சாம்பல் மார்பு பட்டையும், வெள்ளை வயிற்றையும் கொண்டது. மேற்பகுதி பழுப்பு நிறத்தையும், பிட்டம் வெண்மை நிறத்தையும், வால் கறுப்பாகவும் இருக்கும். வலசை வரும் பறவை. சென்னையில் பள்ளிக்கரணையில் வருடம்தோறும் ஆயிரம் வரைக்கும் காணப்படும்.

182. சிகப்பு மூக்கு ஆள்காட்டி

Red-wattled Lapwing ***Vanellus indicus*** 32-35 cm.

கறுப்பு தொப்பி மற்றும் மார்பு, கறுப்பு நுனியுடன் கூடிய சிகப்பு அலகு மற்றும் கால்கள் மஞ்சள், இறக்கை மற்றும் வால் அமைப்பு. அலகின் அடுத்து செந்நிற தொங்கும் சதை இருக்கும். மஞ்சள் மூக்கு ஆள்காட்டியைப் போல் இருக்கும், ஆனால் பெரியது.

183. கல்பொறுக்கி

Indian Courser ***Cursorius coromandelicus*** 23 cm.

ஆள்காட்டியை போன்ற இந்த பறவையின் முழுவளர்ச்சி யடைந்தது, சாம்பல்-பழுப்பு மேல் பாகங்கள் மற்றும் மஞ்சள் கலந்த செங்கல் பழுப்பு நிற கீழ் பாகங்கள், கறுப்பு அடிவயிறு கொண்டிருக்கும். உச்சந்தலை செம்பழுப்பு, பிரதான வெள்ளை புருவக்கோடுகள் மற்றும் கறுப்பு கண்-பட்டையுடன் காணப்படும். பறக்கும் போது மேல்வால் இறகுகளின் குறுக்கே வெள்ளை பட்டையும், இறக்கையின் கீழ் புறம் மிகக் கறுப்பாகவும், இறக்கைகள் அகலமாக வட்டவடிவ முனையுடன் காணப்படும். திறந்த நாட்டுப்புறம் மற்றும் வறண்ட ஆறுகளில், அரிதாகத்தான் காணப்படும்.

184. தோல் குருவி

Oriental Pratincole *Glareola maldivarum* 23-24 cm.

இனப்பெருக்கத்திற்குத் தயாராக இல்லாத வளர்ந்த பறவைக்கு கறுப்பு ஓரங்கள் உள்ள வெளிர் மஞ்சள் தொண்டை மற்றும் மஞ்சள் கலந்த சிகப்பு பூசினது போல் கீழ் பாகங்கள் இருக்கும். மிக திறனுடன் பூச்சிகளை பறந்துகொண்டு ஆலாக்களைப் போல வேட்டையாடி சாப்பிடும். ஈர நிலங்களுக்கு அருகேயுள்ள காய்ந்த தரைகளில், புல்வெளிகளில் காணப்படும். வலசை வரும் மற்றும் இந்தியாவில் தங்கி இனப்பெருக்கம் செய்யும் வகைகளும் உண்டு.

185. சின்னத்தோல்குருவி

Small Pratincole *Glareola lactea* 16-19 cm.

சிறிய அளவில், வெளிர் பழுப்பு மற்றும் சாம்பல் நிறத்தில் பிளவுபட்ட வாலுடன் காணப்படும். பறக்கும் போது இரண்டாம் நிலை இறக்கைகளின் குறுக்கே வெள்ளைபட்டையும், கறுப்பு கலந்த கீழ் இறக்கை இறகுகளும் மற்றும் கறுப்புப் பட்டை வாலிலும் காணப்படும். பெரிய ஆறுகள் மற்றும் மணல் திட்டு உள்ள ஏரிகள் அல்லது கூழாங்கற்கள் நிறைந்த கரைகள், முக்கியமாக காணப்படும் இடங்கள்.

186. சாம்பல் உப்புகொத்தி / ஆனைதலை மண்டை உள்ளான்

Black-bellied Plover (Grey Plover)

Pluvialis squatarola 27-30 cm.

வெள்ளை கீழ் இறக்கை இறகுகள் மற்றும் கறுப்பு துணை இறக்கைகள், பொன்னிற உப்பு கொத்தியை விட குண்டான அலகு மற்றும் குட்டையான கால்களுடன் பருத்துக் காணப்படும். வெள்ளை வால் பின்புறம் மற்றும் பிரதானமான வெள்ளை இறக்கைப் பட்டைகள் இருக்கும். இனப்பெருக்கக் காலத்தில் இறக்கைகளில் பரந்த பளபளக்கும் வெள்ளை நிற மேல் பாகங்களில் காணப்படும். இனப்பெருக்கத்திற்கு தயாராக இல்லாத போது மேல் பாகங்கள் சாம்பல் நிறத்தில் காணப்படும்.

Balaji P B

177. Kentish Plover

Rama Neelamegam

178. Common Ringed Plover

Balaji P B

179. Little Ringed Plover


Balaji P B

180. Yellow-wattled Lapwing

Balaji P B

181. Grey-headed Lapwing

Balaji P B

182. Red-wattled Lapwing


Balaji P B

183. Indian Courser

Balaji P B

184. Oriental Pratincole

குரல் வருத்தமான சீ-வூ-இ. மணற்பாங்கான கரை, சேறு நிறைந்த இடம் மற்றும் அலைகளுடன் கூடிய சிற்றோடை.

187. பொன்னிற உப்புகொத்தி

Pacific Golden-Plover *Pluvialis fulva* 23-26 cm.

ஒடுங்கிய உடலுடன், நீண்ட கழுத்து மற்றும் நீண்ட கால்களுடைய உள்ளான். எல்லா பருவ காலத்திலும் மேல் பாகங்களில் தங்க-மஞ்சள் நிற குறியீடுகள், கறுத்த சாம்பல் நிறம் கீழ் இறக்கை இறகுகளிலும் மற்றும் துணை இறக்கைகளிலும் காணப்படும். பறக்கும் போது குறுகிய வெள்ளை இறக்கைப் பட்டை மற்றும் கறுப்பு நிறம் வாலின் பின்புறம் காணப்படும். சேற்றுக்கரைகள், உழுத நிலங்கள் மற்றும் புல்வெளிகளில் காணப்படும் வலசை வரும் உள்ளான்.

188. வளைமூக்கு உள்ளான்

Pied Avocet *Recurvirostra avosetta* 42-45 cm.

மேல் நோக்கி வளைந்த கறுப்பு அலகு. தனித்து தெரியக்கூடிய கறுப்பு-வெள்ளை அடையாளங்கள். இளையதிற்கு வெளிர்சிகப்பு முக இறகுகள் மற்றும் தோள்பட்டை இறகுகள். சதுப்புநிலப்பகுதி, ஆற்றுக்கரை ஓரங்கள் மற்றும் நதிகள்.

189. நண்டுத்திண்ணி

Crab-Plover *Dromas ardeola* 38-41 cm.

ஓமன், கசகஸ்தான் நாட்டிலிருந்து வலசை வருபவை. கறுப்பு-வெள்ளை சிறகுகள், குறுகிய பருத்த கறுப்பு அலகு மற்றும் நீண்ட நீல-சாம்பல் கால்கள். முழு வளர்ச்சி அடையாதவை வளர்ந்ததை போல் இருந்தாலும் மேலே பழுப்பு நிறத்தில் காணப்படும். கடலோர சேற்றுநிலம், கடல் சார்ந்த பாறைகள், மணற்பாங்கான கடற்கரை, பவளப்பாறைப் பகுதி. மன்னார் வளைகுடா தீவுகளில் அதிகம் காணலாம்.

190. நெடுங்கால் உள்ளான்

Black-winged Stilt *Himantopus himantopus* 35-40 cm.

கறுப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் மெலிந்த தோற்றத்துடன் நீண்ட வெளிர்சிகப்பு கால்கள் மற்றும் அழகான நீண்ட

அலகுடன் காணப்படும். கறுப்பு இறகுகளை தவிர மற்ற எல்லா பாகங்களும் வெண்மையாக இருக்கும். எல்லா நீர் நிலைகளிலும், குறிப்பாக கழிவு நீர் ஓடைகளிலும் கூட்டமாக காணப்படும். வலசை வரும் வகைகளும் உண்டு.

191. பெருங்கண்ணி, பெரிய மொசக்கொழுந்து
Indian Thick-knee (Indian Stone-curlew)
Burhinus indicus 40-44 cm.

கோழியை விட சற்று சிறிதான இந்த பெருங்கண்ணிக்கு பழுப்பு மஞ்சள். கறுப்பு அலகு, மஞ்சள் கண் மற்றும் நீளமான மஞ்சள் கால்கள். முக்கியமாக அந்திக்கருக்கல் மற்றும் இரவு நேரங்களில் சுறுசுறுப்பாகவும், பகல் பொழுதை நிழலில் உட்கார்ந்து கழிக்கும். பாலைவனம், குன்றுகள், காய்ந்த திறந்த காடுகள் மற்றும் நீர்நிலைகளில் காணப்படும்.

192. வளைமூக்கு பெருங்கண்ணி
Great Thick-knee (Great Stone-curlew)
Esacus recurvirostris 49-54 cm.

மேல் நோக்கி வளைந்த கறுப்பு மற்றும் மஞ்சள் அலகு, வெள்ளை முன் தலை மற்றும் மூக்கு கண்ணாடி போன்ற குறியீடு கண்ணை சுற்றியும் மற்றும் கறுத்த முகமூடியும் காணப்படும். நிற்கும் போது இறக்கையின் குறுக்கே கறுத்தபட்டை மிக பிரதானமாக இருக்கும். பறக்கும் போது இறக்கையின் மையத்தில் சாம்பல் பட்டையும் வெள்ளை திட்டுகள் முதல் நிலை இறக்கை இறகுகளிலும் காணப்படும். பெரிய ஆறுகள் மற்றும் ஏரிகளின் கற்கள் நிறைந்த கரைகள், கடற்கரை ஓரங்களில் காணப்படும்.

193. கிளிஞ்சல் கொத்தி
Eurasian Oystercatcher *Haematopus ostralegus* 40-46 cm.

கோழியின் அளவிற்கு சமமான இப்பறவை கறுப்பு மற்றும் வெள்ளையுடன், அகலமான வெள்ளை இறக்கை பட்டையோடு காணப்படும். அலகு நீண்டும் சிகப்பு நிறத்திலும் காணப்படும். வெள்ளை கழுத்துப்பட்டை இனப்பெருக்கம் செய்யாத காலங்களில் இருக்கும். மணற்பாங்கான மற்றும் பாறைகள்

Balaji P B

185. Small Pratincole

Balaji P B

186. Black-bellied Plover

Balaji P B

187. Pacific Golden-Plover

Rama Neelamegam

188. Pied Avocet

Kannika Nagarajan

189. Crab-Plover

Balaji P B

190. Black-winged Stilt

Balaji P B

191. Indian Thick-knee

Balaji P B

192. Great Thick-knee

நிறைந்த கடற்கரை மற்றும் பவளப்பாறைகள். வலசை வருபவை.

194. மெல்லிய அலகு கடற்காக்கை

Slender-billed Gull *Chroicocephalus genei* 43 cm.

வருடம் முழுவதும் தலை வெள்ளையாக, இருந்தாலும் அலகு சற்று நீண்டும் வளைவு குறைந்து ஒடுங்கி நேராகவும் கருஞ்சிகப்பு நிறத்திலும் இருக்கும். இறகு உதிர்த்த முதல் பருவத்தில் சில சமயம் சாம்பல் நிற காது மூடுதூவியுடன் காணப்படும். சரிந்த முன் தலை மற்றும் நீண்ட கழுத்துடன் இருக்கும். வெளுத்த விழி வண்ணப்படலம் முதிர்ச்சியற்ற பறவைகளை தவிர மற்ற பறவைக்கு இருக்கும். முதிர்ச்சியடைந்த பறவைக்கு மார்பு மற்றும் வயிற்று பகுதியில் வித்தியாசமான வெளிர்சிகப்பு பூசினதுபோல் காணப்படும். பெரிய ஆறுகள், சதுப்புநிலப்குதிகளில் காணப்படும்.

195. கறுப்புத்தலை கடற்காக்கை

Black-headed Gull

Chroicocephalus ridibundus 38 cm.

முதிர்ச்சியடைந்த பறவைக்கு, பளீர் என்ற வெள்ளை நிறம், பழுப்புத்தலை இருக்கும். வெளி மூன்று முதன்மை இறகுகளின் மேற்புறம் வெண்மையான சிறு உருண்டை வடிவபகுதிகள், கடற்காக்கைக்கு போன்று, காணப்படாது. கறுப்பு முனையுடைய அலகு மற்றும் தலை முழுவதும் வெள்ளையாகவும் கறுத்த காது மூடுதூவி திட்டுடன் காணப்படும். ஏரிகள் மற்றும் ஆறுகளில் காணப்படும், தமிழ்நாட்டிற்கு மிக குறைந்த எண்ணிக்கையிலேயே வலசை வரும் கடற்காக்கை.

196. பழுப்புத்தலை கடற்காக்கை

Brown-headed Gull *Chroicocephalus brunnicephalus* 42 cm.

வாத்தின் அளவிலான இந்த கடல் காகம் தமிழ்நாட்டிற்கு அதிக எண்ணிக்கையில் வலசை வருகிறது. வட்ட வடிவ இறக்கை நுனி மற்றும் அகலமான அலகுடன் இருக்கும். வளர்ந்ததிற்கு அகலமான இறக்கை நுனிகள் மற்றும் வெள்ளை திட்டு வெளி

இறக்கையிலும், முதல் நிலை இறக்கை இறகுகளின் அடிபுறம் கறுப்பு நிறம், வெளுத்த மஞ்சளாக இருக்கும். (அது பழுப்பு நிறத்தில் வளர்ந்த கருந்தலை கடற்காகத்திற்கு இருக்கும்). இனப்பெருக்கக் காலத்தில் கறுப்புத்தலை கடற்காகத்தை விட மங்கலான சாக்லெட் நிற தலையை கொண்டு இருக்கும். ஏரிகள், கடற்கரைகள் மற்றும் ஆறுகளில் காணப்படும்.

197. பாலாஸ் கடற்காக்கை

Pallas's Gull *Ichthyaetus ichthyaetus* 69 cm.

வளைந்த தலை மற்றும் சரிந்த முன் தலை, கூரான உச்சந்தலை கண்ணிற்கு பின் வரை காணப்படும். கறுத்த முனையுடைய பெரிய அலகு மற்றும் வீங்கிய தொண்டை பகுதியும் காணப்படும். இனப்பெருக்கத்திற்குத் தயாராக உள்ள வளர்ந்த பறவைக்கு கறுப்பு தலை கொண்டையும் மற்றும் அழுத்தமான வெள்ளை கண் பிறை போன்ற வளைவுகளும், தெளிவான இறக்கை அமைப்புகளும் காணப்படும். முதல் வருட முடிவில் சாம்பல் நிற தோளை மூடிய பகுதி மற்றும் தோளை மூடிய இறகுகள், இரண்டாம் வருடமுடிவில் சாம்பல் மேல் இறக்கைகள், கறுப்பு குறைந்த இறக்கை பட்டை மற்றும் வால்பட்டை பரந்த கறுப்பு நிறம் முதனிலை இறக்கை இறகுகளிலும், முதனிலை இறக்கை தூவிகளிலும் காணப்படும். ஏரிகள், கடற்கரைகள் மற்றும் பெரிய ஆறுகள்.

198. ஹியூக்லின் , கருமுதுகு கடற்காக்கை

Lesser Black-backed Gull *Larus fuscus* 58-65 cm.

வளர்ந்த பறவைக்கு பெரிய கடற்புறாவை விட கறுத்த சாம்பல் மேல் பாகங்கள் இருக்கும். தலை மற்றும் கழுத்து வெள்ளை நிறமாய் இருக்கும். இறக்கையுதிர்ந்த முதல் பருவத்தில் பாலா கடற்காக்கையில் இருந்து வேறுபட்ட கறுத்த உள்புற முதன்மை இறக்கைகளும், கறுத்த கீழ் இறக்கை இறகுகள் மற்றும் வழக்கமாக அகலமான கறுத்த வால் பட்டையும் இருக்கும். மஞ்சள் நிறக் கால்கள், அலகின் நுனியில் சிவப்புப் புள்ளியும் காணப்படும். கடல்கரையிலும், துறைமுகங்களிலும் காணப்படும். பல்லாயிரக்கணக்கில் வலசை வருபவை.

199. சிறிய ஆலா

Little Tern *Sterna albifrons* 22-24 cm.

வேகமாக விரைவாக இறக்கையடித்து பறக்கும். இனப் பெருக்கத்திற்குத் தயாரான வளர்ந்த பறவைக்கு வெள்ளை முன்தலை மற்றும் கறுப்பு முனையுடைய மஞ்சள் அலகு. இனப்பெருக்கத்திற்குத் தயாராக இல்லாத வளர்ந்ததிற்கு கறுப்பு கலந்த அலகு கறுப்பு முகத்திரை மற்றும் பிடரிப்பட்டை, கருமை குறைந்த இறக்கைப்பட்டை காணப்படும். வால்பிளவுபட்டு காணப்படும். குறுகிய தூரத்திற்கு வலசை செல்லும் பறவை.

200. பருத்த அலகு ஆலா

Gull-billed Tern *Gelochelidon nilotica* 35-38 cm.

பருத்தது, கடற்காக்கையை போன்ற கறுத்த அலகு மற்றும் கடற்காக்கையை போன்ற தோற்றமுடையது. வாலின் பின்புறம் சாம்பல் நிறம் மற்றும் கறுப்பு நிறமுடைய வால். இனப்பெருக்கத்திற்குத் தயாராக இல்லாத மற்றும் முழுவளர்ச்சியடையாத பறவைக்கு கறுப்பு நிற பாதி-திரை காணப்படும். ஏரிகள் மற்றும் பெரிய ஆறுகள், உப்பங்கழிகள், கடற்கரைகள்.

201. காஸ்பியன் ஆலா

Caspian Tern *Hydroprogne caspia* 47-54 cm.

பெரிய அளவில் பெரிய சிகப்பு அலகுடன் இருக்கும் ஆலா. ரஷ்யாவின் காஸ்பியன் பகுதிகளில் இருந்து வலசை வரும் பறவை. கூர்மையான சிறகுகள், அடர் சிகப்பு அலகு, பெரிய உருவம் இதனை மற்ற ஆலாக்களில் இருந்து வேறுபடுத்தும். ஏரிகள் மற்றும் பெரிய ஆறுகள், கடற்கரைகள்.

202. வெண் இறக்கை ஆலா

White-winged Tern *Chlidonias leucopterus* 20-23 cm.

இனப்பெருக்கக் காலத்தில் கறுப்பு தலை மற்றும் உடம்பு, வெளுத்த மேல் இறக்கை இறகுகளிலில் இருந்து வேறுபட்டு காணப்படும். கறுப்பு கீழ் இறக்கை இறகுகள் காணப்படும்.

193. Eurasian Oystercatcher

194. Slender-billed Gull

195. Black-headed Gull

196. Brown-headed Gull

197. Pallas's Gull

198. Lesser Black-backed Gull

199. Little Tern



200. Gull-billed Tern

இளம்பறவைக்கு சிறிய அலகு, வெள்ளை வால் பின்புறம் சாம்பல் நிற வாலில் இருந்து வேறுபட்டிருக்கும். கறுப்பு தலையில் இருந்து இறங்கி வரும் கறுப்பு கோடுகள் கழுத்தின் இரண்டு பக்கங்களிலும் இறங்கும். சதுப்பு நிலம், ஏரிகள் மற்றும் ஆறுகள், வங்க கடலின் அருகாமையிலுள்ள பகுதிகளில் காணப்படும்.

203. மீசை ஆலா

Whiskered Tern *Chlidonias hybrida* 23-25 cm.

இனப்பெருக்கக் காலத்தில், வெள்ளை கன்னங்கள் சாம்பல் கீழ் பாகங்களில் இருந்து வேறுபட்டிருக்கும். மிக நீண்ட வெளி வால் இறகுகள் இருக்காது. வெண் இறக்கை ஆலாவிலிருந்து பெரிய அலகு, கருஞ்சாம்பல் வால் மூலம் வேறுபட்டிருக்கும், சதுப்புநிலம், ஏரிகள் மற்றும் ஆறுகள்.

204. இளஞ்சிவப்பு ஆலா

Roseate Tern *Sterna dougallii* 33-38 cm.

வெளுத்த சாம்பல் மேல் பாகங்கள் மற்றும் கறுப்பு வால் பின் புறம், வெள்ளை வெளி சிறகுகளுடைய நீண்ட வால், அகலமான வெள்ளை முடியும் விளிம்புகளை கொண்ட இறக்கைகள் கொண்டது. விரைப்பாகவும் வேகமாகவும் பறக்கும். அரிதாக வலசை வரும் பறவை.

205. கறுப்பு தோள் ஆலா

Common Tern *Sterna hirundo* 31-35 cm.

ரஷ்யா கிழக்கு ஐரோப்பா நாடுகளிலிருந்து வலசை வரும் ஆலா. தோளை மூடிய சாம்பல் இறகுகள், ஆழ்ந்த பிளவுபட்ட வெள்ளை வால், பின்புறம் மற்றும் மேல் வால் இறக்கை இறகுகளில் இருந்து வேறுபட்டிருக்கும். இருந்தாலும் வேறுபாடு என்பது இனப்பெருக்கத்திற்குத் தயாராக இல்லாத பறவைக்கு குறைந்தே காணப்படும். குட்டையான வெளி வால் இறகு உட்கார்ந்திருக்கும் போது வாலை விட்டு வெளியே நீளாமல் இருக்கும். இனப்பெருக்கம் இல்லாத காலத்தில் மேல் மற்றும் கீழ்பாகங்கள் மற்றும் அலகு கறுப்பு நிறம், வெள்ளை முன் நெற்றியுடன் காணப்படும். இளைய பறவைக்கு கால்கள் மற்றும்

அலகின் அடிபாகம் மஞ்சள் கலந்த சிகப்பு நிறம். கடற்கரையோரங்களில் காணப்படும். கடல் ஆலாக்களில் ஒன்று.

206. கருவயிற்று ஆலா

Black-bellied Tern ***Sterna acuticauda*** 33 cm.

ஆற்று ஆலாவை விட மிகச்சிறியது, எல்லா பருவங்களிலும் மஞ்சள் கலந்த சிகப்பு அலகு (மாறுபட்ட கறுப்பு முனையுடன்) காணப்படும். இனப்பெருக்காலத்தில் முழுவளர்ச்சியடைந்த பறவைக்கு கறுப்பு அடிவயிறு மற்றும் வாலடி இருக்கும். ஏரிகள் மற்றும் ஆறுகளில் காணப்படும்.

207. ஆற்று ஆலா

River Tern ***Sterna aurantia*** 38-46 cm.

இனப்பெருக்கத்திற்குத் தயாரான வளர்ந்ததிற்கு அலகு மஞ்சள் கலந்த சிவப்பு, கறுப்பு தொப்பி, கீழ் பாகங்கள் சாம்பல் கலந்த வெள்ளை மற்றும் நீண்ட வால். பெரிய அளவு, பருத்த தோற்றம் மற்றும் குண்டான மஞ்சள் அலகு (கறுத்த முனையுடன்) இவை இனப்பெருக்கத்திற்குத் தயாராகாத வளர்ந்த மற்றும் முழுவளர்ச்சியடையாத பறவையை, கருவயிற்று ஆலாவில் இருந்து வேறுபடுத்திக் காட்ட உதவும். சதுப்பு நிலம், ஓடைகள் மற்றும் ஆறுகள்.

208. பெரிய கொண்டை ஆலா

Great Crested Tern ***Thalasseus bergii*** 46-49 cm.

பச்சை கலந்த மஞ்சள் நிற அலகு. சிறிய கொண்டை ஆலாவை விட பெரியதாகவும் மற்றும் பருத்தும், கறுத்த சாம்பல் மேல் பாகங்களுடன் (வளர்ந்தது) மற்றும் மிகவும் அழுத்தமான குறியீடுகளுடன் கூடிய மேல் இறக்கைகளும் உடையது. (முழுவளர்ச்சியடையாதது). வருடம் முழுவதும் சிறு எண்ணிக்கையிலாவது காணப்படும். ராமேஸ்வரம், கோடியக்கரை, கன்னியாகுமரி கடற்கரை பக்கங்களில் ஆயிர கணக்கில் பார்க்கலாம்.

Balaji P B

201. Caspian Tern

Balaji P B

202. White-winged Tern

Balaji P B

203. Whiskered Tern

CC US Fish & Wildlife

204. Roseate Tern

Renuka Vijayaraghavan

205. Common Tern

CC Somshri Patnaik

206. Black-bellied Tern

Balaji P B

207. River Tern

Balaji P B

208. Great Crested Tern

209. மஞ்சள்புள்ளி அலகு ஆலா

Sandwich Tern *Thalasseus sandvicensis* 36-41 cm.

வளர்ந்தது வெள்ளை முனையுடன் கூடிய நீண்ட மெலிந்த கறுப்பு அலகு, வாலின் மேல்புறம் வெள்ளை நிறத்திலும் மற்றும் சாம்பல் நிற பின்புறத்திலிருந்து வால் வேறுபட்டிருக்கும். முழுவளர்ச்சியடைந்த பறவைக்கு மிக கனமான கறுப்பு குறியீடுகள் உச்சந்தலை மற்றும் பிடரியில் காணப்படும். கடற்கரை, திறந்த கடல் ஓரங்களில் உள்ள நீர் நிலைகளில் ஓய்வு எடுக்கவரும். ஓமன், சவுதி அரேபிய நாடுகளில் இருந்து வலசை வருவது.

210. சிறிய கொண்டைஆலா

Lesser Crested Tern *Thalasseus bengalensis* 35-37 cm.

சிகப்பு கலந்த மஞ்சள் அலகு, பெரிய கொண்டை ஆலாவை விட சிறியதாகவும் ஒடுங்கியும் இருக்கும். வெளுத்த சாம்பல் நிற மேல் பாகங்கள் முழுவளர்ச்சி அடைந்ததற்கு இருக்கும். கறுத்த மற்றும் வழக்கமாக மிக அழுத்தமான குறியீடுகள் உள்ள மேல் இறக்கைகள் (முழுவளர்ச்சியடையாதது) உண்டு. முக்கியமாக வளர்ச்சியடைந்த பறவைக்கு கறுப்பு கொண்டை பிராதனமாக தென்படும், கடலில் மீன்பிடித்து, தீவுகள் மற்றும் உப்பளங்கள் சதுப்பு நிலங்களில் ஒய்வெடுக்க வரும்.

211. நீர் கிழிப்பான்

Indian Skimmer *Rynchops albicollis* 40 cm.

ஆலாவைப் போன்று வெண்மையான பறவை. வளைந்த பெரிய மஞ்சள் கலந்த சிகப்பு அலகு. கட்டையாகவும், கூர்மை குறைந்தும் உள்ள அலகு நீரை கிழிப்பது போல மீன் பிடிக்க உபயோகப்படும். பறவைக்கு மேல் பாகங்களில் வெள்ளை நிறத்தில் நெளிநெளியாக காணப்படும். பெரிய ஆறுகளில் தென்படும். உலக அளவில் அழியக் கூடிய ஆபத்தை நோக்கியுள்ளது. வெகு அரிதாகத் தென்படும்.

212. மஞ்சள் அலகு அரசவால் கடல்புறா

White-tailed Tropicbird *Phaethon lepturus* 39 cm.

வளர்ந்த பறவைக்கு மஞ்சள் அல்லது சிகப்புக் கலந்த மஞ்சள் அலகு, எதிர் முனைகளை சேர்க்கும் விதத்தில் கறுப்புப் பட்டை உள் மேல் இறக்கையின் குறுக்கேயும் மற்றும் வெள்ளை நிறத்தில் நீண்ட குறுகிய ஒரு கொடி போன்ற வால் இறகுகளும் இருக்கும். இளைய பறவைக்கு மஞ்சள் அலகு மற்றும் பிடரியின் குறுக்கே கறுப்புப் பட்டை இருக்காது. ஆழ்கடல் பகுதியில் வசிக்கும்.

213. வில்சன் கடல்குருவி

Wilson's Storm-Petrel *Oceanites oceanicus* 19 cm.

முழுவளர்ச்சியுள்ள பறவைக்கு, கறுத்த கீழ் பாகங்கள் மற்றும் கீழ் இறக்கை இறகுகள், வாலின் பின்புறம் வெள்ளை பட்டை இருக்கும். நன்றாக தெரியும்படியாக கால்கள் வாலைவிட்டு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். தண்ணீருக்கு மேல் படபடவென இறக்கையடித்துக் கொண்டு பறக்கும் போது தொங்கும் பாதங்களில் மஞ்சள் விரலிடைத்தோல் காணப்படும். ஆழ்கடல் பகுதியில் வசிக்கும். குளிர் காலத்தில் ஒன்றிரண்டு கடற்கரையில் காணலாம்.

214. ஸ்வின்னோ கடல் குருவி

Swinhoe's Storm-Petrel *Oceanodroma monorhis* 20 cm.

முழுவதும் கறுத்த வாலின் அடிபுறம் வெள்ளை பட்டை இருக்காது. சிறிதுப் பிளவுப்பட்ட வால், கால்கள் வாலைவிட்டு வெளியே துருத்திக் கொண்டிருக்காது. கடல் நிரின் மேற்புறம் கடற்கரையோர தண்ணீரிலும் தீவுகளிலும் வசிக்கும்.

215. விராலடிப்பான்

Osprey *Pandion haliaetus* 55-58 cm.

வலசை வரும் மீன்பிடிக்கும் கழுகுபருந்து. மேல்பகுதி அடர்பழுப்பு, மார்பு வெள்ளை. அடிவயிறும் வெள்ளை என கறுப்பு வெள்ளைப் பருந்தைப் போல, நீர்நிலைகள், கடற்கரை போன்றவற்றில் மீனை வேட்டையாடுவதைக் காணலாம்

கண்கள் மஞ்சளிலிருந்து பழுப்பு நிறமாகவும், கால்கள் மற்றும் நகங்கள் கறுப்பாகவும் காணப்படும். சிறகுகள் நீண்டு விரல்கள் போன்ற அமைப்புடன் (நான்கு நீண்டும், ஐந்தாவது குறுகியும்) இருப்பது தெளிவாகத் தெரியும்.

216. ஜெர்டான் பருந்து (அ) ஓணான் பருந்து

Jerdon's Baza *Aviceda jerdoni* 46 cm.

புறாவை விடச் சற்றே பெரிய அளவிலான வல்லூறு போன்ற பறவை. குடுமிப்பருந்தையும் குடுமி வல்லூறையும் போன்ற தோற்றத்தைப் பறக்கும் போது உண்டாக்கினாலும், துடுப்பு போல வட்டமான சிறகு அமைப்பும், நீண்ட குத்திட்டு நிற்கும் குடுமியும் அதனைக் கண்டறிய உதவும். பெரும்பாலும் சமவெளிக் காடுகளில் காணப்பட்டாலும், ஒன்றிரண்டு பசுமைமாறாக்காடுகளிலும், தேயிலைத் தோட்டங்களிலும் காணப்படுகிறது.

217. கறுப்பு வெள்ளை குடுமிப் பருந்து (அ) வல்லூறு

Black Baza *Aviceda leuphotes* 33 cm.

புறாவை ஒத்த உருவம். பெரும்பாலானவை வலசை வருபவை. பெரும்பாலும் பசுமையான காடுகளில் காணப்படும். கறுத்த உடலில் வெள்ளைப் பட்டையும் குத்திட்டு நிற்கும் குடுமியும் கண்டவுடன் அடையாளம் காண உதவும். ஆணுக்கு தோள்பட்டையிலும், சிறகின் இரண்டாம் நிலை இறகுகளிலும் வெள்ளை காணப்படும். பெண்ணுக்குத் தோளில் மட்டும் வெள்ளை காணப்படும்.

218. கறுப்புச் சிறகு வல்லூறு

Black-winged Kite (Black-shouldered Kite)

Elanus caeruleus 31-35 cm.

காற்றில் மிதந்தபடி வேட்டையாடும் அழகிய சாம்பல் மற்றும் கறுப்பு நிறம் கலந்த வல்லூறு. தோளில் பரந்த கறுப்பு பகுதி காணும். ஆந்தை போன்ற முக அமைப்பு, சிவந்த கண்களும் உடனே அடையாளம் காட்டக் கூடிய அம்சங்கள். முக்கிய உணவாக எலிகள் மற்றும் ஓணான்களை உட்கொள்ளும் மலை

209. Sandwich Tern

CC Eyelovebirds

210. Lesser Crested Tern

Balaji P B

211. Indian Skimmer

Amish Parekh

212. White-tailed Tropicbird

CC Kansas Photo

213. Wilson's Storm-Petrel

Rama Neelamegam

214. Swinhoe's Storm-Petrel

CC See Toh Yew Wai



215. Osprey

Balaji P B



216. Jerdon's Baza

Manjunath Desai

அடிவாரங்கள் மற்றும் அனைத்து வறண்ட பயிர் நிலங்களிலும் காணப்படும்.

219. கள்ளப்பருந்து (அ) கரும்பருந்து

Black Kite *Milvus migrans* 55-68 cm.

உலகில் மிக அதிகமாக காணப்படும் பருந்து. எல்லா நகரங்களிலும், கிராமங்களிலும் எளிதாகக் காணக்கூடியது. கரும்பழுப்பு நிறத்தில் சிறிது கூட சிவப்பு நிறம் இல்லாமல் பிளவுபட்ட வாலுடன் காணப்படும் பருந்து. கால்கள் மஞ்சள், நகங்கள் கறுப்பு அலகு கறுப்பு அதன் குரல் நீண்ட முனகல் போல இருக்கும். குப்பை கிடங்குகளிலும், வீட்டுகழிவுகளை வீசி எறியும் இடங்களிலும் அதிகமாகக் காணலாம்.

220. கிருஷ்ணப் பருந்து (அ) செம்பருந்து

Brahminy Kite *Haliastur indus* 48 cm.

வெகு சாதாரணமாக கடற்கரைகளிலும், உள்நாட்டு நீர்நிலைகளில் காணக்கூடிய பருந்து. புராணத்தில் விஷ்ணுவின் வாகனமாய் சொல்லப்படுவது. நல்ல செங்கல் நிற உடலும். வெண்மையான தலை மற்றும் கழுத்துடன் கறுப்புச் சிறகு நுனியும் கொண்டது. ஆனால் சற்றே குட்டையான, உருண்டையான வாலுடன் இருக்கும். இளம் பருந்துகள் பழுப்பும் வெண்மையும் கலந்து, வலசை வரும் பூனைப் பருந்துகள் போலக் காணப்படும்.

221. வெண்வயிற்றுக் கடற்கழுகு (அண்டி)

White-bellied Sea-Eagle *Haliaeetus leucogaster* 66-71 cm.

மேல்புறம் சாம்பல் மற்றும் கறுத்த அடிப்பாகம் கொண்ட சிறகுடன் தலை, மார்பு மற்றும் சிறகின் அடி இறகுகள் வெண்மையாக திகழும் பெரிய பருந்து. வால் குட்டையாகவும் 'V' போலவும் இருக்கும். கடற்கரைப் பிரதேசங்களில் காணப்படுவதால் இந்தப்பெயர். இளம் பறவைகள் பழுப்பு நிறத்தில் இருக்கும் மீன் மற்றும் நீர் பறவைகளை வேட்டையாடி உணவாகக் கொள்ளும்.

222. சாம்பல் தலை மீன்கழுகு

Lesser Fish-Eagle *Haliaeetus humilis* 60-72 cm.

பெரும்பாலும் மீனை உணவாகக் கொள்ளும் இந்தக் கழுகுகள், நீண்ட ஆற்றங்கரைகளோரம் காணப்படும். மீனைப்பிடிக்க என்றே, வளந்த நகங்களைக் கொண்டவை. சாம்பல் கலந்த பழுப்பு நிறத்துடன், அகன்ற ஆனால் முனை மழுங்கிய சிறகுகளுடன், இறகுகளற்ற கால்களைக் கொண்டது. இதன் தொடை மற்றும் வயிறு நல்ல வெண்மையாக இருக்கும். வளர்ந்த கழுகின் கண் மஞ்சள் நிறத்திலும் விடலைப் பருவ கழுகுகள் பழுப்பு நிறக் கண்களோடும் இருக்கும். வால் முதுகின் பின் பகுதி வெள்ளையாகவும் வால் நுனி பகுதி கறுப்பாகவும் காணப்படும். தமிழ் நாட்டில் மிக அரிதாக சமவெளி நீர் நிலைகளில் காணப்படுகிறது.

223. கோடாங்கிக் கழுகு (அ) மஞ்சள் திருடி

Egyptian Vulture *Neophron percnopterus* 60-70 cm.

வளர்ந்த பருவம் எய்திய பறவை வெண்ணிற உடலும், சிறகின் நுனி கறுத்தும் காணப்படும். நீண்ட மஞ்சள் நிற அலகின் மேல் பாகநுனி நன்கு கூர்மையாய் வளைந்து இருக்கும். நாசித் துவாரம், அகலவாட்டுத் துளை, ஆப்பு போன்ற சிறகுகள், கால்கள் ரோஜா நிறம். இவை கற்களையும் குச்சிகளையும் இரைதேடவும், கூடுகட்டவும் பயன்படுத்தக் கற்றவை. திருக்கழுகுன்றம் கழுகு என்றும் அறியப்படும்.

224. செந்தலைக் கழுகு (அ) பாண்டிச்சேரிக் கழுகு

Red-headed Vulture *Sarcogyps calvus* 85 cm.

சிறிய அளவில் காணப்படும் கழுகு. சிலர் இதை அரசக் கழுகு அல்லது பூசாரிக் கழுகு என்பர். சிவந்த தலையுடன், கறுத்த உடலில் தொடைப் பாகம் வெளுத்தும் காணப்படும். பறக்கும் போது அந்த வெள்ளைப்பட்டை வெகு எளிதில் அடையாளம் காட்டும். பெரும்பாலும், குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படும் மரங்களில் கூடுவைக்கும்.தற்போது அழியும் தருவாயில் இருக்கிறது. மோயார் பள்ளத்தாக்கில் காணலாம்.

217. Black Baza

Balaji P B

218. Black-winged Kite

Balaji P B

219. Black Kite

Balaji P B

220. Brahminy Kite

Balaji P B



221. White-bellied Sea-Eagle

Balaji P B



222. Lesser Fish-Eagle

Renuka Vijayaraghavan

223. Egyptian Vulture

Arun Kumar E

224. Red-headed Vulture

Byju H

225. பெரிய கருங்கழுகு

Cinereous Vulture *Aegypius monachus* 105-120 cm.

வலசை வரும் மற்றொரு பிணந்தின்னிக் கழுகு. அளவில் இங்கு உள்ள கழுகுகள் அனைத்தையும் விடப் பெரியது. கரும்பழுப்பு நிற உடலும், கறுத்த அலகும், நீண்ட மஞ்சள் மூக்குச் சதையும், பெரிய இறக்கையும், நன்கு குவிந்த விரல்களும் இதை உடனே வேறுபடுத்திக் காட்டும். ஒன்றிரண்டு மட்டும் மற்றக் கழுகுகளுடன் கூடி இருக்கும் என்றாலும், அரிதாகவே காணப்படும். கடந்த சில வருடங்களாக மோயார் பள்ளத்தாக்கில் காணப்படுகிறது.

226. வெண்முதுகுக் கழுகு

White-rumped Vulture *Gyps bengalensis* 75-85 cm.

நம் நாட்டில் உள்ள பிணந்தின்னிக் கழுகுகள் எல்லாமே பழங்காலக் கழுகுகள் (Old World Vulture) இனத்தைச் சார்ந்தவை. வெண்முதுகுக்கழுகுகள் இவற்றில் பெரும்பான்மையானவை. இந்தக் கழுகுகள் வெள்ளைக் கழுத்து இறகுகளுடன்;இறகுகளற்ற தலை மற்றும் கழுத்துடன், குட்டையான வால்இறகுடன், அகன்ற சிறகுகளைக் கொண்டவை. முதுகு பிட்டம் மற்றும் சிறகின் அடிப்பகுதியின் வெண்மை உடலின் கரும்பழுப்பு நிறத்துடன் காணும் போது தெளிவாகத் தெரியும். நாசித் துவாரங்கள் வெட்டியது போல இருக்கும். அலகு கூர்மையாக கிழிக்கும் தன்மையுடன் வெள்ளீயம் போலக் காணும். டைக்குளோபினக் என்னும் கால்நடை வலி நிவாரணியால் சமீபகாலத்தில் பெருமளவில் அழிந்து விட்டன. தமிழ்நாட்டில் தற்பொழுது முதுமலைக்காடு, மோயார் பள்ளத்தாக்கு பகுதிகளில் மட்டும் காணப்படுகிறது.

227. நீண்ட அலகுக் கழுகு (அல்லது) இந்தியக் கழுகு

Indian Vulture (Indian Long-billed Vulture)

Gyps indicus 80-95 cm.

ஏறக்குறைய வெண்முதுகுக் கழுகின் அளவுள்ள மற்றொரு கழுகு. முழுவதும் பழுப்பு நிறத்தில் காணப்படும். வளர்ந்த கழுகின் கழுத்து கருநிறத்தில் இறகுகள் இல்லாமல் இருக்கும்.

பறக்கும் போது பெரிய அளவில் வெண்மையும் கறுப்பும் காணப்படாது. பாறைப் பொந்துகளில் மட்டுமே கூடுவைக்கும். அலகு சற்றே அதிகமாய் நீண்டு, கறுத்து இருக்கும். இளம் கழுகுகளுக்கும், இளம் வெண்முதுகுக் கழுகுகளுக்கும் வேறுபடுத்திப் பார்ப்பது கடினம். இவை பண்டு தொட்டே மிகப்பெரிய அளவில் காணப்பட்டதில்லை என்றாலும் கால்நடை வலிநிவாரணியின் காரணமாய் இவையும் பெருமளவு பாதிக்கப்பட்டன என ஆய்வு மூலம் தெரிய வருகிறது. மோயார் பள்ளத்தாக்கில் மட்டும் காணப்படுகிறது.

228. கொண்டைக்கழுகு பருந்து (அ) பாம்புண்ணிக் கழுகு பருந்து

Crested Serpent-Eagle *Spilornis cheela* 56-74 cm.

பருந்தின் அளவுள்ள, கனத்த கரும்பழுப்பு நிறப்பறவை. சிறகு வட்டமாகவும், வால் குட்டையாகவும் இருக்கும். பறக்கும் போது வெள்ளை பட்டைகள் மற்றும் கறுப்புப் புள்ளிகள், ஒளி ஊடுருவும் சிறகு இவற்றை வைத்து இலகுவாக அடையாளம் காணலாம். கணுக்காலில் இறகுகள் இருக்காது. குட்டையான விசிறி போன்ற கொண்டையை உடையது. காடுகளில் இதன் குரல் ஒலியை வைத்தே எளிதாக கண்டுபிடித்துவிடலாம். மலைக்காடுகளில் அதிகமாகவும், சமநிலை பரப்பில் ஓரிரு எண்ணிக்கையிலும் காணலாம்.

229. பாம்புகழுகுப் பருந்து

Short-toed Snake-Eagle *Circaetus gallicus* 62-67 cm.

மேல்புறம் சாம்பல் கலந்த பழுப்பு நிறமும், பெரும்பாலும் வெள்ளை அடிப்பகுதியும் கொண்ட பருந்து. ஆந்தை போன்ற தலையும், முகமும், மஞ்சள் கண்களும், கருஞ்சாம்பல் தலையும் கூடுதலான அடையாளங்கள். வால் 3 அல்லது 4 வரிகளைக் கொண்டிருக்கும். சிறகின் கீழ்ப்புறம் வெளிறிய செங்கோடுகள் இருக்கும். தமிழ்நாட்டின் எல்லா பகுதிகளிலும், சமவெளி நிலங்களிலும் உயர்ந்த மலைக்காடுகளில் சிறிய எண்ணிக்கையில் காணலாம்.

230. கறுப்பு கழுகுப் பருந்து

Black Eagle *Ictinaetus malaiensis* 69-81 cm.

பெரிய, ஆனால் கச்சிதமான உடலமைப்புக் கொண்ட கழுகு. உடல் முழுவதும் கறுப்பு நிறமாகவும், கால்கள் மட்டும் மஞ்சளாகவும் இருக்கும். சிறகுகளின் முடிவில் நன்கு ஒட்டப்பட்டது போல இருப்பதால், பறக்கும் போது அவை மேல் நோக்கி வளைந்து ஒரு அழகான தோற்றத்தைத் தரும். இது மற்ற கழுகுகளுக்குக் கிடையாது. பெரும்பாலும், 3000 அடி உயரத்துக்கு மேலே மலைப்பகுதிகளில் காணப்படும் பறவை. அரிதாக சமவெளி பகுதியிலும் எப்போதாவது காணப்படுகிறது.

231. மேற்கத்திய சதுப்புநில பூனைப்பருந்து

Eurasian Marsh-Harrier *Circus aeruginosus* 48-58 cm.

பொதுவாக பூனைப் பருந்துகளில் ஆண் பெண் பேதம் மிகத் தெளிவாக அறிய முடியும். பெரும்பாலும் ஆண் நல்ல கவர்ச்சியான நிறங்களுடன் சிறியதாக இருக்கும், பெண் அளவில் பெரிதாகவும் பழுப்பு நிறத்திலும் இருக்கும். பூனைப் பருந்துகள் வலசை வருபவை. சதுப்புநிலபூனைப் பருந்தின் ஆணுக்கு செம்பழுப்பு நிறத்திலான அடிப்பாகம் மஞ்சள் கோடுகளுடன் இருக்கும். தலையும், தோளும் சாம்பல் கலந்த மஞ்சளாய் இருக்கும். பெண் சாக்லேட் பழுப்பாக, தலை மற்றும் தொண்டை தோளில் சற்றே மஞ்சள் கலந்து காணப்படும். நீண்ட 'V' வடிவில் உயர்த்திய சிறகுகளில், தரையை ஒட்டி அவை பறந்து சென்று இரை தேடுவதே ஒரு அழகு. சமவெளியில் பெரும்பாலான நீர்நிலைகள், புல்வெளிகளிலும் எளிதாக காணலாம்.

232. கறுப்பு வெள்ளை பூனைப் பருந்து

Pied Harrier *Circus melanoleucos* 41-46 cm.

ஆண் நல்ல கறுப்பு வெள்ளை நிறத்தில், வெளிர் நிறப் பூனைப் பருந்தின் அளவிலேயே காணப்படும். தலை, முதுகு, தொண்டை வரை கறுப்பு நிறத்திலும், இறகின் மத்திய மற்றும் நுனிப்பகுதிகளும் கறுப்பாக காணப்படும். முன்இறகு வெள்ளைநிறத்திலும், பின் பகுதி மற்றும் வால் சாம்பல்

225. Cinereous Vulture

226. White-rumped Vulture

227. Indian Vulture



228. Crested Serpent-Eagle

229. Short-toed Snake-Eagle

230. Black Eagle

231. Eurasian Marsh-Harrier



232. Pied Harrier

நிறத்திலும் காணப்படும். பெண் பறவைக்கு பிட்டத்தில் வெள்ளை நிறமும், வாலின் குறுக்கே கோடுகளும் இருக்கும். வலசை வரும் பறவை.

233. வெளிர்நிறப் பூனைப் பருந்து

Pallid Harrier *Circus macrourus* 40-48 cm.

ஆண் பருந்து வெளிறிய சாம்பல் நிறத்தில் முதுகும், வெண்மையான அடிப்பாகமும் கொண்டு சிறகு நுனிகள் கறுப்பு நுனியுடன் காணப்படும். பெண் பருந்து பெரியதாகவும், பழுப்பு நிறமாகவும், வாலின் மேல்புற இறகுகள் மற்றும் பிட்டம் வெண்மையுடன் காணப்படும். வறண்ட மற்றும் உலர்ந்த புற்கள் அடங்கிய சமவெளிப் பகுதியில் பரவலாக காணப்படும்.

234. மாண்டேகு பூனைப் பருந்து

Montagu's Harrier *Circus pygargus* 43-47 cm.

ஆண் வெளிர்நிறப் பூனைப் பருந்தைப் போன்ற நிறம் கொண்டாலும், சிறகின் மேல்பாகத்தில் கறுப்புப் பட்டைகள் இருப்பது வேறுபடுத்திக் காட்டும். பெண் பறவை மேலும் செம்பழுப்பு நிறமாகவும், சீரான நிற அமைப்பைக் கொண்டாதாகவும் காணப்படும். பிட்டம் வெண்மை நிறத்தை கொண்டது. வறண்ட மற்றும் உலர்ந்த புற்களடங்கிய சமவெளி பகுதியில் பரவலாக காணப்படும். வலசை வரும் பறவை.

235. கொண்டை வல்லூறு

Crested Goshawk *Accipiter trivirgatus* 30-46 cm.

குயிலை விட சற்று பெரிதான வல்லூறு. காட்டிற்குள்புகுந்து செல்லத் தக்க வகையில் குட்டையான அகல சிறகும், நீண்ட வாலும் கொண்ட வல்லூறு. பழுப்புத் தலையும், சாம்பல் கன்னமும், கறுத்த தொண்டை மற்றும் கண்கீழ் கோடும் கொண்ட வல்லூறு. நெஞ்சுப் பகுதி சிவந்த கோடுகளுடன் காணப்படும். பெண் பறவை பெரிதாகவும், பழுப்புக் கோடுகளுடன் காணப்படும். வல்லூறுகளின் சில வேகமான சிறகடிப்பு பின்னர் நேரே மிதந்து செல்லுதல் என்ற பறக்கும் தன்மையைக் கொண்டது. கருஞ்சிவப்பு பழுப்புக்கோடுகள்

மார்பிலும், பட்டைகள் அடி வயிற்றிலும், விலா பக்கங்களிலும் காணப்படும். பெரும்பாலும் அடர்ந்த காடுகளிலே காணப்படும்.

236. வல்லூறு (அ) வைரி

Shikra *Accipiter badius* 30-36 cm.

குயிலின் அளவு கொண்ட கிப் கிப் என்ற ஒலி எழுப்பும் இந்த வைரி, கோழி வளர்ப்பவர்களுக்கும், புறா வளர்ப்பவர்களுக்கும் சிம்ம சொப்பனம். ஆண் சாம்பல் நீல நிற முதுகும், மார்பு வயிறு புறங்களில் செவ்வரிகளுடனும், வாலில் 4 கோடுகளும் கொண்டு புறாவைப் போல இருக்கும். கண்சிவப்பாக காணப்படும். பெண் பழுப்பு நிறத்தில் செவ்வரிகள் இன்றி கறுப்பு வரிகளுடன் காணப்படும். உருவமும் பெரிதாக இருக்கும். பட்டைகள் இல்லாத வெள்ளை தொடை இருக்கும். ஒரே இடத்தில் வசிக்க கூடியவை. தமிழ் நாட்டின் அனைத்து பகுதிகளிலும், மலைகாடுகளிலும் காணலாம்.

237. காட்டு வல்லூறு (அ) வைரி

Besra *Accipiter virgatus* 29-36 cm.

வல்லூறை விட மேற்பக்கம் கறுப்பாக இருக்கும். கோடுகளுடைய மார்பு, மிக அழுத்தமான பட்டைகள், கீழிறக்கைகள் இருக்கும். பெண்ணிற்கு பழுப்பு நிற மேல் பாகங்கள் மற்றும் கறுப்பு கலந்த உச்சந்தலை பிடரி இருக்கும். ஆனால் காடுகளில் வசிக்கும் வல்லூறின் கண்ணின் கீழிருந்து தொண்டை வரை கறுப்புக் கோடு காணப்படும். வல்லூறைப் போல காண அழகாக, ஆனால் அடர்பழுப்பு நிறத்திலிருக்கும். பதுங்கி இருந்து வேட்டையாடும் குணம் எல்லா வைரிகளுக்கும் உண்டு. குளிர்காலங்களில் திறந்த நாட்டுபுறங்களில் இனப்பெருக்கம் செய்யும். அரிதாகக் காணப்படும் வல்லூறு.

238. ஆசிய குருவிவல்லூறு

Eurasian Sparrowhawk *Accipiter nisus* 31-36 cm.

கோழி அடிக்கும் வல்லூறைப் போன்ற, ஆனால் கறுத்த உடலும், கறுப்புக் கோடிட்ட அடிப்பாகமும், கண்மேல் கோடும் கொண்ட காட்டு வல்லூறு. வலசை வரும் வல்லூறு என்றாலும்,

இனங்களைப் பிரிப்பது கடினம். அரிதாகக் காணப்படும் வல்லூறு.

239. தேன் பருந்து

Oriental Honey-buzzard (Crested Honey Buzzard)

Pernis ptilorhynchus 57-60 cm.

கள்ளப்பருந்தை ஒத்த உருவம் கொண்டது. நீண்ட கழுத்தும், புறா போன்ற சிறிய தலையும், எளிதில் அடையாளம் காண உதவும். வெளிறிய ஊதா நிறத் தலையுடன் ஆணும், பழுப்புத் தலையுடன் பெண்ணும் இருக்கும். கரிய தொண்டைக் கோடும் காணப்படும். நீண்ட வாலும் கட்டை குடுமியும் காணப்படும். பல வகை நிறத் தோற்றங்களில் காணப்படும் பருந்து.

240. வெள்ளைக் கண் வைரி (அ) வல்லூறு

White-eyed Buzzard *Butastur teesa* 43 cm.

வெள்ளைக் கருவிழியும், தொண்டையும், கண்கீழ் கறுப்புக் கோடும் இந்த வைரியை எளிதில் அடையாளம் காட்டும். தலையின் பின்புறம் ஒரு வெள்ளைப் புள்ளி சில நேரம் காணப்படும். வாயின் தொடர்ச்சி மஞ்சளாகவும், தலை, கழுத்து, வயிற்றுப் பகுதி கருமையான கோடுகளுடனும் காணப்படும். இது சமவெளிக் காடுகளிலும் நகர்புறப் பகுதிகளிலும் பெரும்பாலும் காணப்படும். வாத்தைப் போன்ற இதன் நடை (தரையில் நடக்கும் போது) இதை வெகுவாக அடையாளம் காட்டும். வறண்ட சமவெளி பகுதிகளிலும் மற்றும் திறந்த வெளிபகுதிகளில் உள்ள மரங்கள், கட்டிட எல்லை சுவர்களில் காணலாம். ஒரே இடத்திலேயே குடியிருக்கும் பறவை.

241. வைரி பருந்து

Common Buzzard *Buteo buteo* 51-56 cm.

வலசை வரும் ஒரு பருந்து போன்ற வைரி. கிட்டத்தட்ட கிருஷ்ணப் பருந்தின் (செம்பருந்து) இளம் பறவையைப் போலத் தோன்றும். பெரும்பாலும் பழுப்பும் வெளுப்பும் கலந்த ஒரு குழப்பமான நிறத்தில் காணப்படும். ஆனால் வட்டமான தலை மற்றும் சிறகுகளில் ஆரம் போன்ற திட்டுகள் (பறக்கும் போது) அடையாளம் காண உதவும். கணுக்காலில் இறகுகள்

Balaji P B

233. Pallid Harrier

Balaji P B

234. Montagu's Harrier

Balaji P B

235. Crested Goshawk

Balaji P B

236. Shikra

Renuka Vijayaraghavan

237. Besra

Balaji P B

238. Eurasian Sparrowhawk

Balaji P B

239. Oriental Honey-buzzard

Balaji P B

240. White-eyed Buzzard

இருக்காது. குட்டையானவாலைக் கொண்டிருக்கும். பரவலான சமவெளி மற்றும் மலைக் காடுகளிலும் பரவலாக காணப்படும்.வலசை வருபவை.

242. நீண்டகால் பருந்து

Long-legged Buzzard *Buteo rufinus* 61 cm.

வலசை வரும் மற்றொரு பருந்து. வளர்ச்சி அடையாத செம்பருந்தைப்போல பழுப்பு உடலில் சிறிது சிவப்பு, வெண்மை எனப் பலவித நிற மாற்றங்களோடு காணப்படும். பறக்கும் போது இறக்கையின் அடியில் பிறை நிலா வடிவிலான செந்நிறக் கருவளையங்கள் அடையாளம் காட்டும்.

243. இந்திய புள்ளிக் கழுகு பருந்து

Indian Spotted Eagle *Clanga hastate* 60-65 cm.

இளம் பழுப்பு நிறமும், அகன்ற தலையும், நீண்ட வாலும் கொண்ட நமது நாட்டு கழுகுபருந்து. ஆயினும், பெரிய உருவமோ அல்லது கனத்த உடலோ இல்லாத வைரி போன்ற கழுகுபருந்து. சமவெளிக் காடுகளில் அதிகம் காணப்படுகிறது. பரவலாகக் காணப்பட்டாலும், அரிதாகவே காண இயலும்.

244. பெரும் புள்ளிக் கழுகு பருந்து

Greater Spotted Eagle *Clanga clanga* 65-72 cm.

பாறுக் கழுகுகளுக்கு நிகரான அளவு உடலும், சிறகமைப்பும் கொண்ட வலசை வரும் பருந்து. சிறகுகளில் தொடர்ச்சியாகக் காணப்படும் புள்ளிகள் போன்ற வெண்திட்டுக்களால் இந்த பெயர் வந்தது. பெரும்பாலும் நீர்நிலைகளை ஓட்டியே காணப்படும். அருகி வரும் கழுகினங்களில் ஒன்றாகக் கருதப்படும் ஒரு இனம். பரவலாக ஆனால் அங்கொன்றும் இங்கொன்றும் காணப்படும்.

245. வெண்தோள் கழுகுபருந்து (அ) பூஞ்சைப் பருந்து

Booted Eagle *Hieraaetus pennatus* 41-53 cm.

நம்மிடையே காணப்படும் செம்பருந்தின் அளவுள்ள பருந்து. அதேப் போன்ற குட்டையான பிளவு இல்லா வாலும் கொண்ட வலசை வரும் கழுகுபருந்து. பறக்கும் போது அதன் இரண்டு

தோள் பிளவிலும் வெண் புள்ளிகள் காணப்படும். அடர்ந்த பழுப்பிலிருந்து வெளிறிய பழுப்பு வரை பல நிறத் தோற்றங்கள் கொண்டது.நீர்நிலைகளின் அருகில் பெரும்பாலும் காணப்பட்டாலும், சமதரைக் காடுகளிலும் சில சமயம் காணலாம். பரவலாக ஆனால் குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே காணப்படும். பொதுவாக வலசை வரும் இனமாக இருந்தாலும், இங்கேயே வருடம் முழுவதும் ஒரே இடத்தில் குடியிருக்கும் வகைகளும் உண்டு.

246. கபிலநிறக் கழுகு (அ) பழுப்புக் கழுகு பருந்து

Tawny Eagle *Aquila rapax* 63-71 cm.

மேல்புறம் வெளிறிய பழுப்பு நிறமும், சிறகுகளில் கறுப்பு, வால் கறுப்பாகவும், குட்டையாகவும் உள்ள கருங்கழுகுப்பருந்தின் அளவை ஒத்த ஒரு கழுகுப்பருந்துக்கு கரும்பழுப்பு நிறத்திலிருந்து நல்ல வெண் பழுப்பு நிறம் வரை பல்வேறு மாறுபாடுகளுடன் காணப்படுகிறது. பரவலாக ஆனால் அரிதாகக் காணப்படும் ஒரு கழுகுபருந்து. புள்ளி கழுகு பருந்தை விட தலை, பறக்கும் போது வெளியே நீட்டிக்கொண்டிருக்கும். பெரும்பாலும் ஒரேயிடத்தில் குடியிருக்கும் பறவை.

247. புல்வெளிக் கழுகு-பருந்து

Steppe Eagle *Aquila nipalensis* 76-80 cm.

வலசைவரும் மற்றொரு பெரிய கழுகு பருந்து. ஆனால் வெகு அரிதாகத் தென்படும் கழுகுபருந்து. நல்ல கரும்பழுப்பு நிறத்தில் கறுப்புச் சிறகுடனும், வாலுடனும் காணப்படும். பழுப்புக் கழுகுபருந்தினைக் காட்டிலும் உருவத்தில் மிகப் பெரியது. தொண்டையில் ஒரு வெள்ளைத் திட்டு காணப்படும். இளம் கழுகுகளை எளிதாக இனம் காண இயலாதபடி பல்வேறு நிறச் சேர்க்கையில் காணப்படும்.

248. அரசக் கழுகுப்பருந்து

Imperial Eagle *Aquila heliacal* 70-75 cm.

பெரிய கழுகுப் பருந்து வலசை வருவது. ஆனால் வெகு குறைவான எண்ணிக்கையில் காணப்படும். பாதம் வரை

Balaji P B

241. Common Buzzard

Balaji P B

242. Long-legged Buzzard

Balaji P B

243. Indian Spotted Eagle

Balaji P B

244. Greater Spotted Eagle

Balaji P B

245. Booted Eagle

Amesh Parekh

246. Tawny Eagle

Amish Parekh

247. Steppe Eagle

Arun Kumar E

248. Imperial Eagle

இறகுகள் மூடியிருக்கும். நல்ல கரும்பழுப்பு நிறத்தில் பெரிய தலையும், அலகும் கொண்டிருக்கும். அலகின் பின் மஞ்சள் சதை கண் வரை நீண்டிருக்கும். திறந்த புல்வெளிக்காடுகளில் பெரும்பாலும் காணப்படும். தலையில் இளம் பழுப்பு மஞ்சள் நிறம் மற்றும் கழுத்தில் இளம் மஞ்சள் சிறகு நீண்டு வாலைத் தாண்டி இருக்கும். இளம் பறவைகளுக்கு மஞ்சள் கூடுதலாயிருக்கும். மிகவும் அரிதாகக் காணப்படும்.

249. பொனெல்லிக் கழுகுபருந்து / ராஜாளி

Bonelli's Eagle *Aquila fasciata* 65-72 cm.

நமது நட்டில் இருக்கும் ஒரு அழகிய கழுகு.பெரும்பாலும் சமவெளிக் காடுகளில் அதிகம் காணப்படும்.காரணம், வேட்டை விலங்குகள் (முயல், ஓணான், சிறு பறவைகள்) அதிகமிருப்பதுதான். பலவகைக் கழுகு பருந்துகளில் வேட்டையாடும் கழுகுபருந்துகளில் இதுவும் ஒன்று. ஆண் அடர்ந்த பழுப்பு மற்றும் கறுப்பு உடலும், அடிப்பாகம் வெள்ளைக் கோடுகளுடனும் இருக்கும். நீளமான சதுரமானவால், கீழ் இறக்கை இறகுகளின் வழியே கறுப்பு கலந்த பட்டையும், வெளுத்த சாம்பல் கலந்த வாலின் நுனியில் கறுப்புபட்டை காணப்படும். இணையாகவே வேட்டையாடும். ஆயினும், இவை சமீப காலங்களில் குறைந்து வருகின்றன. குறிப்பிட்ட இடத்திலேயே வசிக்கும் இந்த பருந்து, தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும், ஆனால் அரிதாக காணப்படும்.

250. முயலடி (அ) குடுமிப் பருந்து

Changeable Hawk-Eagle *Nisaetus cirrhatus* 61-72 cm.

பெரிய ஆனால் கச்சிதமான உடலமைப்புகொண்டது.நல்ல வலுவான கால்களைக் கொண்டது. ஆனால் அவை இறகுகளில்லாது இருக்கும். கொண்டை 3-4 இறகுகளைக் கொண்டது. சிலிர்க்கும் போது நன்கு தெரியும். மற்ற நேரம் குடுமி போலிருக்கும். முயல், சிறுபறவைகள், குரங்குகள் இவற்றை வேட்டையாடும். மறைந்திருந்து தாக்கும் தன்மை கொண்டவை. பெரும்பாலும் பழுப்பு நிறத்தில் வெண்திட்டுகள், கறுப்புக் கோடுகள் கொண்டிருக்கும்.

இலையுதிர், பசுமை மாறாக்காடுகளில் காணப்பட்டாலும், சமவெளி பகுதியிலும் ஆங்காங்கே காணப்படும். நெடுந்தூரத்திற்கு வலசை செல்லாது.

251. லெக்கி ராஜாளி கழுகுபருந்து

Legge's Hawk-Eagle ***Nisaetus kelaarti*** 60-70 cm.

முன்பு மலைப் பருந்தின் இனமாகக் கருத்தப்பட்டது, தற்போது தனி இனமாக்கப்பட்டது. இவை மலைப் பருந்தைவிடச் சிறியவை. அடிச்சிறகுகள் கோடுகள் இல்லாது இருக்கும். மலைப்பாங்கான காடுகளில் காணப்படும். கறுத்த குடுமி, கோடுகளிட்ட மார்பும், வயிறும், கரும்பழுப்பு மேற்புறமும் கொண்டவை.

252. செவ்வயிற்று கழுகு பருந்து

Rufous-bellied Eagle ***Lophotriorchis kienerii*** 53-61 cm.

கறுத்த தலையும், வெளுத்த புள்ளிகளுடைய மார்பும், அடிப்பாகம் சிவந்தும் காணப்படும். சிறகு நுனிகள் வால்வரை நீண்டிருக்கும். பெரும்பாலும், 300 அடிக்கு மேல் காணப்பட்டாலும், சமவெளிக் காடுகளிலும் தென்படும். கணுக்கால் சிறகுகளால் மூடப்பட்டிருக்கும். இளம் கழுகுகளில் வெண்மை கூடுதல் இருக்கும். அடர்ந்த காடுகளில் வேட்டையாடும் கழுகுபருந்து இது. மேற்கு தொடர்ச்சி மலைகளிலேயே இனவிருத்தி செய்யும் இந்த கழுகு சமவெளி பகுதிகளில் திண்டுக்கல், கோயம்புத்தூர் பகுதிகளில் காணப்பட்டுள்ளது.

253. சின்னப் பொறி வல்லூறு

Lesser Kestrel ***Falco naumanni*** 29-32 cm.

சாதாப் பொறி வல்லூறைப் போன்ற ஆனால், தலையில் கூடுதல் சாம்பல் நிறமும், சிவப்பும் உள்ள வலசை வரும் வல்லூறு. கால் நகங்கள் வெண்ணிறத்தில் இருக்கும். இதுதான் இதை மற்றவைகளிடம் இருந்து சந்தேகமற வேறுபடுத்துவது. நீண்ட கூர்முனையுடைய இறகுகள். மிக அரிதாகக் காணப்படும்.

254. சிவப்பு வல்லூறு (அ) சாதாரண வல்லூறு

Eurasian Kestrel (Common Kestrel)

Falco tinnunculus 32-35 cm.

இது கூடுதல் செந்நிறம் கொண்ட, வைரியை ஒத்த, பறவை. வைரியைப் போல வட்டமான சிறகுகளில்லாமல், கூர்மையான கறுப்பு நுனியுடன் கூடிய சிறகுகளைக் கொண்டவை. கண்களைச் சுற்றி மஞ்சள் வட்டமும், கண்ணிலிருந்து தாடை வரை நேர்க்கோடும் காணப்படும். கால் நகங்களின் நிறம் வைத்து சாதாரண வல்லூறு அல்லது சிறிய வல்லூறு என்றறியலாம். இவை காற்றில் மிதக்கும் (hovering) திறன் கொண்டவை. புல்வெளிபகுதிகளிலும், நீர்நிலைகள் ஒட்டிய புற்களடர்ந்த தரைகளிலும் பெரிதும் காணப்படும். இவை வலசை வரும் வல்லூறுகள்.

255. சிவப்புக் கழுத்து வைரி

Red-necked Falcon *Falco chicquera* 31-36 cm.

இது சிவப்புத்தலை வைரி என்றும் அறியப்படும். இதன் கால்கள் நாசிச் சதை, கண்வளையம் ஆகியவை மஞ்சள் நிறத்திலிருக்கும். வைரியைப் போன்ற அளவும், உடலமைப்பும் கொண்டவை. தலை மற்றும் கழுத்து சிவப்பு நிறமாயிருக்கும். வாலின் கடைசிப் பகுதியில் கறுப்புப் பட்டை, வெள்ளைப் புள்ளிகளுடன் இருப்பது இனம் காண உதவும். இது நமது நாட்டுக்குள் பரவலாக, ஆனால் அரிதாகத் தென்படும் வைரி. பொதுவாக ஒரே இடத்தில் வசிப்பவை.

256. ஆமுர் வல்லூறு

Amur Falcon *Falco amurensis* 28-31 cm.

முன் சொன்ன சிவப்பு வல்லூறைப் போன்ற சிறிய வலசை வரும் வல்லூறு. ஆண் கருத்தசாம்பல் நிற முதுகும், சிகப்புத் தொடைகளும், பிட்டமும் கொண்டிருக்கும். கால்கள் சிவப்பு நிறத்திலிருக்கும். பெண் சிவந்த கண் வளையம் மற்றும் சிவப்பு நாசிச் சதை கொண்டிருக்கும். இவை சீனாவின் ஆமுர் பிரதேசங்களிலிருந்து தென்னாப்பிரிக்கா வரை இந்திய கிழக்குக் கடலோர பிரதேசங்கள் வழியாக தீபகற்ப இந்தியாவில் புகுந்து

Balaji P B

249. Bonelli's Eagle

Balachandran S

250. Changeable Hawk-Eagle

Balaji P B

251. Legge's Hawk-Eagle

Kishore Kumaran

252. Rufous-bellied Eagle

Balaji P B

253. Lesser Kestrel

Balaji P B

254. Eurasian Kestrel



Balaji P B

255. Red-necked Falcon

Balaji P B

256. Amur Falcon

செல்கின்றன என்று சமீபத்திய ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. நாகாலந்தில் சில பகுதிகளில் ஆயிரக்கணக்கில் தங்கிப் பின்னர் பயணிக்கின்றன.

257. ஐரோப்பிய ராஜாளி

Eurasian Hobby *Falco subbuteo* 30-36 cm.

கருந்தலையும், கருஞ்சாம்பல் முதுகும், பழுப்பு மற்றும் சிவந்த அடிப்பாகமும் (கோடுகளுடன்), மஞ்சள் கால்களும், கொண்ட இந்திய ராஜாளியை ஒத்த ஒரு வல்லூறு. பனிக் காலங்களில் வலசை வரும். கண் கருஞ்சிவப்பாய் இருக்கும். தமிழ்நாட்டில் மிக அரிதாகத்தான் காணப்படும்.

258. ராஜாளி

Oriental Hobby *Falco severus* 27-30 cm.

ஐரோப்பியராஜாளியைப் போன்ற உருவம் கொண்ட மற்றொரு ராஜாளி. மஞ்சள் கால்கள், சிவந்த அடிப்பாகம், கழுத்தில் ஒரு மஞ்சள் பட்டையுடன் காணப்படும். அரிய ராஜாளி. வெகு அரிதாகக் காணப்படும்.

259. கரும்பழுப்பு ராஜாளி

Laggar Falcon *Falco jugger* 43-46 cm.

சிறியதாகவும், ஒடுங்கி சிறகுகள், கருஞ்சிகப்பு உச்சந்தலை, கறுத்த மீசைப்பட்டை, கரும்பழுப்பு மேல் பாகங்கள் கொண்ட நாட்டு ராஜாளி ஆயினும், அரிதாகவே காணப்படும். வாலின் கீழ் இறகில் கோடுகள் இருக்கும். விளை நிலங்கள், திறந்த வெளி, கற்பாங்கான குன்றுகள் உள்ள இடங்களில் காணலாம். தற்போது ஒரு சில இடங்களில் மட்டுமே கண்டிருக்கின்றனர்.

260. வேட்டையாடி வைரி (அ) வல்லூறு

Peregrine Falcon *Falco peregrinus* 38-48 cm.

வல்லூறை விட சற்றே பெரிதான இந்த வைரி நீலநிறமுதுகும், கருங்கோடிட்டசிவந்த அடிப்பாகமும் கொண்ட வைரி.தலை கறுப்பாக இருக்கும். இது மின்னல் போன்ற தாக்குதலுக்கு பெயர் பெற்றது. தன்னைவிடப் பெரிய பறவைளைக் கூடத்தாக்கும் வல்லமை பெற்றது. கூரிய நகங்களும், வலிமையான கால்களும்

(மஞ்சள்நிறம்) கொண்டவை. பாதம் வரை இறகுகள் அடர்ந்திருக்கும். கன்னத்தில் தெளிவான கறுப்புக் கோடு இருக்கும். நமது நாட்டு வேட்டையாடி வைரியை ஷாகின் வைரி என்றும் அழைப்பர். வலசை வரும் வேட்டை வைரி (European Peregine) சாம்பல் நிறத்தில் சிவப்பு குறைவாக இருக்கும். நீர்நிலைகளில் வரும் வாத்துமற்றும் சிறவிகளை வேட்டையாடும். எனினும் இவை பரவலாக மற்றும் குறைவாகவே காணப்படும். அருகி வரும் இனங்களில் இவையும் ஒன்று.

261. சின்ன முக்குளிப்பான்

Little Grebe *Tachybaptus ruficollis* 25-29 cm

சிறிய வாத்துக்குஞ்சுகள் போன்று தோன்றும் இந்த பறவையின் பின்புற சிறகுகள் மெத்தென்று தூக்கிக் கொண்டு காணப்படும். இனப்பெருக்கக் காலத்தில் கருஞ்சிகப்பு நிற கன்னங்கள் மற்றும் கழுத்துப் பக்கங்கள், அலகின் அடிபகுதியில் மஞ்சள் நிற திட்டு இருக்கும். இனப்பெருக்கம் இல்லாத காலத்தில், பழுப்பு கலந்த மங்கலான மஞ்சள் நிற கன்னங்கள் மற்றும் விலாப் பக்கங்கள் கொண்டிருக்கும். இளைய பறவையும் இதே போன்றே, ஆனால் கன்னங்களின் குறுக்கே பழுப்பு பட்டைகள் காணப்படும். ஏரிகள் மற்றும் குட்டைகள், அனைத்து நன்னீர் நிலைகளிலும் காணலாம்.

262. பெரிய கொண்டை முக்குளிப்பான்

Great Crested Grebe *Podiceps cristatus* 48 cm.

சாதாரண முக்குளிப்பானை விட பெரிய உருவம். தலையில் கொண்டையுடன் காணப்படும். சிவந்த கன்னங்கள் மற்றும் மொட்டை வால் உள்ளது. வெகு அபூர்வமாகத் தென்படும் வலசை இனம்.

263. பாம்புத் தாரா

Oriental Darter *Anhinga melanogaster* 85-97 cm.

நீண்ட ஒடுங்கிய தலை மற்றும் கழுத்து இருபுறமும் கூர்மை கொண்ட பிச்சுவா கத்தி போன்ற அலகு மற்றும் நீளமான வால், உடம்பு பெரும்பாலும் மூழ்கிய நிலையில் நீந்தும்.

பறக்கும்போது கழுத்தை பாதி நீட்டிக் கொண்டு குறுகலான நீள்வட்ட வடிவில் இருபுறம் வளைந்த முனை உடைய வெள்ளை கீற்றுகள் தோள்பட்டை இறகுகள் தெரியும். மேலும் வெள்ளை கோடுகள் இறக்கை இறகுகளில் காணப்படும். இளைய பறவையின் கீழ்புறம் லேசான பழுப்புக் கலந்த மஞ்சள் கலந்த வெள்ளை நிறமாகவும், லேசான பழுப்புக் கலந்த மஞ்சள் நிற நெளிநெளியான அமைப்பு இறக்கைகளில் ஒரு வெளுத்தப் பட்டையை மேல் இறக்கையில் உருவாக்கியிருக்கும். ஏரிகள், குட்டைகள் மற்றும் மெதுவாக ஓடும் ஆறுகளில் காணலாம்.பரவலாக குறைந்த எண்ணிக்கையில் காணப்படும்.

264. சிறிய நீர்காகம்

Little Cormorant *Microcarbo niger* 51 cm.

இனப்பெருக்க காலத்தில் முழுவதும் கறுப்பாக, சில வெள்ளை சிறகுகள் முன் உச்சந்தலை மற்றும் தலையின் பக்கவாட்டில் இருக்கும். இனப்பெருக்கத்திற்கு தயாராக இல்லாதது பழுப்பு நிறத்தில் (தலையில் வெள்ளை சிறகுகள் இருக்காது), கன்னத்தில் வெள்ளை நிறத்துடன் காணப்படும். முழுவளர்ச்சியடையாதது, வெள்ளை கலந்த கன்னம், தொண்டை, முன் கழுத்து மற்றும் மார்பில் மேல் பாகங்களை விட வெளுத்த நிறத்தில் நெளிநெளியான வளைவுகளுடனும் காணப்படும். ஏரிகள், குட்டைகள், உப்பளங்கள் மற்றும் ஆறுகளில் காணப்படும். நீருக்குள் மூழ்கி நீந்தி மீன்பிடிக்கும். தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் காணப்படும் சாதாரணப் பறவை.

265. பெரிய நீர்காகம்

Great Cormorant *Phalacrocorax carbo* 80-100 cm.

மற்ற நீர்காகங்களை விட பெரிய அளவில் கழுத்து மற்றும் பருத்த அலகுடன் காணப்படும். இனப்பெருக்கத்திற்குத் தயாரான வளர்ந்த பறவைக்கு பளபளவென கறுப்பு நிறத்தில் கருஞ்சிகப்பு முகத்தோல், வெள்ளை கன்னங்கள், தொண்டை, வெள்ளை தலை இறகுகள், வெள்ளை தொடை திட்டு காணப்படும். இனப்பெருக்கத்திற்குத் தயாராக இல்லாதது



257. Eurasian Hobby

Manjunath Desai

258. Oriental Hobby

CC Michael Gillam

259. Laggar Falcon

Udayakumar B

260. Peregrine Falcon

Ravichandran S P

261. Little Grebe

Balaji P B

262. Great Crested Grebe

Balaji P B

263. Oriental Darter

Balaji P B

264. Little Cormorant

Balaji P B

மிகவும் கறுப்புக் கலந்த பழுப்பு நிறத்தில், வெள்ளை தலை சிறகுகள் மற்றும் தொடை திட்டு இல்லாமலும் இருக்கும், முழுவளர்ச்சியடையாதது, வெள்ளை கலந்த அல்லது வெழுத்த மங்கலான பழுப்புக் கலந்த மஞ்சள் நிற கீழ் பாகங்கள் இருக்கும். ஏரிகள் மற்றும் பெரிய ஆறுகளில் காணப்படும்.இதில் வலசை வரும் இனங்களும் இருக்கின்றன.

266. நடுத்தர நீர்காகம்

Indian Cormorant (Indian Shag)

Phalacrocorax fuscicollis 63 cm.

பெரிய நீர் காக்கையை விட சிறியதாகவும் மற்றும் ஒடுங்கியும், ஒல்லியான கழுத்தையும் கொண்டிருக்கும். ஒடுங்கிய நீள்வட்ட தலை, நேர்த்தியாகக் காணப்படும் அலகு, நீளமான வால் இருக்கும். பறக்கும் போது மெலிந்த கழுத்துடன் வேகமாக இறக்கை வீசி பறக்கும். சிறிய நீர் காக்கையை விட பெரியதாகவும், நீளமான கழுத்துடன் நீள்வட்ட வடிவ தலை மற்றும் நீளமான அலகுடன் இருக்கும். இனப்பெருக்கத்திற்கு தயாராக இல்லாத பறவைக்கு வெள்ளை சிறகுகள், வெள்ளை கலந்த தொண்டை மற்றும் பழுப்பு நிறத்தில் காணப்படும் தலை, கழுத்து மற்றும் கீழ் பாகங்கள் இருக்கும். உள்நாட்டு மற்றும் கடற்கரையோர நீர் நிலைகளில் காணப்படும்.

267. நெடலை / பெரிய கொக்கு

Great Egret *Ardea alba* 65-72 cm.

ஒரே இடத்தில் குடியிருக்கும் வகைகளும், வலசை வரும் வகைகளையும் கொண்டது. பெரிய அளவில், மிக நீளமான கழுத்து, பெரிய அலகு, வாய், அலகின் ஓர கறுப்புக் கோடு கண்ணிற்குப் பின்னே நீண்டிருக்கும். இனப்பெருக்கக் காலத்தில், கறுப்பு அலகு, நீல கண் அலகிடைப்பகுதி, முழங்காலுக்கும் - கணுக்காலுக்கும் இடையில் உட்புறமாக உள்ள பெரிய எலும்பு சிகப்பு கலந்த நிறத்திலும், பிரதானமான சிறகுகள் மார்பு மற்றும் தோளை மூடிய பகுதிகளில் காணப்படும். இனப்பெருக்கம் இல்லாத போது அலகு மஞ்சள் மற்றும் கண் அலகிடைப் பகுதி வெளுத்தப் பச்சை நிறம்

கொண்டிருக்கும். ஈர நிலங்கள், வயல்வெளிகள், கடற்கரையோரங்கள், தீவுப் பகுதிகளில் காணலாம்.

268. நடுத்தரக்கொக்கு

Intermediate Egret *Ardea intermedia* 50-61 cm.

பெரிய கொக்கை விட சிறியதாகவும், சிறிய கொக்கை விட பெரியதாகவும் இருக்கும். குட்டையான அலகு மற்றும் கழுத்துடன் இருக்கும். கறுப்பு வாய் மற்றும் அலகின் ஓரக் கோடு, கண்ணிற்கு பின்புறம் நீண்டு இருக்காது. இனப்பெருக்கக் காலத்தில், கறுப்பு அலகு மற்றும் மஞ்சள், பச்சை கண் அலகிடைப்பகுதி, மார்பு மற்றும் தோளை மூடிய பகுதிகளில் இறகுகள், பிரதானமான தலை கொண்டையையும் கொண்டு இருக்கும். இனப்பெருக்கம் இல்லாத காலத்தில் கறுப்பு முனையுடன், மஞ்சள் அலகு மற்றும் மஞ்சள் கண் அலகிடைப் பகுதி காணப்படும்.ஈரநிலங்கள், வயல்கள், உவர்நீர் நிலைகளில் காணப்படும். ஒரே இடத்தில் வசிப்பவை.

269. சின்னக்கொக்கு / கள்ளவாயன்

Little Egret *Egretta garzetta* 55-65 cm.

மெலிந்த மற்றும் அழகான முழு வெண்மையான தோற்றத்துடன் காணப்படும். கறுப்பு அலகு, கறுப்பு கால்கள் மற்றும் மஞ்சள் பாதம் மற்றும் சாம்பல் கலந்த கண் அலகிடை பகுதி. இனப்பெருக்க காலத்தில் கண் அலகிடை பகுதி சிகப்புக் கலந்த நிறத்தில் காணப்படும். இனப்பெருக்கக் காலத்தில் சிறகுகளின் பிரதான இறகுகள், பிடரி, மார்பு மற்றும் தோளை மூடிய பகுதிகளில் காணப்படும். ஈர நிலங்கள், வயல் வெளிகள் என்று எல்லா நீர்நிலைகளிலும் இருக்கும்.

270. கரைக்கொக்கு

Western Reef-Heron (Western Reef-Egret)
Egretta gularis 55-65 cm.

சின்னக் கொக்கை விட நீளமான அலகு பருத்து மற்றும் வழக்கமாக சற்றேக் கீழ் நோக்கி வளைந்த தோற்றத்துடன் இருக்கும். கால்கள் சற்றுக் குட்டையாகவும் மற்றும் தடித்தும் தோன்றும். அலகு வழக்கமாக மஞ்சள் கலந்த அல்லது பழுப்புக்

கலந்த - மஞ்சள், ஆனால் அது இனப்பெருக்கத்தின் போது கறுப்பாக இருக்கும். பச்சை கலந்த அல்லது மஞ்சள் கலந்த கண் அலகிடை பகுதி. கடற்கரையோர நீர்நிலைகளில், கடல் நடுவில் அமைந்துள்ள தீவுகளிலும் காணலாம்.

271. உண்ணிக்கொக்கு

Cattle Egret *Bubulcus ibis* 48-53 cm.

சிறிய உருண்டை கொக்கு குட்டையான மஞ்சள் அலகு மற்றும் குட்டையான கால்கள் இருக்கும். மஞ்சள் கலந்த சிகப்பு, மங்கலான பழுப்பு மஞ்சள் நிறம் தலை, கழுத்து மற்றும் தோளை மூடிய பகுதிகளில் இனப்பெருக்கக் காலத்தில் காணப்படும். கால் நடைகள் உள்ளஈர நிலங்கள் மற்றும் புல்வெளிகளில் இருக்கும். குறிப்பிட்ட இடத்திலேயே குடியிருப்பவை.

272. மடையான்

Indian Pond-Heron *Ardeola grayii* 42-45 cm.

வெள்ளை கலந்த இறக்கைகள் கறுத்த பின்புறத்திலிருந்து வேறுபட்டிருக்கும். பச்சைக் கால்கள், இனப்பெருக்கத்திற்குத் தயாரான வளர்ந்த பறவைக்கு மஞ்சள் கலந்த லேசான பழுப்பு மஞ்சள் நிற தலை மற்றும் கழுத்து, வெள்ளை பிடரி சிறிது குஞ்சங்கள் கொண்டிருக்கும். இனப்பெருக்கம் இல்லாத காலத்தில் தலை கழுத்து மற்றும் மார்பு கோடுகளுடன் காணப்படும். அனைத்து வகையான ஈர நிலங்களில் இருக்கும்.

273. சாம்பல் கொக்கு

Grey Heron *Ardea cinerea* 90-98 cm.

இதன் ஒருபகுதி பறவைகள் வலசை செல்லக்குடியவை. பறக்கும் போது கறுப்பு சிறகுகள் சாம்பல் நிற மேல் இறக்கை மற்றும் கீழ் இறக்கை இறகுகளிலிருந்து வேறுபட்டிருக்கும். வளர்ந்த பறவைக்கு மஞ்சள் அலகு, வெள்ளை கலந்த தலை மற்றும் கழுத்தில் கறுப்புத் தலைச் சிறகு குஞ்சங்களும் மற்றும் அடி வயிற்றில் கறுப்புத் திட்டும் காணப்படும். முழுவளர்ச்சியடையாததற்கு கறுப்பு தலை, தொப்பியில் வேறுபட்ட தலைக் கொண்டை, சாம்பல் கழுத்து மற்றும் கறுப்பு நிறம் அடிவயிற்றில் குறைந்தும் அல்லது இல்லாமலும்

Balaji P B

265. Great Cormorant

Balaji P B

266. Indian Cormorant

Balaji P B

267. Great Egret

Balaji P B

268. Intermediate Egret

Balaji P B

269. Little Egret

Balaji P B

270. Western Reef-Heron

Balaji P B

271. Cattle Egret

Balaji P B

272. Indian Pond-Heron

இருக்கும். ஈர நிலங்கள், சதுப்பு நிலங்கள், ஏரிகள், குளங்களில் காணப்படும்.

274. செந்நீல கொக்கு

Purple Heron *Ardea purpurea* 78-90 cm.

சாம்பல் நாரையுடன் ஒப்பிடும் போது நன்றான வளைவு கோணங்களுடன் கூடிய தோற்றமும், நீளமான ஒடுங்கிய கழுத்துடையது. பறக்கும் போது சுருட்டிக் கொண்டிருப்பது போன்று வீங்கிய கழுத்து நன்றாக தெரியும். கால்கள் நன்றாக வெளியே துருத்திக் கொண்டிருக்கும். வளர்ந்த பறவைக்கு செம்பழுப்பு தலை மற்றும் கழுத்தில் கறுப்புப் பட்டை கோடுகள், சாம்பல் நிற தோள்பட்டை சார்ந்த பகுதி மற்றும் மேல் இறக்கை இறகுகள், கறுத்த செம்பழுப்பு நிற அடிவயிறு மற்றும் கீழ் இறக்கை இறகுகள் இருக்கும். இளைய பறவைக்கு மங்கலான பழுப்பு மஞ்சள் நிற கழுத்து, கருஞ்சிகப்பு மற்றும் மங்கலான பழுப்பு மஞ்சள் நிறத்தில் நெளிநெளியாக இருக்கும். வயல்கரைகள், குளங்கள், கோரை, தாளை நிறைந்த நீர்நிலைகளில் காணலாம்.

275. சைனா மடையான்

Chinese Pond-Heron *Ardeola bacchus* 45-50 cm.

நமது மடையானைப் போன்ற அளவில், ஆனால் மஞ்சள் அலகும், கால்களும் கொண்டது. (நமது மடையானுக்குப் பச்சைக் கால்கள்). அலகு நுனியில் கறுப்புத் திட்டு இருக்கும். இனப்பெருக்க காலத்தில் நல்ல சிவந்த மேல்புறம் இருக்கும். மற்ற சமயங்களில், சாம்பல் பழுப்பு நிறத்துடன் காணப்படும். வெகு அரிதாக தென்படும். கடந்த சில வருடங்களாக சென்னைக்கு அருகே கண்டுள்ளனர்.

276. சிறிய பச்சைக் கொக்கு

Striated Heron (Little Heron) *Butorides striata* 40-48 cm.

சிறிய பருத்த மற்றும் குட்டையான கால்களுடைய கொக்கு. வளர்ந்த பறவைக்கு கறுப்பு உச்சந்தலை மற்றும் நீளமான கொண்டை, கரும்பச்சை கலந்த மேல் பாகங்கள் மற்றும் சாம்பல் கலந்த கீழ் பாகங்கள் இருக்கும். இளைய பறவைக்கு லேசான

பழுப்பு மஞ்சள் நிற கோடுகள் மேல் பாகங்களில் மற்றும் கறுத்த கோடுகள் கீழ் பாகங்களிலும் காணப்படும். அடர்த்தியான புதர்கள் நிறைந்த நிலங்களில் நீர்நிலைகளிலும், ஆற்றங்கரை ஒரங்களிலும், கடற்கரைகளிலும் காணலாம். பொதுவாக தனியாக காணப்படும்.

277. இராக்கொக்கு

Black-crowned Night-Heron ***Nycticorax nycticorax*** 58-65 cm.

பருத்த கொக்கு வளர்ந்த பறவையின் உச்சந்தலை கறுப்பு நிறத்திலும் மற்றும் தோளை மூடிய பகுதி, சாம்பல் இறக்கைகள் மற்றும் வெள்ளை கலந்த கீழ் பாகங்களிலிருந்து வேறுபட்டிருக்கும். இனப்பெருக்கக் காலத்தில் நீளமான வெள்ளை பிடரி இறகு குஞ்சங்கள் இருக்கும். முழுவளர்ச்சியடையாத பறவைக்கு அழுத்தமான கோடுகள் மற்றும் புள்ளிகள் இருக்கும். தோளை மூடிய பகுதி/சிறகுகள் காணப்படும். ஈர நிலங்கள் நாணல் கரைகளில் இருக்கும்.

278. மலேய இராக்கொக்கு

Malayan Night-Heron ***Gorsachius melanolophus*** 51 cm.

குண்டான அலகு மற்றும் குட்டையான கழுத்துடைய பருத்த பறவை. வளர்ந்த பறவைக்குக் கறுப்பு உச்சந்தலை மற்றும் கொண்டை, கருஞ்சிகப்பு நிற தலை மற்றும் கழுத்துப் பக்கங்கள் மற்றும் கருஞ்சிகப்பு - பழுப்பு மேல் பாகங்களுடன் காணப்படும். முழுவளர்ச்சியடையாத பறவைக்கு வெள்ளை, சாம்பல் மற்றும் கருஞ்சிகப்பு-மங்கலான பழுப்புநிறத்தில் நெளிநெளியாகவும், அழுத்தமான வெள்ளை புள்ளிகள் உச்சந்தலை மற்றும் கொண்டையில் காணப்படும். பசுமைமாறாக் காடுகளில் உள்ள ஓடைகள் மற்றும் சதுப்பு நிலங்களில் காணலாம். தமிழ்நாட்டில் மேற்கு மலை தொடர்ச்சிகளிலுள்ள ஓடைகளிலும் மற்றும் கடற்கரை சதுப்பு நிலங்களிலும் அரிதாக காணப்பட்டுள்ளது.

279. மஞ்சள் குறுகு

Yellow Bittern *Ixobrychus sinensis* 38 cm.

மஞ்சள் கலந்த - மங்கலான பழுப்பு மஞ்சள் நிற இறக்கை இறகுகள், கரும்பழுப்பு பறக்கும் சிறகுகளிலிருந்து வேறுபட்டிருக்கும். ஆணிற்கு வெளிர்சிகப்பு கலந்த பழுப்பு தோளை மூடிய/தோள்பட்டையை சார்ந்த இறகுகள், முகம் மற்றும் கழுத்துப் பக்கங்கள் கருஞ்சிகப்பு நிறத்தில் காணப்படும். பெண் பறவை ஆணைப்போலவே இருக்கும். ஆனால் கறுப்பு உச்சந்தலையில் கருஞ்சிகப்பு கோடுகள், கருஞ்சிகப்பு-மஞ்சள் கலந்த சிகப்புக் கோடுகள், முன் கழுத்து மற்றும் மார்பிலும் அழுத்தமான கறுப்புக் கோடுகள் காணப்படும். மேல் பாகங்களிலும் மற்றும் இறக்கை இறகுகளிலும், முன் கழுத்து மற்றும் மார்பில் கனமான கோடுகளுடன் காணப்படும். நாணல் கரைகள் மற்றும் சதுப்பு நிலங்களில் காணலாம்.

280. செங்குறுகு

Cinnamon Bittern *Ixobrychus cinnamomeus* 38 cm.

சிறிய அளவில் இருக்கும். சீரான இலவங்கப்பட்டை-கருஞ்சிகப்பு நிற பறக்கும் இறக்கைகள் மற்றும் வால் எல்லா பருவங்களிலும் இருக்கும். ஆணிற்கு இலவங்கப்பட்டை - கருஞ்சிகப்பு உச்சந்தலை, பின் கழுத்து மற்றும் தோள்பட்டை சார்ந்த தோளை மூடிய சிறகுகள் இருக்கும். பெண்ணிற்கு கரும்பழுப்பு, உச்சந்தலை மற்றும் மார்பில் காணப்படும். இளைய பறவைக்கு கரும்பழுப்பு மேல் பாகங்களில் தோள்பட்டை பகுதி மற்றும் கரும்பழுப்பு கோடுகள், முன் கழுத்து மங்கலான லேசான பழுப்புமஞ்சள் போன்ற பல வண்ணங்களிலும், கரும்பழுப்பு கீழ் பாகங்களில் கனமான கோடுகள் காணப்படும். நாணல்கரைகளில் மற்றும் சதுப்பு நிலங்களில் காணலாம்.

281. கருங்குறுகு

Black Bittern *Ixobrychus flavicollis* 58 cm.

கறுப்புக் கலந்த மேல் பாகங்கள் மற்றும் சிறகுகள், மஞ்சள் கலந்த சிகப்பு - மங்கலான பழுப்பு மஞ்சள் நிற திட்டு கழுத்துப்

273. Grey Heron

Balaji P B

274. Purple Heron

Balaji P B

275. Chinese Pond-Heron

Balaji P B

276. Striated Heron

Balaji P B

277. Black-crowned Night-Heron

Balaji P B

278. Malayan Night-Heron

Rama Neelamegam

279. Yellow Bittern

Balaji P B

280. Cinnamon Bittern

Balaji P B

பக்கங்களில் இருக்கும். முழுவளர்ச்சியடையாத பறவைக்கு கருஞ்சிகப்பு நெளிநெளியான ஓரங்களுடைய மேல் பாகங்கள் காணப்படும். காடுகளில் உள்ள குட்டைகள், சதுப்பு நிலங்கள், ஏரி ஓர நாணல் கரைகளில் காணலாம்.

282. பெரிய பூநாரை

Greater Flamingo *Phoenicopterus roseus* 125-145 cm.

ஈரான், காஸ்பியன் கடல் பகுதிகளிலிருந்து வலசை வரும் பெரிய நாரை போன்ற பறவை. ரோஜா நிறம் கலந்த வெள்ளை பறவை. நீளமான மற்றும் ஒடுங்கிய கழுத்துடன் காணப்படும். பெரிய அலகு சற்று குறைந்து வளைந்து காணப்படும். வளர்ந்த பறவைக்கு வெளுத்த வெளிர்சிகப்பு அலகு முனையில் பிராதனமான கறுப்பு நிறம் மற்றும் வேறுபட்ட அளவில் வெளிர்சிகப்பு-வெள்ளை நிறம் தலை, கழுத்து மற்றும் உடம்பில் காணப்படும். பறக்கும் போது கருஞ்சிகப்பு, வெளிர்சிகப்பு மேல் இறக்கை இறகுகள் வெள்ளை கலந்த உடம்பிலிருந்து வேறுப்பட்டிருக்கும். முழுவளர்ச்சியடையாதது சாம்பல் கலந்த-வெள்ளை தலை மற்றும் கழுத்து, வெளிர்சிகப்பு நிறமில்லாமல் வெள்ளை உடம்பு, அலகில் வெளிர்சிகப்பு நிறம் வயதாக ஆக அதிகரிக்கும். இளையது பழுப்புக் கலந்த - சாம்பல், வெள்ளை இறக்கைகள், சாம்பல் அலகு, கறுப்பு முனையுடனும் மற்றும் கால்கள் சாம்பல் நிறத்திலும் காணப்படும். ஆழம் குறைந்த உப்பான ஏரிகள், சேறு நிறைந்த நிலங்கள் மற்றும் உப்பளங்களில் காணலாம். தமிழ்நாட்டில் தனுஷ்கோடி, கோடியக்கரை மற்றும் பழவேற்காடு ஏரியில் பல்லாயிரக்கணக்கில் காணலாம்.

283. சிறிய பூநாரை

Lesser Flamingo *Phoeniconaias minor* 80-90 cm.

பெரிய பூநாரையை விட சிறியது, கழுத்து சற்று குட்டையாகவும், அலகு சின்னதாகவும், நன்றாகவும் வளைந்திருக்கும். வளர்ந்ததிற்கு கறுப்பு முனையுடைய கருஞ்சிகப்பு அலகு, கருஞ்சிகப்பு விழி வண்ணப்படலம் மற்றும் முகத்தோல், நல்ல ரோஜா-வெளிர்சிகப்பு நிற தலை, கழுத்து மற்றும் உடம்பிலும்,

இரத்த சிகப்பு நிறம் மையத்திலும், சற்று குறைவாக மைய மேல் இறக்கை இறகுகளிலும் இருக்கும். அது மற்ற வெளிர்சிகப்பு இறக்கைகளிலிருந்து வேறுபட்டிருக்கும். முழுவளர்ச்சியடையாததிற்கு சாம்பல் கலந்த பழுப்பு தலை மற்றும் கழுத்து, வெளுத்த வெளிர்சிகப்பு உடம்பு மற்றும் இறகுகள் பெருமளவு வெளிர்சிகப்பு. வயதாக ஆக அலகில் நிறம் மாற ஆரம்பிக்கும். இளைய பறவைக்கு பெருமளவு சாம்பல்-பழுப்பு நிறம், கறுப்பு முனையுடைய நீலம் கலந்த - பழுப்பு அலகு மற்றும் சாம்பல் கால்கள் இருக்கும். ஆழமில்லாதஉப்பான ஏரிகள் மற்றும் உப்பளங்களில் காணலாம். தமிழ்நாட்டில் கோடியக்கரையில்தான் அதிக அளவில் காணப்பட்டுள்ளது.

284. ஜொலிக்கும் அரிவாள்மூக்கன்

Glossy Ibis *Plegadis falcinellus* 55-65 cm.

சிறிய, கறுத்த ஆனால் நேர்த்தியான கீழ்நோக்கி வளைந்த அலகுடைய பறவை. கறுப்பு அரிவாள் மூக்கனைவிட சிறியது. இனப்பெருக்கத்திற்குத் தயாரான வளர்ந்த பறவைக்கு, நன்றான செம்பழுப்பு நிறத்தில் வெளிர்சிகப்பு மற்றும் பளபளப்பான உலோகப்பச்சை மற்றும் வெளிர்சிகப்பு இறக்கைகள், கண் அலகிடைப்பகுதியில் குறுகலான வெள்ளை நிறம் காணப்படும். இனப்பெருக்கத்திற்குத் தயாரான வளர்ந்த பறவையின் நிறம் மங்கலாகவும், வெள்ளை கோடுகள் கரும்பழுப்பு தலை மற்றும் கழுத்தில் காணப்படும். இளையது இனப்பெருக்கத்திற்குத் தயாராகாத வளர்ந்ததை போல், ஆனால் கரும்பழுப்பு, வெள்ளை நிறத்தில் பலவண்ண புள்ளிகள் தலையிலும் தெளிவற்ற பச்சை கலந்த பளபளக்கும் நிறம் மேல் பாகங்களிலும் காணப்படும். உள்நாட்டிலுள்ள ஈர நிலங்களில் காணலாம். இவைகளின் எண்ணிக்கை சமீப காலங்களில் பலமடங்காக அதிகரித்துள்ளது.

285. வெள்ளை அரிவாள்மூக்கன்

Black-headed Ibis *Threskiornis melanocephalus* 75 cm.

பருத்த, பெருமளவு வெள்ளை நிறத்தில், நீண்ட கீழ் நோக்கி வளைந்த அலகுடைய பறவை. இனப்பெருக்கத்திற்குத்

தயாரான பறவைக்கு கறுப்பு தலை, அதன் கீழ் வெள்ளை கழுத்து சிறகுகளும், வேறுபட்ட மஞ்சள் நிறம் பூசினாற் போன்ற தோளை மூடிய பகுதி மற்றும் மார்பு, சாம்பல் நிற தோளை மூடிய இறகுகள் மற்றும் நீண்ட மூன்றாம் இறக்கை இறகுகள். இனப்பெருக்கத்திற்குத் தயாரான வளர்ந்த பறவையின் உடம்பு முழுவதும் வெள்ளை நிறத்திலும் மற்றும் கழுத்து இறகுகள் இல்லாமலும் இருக்கும். முழுவளர்ச்சியடையாதது சாம்பல் இறகுகளுடன் தலை மற்றும் கழுத்தும், கறுப்பு முனையுடைய இறக்கைகளும் காணப்படும். நன்னீர் ஈரநிலங்கள், சதுப்பு நிலங்கள், ஆறுகள் மற்றும் குட்டைகளில் காணலாம். தமிழ்நாட்டின் அனைத்து பறவைகள் சரணாலயங்களிலும் இனப்பெருக்கம் செய்யக்கூடியவை.

286. கறுப்பு அரிவாள்மூக்கன் / அன்றில் பறவை

Red-naped Ibis (Indian Black Ibis)

Pseudibis papillosa 68 cm.

வீட்டுக் கோழிகளைவிட 2 மடங்கு பெரிதான இந்த அன்றில் பறவைக்கு கீழ்நோக்கி வளைந்த பருத்த அலகு. வெள்ளை தோள்பட்டை திட்டும் மற்றும் சிகப்புக் கலந்த கால்கள் இருக்கும். வளர்ந்த பறவைக்கு வெறும் கறுப்பு தலையில் சிகப்பு திட்டு உச்சந்தலைக்கு பின்புறமும் மற்றும் பிடரியிலும், உடல் கரும்பழுப்பு மற்றும் பச்சை நிறத்தில் பளபளப்பாகக் காணப்படும். முழுவளர்ச்சியடையாதது கரும்பழுப்பு நிறத்தில் இறகுகளுடைய தலையுடன் காணப்படும். சதுப்பு நிலம், ஏரிகள் மற்றும் நிலங்கள், சில நேரங்களில் காய்ந்த விளை நிலங்களில் காணப்படும்.தமிழ்நாட்டில் அனைத்து சமவெளி விளை நிலங்களிலும், ஆழம் குறைந்த புதர்களை கொண்ட நீர்நிலைகளின் ஓரங்களிலும் காணலாம்.

287. கரண்டிவாயன்

Eurasian Spoonbill *Platalea leucorodia* 80-90 cm.

வெள்ளை நிறத்தில், கரண்டி போன்ற தட்டையான முனையுடைய அலகுடன் காணப்படும். வளர்ந்த பறவைக்கு மஞ்சள் முனையுடைய கறுப்பு அலகு, இனப்பெருக்கத்தின்

போது கொண்டை மற்றும் மஞ்சள் திட்டு மார்பில் இருக்கும். இளைய பறவை வெளிர்சிகப்பு அலகுடன், பறக்கும் போது கறுப்பு முனையுடைய முதன்மை இறக்கை இறகுகள் காணப்படும். சதுப்பு நிலங்கள், ஏரிகள் மற்றும் பெரிய ஆறுகளில் காணலாம். தமிழ்நாட்டின் பறவைகள் சரணாலயங்களில் இனவிருத்தி செய்யும். ஒரு பகுதி வலசை வருபவை.

288. நத்தைகுத்தி நாரை

Asian Openbill ***Anastomus oscitans*** 68 cm.

பருத்த, மங்கலான நிறத்துடன், திறந்த அலகுடன் காணப்படும். பெரிய அளவில் வெள்ளை நிறத்தில் (இனப்பெருக்கத்தின் போது) அல்லது சாம்பல் கலந்த - வெள்ளை (இனப்பெருக்கம் இல்லாத போது) கறுப்பு பறக்கும் சிறகுகள் மற்றும் வால், கால்கள் வழக்கமாக மங்கலான வெளிர்சிகப்பு இனப்பெருக்கத்தின் போது பளிச்சென்றுக் காணப்படும். இளைய பறவைக்கு பழுப்புக் கலந்த - சாம்பல் தலை, கழுத்து மற்றும் மார்பு, மற்றும் பழுப்பு கலந்த தோள்பட்டை சார்ந்த பகுதி மற்றும் தோளை மூடிய இறகுகள், கறுப்பான பறக்கும் சிறகுகளிலிருந்து சற்றே வெளுப்பாக இருக்கும். தூரத்திலிருந்து பறக்கும் பறவையை பார்க்கும் போது வெள்ளை நாரையை போல் இருக்கும். ஆனால் அதைவிட மங்கலான அலகு மற்றும் கறுப்பு வாலுடன் காணப்படும். சதுப்பு நிலங்கள் மற்றும் ஏரிகளில் காணப்படும். தமிழ்நாட்டின் அனைத்து பறவைகள் சரணாலயங்களிலும் இனப்பெருக்கம் செய்யக்கூடியவை. இவைகளின் எண்ணிக்கை சமீப காலங்களில் பலமடங்காக அதிகரித்துள்ளது.

289. கருநாரை

Black Stork ***Ciconia nigra*** 90-100 cm.

வளர்ந்த பறவை பெருமளவு பளபளக்கும் கறுப்பு நிறத்தில், வெள்ளை கீழ் மார்பு மற்றும் அடி வயிற்றுடனும், சிகப்பு அலகு மற்றும் கால்கள், பறக்கும் போது வெள்ளை கீழ் பாகங்கள் மற்றும் துணை இறக்கைகள் கறுப்புக் கழுத்து மற்றும் கீழ்

Renuka Vijayaraghavan

281. Black Bittern

Balaji P B

282. Greater Flamingo

Renuka Vijayaraghavam

283. Lesser Flamingo

Balaji P B

284. Glossy Ibis

Balaji P B

285. Black-headed Ibis

Balaji P B

286. Red-naped Ibis



Balaji P B

287. Eurasian Spoonbill



Balaji P B

288. Asian Openbill

இறக்கை இறகுகளிலிருந்து வேறுபட்டிருக்கும். இளைய பறவைக்குப் பழுப்புத் தலை, கழுத்து மற்றும் வெள்ளை புள்ளிகளுடைய மேல் பாகங்கள், சாம்பல் கலந்த-பச்சை அலகு மற்றும் கால்கள். சதுப்பு நிலங்கள் மற்றும் ஆறுகளில் காணப்படும். வலசை வரும் பறவை. தமிழ்நாட்டில் மிகவும் அரிதாகத்தான் காணப்படுகிறது.

290. வெண்கழுத்து நாரை

Woolly-necked Stork *Ciconia episcopus* 75-92 cm.

பருத்த பெருமளவு கறுப்புக் கலந்த ரோம மயமான வெள்ளை கழுத்துடைய நாரை. கறுப்புத் தலைத்தொப்பி, வெள்ளை வாலடி மற்றும் கீழ் வால் இறக்கை இறகுகள். பறக்கும் போது மேல் இறக்கை மற்றும் கீழ் இறக்கைகள் முழுவதும் கறுப்பாக இருக்கும். இளைய பறவை வளர்ந்ததைப் போல் ஆனால் மங்கலான பழுப்பு உடம்பு மற்றும் இறக்கைகள் மற்றும் இறகுகளுடைய நெற்றி இருக்கும். நீர் நிறைந்த நிலங்கள், சதுப்பு நிலங்கள் மற்றும் ஏரிகள், புல்வெளிகளில் காணப்படும். தமிழ்நாட்டிற்கு சிறிய எண்ணிக்கையில்தான் வருகின்றன.

291. சிகப்பலகு வெண்நாரை

White Stork *Ciconia ciconia* 100-125 cm.

பெருமளவு வெள்ளை நிற நாரை, கறுப்புப் பறக்கும் சிறகுகள், அழகான சிகப்பு அலகு மற்றும் கால்கள் இருக்கும். பொதுவாக நத்தைக்குத்தி நாரையை விட சுத்தமான கறுப்பு மற்றும் வெள்ளை தோற்றம் இருக்கும். இளைய பறவை வளர்ந்ததைப் போலவே இருக்கும். ஆனால் பழுப்பு நிற பெரிய இறக்கைகள் மற்றும் மங்கலான பழுப்புக் கலந்த-சிகப்பு அலகு மற்றும் கால்கள் இருக்கும். சிகப்பு அலகு மற்றும் வெள்ளை வால் இதை நத்தைகுத்தியிலிருந்து தூரத்தில் பறக்கும் போது வேறுபடுத்திக் காட்ட உதவும். ஈரமான புல்வெளிகள் மற்றும் விளை நிலங்கள். வலசை வரும் பறவை.

292. சிறிய போதா

Lesser Adjutant ***Leptoptilos javanicus*** 110-120 cm.

பெரும் போதாவைப் போல் கழுத்தைப் பின்வாங்கி பறக்கும். பெரும் போதாவை விட சிறியதாகவும், ஒடுங்கிய அலகும் கொண்டு இருக்கும். வளர்ந்த பறவைக்கு பளபளப்பான தோள்பட்டை சார்ந்த பகுதி மற்றும் இறக்கைகள், பெருமளவு கருப்பு கீழ் இறக்கை (வெள்ளை துணை இறக்கைகளுடன்), வெள்ளை கீழ் வால் இறக்கைகள், மற்றும் பெருமளவு கருப்புக் கழுத்து சிறகுக் கொத்து (பறக்கும் போது அது ஒரு கருப்புத்திட்டு போல் மார்புப் பக்கங்களில் தோன்றும்). இனப்பெருக்கக் காலத்தில் குறுகலான வெள்ளை நிறத்தில் நெளிநெளியான ஓரங்கள் தோளை மூடிய இறகுகள் மற்றும் உள் பெரிய இறக்கை இறகுகளிலும் காணப்படும். இளையது வளர்ந்த பறவையைப் போல் இருக்கும், ஆனால் மேல் பாகங்கள் மங்கலான கருப்புதலை மற்றும் கழுத்தில் அடர்த்தியான இறகுகள் காணப்படும். சதுப்பு நிலங்கள், குட்டைகள் மற்றும் ஈர நிலங்கள். அகில உலக அளவில் ஆபத்தை நோக்கியுள்ளது. தமிழ்நாட்டில் ஒருசில தடவைகள்தான் காணப்பட்டுள்ளது.

293. மஞ்சள்மூக்கு / செங்கால் நாரை

Painted Stork ***Mycteria leucocephala*** 93-100 cm.

வளர்ந்த பறவைக்கு நேர்த்தியான கீழ்நோக்கி வளைந்த முனையுடைய மஞ்சள் அலகு, மஞ்சள் கலந்த சிகப்பு-மஞ்சள் அல்லது சிகப்பு முகம், சிகப்புக் கால்கள், வெள்ளை பட்டைகள் பெரும் அளவு கறுப்பு மேல் இறக்கை இறகுகளிலும், வெளிர் சிகப்பு மூன்றாம் நிலை இறக்கை இறகுகள் மற்றும் கறுப்புப் பட்டைகள் மார்பின் குறுக்கேயும் காணப்படும். இளைய பறவைக்குக் அழுக்கான சாம்பல் கலந்த - வெள்ளை, சாம்பல்-பழுப்புத் தலை மற்றும் கழுத்து, குறைவான பழுப்பு நிற இறக்கை இறகுகள், அலகு மற்றும் கால்கள் வளர்ந்ததை விட மங்கலாக இருக்கும். சதுப்பு நிலங்கள் மற்றும் ஏரிகளில் காணப்படும்.

294. புள்ளி அலகு கூழைக்கடா

Spot-billed Pelican *Pelecanus philippensis* 140 cm.

பெரிய வெள்ளை கூழைக்கடாவை விட மிக சிறியதும், அழுக்கடைந்த தோற்றத்துடன் இருந்தாலும் சீரான வெளிர்சிகப்பு கலந்த அலகு மற்றும் பை (இனப்பெருக்கக் காலம் தவிர), கறுப்பு புள்ளிகள் மேல் தாடையிலும் (முழுவளர்ச்சி அடையாததைத் தவிர), சிறகு குஞ்சங்கள் உச்சந்தலை/பின் கழுத்தில் வழக்கமாக இளம் பறவைகளுக்கும் தோன்றும். இனப்பெருக்கத்திற்குத் தயாரான பறவைக்கு இலவங்கப்பட்டை - வெளிர்சிகப்பு நிறத்தில் வால்பின்புறம், கீழ் இறக்கை இறகுகளும் மற்றும் கீழ்வால் இறக்கை இறகுகள், சாம்பல் கலந்த தலை மற்றும் கழுத்து, கண்ணிற்கு முன்னே கருஞ்சிகப்பு தோல், வெளிர்சிகப்பிலிருந்து கருஞ்சிகப்பு நிற பையின் மீது கறுப்புக் கொப்பளங்கள் இருக்கும். இனப்பெருக்கத்திற்குத் தயாரான முழுவளர்ச்சியடைந்த பறவைக்கு அழுக்கான சாம்பல் கலந்த வெள்ளை, வெளிர்சிகப்பு கழுத்துப்பையும், இளம் பறவைக்கு பழுப்புக் கலந்த தலை மற்றும் கழுத்து, பழுப்பு தோளை மூடிய பகுதி மற்றும் மேல் இறக்கை இறகுகள், வெளுத்த பறக்கும் சிறகுகள், அலகில் முதலில் புள்ளிகள் இல்லாமலும் இருக்கும். உள்நாட்டு பெரிய நீர்நிலைகள் மற்றும் கடற்கரையோர நீர்களில் காணப்படும்.

295. சிறிய மாலுமிப்பறவை

Lesser Frigatebird *Fregata ariel* 70-80 cm.

பெரிய மாலுமிபறவையை விட சின்னதாகவும் மற்றும் மிக நேர்த்தியாகவும் இருக்கும். வளர்ந்த ஆணிற்கு முழுவதும் கறுப்பாகவும், கூரான முனையுடைய வெள்ளை நிறம் மார்புப் பக்கங்களிலிருந்து உள் கீழ் இறக்கை வரை பரவியிருக்கும். வளர்ந்த பெண்ணிற்கு கறுப்பு தலை மற்றும் சிகப்பு கண் வளையம், கறுப்பு தொண்டை, வெள்ளை கழுத்துப்பக்கங்கள், கூரான வெள்ளை முனையுடைய நிறம் வெள்ளை மார்பிலிருந்து உள் கீழ் இறக்கை வரை பரவியிருக்கும். கறுப்பு அடிவயிறு மற்றும் வாலடி. இளைய மற்றும் முழுவளர்ச்சி யடையாத பறவைக்கு கருஞ்சிகப்பு அல்லது வெள்ளை தலை, கறுப்புக்

கலந்த மார்பு பட்டை மற்றும் பெருமளவிலான வெள்ளை கீழ் பாகங்கள், வளர வளர மெதுவாக வளர்ந்த பறவையின் நிறமாக மாறும். எப்பொழுதும் கூரான முனையுடைய வெள்ளை நிறம் கீழ் இறக்கையில் காணப்படும். ஆழ் கடல் நீரின் மேல்புறமும், தீவுகளிலும் வசிக்கும்.

296. தோட்டக்கள்ளன் / காத்தளாச்சி

Indian Pitta *Pitta brachyura* 19 cm.

இமயமலை மற்றும் வடதமிழ்நாட்டிலிருந்து தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் வலசை வரும். கண் வழியே அழுத்தமான கறுப்புப் பட்டை, வெள்ளை தொண்டை மற்றும் 9 நிறங்களை கொண்ட பறவை. இளம் பழுப்பு மஞ்ச புருவக் கோடுகள், நீண்ட சதை நிறகால்கள், லேசான பழுப்பு மஞ்சள் நிற உச்சந்தலைபட்டை, மார்பு மற்றும் விலாப் பக்கங்கள், இரண்டு தடவையான தொடர்க்குரலால் காட்டினுள் இருப்பதை கண்டு கொள்ளலாம். விசிலடி இரண்டாவது குரல் இறங்குமுகமாக, ப்ரீ -டீர் என இருக்கும். அடர்த்தியான பரந்த சமவெளிக்காடுகள். குந்திய நிலையில் வாலற்ற பறவை போன்று தத்தி தத்தி செல்லும். வீட்டு தோட்டங்களிலிருந்து 6000 அடி உயரமுள்ள மலை பகுதி வரை காணலாம்.

297. நீல அழகுச் சின்னான்

Asian Fairy-bluebird *Irena puella* 25 cm.

மலைக்காடுகளில் நீரோடைகளின் அருகிலும், ஈரமான பகுதிகளிலும் காணக்கூடிய கருநீல நிறத்தில் இருக்கும் மைனா போன்ற பறவை. மேல் பகுதி ஆழமான நீலமும், அடிப்பகுதி கறுத்தும் வாலடி ஊதா நிறத்திலும் இருக்கும். பெண் பறவை சற்றே மங்கலான நிறத்தில் இருக்கும். மஞ்சள் புருவ சின்னான் போன்ற பறவைளுடன் அதே வாழிடத்தைப் பகிர்ந்து வாழும்.

298. பச்சை இலைக்குருவி

Jerdon's Leafbird (Jerdon's Chloropsis)

Chloropsis jerdoni 20 cm.

ஆணிற்கு இலைக்குருவியை விட சிறிய கறுப்பு தொண்டை திட்டுடன் மஞ்சள் கலந்த நெற்றியும் இருக்கும். பெண் மற்றும்

Balaji P B

289. Black Stork

Balaji P B

290. Woolly-necked Stork

Balaji P B

291. White Stork

Prakash G

292. Lesser Adjutant

Balaji P B

293. Painted Stork

Balaji P B

294. Spot-billed Pelican

CC Ron Knight

295. Lesser Frigatebird

Balaji P B

296. Indian Pitta

இளைய பறவைக்கு வெளிர்நீல தொண்டையில் மஞ்சள் கலந்த ஓரங்கள் காணப்படும். தென் இந்தியாவில் காணப்படும் இனத்திற்கு பறக்கும் போது நீல ஓரங்கள் இருக்காது. திறந்த காடுகள் மற்றும் நன்றாக மரங்கள் உள்ள பகுதிகள், மலைக்காடுகளில் காணப்படும்.

299. கறுப்புத்தொண்டைஇலைக்குருவி

Golden-fronted Leafbird (Golden-fronted Chloropsis)

Chloropsis aurifrons 19 cm.

சின்னான் அளவிலான பச்சை நிற பறவை. வளர்ந்த பறவைக்கு தங்க-சிகப்பு கலந்த மஞ்சள் நெற்றி மற்றும் நன்றாக பரந்த கறுப்புத் தொண்டை. இளம் பறவைக்கு தலை பச்சை, அதில் லேசான வெளிர் நீல மீசைப்பட்டை காணப்படும். பரந்த சமவெளிக் காடுகளில் காணப்பட்டாலும் தமிழ்நாட்டில் மலைக் காடுகளில் 4000 அடி உயரமுள்ளபகுதியில் தான் பெரும்பாலும் காணப்படும்.

300. பழுப்புக்கீச்சான்

Brown Shrike *Lanius cristatus* 18-19 cm.

ஆண், குறிப்பாக கறுத்த கருஞ்சிகப்பு - பழுப்பு மேல் பாகங்கள் (தோளை மூடிய பகுதி மற்றும் வால் பகுதி வித்தியாசம் இல்லாமல் இருக்கும்). மேலும் மொத்தமான நுனி வளைந்த அலகு மற்றும் மிக நீளமான மங்கலான செங்கல் பழுப்பு கலந்த வால். பெண்ணிற்கு கறுப்பு முகத்திரையுடன் மிகவும் பிரதானமான வெள்ளை புருவக்கோடுகள் காணப்படும். காட்டு ஓரங்கள் புதர்கள் நிறைந்த காடுகள் மற்றும் புதர்கள் நிறைந்த மலைக் குன்றுகளில் காணப்படும். ஐரோப்பா பகுதிகளில் இருந்து வலசை வரும் பறவை.

301. செம்பழுப்புமுதுகு கீச்சான்

Bay-backed Shrike *Lanius vittatus* 17 cm.

வளர்ந்த பறவைக்கு மேல் பாகம் சிகப்புகலந்த பழுப்பு நிறம், கறுப்பு நெற்றி மற்றும் முகத்திரை வெளுத்த சாம்பல் தொண்டை மற்றும் உச்சந்தலை பிடரியிலிருந்து வேறுபட்டிருக்கும். நன்றான கரும்பழுப்பு தோளை மூடிய பகுதி,

நீண்ட வெள்ளை விளிம்புகளுடைய வால்,சிறகின் முதன்மை இறகுகள் முடியும் இடத்தில் வெள்ளை திட்டும் காணப்படும். முழுவளர்ச்சியடையாத பறவைக்கு கறுப்பான முன் நெற்றி இருக்காது. சிறந்த காய்ந்த புதர்கள் மற்றும் விளை நிலங்களிலுள்ள புதர்கள். ஒரே இடத்தில் வசிக்ககூடிய சிறிய சீச்சான் பறவை.

302. நீளவால் கீச்சான்

Long-tailed Shrike *Lanius schach* 25 cm.

சாம்பல் தோள், தோளை மூடிய கருஞ்சிகப்பு இறகுகள், குறுகலான கறுப்பு நெற்றி, கறுப்பு வாலின் பக்கங்களில் கருஞ்சிகப்பு நிறம் கொண்ட கீச்சான். சிறிய வெள்ளை திட்டு முதன்மை இறகுகள் முடியும் இடத்தில் காணப்படும். இளைய பறவைக்கு கருஞ்சிகப்பு மற்றும் பழுப்பு தோளை மூடிய இறக்கைகள் வால் பின்புறத்திலும், கறுப்பு முதன்மை இறக்கை இறகுகள், மற்றும் கருஞ்சிகப்பு நிற நெளிநெளியான மூன்றாம் இறக்கை இறகுகள் கொண்டிருக்கும். வறண்ட மரமுடைய பகுதிகளில் காணப்படும்.

303. மஞ்சள் மாங்குயில்

Indian Golden Oriole *Oriolus kundoo* 25 cm.

ஆண் தங்க மஞ்சள் நிறத்தில் கறுப்பு முகத்திரை மற்றும் பெருமளவு கறுப்பு நிற இறக்கைகளுடன் காணப்படும். பெண் மற்றும் முழுவளர்ச்சியடையாதது பொதுவாக கோடுகளுடைய கீழ் பாகங்கள் மற்றும் மஞ்சள் கலந்த பச்சை மேல் பாகங்களுடன் வேறுபட்டிருக்கும். குரல் சப்தமாக புல்லாங்குழல் இசை போன்று இருக்கும். திறந்த மரநிலங்கள் மற்றும் விளை நிலங்களில் உள்ள மரங்கள், மலைக்காடுகளில் காணப்படும்.

304. கரும்பிடரி மாங்குயில்

Black-naped Oriole *Oriolus chinensis* 27 cm.

கறுப்புக் கண், பட்டை மற்றும் பிடரி பட்டை கறுப்பாக இருக்கும். அது முழுவளர்ச்சியடையாத பறவையில் தெளிவாக இருக்காது. ஆணிற்கு மஞ்சள் தோளை மூடிய பகுதி மற்றும்

Balaji P B

297. Asian Fairy-bluebird

Balaji P B

298. Jerdon's Leafbird

Balaji P B

299. Golden-fronted Leafbird

Balaji P B

300. Brown Shrike

Balaji P B

301. Bay-backed Shrike

Balaji P B

302. Long-tailed Shrike

Byju H

303. Indian Golden Oriole

Balaji P B

304. Black-naped Oriole

இறக்கை இறகுகள் கீழ் பாகங்களும் அதே நிறத்தில் இருக்கும் (பெண்ணிற்கு மேல் பாகங்கள் பச்சை நிறம்). பரந்த சமவெளிக் காடுகள் மற்றும் மரங்கள் நிறைந்த பகுதியில் காணலாம். வலசை வரும் பறவை இனம்.

305. கருந்தலை மாங்குயில்

Black-hooded Oriole *Oriolus xanthornus* 25 cm.

வளர்ந்த பறவைக்கு கறுப்புத் தலை மற்றும் மார்பு, பெண் பறவையின் கீழ் பாகங்கள் ஆணை விட மங்கலான நிறத்தில் இருக்கும். முழுவளர்ச்சியடையாத பறவைக்கு மஞ்சள் நெற்றி மற்றும் கறுப்பு கோடுகளுடைய வெள்ளை தொண்டை. குரல் மென்மையாகவும், புல்லாங்குழல் வாசிப்பது போலவும் இருக்கும். மலைக்காடுகளில் அதிகம் காணலாம்.

306. வீட்டுக்காக்கை

House Crow *Corvus splendens* 40 cm.

இரண்டு நிறமுடைய தோற்றத்துடன் வெளுத்த பிடரி கழுத்து மற்றும் மார்பு, மற்ற பாகங்கள் கறுப்பு. மனிதர்கள் வசிக்கும் பகுதிகள் மற்றும் விளை நிலங்களில் காணலாம்.

307. அண்டங்காக்கை

Large-billed Crow *Corvus macrorhynchos* 46-59 cm.

முழுவதும் கறுப்பாகஇருக்கும். வீட்டுக்காக்கைபோன்ற சாம்பல் கழுத்துப் பட்டை இருக்காது. குவிந்த தலை, பெரிய வளைந்த அலகு இருக்கும். காடுகள், விளை நிலங்கள், திறந்த நாட்டுப்புறங்களிலுள்ள மரங்கள், பொதுவாக கிராம புறங்களில் காணலாம்.

308. கருஞ்சிவப்பு வால்காக்கை

Rufous Treepie *Dendrocitta vagabunda* 46-50 cm.

சிலேட் - சாம்பல் உச்சந்தலை, கருஞ்சிவப்பு - பழுப்பு தோளை மூடிய பகுதி வெளுத்த சாம்பல் பட்டை இறக்கைகளிலும், லேசான பழுப்பு மஞ்சள் நிற கீழ் பாகங்கள் மற்றும் நீண்டவால், வால் முடிவதற்கு சற்று முன்பு வெள்ளை கலந்த பட்டை காணப்படும். இளைய பறவைக்கு உச்சந்தலை பழுப்பு.

நாட்டுப்புற தோப்புகள் மற்றும் விளை நிலங்களுக்கு ஓரத்தில் உள்ள மரங்களில் காணலாம்.

309. வெண்வயிற்று வால்காக்கை

White-bellied Treepie *Dendrocitta leucogastra* 48 cm.

முகம் கறுப்பு, பிடரி மற்றும் கீழ் பாகங்கள் வெள்ளை, வெள்ளை வால் பின்புறம் கறுப்பு. இறக்கையில் வெள்ளைத் திட்டு மற்றும் பரந்த கறுப்பு முனையுடைய வால் இருக்கும்.மேற்கு மலைச் தொடர்ச்சியின் பசுமை மாறாக் காடுகளில் மட்டும் காணப்படும்.

310. சாம்பல் காட்டுத்தகைவிலான்

Ashy Woodswallow *Artamus fuscus* 19 cm

சிலேட் - சாம்பல் தலை, வெளிர்சிகப்பு கலந்த- சாம்பல் கீழ் பாகங்கள் மற்றும் குறுகலான வெள்ளை கலந்த குதிரை லாட வடிவ பட்டை மேல் வால்இறகுகளின் குறுக்கே காணப்படும். பறந்துகொண்டே பூச்சிகளை வேட்டையாடி நேரத்தை கழிக்கும். இடை இடையே சருக்கிக் கொண்டும் சிறிது நேரம் வேகமாக இறக்கையடித்தும் பறக்கும். திறந்த மரங்கள் நிறைந்த நாட்டுப்புறங்களில் காணலாம்.

311. பெரிய குயில்கீச்சான்

Large Cuckooshrike *Coracina mace* 30 cm.

முழு வளர்ச்சியடைந்த பறவை பெருமளவு வெழுத்த சாம்பல் நிறத்தில் காணப்படும். பெண்ணிற்கு சாம்பல் பட்டைகள் கீழ் பாகங்களில் காணப்படும். திறந்த மரங்கள் நிறைந்த பகுதி மற்றும் விளை நிலங்களிலுள்ள மரங்களில் காணலாம்.

312. கரு இறக்கை குயில்கீச்சான்

Black-winged Cuckooshrike *Lalage melaschistos* 19 cm.

ஆணிற்கு சிலேட்-சாம்பல் நிறத்துக் கறுப்பு இறக்கைகள் மற்றும் அழுத்தமான வெள்ளை முனையுடைய வால் சிறகுகள் இருக்கும். பெண் வெளுத்த சாம்பல் நிறத்தில் மங்கலான கோடுகளுடைய கீழ் பாகங்களுடன் காணப்படும். திறந்த காடுகள் மற்றும் தோப்புகளில் காணலாம். சமீப காலங்களில் தமிழ் நாட்டில் சில இடங்களில் காணப்பட்டுள்ளது.

Byju H

305. Black-hooded Oriole

Balaji P B

306. House Crow

Balaji P B

307. Large-billed Crow

Balaji P B

308. Rufous Treepie

Balaji P B

309. White-bellied Treepie



Balaji P B

310. Ashy Woodswallow

Balaji P B

311. Large Cuckooshrike

Balaji P B

312. Black-winged Cuckooshrike

313. கருந்தலை குயில்கீச்சான்

Black-headed Cuckooshrike *Lalage melanoptera* 18 cm.

ஆணிற்கு சிலேட்- சாம்பல் தலை மற்றும் மார்பு, வெழுத்த சாம்பல் தோள். பெண்ணிற்கு வெள்ளை கலந்த புருவக் கோடுகள், கோடுகளுடைய கீழ் பாகங்கள், வெளுத்த சாம்பல் பின்புறம் மற்றும் வாலின் அடிப்புறம் கறுப்புக் கலந்த வாலிலிருந்து வேறுபட்டு இருக்கும். இறக்கைகளிலும் மூன்றாம் நிலை இறக்கை விளிம்புகளில் அகலமான வெள்ளை நிறத்தில் நெளிநெளியாக காணப்படும். பரந்த சமவெளி காடுகள் மற்றும் மலையடிவாரக் காடுகளில் காணப்படும்.

314. வெண்வயிற்று மின்சிட்டு

White-bellied Minivet *Pericrocotus erythropygius* 15 cm.

வெள்ளை இறக்கைத் திட்டு மற்றும் மஞ்சள் கலந்த சிகப்பு வால். ஆணிற்கு கறுப்பு தலை மற்றும் மேல்பாகங்கள், வெள்ளை கீழ் பாகங்கள், மஞ்சள் கலந்த சிகப்பு மார்பு. பெண்ணிற்கு பழுப்பு மேல் பாகங்கள் மற்றும் வெள்ளைக் கீழ் பாகங்கள். காய்ந்த திறந்த புதர்கள் மற்றும் காடுகளில் காணப்படும்.

315. சின்ன மின்சிட்டு

Small Minivet *Pericrocotus cinnamomeus* 16 cm.

ஆணிற்கு சாம்பல் மேல் பாகங்கள், கறுத்த சாம்பல் தொண்டை மற்றும் மஞ்சள் கலந்த சிகப்பு கீழ் பாகங்கள். பெண்ணிற்கு வெளுத்த தொண்டை மற்றும் மஞ்சள் கலந்த சிகப்பு நிறம் பூசினாற் போன்ற கீழ் பாகங்கள். மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும். திறந்தவெளி மரங்கள் நிறைந்த பகுதி, சமவெளியில் உள்ள பனைமரங்கள், தோப்புகள் நிறைந்த இடங்களில் காணலாம்.

316. சிகப்பு மின்சிட்டு

Orange Minivet *Pericrocotus flammeus* 20-22 cm.

ஆண் பெண் சிறிய மின்சிட்டையை விட மிகவும் பெரியதும், இரண்டாம் இறக்கை இறகுகளில் ஆணிற்கு சிகப்பு மற்றும் பெண்ணிற்கு மஞ்சள் காணப்படும். ஆணிற்கு பளபளக்கும்,

கறுப்பு மேல் பாகங்கள், தொண்டை மற்றும் கீழ்பாகங்கள். பரந்த சமவெளி மற்றும் பசுமைஇலை மரக்காடுகளில் காணலாம்.

317. சாம்பல் மின்சிட்டு

Ashy Minivet *Pericrocotus divaricatus* 20 cm.

சாம்பல் மற்றும் வெள்ளை நிறம் கொண்ட மின்சிட்டு. மஞ்சள் அல்லது சிகப்பு நிறம் இறகுகளில் இருக்காது. ஆணிற்கு கறுப்புக் உச்சந்தலை இருக்கும். மிதமான காடுகளில் காணப்படும். வலசை வருபவை.

318. கறுப்பு வெள்ளை பூச்சிப்பிடிகீச்சான்

Bar-winged Flycatcher-shrike *Hemipus picatus* 15 cm.

ஆணிற்கு கறுப்புத் தொப்பி மற்றும் மேல் பாகங்கள் சாம்பல் கலந்த வெள்ளை கீழ் பாகங்களிலிருந்து வேறுபட்டிருக்கும். வெள்ளை இறக்கைத் திட்டு மற்றும் வெள்ளை வால் பின்புறம் காணப்படும். பெண்ணிற்கு பழுப்பு மேல் பாகங்கள் இருக்கும். மேற்கு மலைத்தொடர்ச்சி காடுகளில் காணப்படும் சிறிய பூச்சி பிடிப்பான். ஒரே இடத்தில் வசிக்கும் இயல்புடையவை.

319. கறுங்கரிச்சான்

Black Drongo *Dicrurus macrocercus* 28 cm.

வளர்ந்ததிற்கு பளபளப்பான நீல-கறுப்பு மேல் பாகங்கள் மற்றும் வெள்ளை புள்ளி, கண் அலகிடைப் பகுதியில் காணப்படும். இறகு உதிர்க்கும் காலத்தில் வால் பிளவு இல்லாமல் இருக்கும். முழுவளர்ச்சியடையாததிற்குக் கறுப்பு கீழ் பாகங்களில் அழுத்தமான வெள்ளை நிறத்தில் நெளிநெளியாக இருக்கும். மக்கள் வசிக்கும் பகுதி மற்றும் விளை நிலங்கள்.

320. சாம்பல் கரிச்சான்

Ashy Drongo *Dicrurus leucophaeus* 29 cm.

வளர்ச்சியடைந்த பறவை கறுத்த இளஞ்சாம்பல் கீழ் பாகங்கள் மற்றும் சிலேட்- சாம்பல் மேல் பாகங்களில் நீல-சாம்பல் நிறம் பளபளப்பாக காணப்படும். விழி வண்ணப்படலம் பிரகாசிக்கும் சிகப்பு. முழுவளர்ச்சியடையாதற்கு பழுப்பு கலந்த சாம்பல் கீழ்

313. Black-headed Cuckooshrike

Balaji P B

314. White-bellied Minivet

Balaji P B

315. Small Minivet

Balaji P B

316. Orange Minivet

Balaji P B

317. Ashy Minivet

Balaji P B

318. Bar-winged Flycatcher-shrike

Balaji P B

319. Black Drongo

Balaji P B

320. Ashy Drongo

Balaji P B

பாகங்களில் தெளிவற்ற வெளுத்த நெளிகள் காணப்படும். பரந்த சமவெளி மற்றும் ஊசி இலைமரக்காடுகளுக்கு வலசை வரும் கரிச்சான்.

321. வெண்வயிற்று கரிச்சான்

White-bellied Drongo ***Dicrurus caerulescens*** 24 cm.

மேல் பாகங்கள் சாம்பல் கலந்த கறுப்பு நிறமாய் இருக்கும். சிறிய அளவில் வால் பிளவு குறைவாக இருக்கும். அதிகமாக ஆங்காங்கே காணப்படும். காட்டினிடையே உள்ள வெட்டவெளி மற்றும் ஈரமான பரந்த சமவெளி காடுகளின் ஓரங்கள். வெள்ளை அடிபாகம் மற்றும் கரிச்சானை போன்ற நடத்தை இதனை அடையாளம் காட்டும்.

322. காட்டுக்கரிச்சான்

Bronzed Drongo ***Dicrurus aeneus*** 25 cm.

கரும்பச்சை மேல்புறம், நீலம் கலந்த கரு உடல், தக தக வென ஒளிரும் உடல், எனக் காட்டில் வாழும் ஒரு கரிச்சான். வாலில் பெரிய பிளவு இருக்காது. மரங்களிலேயே வேட்டையாடி வசிக்கும். நாட்டுக் கரிச்சானைப் போன்ற உருவம் என்றாலும், ஒளிரும். உடல் மற்றும் சற்றே பருமானானது.

323. கொண்டைக்கரிச்சான்

Hair-crested Drongo (Spangled Drongo)
Dicrurus hottentottus 32 cm.

மேல் நோக்கி வளைந்த முனையுடைய அகலமான வால், நீண்ட கீழ் நோக்கி வளைந்த அலகு. முழுவளர்ச்சியடைந்த பறவைக்கு ஆங்காங்கே பளபளப்பாகவும் முடி போன்ற உச்சிக் கொண்டையும் இருக்கும். பூ பூக்கும் மரங்கள் குறிப்பாக பருத்தி உள்ள ஈரமான பரந்த சமவெளிக் காடுகள். தமிழ்நாட்டிற்கு வட இந்திய பகுதியிலிருந்து அரிதாக வலசை வரும் கரிச்சான்.

324. துடுப்புவால்கரிச்சான்

Greater Racket-tailed Drongo ***Dicrurus paradiseus*** 32 cm.

சிறிய புறாவின் அளவிலான பளபளப்பான நீலம் கலந்த கறுப்பு நிற கரிச்சான். அகன்ற அலகு, பிரதான தலைக் கொண்டை

மற்றும் பிளவுடைய வால், வெளி இரண்டு வால் இறகுகளும் நீண்டு ஒரு அடி நீளத்திற்கு வளைந்து துடுப்பு போல இருக்கும். உச்சிக் கொண்டை முழுவளர்ச்சியடையாததிற்குக் குறைவாகக் காணப்படும். திறந்த சமவெளிக் காடுகள். பல பறவைகளின் குரல்களை இதனால் ஒலித்து காட்டமுடியும் 1000 அடி உயரத்திற்கு மேல் உள்ள காடுகளில் காணலாம்.

325. வெண்தொண்டை விசிறிவால் பூச்சிபிடிப்பான்

Spot-breasted Fantail (White-spotted Fantail)
Rhipidura albogularis 19 cm.

வால் விசிறி போல் மேல்நோக்கி வளைந்து காணப்படும். குறுகலான வெள்ளை புருவக் கோடுகள் மற்றும் வெள்ளை தொண்டை, இறக்கை இறகுகளில் புள்ளிகள் இருக்காது. வெள்ளை புள்ளிகளுடைய சாம்பல் மார்பு. பரந்த சமவெளி காடுகள் மற்றும் இரண்டாம் தர காடுகள்.

326. வெண்புருவ விசிறிவால் பூச்சிபிடிப்பான்

White-browed Fantail *Rhipidura aureola* 18 cm.

அகலமான வெள்ளை புருவக் கோடுகள் நெற்றிக்கு முன்னே போய் சந்தித்துக் கொள்ளும், கறுப்புக் கலந்த தொண்டை, வெள்ளை மார்பு மற்றும் அடிவயிறு, வெள்ளை புள்ளிகளுடைய இறக்கை இறகுகள். காடுகளில் உள்ள புதர்களில் காணப்படும்.

327. கரும்பிடரி பூச்சிபிடிப்பான்

Black-naped Monarch *Hypothymis azurea* 18 cm.

சிட்டு குருவியை விட சற்று பெரிதான இந்த பூச்சி பிடிப்பானின் ஆண் பெருமளவு நீல நிறத்தில் கறுப்புப் பிடரி மற்றும் தொண்டை சங்கிலி கொண்டது. பெண்ணிற்கு இந்த அம்சங்கள் இல்லாமல் மங்கலாகவும், சாம்பல்-பழுப்பு தோள் மற்றும் இறக்கைகள் காணப்படும். பரந்த சமவெளிக் காடுகளின் மைய பகுதியில் காணப்படும். தமிழ்நாட்டில் அதிகம் மலைப்பகுதிகளில் மட்டும் காணப்படும்.

Balaji P B

321. White-bellied Drongo

Balaji P B

322. Bronzed Drongo

Balaji P B

323. Hair-crested Drongo

Balaji P B

324. Greater Racket-tailed Drongo

Balaji P B

325. Spot-breasted Fantail

Byju H

326. White-browed Fantail

Renuka Vijayaraghavan

327. Black-naped Monarch

Balaji P B

328. Indian Paradise-Flycatcher

328. அரசவால் பூச்சிபிடிப்பான்

Indian Paradise-Flycatcher ***Terpsiphone paradise*** 20 cm.

ஆணிற்கு கறுப்பு தலை மற்றும் கொண்டை, வெள்ளை அல்லது செங்கல்பழுப்பு மேல் பாகங்கள் மற்றும் நீண்ட ஒடுங்கிய கொடி போன்ற வால். பெண் மற்றும் முழுவளர்சச்சியடையாததிற்கு சாம்பல் கலந்த கறுப்பு தலை சிறிய கொண்டை இருக்கும். கொடி போன்ற வால் இருக்காது. மேற்பாகங்கள் செங்கல் பழுப்பு நிறத்தை கொண்டிருக்கும். தொண்டை பாகத்தில் பளபளப்பான நீலம் ஆண்பறவைக்கு. பெண் பறவை பளபளப்பான கருஞ்சாம்பல் நிறத்தொண்டை உடையது. திறந்த காடுகள், தோப்புகள் மற்றும் தோட்டங்களில் காணலாம்.

329. மஞ்சள்சிட்டு

Common Iora ***Aegithina tiphia*** 14 cm.

மஞ்சள் மேல் பாகங்கள் மற்றும் பிரதான வெள்ளை இறக்கைப்பட்டைகள். ஆணிற்கு வால் கறுப்பு (பெண்ணிற்கு பச்சை). இனப்பெருக்கக் காலத்தில் உச்சந்தலை மற்றும் பிடரி கறுப்பு (வேறுபட்ட கறுப்பு சிறகுகள் தோளை மூடிய பகுதியில்). இனப்பெருக்கத்திற்குத் தயாரான ஆண் மார்ஷல் மஞ்சள் சிட்டுக்கு மேல் பாகங்கள் முழுவதும் கறுப்பு நிறம். புதர்காடுகளிலிருந்து அடர்ந்த மலைப்பகுதி வரை காணலாம்.

330. மலபார் கீச்சான்

Malabar Woodshrike ***Tephrodornis sylvicola*** 21 cm.

கருஞ்சாம்பல் நிறத்தில், கண்ணின் மேல் கரும்பட்டையுடன், வெண்ணிற அடிப்பாகத்துடன் காணப்படும் காட்டுக் கீச்சான். அளவில் கீச்சானை விடப்பெரியது. அலகு கருநிறத்தில் இருக்கும். மலைக்காட்டுப் பகுதிகளில் காணப்படும்.

331. காட்டுக்கீச்சான்

Common Woodshrike ***Tephrodornis pondicerianus*** 18 cm.

பெரிய கீச்சானை விட சிறியது. அகலமான வெள்ளைப் புருவக்கோடு, வால்பக்கங்களில் வெள்ளை காணப்படும்.

திறந்த பரந்த சமவெளி காடுகள் மற்றும் வறண்ட புதர்கள் உள்ள 1000 அடி உயரம் வரை மலைக்காடுகளில் காணலாம்.

332. நீலத்தலை சிட்டான்

Blue-capped Rock-Thrush *Monticola cinclorhyncha* 17 cm.

அவுரி செடியின் நீல வண்ணம் ஆணிற்கு. இந்த பிரகாசமான நிறம் இனப்பெருக்கம் இல்லாத காலத்திலும், இறகு உதிர்ந்த முதல் பருவத்திலும், வெளுத்து நெளிநெளியாக இருக்கும். பெண்ணிற்கு சீரான ஆலிவ்-பழுப்பு மேல் பாகங்கள் இருக்கும். பெரும்பாலும் 4000 அடி உயரம் வரை உள்ள மலைக்காடுகளில் காணலாம். வலசை வரும் குருவி.

333. நீலமலைச் சிட்டான்

Blue Rock-Thrush *Monticola solitaries* 20 cm.

அவுரி செடியின் மங்கிய நீல வண்ணம் ஆணிற்கு. இந்த பிரகாசமான நிறம் இனப்பெருக்கம் இல்லாத காலத்திலும், இறகு உதிர்ந்த முதல் பருவத்திலும், வெளுத்து நெளிநெளியாக இருக்கும். பெண்ணிற்கு சிலேட்-பழுப்பு மேல் பாகங்களில் நீலம் கலந்து பூசப்பட்டது போலவும், கீழ் பாகங்கள் மங்கலான பழுப்பு மஞ்சள் நிறத்தில் செதில்கள் போலவும் இருக்கும். குளிர்காலங்களில் ஓடைக்கருகிலும், ஆறுகள் மற்றும் பழைய கட்டிடங்களிலும் வசிக்கும்.

334. சீகாரப் பூங்குருவி / நீலச் சிட்டான்

Malabar Whistling-Thrush *Myophonus horsfieldii* 25 cm.

காக்கையைப்போல் கறுப்புக் கலந்த, நீல நெற்றி மற்றும் தோள்பட்டைகளுடன் இருக்கும். இளையது மிகவும் கரிய-பழுப்பு நிறத்தில், நீல நெற்றி இல்லாமலும் இருக்கும். காட்டில் பாறைகள் உள்ள மலை ஓடைகள் மற்றும் மரங்கள் நிறைந்த பகுதிகளில் மேற்குத் தொடர்ச்சி மலையில் மட்டும் காணலாம்.

335. பொரிப்பூங்குருவி

Pied Thrush *Geokichla wardii* 22 cm.

ஆண் கறுப்பு வெள்ளை நிறத்தில், வெள்ளை புருவக்கோடு மற்றும் இறக்கைப் பட்டைகள், மஞ்சள் அலகுடன் காணப்படும். பெண்ணிற்கு மங்கலான பழுப்பு மஞ்சள் நிற புருவக்கோடு, இறக்கைப் பட்டைகள் மற்றும் மூன்றாம் நிலை இறக்கையின் முனைகள், செதில்கள் உடைய கீழ் பாகங்கள். திறந்த பரந்த சமவெளி காடுகள் மற்றும் மலைக்காடுகளில் காணப்படும். வலசை வருபவை.

336. செந்தலை பூங்குருவி

Orange-headed Thrush *Geokichla citrina cyanotus* 21 cm.

இதன் தலை மற்றும் அடிப்பாகம் முழுவதும் செந்நிறமாய் இருக்கும். மேல்புறம் நீலநிறமாய் இருக்கும். முகத்தில் கறுப்பு வெள்ளை அமைப்பு மற்றும் கோடு காணப்படாது. வலசை வரும் பறவை. குளிர் காலங்களில் தென்னிந்தியாவிற்கு வலசை வரும். டிக்கல்பாடி உடன் கலந்து காடுகளில் தென்படும். முக அமைப்பை வைத்தே வேறுபாடு அறிய முடியும்.

337. நீலகிரிசெந்தலை பூங்குருவி / மாம்பழச் சிட்டு

Orange-headed Thrush *Geokichla citrina citrine* 21 cm.

மஞ்சள் கலந்த சிகப்பு உச்சந்தலை மற்றும் கீழ் பாகங்கள். கறுப்பு மற்றும் வெள்ளை முக அமைப்பு. ஆணிற்கு நீல-சாம்பல் தோளை மூடிய பகுதி, பெண்ணிற்கு ஆலிவ்-பழுப்பு பூசினாற் போன்ற தோளை மூடிய பகுதி காணப்படும். மற்றைய இனத்திற்கு தலை முழுவதும் மஞ்சள் கலந்த சிகப்பு நிறம். காடுகளிலுள்ள ஈரமான நிழற்பாங்கான இடங்கள், அடிக்கடி ஈரமான கணவாய்களிலும் காணப்படும்.

338. பொன்நிற சிட்டான்

Nilgiri Thrush/Scaly *Zoothera neilgherriensis* 26-27 cm.

அழுத்தமான செதில்கள் மேல் மற்றும் கீழ் பாகங்களில் இருக்கும். நீலகிரி இனம் மேற்குத் தொடர்ச்சி மலையில் வசிக்கும். இது இடம் விட்டு இடம் செல்லும். சில குறிப்பிட்ட

Balaji P B

329. Common Iora

Balaji P B

330. Malabar Woodshrike

Balaji P B

331. Common Woodshrike

Balaji P B

332. Blue-capped Rock-Thrush

Balaji P B

333. Blue Rock-Thrush

Balaji P B

334. Malabar Whistling-Thrush

Renuka Vijayaraghavan

335. Pied Thrush

Balachandran S

336. Orange-headed Thrush (M)

இனத்திலிருந்து கறுத்த, பழுப்பான மற்றும் சீரான மேல் பாகங்கள், குறியீடுகள் இல்லாத முகம் மற்றும் நீளமான அலகு இவற்றுடன் வேறுப்பட்டிருக்கும். பிரதானமான கறுப்புத் திட்டுகள் இருக்காது. அடர்த்தியான புதர்கள், அடர்த்தியான காடு மற்றும் ஓடைகளின் அருகில் காணப்படும்.

339. டிக்கல் பாடி / சிட்டா

Tickell's Thrush *Turdus unicolor* 21 cm.

சாம்பல் நில மேல்பாகங்கள், வெள்ளை வயிறு மற்றும் வாலடி, மஞ்சள் அலகு மற்றும் கண்வளையம் கொண்டிருக்கும். இந்த பாடியும் இமாலயத்திலிருந்து வலசை வருவது. இந்திய கறுப்புப் பாடியைப் போன்றது.

340. மலைச்சிட்டான்

Indian Blackbird *Turdus simillimus* 25-28 cm.

தென்னிந்தியாவில் காணப்படும் மலைச் சிட்டானுக்கும், இமய மலையில் உள்ள இனத்திற்கும் நிறைய வேற்றுமைகள் இருப்பதாலும், வேறுபட்ட இனங்கள் கலப்பதாலும் இதை வகைப்படுத்துவது அவசியமாகிறது. ஆணிற்கு (சத்புரா மற்றும் வடமேற்குத் தொடர்ச்சி மலையில்) கறுப்புக் கலந்த உச்சந்தலை மற்றும் காது மூடு தூவிகள், மஞ்சள் கலந்த பழுப்பு தொண்டை மற்றும் கழுத்திலிருந்து வேறுபட்டு கறுத்த தொப்பி மற்றும் வெளிறிய கறுப்புப் பகுதி இருக்கும். இறக்கைகள் சிலேட்-சாம்பல், கீழ் பாகங்கள் வெளுத்தப் பழுப்பு நிறத்தில், சாம்பல் விலாப் பக்கங்கள் மற்றும் வாலின் பின்புறத்திலும் சாம்பல். பெண்ணிற்கு பழுப்பு உச்சந்தலை மற்றும் காதுமூடு தூவிகள், தொப்பி மூடியது போன்ற தோற்றம் சற்று மங்கலாக இருக்கும். 3000 அடிக்கு மேல் காடுகளில் காணப்படும் பறவை.

341. பழுப்பு பூச்சிபிடிப்பான்

Asian Brown Flycatcher *Muscicapa dauurica* 13 cm.

இமயமலை, ஜப்பான் போன்ற பகுதிகளிலிருந்து வலசை வரும் குருவி. பெரிய அலகில் பிரதானமான வெளுத்த அடிபாகம் கீழ் தாடையில் காணப்படும். மேற்பக்கம் பழுப்பு நிறத்துடனும், இறகுகளில் இரண்டு சாம்பல் பழுப்பு நிற பட்டைகள்

கொண்டிருக்கும். வெளுத்த கீழ் பாகங்கள், லேசான பழுப்புக் கலந்த நிறம் பூசினாற் போன்ற மார்பு மற்றும் விலாப் பக்கங்கள். கால் கறுப்பு நிறத்தில் காணப்படும். திறந்த பரந்த சமவெளி காடுகள் மற்றும் மலைகாடுகளில் காணலாம்.

342. பழுப்பு மார்பு பூச்சிபிடிப்பான்

Brown-breasted Flycatcher *Muscicapa muttui* 14 cm.

சாம்பல் பச்சை பழுப்பு நிற தோள்களையும், தலையும், பிடரியும் கறுப்பாகவும், கருஞ்சிகப்பு கால்களையும் பாதங்களையும் கொண்ட பறவை. சிட்டுக்குருவியை விட சிறியதாகக் காணப்படும் இப்பறவை வடகிழக்கு இந்திய, தெற்கு சீனா பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வகைக்காடுகளுக்கும், சமவெளியிலுள்ள புதர்களுக்கும் வலசை வரும் இனம். இதனுடைய முதன்மை மற்றும் மூன்றாம் நிலை இறக்கை இறகுகளின் விளிம்புகளிலும் மங்கலான பழுப்பு மஞ்சள் நிறம் காணப்படும். பெரிய கண்களையும், கண்ணிடை அலகுபகுதியில் வெள்ளை நிறமும் கொண்டிருக்கும்.

343. கருஞ்சிவப்புவால் பூச்சிபிடிப்பான்

Rusty-tailed Flycatcher *Ficedula ruficauda* 13 cm.

கருஞ்சிகப்பு மேல்வால் இறக்கை இறகுகள் மற்றும் வால், இருந்தாலும் குறியீடுகளற்ற முகம் மற்றும் வெளுத்த மஞ்சள் கலந்த சிகப்பு கீழ்தாடை கொண்டிருக்கும். மத்திய ஆசியா பகுதியிலிருந்து வலசை வரும். இந்த இனம் பெரும்பாலும் தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் காணப்படும்.

344. தைகா பூச்சிபிடிப்பான்

Taiga Flycatcher (Red-throated Flycatcher)
Ficedula albicilla 13 cm.

முன்பு சிவப்பு மார்பு பூச்சிபிடிப்பானின் உள்ளினமாய் கருதப்பட்டது. இப்போது தனி இனமாகி விட்டது. சிவப்பு மார்பு ஈப்பிடிப்பானை விடக் குறைந்த சிவப்பு காணப்படும். அதாவது ஆணுக்கு தொண்டை வரை மட்டும் தான் சிவப்பு இருக்கும். மார்பு அடிப்பாகமும் வெள்ளையாக இருக்கும். பெண்ணுக்கு

337. Orange-headed Thrush (R)

Balaji P B

338. Nilgiri Thrush

Balaji P B

339. Tickell's Thrush

Sundaravel

340. Indian Blackbird

Balaji P B

341. Asian Brown Flycatcher

Balaji P B

342. Brown-breasted Flycatcher

Balaji P B

343. Rusty-tailed Flycatcher

Balaji P B

344. Taiga Flycatcher

Balaji P B

பழுப்பு வால் காணப்படும். வெகு வெகு அரிதாகத் தென்படும் வலசைப் பறவை. ஆனால் (E bird) மின்னணு பறவை என்ற அமைப்பின் தரவில் தமிழ்நாட்டில் கண்டதாகத் தெரிகிறது.

345. காஷ்மீர் பூச்சிபிடிப்பான்

Kashmir Flycatcher *Ficedula subrubra* 13 cm.

சிட்டு குருவியை விட சிறியதான இந்த இனம் காஷ்மீர் பகுதியில் இனவிருத்தி செய்யும். தமிழ்நாட்டிற்கு வலசை வரும் பறவை. ஆணிற்கு மிகவும் பரந்த மற்றும் நன்றான சிகப்பு நிறம் அதிகமாக கீழ் பாகங்களிலும், சிதறிப் பரவிய கறுப்பு எல்லை கோடு தொண்டை மற்றும் மார்பிலும் காணப்படும். தொண்டையில் உள்ள நிறம் மிகவும் கருஞ்சிகப்பாகவும், மற்றும் இந்த நிறம் மிகவும் பிரதானமாக தொண்டையைவிட மார்பிலும் மற்றும் பெரும்பாலும் அடிவயிறு அல்லது விலாப் பக்கங்களில் தொடர்ச்சியாக பூசினாற் போன்று காணப்படும். பழநி மற்றும் நீலகிரியில் காணலாம். உலக அளவில் அழிவை சந்திக்கும் ஆபத்து நிலையில் உள்ளது. உயர்ந்த மலைபகுதியில் மட்டும் காணப்படும்.

346. செந்தொண்டை பூச்சிபிடிப்பான்

Red-breasted Flycatcher *Ficedula parva* 11.5 - 12.5 cm.

சிட்டுகுருவியை விட சிறிதான இந்த பூச்சி பிடிப்பான் கிழக்கு ஐரோப்பா பகுதியிலிருந்து வலசை வரும் இனம். வாலின் பக்கங்கள் வெள்ளை, ஆணிற்கு சிகப்புக் கலந்த - மஞ்சள் தொண்டையும், மார்புப் பட்டையும் இருக்கும். பெண் பறவைக்கு மேல்பாகம் பழுப்பு நிறத்திலும், மார்புபகுதி இளமஞ்சள் நிறத்திலும், மீதி அடிபாகங்கள் மங்கலான வெண்மை நிறத்திலும் காணப்படும். வால்பகுதி நடுபக்கம் கறுப்பாகவும், வெளிபக்கங்கள் வெண்மை நிறத்துடனும் இருக்கும். திறந்த காடுகள், புதர்கள் மற்றும் மரங்கள் உள்ள பகுதிகளில் காணப்படும்.

347. கருநீல பூச்சிபிடிப்பான்

Ultramarine Flycatcher *Ficedula superciliaris* 12 cm.

வெள்ளைப்புருவ நீல பூச்சிபிடிப்பான் என்ற ஒரு பெயரும் உண்டு. இமாலயப் பிரதேசத்தில் இருந்து வலசை வரும் பறவை. குருவியின் அளவுள்ள இப்பறவைக்கு தொண்டையிலிருந்து வயிறு வரை நீண்ட வெள்ளைப் பட்டை காணப்படும். பெரும்பாலும் மலைப் பகுதிகளில் காணலாம். தமிழ்நாட்டில் அரிதாகத்தான் காணப்படும்.

348. கறுப்பு–ஆரஞ்சு பூச்சிபிடிப்பான்

Black-and-orange Flycatcher *Ficedula nigrorufa* 11 cm.

ஆண் கருஞ்சிகப்பு - மஞ்சள் கலந்த சிகப்பு மற்றும் கறுப்பு நிறம் கொண்ட மிகச்சிறிய பூச்சிபிடிப்பான். பெண் அதே நிறங்களில் மங்கலாகத் தோன்றும். பசுமை மாறாத சோலைகள் மற்றும் அடர்த்தி நிறைந்த ஈர காடுகள், 5000 அடி உயரத்திற்குமேல் உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் மட்டுமே காணப்படும்.

349. நீலமேனி பூச்சிபிடிப்பான்

Verditer Flycatcher *Eumyias thalassinus* 15 cm.

இமயமலை பகுதியிலிருந்து வலசை வரும் பறவை. கோடை காலங்களில் பொதுவாகவும் மற்றும் பரவலாகவும், 4000 அடி உயரத்திற்கு மேலுள்ள வன பகுதியில் காணப்படும். அவ்வப்போது குளிர் காலங்களில் மலை அடிவாரங்களில் தென்பட்டதாக அறியப்படுகிறது. ஆண் பச்சை கலந்த-நீலம், கறுப்புக் கண் அலகிடைப்பகுதியையும், பெண் மங்கலாகவும் மற்றும் சாம்பல் நிறத்தில் அந்தி கருக்கல் நிறம், கண் அலகிடை பகுதியுடன் காணப்படும். திறந்த காடு மற்றும் மரங்கள் நிறைந்த பகுதி, குறிப்பாக பரந்த சமவெளிகளில் காணலாம்.

350. வெண்வயிற்று நீல பூச்சிபிடிப்பான்

White-bellied Blue Flycatcher *Cyornis pallidipes* 15 cm.

பெரிய அலகுடன், வால் தொடங்கும் இடத்தில் வெள்ளை நிறம் இருக்காது. ஆண் இண்டிகோ-நீலம், வெள்ளை அடிவயிறு மற்றும் குறியீடுகள் இல்லாத கீழ்வால் இறக்கை இறகுகள்.

பெண்ணிற்கு மஞ்சள் கலந்த சிகப்பு தொண்டை, மார்பு மற்றும் சாம்பல் கலந்த தலை. மேலும் பரந்த பாலேடு நிற கண் அலகிடைப்பகுதி, பிரகாசமான செம்பழுப்பு வால். பசுமைமாறாக் காடுகளுக்கிடையே உள்ள புதர்களில் காணலாம்.

351. நீலத்தொண்டை பூச்சிபிடிப்பான்

Blue-throated Flycatcher ***Cyornis rubeculoides*** 14 cm.

இமயமலை பகுதிகளிலிருந்து வலசை வரும் பறவை. ஆணிற்கு நீல தொண்டை, நன்றாக வரையறுக்கப்பட்ட வெள்ளை அடிவயிறு மற்றும் விலாப் பக்கங்கள். பெண்ணிற்கு தெளிவாக வரையறுக்கப்படாத பாலாடை-மஞ்சள் கலந்த சிகப்புத் தொண்டை, மஞ்சள் கலந்த சிகப்பு மார்பு. இவை வேறுபடுத்த சிறந்த சிறப்பு அம்சங்கள். திறந்த காடு மற்றும் மரங்கள் நிறைந்த சமவெளிபகுதி, 6000 அடி வரை உள்ள மலைக்காடுகளில் காணலாம்.

352. டிக்கெல் நீல பூச்சிபிடிப்பான்

Tickell's Blue Flycatcher ***Cyornis tickelliae*** 14 cm.

ஒரே இடத்தில் வசிக்க கூடியவை, ஆணிற்கு நீல நிறமேல் பாகங்கள் மஞ்சள் கலந்த சிகப்புத் தொண்டை மற்றும் மார்பு. தெளிவான குறுக்குக் கோட்டுடன் வெள்ளை விலாப் பக்கங்கள் அடிவயிற்றிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கும். பெண்ணிற்கு சாம்பல் கலந்த-நீல மேல் பாகங்கள். வறண்ட சமவெளி காடுகள், மலைக்காடுகள் (3000 அடி உயரம்) வரை காணப்படும்.

353. நீல வெள்ளை பூச்சிபிடிப்பான்

Blue-and-white Flycatcher ***Cyanoptila cyanomelana*** 11 cm.

ஜப்பான் ஈப்பிடிப்பான் என்ற பெயரும் உள்ள இப்பறவை, நீலகிரி ஈப்பிடிப்பானை ஒத்த உருவம் கொண்டது. மேற்புறம் நல்ல நீலமும், அடிப்புறம் வெண்மையும் கொண்டு தொண்டை சற்றே பழுப்பு நிறமாகக் காணப்படும். அரிதாக வலசை வரும் பறவை. கடந்த சில வருடங்களாக நீலகிரியில் கண்டுள்ளனர்.

Renuka Vijayaraghavan

345. Kashmir Flycatcher

Ravichandran S P

346. Red-breasted Flycatcher

Biju P B

347. Ultramarine Flycatcher

Balaji P B

348. Black-and-orange Flycatcher

Balaji P B

349. Verditer Flycatcher

Balaji P B

350. White-bellied Blue Flycatcher

Balaji P B

351. Blue-throated Flycatcher

Balaji P B

352. Tickell's Blue Flycatcher

354. நீலகிரி பூச்சிபிடிப்பான்

Nilgiri Flycatcher *Eumyias albicaudatus* 15 cm.

வால் தொடங்கும் இடத்தில் வெள்ளை மற்றும் சிதறிப் பரவிய வெள்ளை கலந்த நெளிநெளியான அமைப்பு, நீல-சாம்பல் நிறம் கீழ்வால் இறக்கை இறகுகளில் இருக்கும். ஆணிற்கு நிறம் நீலம், அடிவயிறு நீல-சாம்பல், கறுப்புக் கண் அலகிடைப்பகுதி மற்றும் பிரகாசமான நீல நெற்றி, புருவக்கோடுகள். பெண் நீல-சாம்பல் நிறம் வெளுப்பான மேல்பாகங்கள் இருக்கும். பசுமைமாறா மேற்குத் தொடர்ச்சிமலையில் உள்ளகாடுகளில் 5000 அடி உயரத்திற்குமேல் காணப்படும்.

355. சாம்பல் தலை பூச்சிபிடிப்பான்

Grey-headed Canary Flycatcher
Culicicapa zelonensis 13 cm.

சாம்பல் நிற தலை மற்றும் மார்பு, மற்ற கீழ் பாகங்கள் மஞ்சள், மற்றும் பச்சை கலந்த மேல் பாகங்கள். சிட்டுக்குருவி அளவிலானது இந்த பூச்சிபிடிப்பான். காடுகள் மற்றும் மரங்கள் நிறைந்த பகுதி, உயர்ந்த மலைக்காடுகள் உள்ள மேற்குத்தொடர்ச்சி மலையில் மட்டும் காணப்படும்.

356. நீலகிரி சோலைக்கிளி

Nilgiri Sholakili *Sholicola major* 13 cm.

பழைய குட்டைவால் நீலக்கிளி தற்போது நீலகிரி சோலைக்கிளி என்றானது. நமது நீலகிரி மலையில் மட்டும் அதிகமாகக் காணப்படும் ஒரு சிறு பறவை. கறுப்பு வெள்ளை புதர்ச்சிட்டைப் போன்ற அளவில் கறுப்பு முகமூடியும், அலகில் மேல் வெள்ளைக் கோடுடனும் காணப்படும். வயிறு சற்று பழுப்பு கலந்த சிகப்பு நிறத்துடன் காணப்படும். ஆனால் சற்றே, நீண்ட கால்கள் கொண்டது. மேற்குத் தொடர்ச்சி மலையில் நீலகிரி மலையில் மட்டும் காணப்படுகிறது.

357. வெண்வயிற்று சோலைக்கிளி

White-bellied Sholakili ***Sholicola albiventris*** 15 cm.

தொண்டை சாம்பல் நீலம். அடிவயிறு வெண்மை. கண் மேற்கோடு தெளிவில்லாமல் இருக்கும். இதுதான் நீலகிரி சோலைக் கிளிக்கும், இதற்கும் உள்ள வேறுபாடு. மேற்குத் தொடர்ச்சி மலையின் வடக்கே மட்டும் காணப்படுகிறது.

358. நீல சோலைபாடி

Indian Blue Robin ***Larvivora brunnea*** 15 cm.

ஆணிற்கு நீல மேல் பாகங்கள் மற்றும் மஞ்சள் கலந்த சிகப்பு கீழ் பாகங்கள், வெள்ளை புருவக்கோடுகள் மற்றும் கறுப்பு காது மூடி தூவிகள். பெண்ணிற்கு ஆலிவ்-பழுப்பு மேல் பாகங்கள், மங்கலான பழுப்பு மஞ்சள் நிறம் கலந்த கீழ்பாகங்களில் வெள்ளை தொண்டை மற்றும் அடிவயிறு. காடுகள், காடுகளை ஒட்டிய புதர்கள் மற்றும் பயிர்த்தொழில் உள்ள பண்ணைகளில் காணலாம்.

359. நீலத்தொண்டை சிட்டு

Bluethroat ***Luscinia svecica*** 15 cm.

வலசை வரும் சிறிய புதர்ச்சிட்டு போன்ற பறவை. பழுப்பு நிற மேற்புறம், கறுப்பு நிற வால் மற்றும் விலாக்களில் சிவப்பு, கண்மேல் கோடு நல்ல வெண்மையாய் இருக்கும். ஆணிற்கு தொண்டையில் உள்ள நீல நிற ஆரம் போன்ற அமைப்பால் இந்தப் பெயர். பெண்ணிற்கு இது மங்கலாக இருக்கும். நம் ஊருக்கு வரும்போது இதனால் எளிதில் கண்டு கொள்ளலாம். மிக அதிக அளவில் காணப்படாது. பரவலாக காணப்படும்.

360. சைபீரிய செந்தொண்டை

Siberian Rubythroat ***Calliope calliope*** 15 cm.

முன்பு பாடிகளுடன் இணைக்கப்பட்டிருந்தது. தற்போது பூச்சிப் பிடிப்பான்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது. பழுப்பு நிறத்தில் கறுப்பு வாலுடன் காணப்படும். வாலின் இருபுறமும் செந்நிற திட்டுகள் காணும். கண்புருவக்கோடு தெளிவாகவும், கனமாகவும் இருக்கும். ஆணுக்கு செந்நிறத் தொண்டையும்,

CC Ik T

353. Blue-and-white Flycatcher

Balaji P B

354. Nilgiri Flycatcher

Balaji P B

355. Grey-headed Canary Flycatcher

Balaji P B

356. Nilgiri Sholakili



Renuka Vijayaraghavan

357. White-bellied Sholakili

Balaji P B

358. Indian Blue Robin

Balaji P B

359. Bluethroat

CC Andy Li

360. Siberian Rubythroat

அதை ஒட்டி இருபுறமும் வெள்ளைத் திட்டுகள் கழுத்திலும் காணப்படும். சிறகடியில் இருபுறமும் வெள்ளைத் திட்டுகள் காணும். சைப்பியாவிலிருந்து வலசை வரும் பறவை. ராபினைப் போல அளவில் இருக்கும். மின்னணுப் பறவை (E bird) அமைப்பில் தமிழகத்தில் கண்டதாகத் தரவுகள் உள்ளன.

361. கருஞ்சிட்டு

Indian Robin *Copsychus fulicatus* 19 cm.

எல்லாப் பருவத்திலும் சிகப்புக் கலந்த வாலடி பாகம் மற்றும் கறுப்பு வால் இருக்கும். ஆணிற்கு வெள்ளை தோள்கள் மற்றும் கறுப்புக் கீழ் பாகங்கள். பெண்ணிற்கு சாம்பல் கலந்த செம்பழுப்பு மேல் மற்றும் கீழ் பாகங்கள் இருக்கும். காய்ந்த பாறைகளடங்கிய புதர் பகுதிகள், மலையடிவாரம் மற்றும்விளைநிலங்களின் ஓரங்களில் காணப்படும். ஒரே இடத்தில் வசிக்கக் கூடியவை.

362. கறுப்பு வெள்ளை சோலைப்பாடி

Oriental Magpie-Robin *Copsychus saularis* 23 cm.

பெரும்பாலும் கறுப்பு வெள்ளையாக இருக்கும் மைனா அளவிலான பறவை. சிலேட்-சாம்பல் மற்றும் வெள்ளை இறக்கை, வாலின் பக்கங்களில் வெள்ளை நிறம் இருக்கும். தோட்டங்கள், தோப்புகள், திறந்த சமவெளி காடுகள் மற்றும் கிராமப்புறத்தில் காணலாம்.

363. வெண்பிட்ட சோலைப்பாடி

White-rumped Shama *Copsychus malabaricus* 22 cm.

ஆண், பெண் இரண்டிற்கும் நீளமாக வளர்ந்த கருநீல வால் மற்றும் வெள்ளை வால் பின்புறம். ஆண் பளபளக்கும் நீல-கறுப்பு மேல் பாகங்கள் மற்றும் கருஞ்சிகப்பு-மஞ்சள் கலந்த சிகப்பு கீழ் பாகங்களுடன் காணப்படும். பெண் மங்கலாகவும், பழுப்புக் கலந்த சாம்பல் மேல் பாகங்களுடன் காணப்படும். அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும், மூங்கில் புதர்களிலும், ஓடைகள் அருகேயும் காணலாம்.

364. செவ்வாலி

Black Redstart *Phoenicurus ochruros* 15 cm.

ஆணிற்கு கறுப்புக் கலந்த மேல் பாகங்கள் மற்றும் மார்பு,கருஞ்சிகப்பு கீழ் பாகங்கள். பெண் அந்திகருக்கல் பழுப்புடன் மஞ்சள்கலந்த சிகப்பு - இலேசான பழுப்பு மஞ்சள் நிறம்,பூசினாற் போன்ற நிறவிலாப் பக்கங்கள் மற்றும் வாலடி. விளை நிலங்கள், காய்ந்த கற்களுடன் உள்ள மெல்லிய புதர் பகுதிகள். வலசை வரும் பறவை. வட தமிழ் நாட்டில் அரிதாகவே காணப்படும்.

365. புதர்சிட்டு

Siberian Stonechat (Common Stonechat)
Saxicola maurus 17 cm.

ஆணிற்குக் கறுப்புத் தலை, கழுத்தில் வெள்ளை திட்டு, மஞ்சள் கலந்த வால் பின்புறம் (புதிய இறகமைப்பில் இந்த அம்சங்கள் மறைந்திருக்கும்). பெண்ணிற்கு கோடுகளுடைய மேல் பாகங்கள் மற்றும் மஞ்சள் கலந்த சிகப்பு நிற மார்பு மற்றும் வாலின் பின்புறம் இருக்கும். புதர்கள், நாணல்கரைகள் மற்றும் விளை நிலங்களில் காணலாம். தமிழ் நாட்டிற்கு வலசை வரும் அரிய பறவை.

366. கறுப்பு வெள்ளை புதர்சிட்டு

Pied Bushchat *Saxicola caprata* 13.5 cm.

ஆணிற்கு கறுப்பு, வெள்ளை வால். பின்புறம் மற்றும் இறக்கைத் திட்டு, கருஞ்சிகப்பு நிறத்தில் நெளிநெளியாக உடம்பில் இனப்பெருக்கம் இல்லாத போது காணப்படும். பெண் கரும்பழுப்பு மேல் பாகங்கள் மற்றும் கருஞ்சிகப்பு-பழுப்பு கீழ் பாகங்களுடன், கருஞ்சிகப்பு-மஞ்சள் கலந்த வால் பின்புறம் காணப்படும். முக்கியமாக விளை நிலங்கள் மற்றும் ஆங்காங்கே புதர்கள் அல்லது உயரமான புல்கள் உள்ள திறந்த நாட்டுப்புறம். வெகு சாதாரணமாகக் காணப்படுவது.

367. பாலைநில புதர்சிட்டு

Desert Wheatear *Oenanthe deserti* 14-15 cm.

பழுப்பு மஞ்சள்-பழுப்பு மேல் பாகங்கள். பெருமளவு கறுப்பு வால் வெள்ளை வால் பின்புறத்திலிருந்து வேறுபட்டிருக்கும். ஆணிற்கு கறுப்புத் தொண்டை (புதிய இறகமைப்பில் இந்த அம்சம் வெளுத்த நெளிகளால் சிறிது மறைந்திருக்கும்). பெண்ணிற்கு கறுப்புக் கலந்த மையங்கள் இறக்கை இறகுகளிலும் மற்றும் மூன்றாம் இறக்கைகளிலும் புதிய இறகமைப்பின் போதும் இருக்கும். மற்றும் பெருமளவு கறுப்பு இறக்கைகள் உதிரும் போதுக் காணப்படும். வறண்ட பகுதிகள், பாலைவனம் மற்றும் திறந்த நிலங்கள். தமிழ் நாட்டிற்கு அரிதாக வலசை வரும் பறவை.

368. இஸபெலின் பாலைச்சிட்டு

Isabelline Wheatear *Oenanthe isabellina* 16.5 cm.

மண்நிற மேல்புறமும். வெள்ளைப் பிட்டமும், வால்இறகுகளும் கொண்ட ஒரு தரிசு நிலப்பறவை. பார்ப்பதற்கு வானம் பாடியைப் போன்ற தோற்றமும் அளவும் இருக்கும். ஆயினும் சற்றே நீண்ட கால்கள், நீண்ட மெல்லிய உடல்வாகு மற்றும் சிறகின் நுனி கறுத்திருப்பது, போன்றவை அடையாளம் காட்டும். தமிழ் நாட்டிற்கு வலசை வரும் அரிய பறவை.

369. சாம்பல்தலை நாகணவாய் / மைனா

Chestnut-tailed Starling *Sturnia malabarica* 20 cm.

வளர்ந்ததிற்கு சாம்பல் மேல் பாகங்கள், கருஞ்சிகப்பு கீழ் பாகங்கள், செம்பழுப்பு வால். இளையதிற்கு சீரான கருஞ்சிகப்புப் பக்கங்கள் மற்றும் முனையுடைய வெளிப்புற வால் சிறகுகள். சில ஆணிற்கு வெள்ளை கலந்த தலை மற்றும் மார்பு (பெண்ணிற்கு வெள்ளை நிறம் நெற்றி மற்றும் முன் தலையில் மட்டும் இருக்கும்). மைனாவை விட சிறியது இந்த பறவை. திறந்த மரங்கள் நிறைந்த பகுதி மற்றும் தோப்புகள், மலைகாடுகளில் காணலாம்.

Balaji P B

361. Indian Robin

Balaji P B

362. Oriental Magpie-Robin

Balaji P B

363. White-rumped Shama

Yuvaraj Patil

364. Black Redstart

Balaji P B

365. Siberian Stonechat

Balaji P B

366. Pied Bushchat


Balaji P B

367. Desert Wheatear

Balaji P B

368. Isabelline Wheatear

370. மலபார் மைனா

Malabar Starling (Blyth's Starling)

Sturnia blythii 20 cm.

சமீப காலம் வரை சிவப்புபிட்ட மைனாவின் உள்ளினமாகக் கருதப்பட்ட இது தற்போது தனி இனமாக்கப்பட்டது. நல்ல வெண்ணிறத் தலையும், துருநிற அடிப்பாகமும், பழுப்பு மேல் பாகங்களும் இதை எளிதில் அடையாளம் காட்டும். காடுகளிலும், காட்டை ஒட்டிய பகுதிகளிலும் அதிகமாகக் காணப்படும்.

371. நாகணவாய் / மைனா

Common Myna *Acridotheres tristis* 25 cm.

பழுப்புக் கலந்த மைனா மஞ்சள் கண்குழி தோலுடன், வெள்ளை இறக்கைத் திட்டு மற்றும் வெள்ளை வால் நுனி. இளையது மங்கலாக இருக்கும். மக்கள் வசிக்கும் பகுதி மற்றும் விளை நிலங்கள், மலை அடிவாரங்களிலும் காணப்படும்.

372. காட்டு நாகணவாய் / காட்டு மைனா

Jungle Myna *Acridotheres fuscus* 23 cm.

மேல்நோக்கிய மயிர்களுடைய நெற்றி, மைனாவைப் போன்ற உருவமைப்பை கொண்டது. வெள்ளை இறக்கைத் திட்டு மற்றும் வால் நுனி, கண்குழி தோல் இருக்காது. முழுவளர்ச்சியடையாத பறவை பழுப்பாகவும், குறைவான நெற்றி மயிர்களுடன் காணப்படும். அருகேயுள்ள விளை நிலங்கள் தமிழ்நாட்டில் மக்கள் வசிக்கும் சமவெளி பகுதிகளில் மிக அரிதாக காணப்படும். பெரும்பாலும் மலையும் மலை சார்ந்த பகுதிகளில் காணப்படும்.

373. சோளக்குருவி / படைக்குருவி

Rosy Starling *Pastor roseus* 21 cm.

மைனா அளவிலான இந்த பறவை தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கு ஐரோப்பா, ரஷ்யா பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கில் வலசை வரும் பறவை.முழுவளர்ச்சி அடைந்த பறவைக்கு கறுப்புக் கலந்த தலையில் தொய்வான

கொண்டை மற்றும் வெளிர் சிகப்புக் கலந்த தோளை மூடிய பகுதி, கீழ்பாகங்கள், பளபளக்கும் நீல-பச்சை நிறம் இறக்கைகளில் காணப்படும். இளம் பறவைகளுக்குஇறகு நிறம் மங்கலாகவும், வெளிர் சிகப்பு நிறம் லேசான பழுப்பு மஞ்சள் நிற நெளிவு குறைந்தும் காணப்படும். சாம்பல் நிற நெளிவுகளால் கறுப்பாகத் தோன்றும், பருத்த மஞ்சள் கலந்த அலகு கொண்டது. விளை நிலங்கள் மற்றும் ஈரமான புல் நிலங்கள், அறுவடை செய்த வயல்கள் மலைக்காடுகள் பகுதியில் காணலாம்.

374. மலை நாகணவாய் / மைனா

Southern Hill Myna *Gracula indica* 25-29 cm.

மஞ்சள் தொண்டை சதையுடைய பெரிய மைனா, பெரிய மஞ்சள் கலந்த சிகப்பு-மஞ்சள் அலகு மற்றும் வெள்ளை இறக்கைத் திட்டுகள் இருக்கும். முழுவளர்ச்சியடையாத பறவைக்கு மங்கலான அலகு, வெளுத்த மஞ்சள் தொண்டை சதை மற்றும் லேசாக பளபளக்கும் மேல் சிறகுகள். மலைக்காடுகளில் குறிப்பாக ஈர இலையுதிர் மற்றும் பசுமை மாறாக்காடுகளில் காணப்படும். தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் மட்டும் காணப்படும்.

375. கறுப்பு வெள்ளை நாகணவாய்

Asian Pied Starling (Pied Myna) *Gracupica contra* 23 cm.

வளர்ந்தது கறுப்பு மற்றும் வெள்ளை, சிகப்புக் கலந்த மஞ்சள் நிற வெளிப்புற கண்குழி தோல் மற்றும் பெரிய, கூரான மஞ்சள் கலந்த அலகு. இளைய பறவைக்கு கறுப்பு இறகுகளுக்கு பதிலாக பழுப்பு நிறம் இருக்கும். விளை நிலங்கள், ஈரமான புல்வெளிகள், மக்கள் வசிக்கும் பகுதிகளில் காணலாம். தமிழ்நாட்டில் வேலூர், சென்னை, காஞ்சிபுரம் பகுதிகளில் காணப்படுகிறது. மற்றபடி அரிதாகத் தென்படும் பறவை.

376. கருங்கொண்டை நாகணவாய் / மைனா

Brahminy Starling *Sturnia pagodarum* 21 cm.

மைனாவை விட கொஞ்சம் சிறியது. வளர்ச்சியடைந்த ஆணிற்குக் கறுப்பு உச்சந்தலையும், குடுமியும் மற்றும்

Balaji P B

369. Chestnut-tailed Starling



Balaji P B

370. Malabar Starling

Balaji P B

371. Common Myna

Balaji P B

372. Jungle Myna

Balaji P B

373. Rosy Starling

Byju H

374. Southern Hill Myna

Balaji P B

375. Asian Pied Starling

Balaji P B

376. Brahminy Starling

கருஞ்சிகப்பு-சிகப்புக் கலந்த மஞ்சள் தலை விலா பக்கங்கள் மற்றும் கீழ் பக்கங்கள். முழு வளர்ச்சியடையாத பறவைக்கு உச்சந்தலையில் இவை இருக்காது, சாம்பல் - பழுப்புத் தொப்பி மற்றும் வெளுத்த மஞ்சள் கலந்த சிகப்பு லேசான பழுப்பு மஞ்சள் நிற கீழ் பாகங்கள் மஞ்சள் அலகு அடிபக்கம் நீல நிறத்திலும் இருக்கும். உலர்ந்த மரங்கள் நிறைந்த பகுதி மற்றும் புல் புதர்கள். பொதுவாக ஒரே இடத்தில் வசிப்பவையாக இருந்தாலும், குறுகிய தூரத்திற்கு வலசை செல்லும்.

377. செம்பழுப்பு வயிற்று மரம் இறங்கி / பசையெடுப்பான்

Indian Nuthatch *Sitta castanea* 12 cm.

ஆணிற்கு அழுத்தமான சாம்பல்பழுப்பு மேல் பாகங்கள் மற்றும் வெள்ளை கன்னங்கள். பெண் வெளுத்த இலவங்கப்பட்டை-பழுப்பு நிறம் கீழ் பாகங்களில் காணப்படும். பரந்த சமவெளி காடுகள் மற்றும் தோப்புகள், உயரம் குறைந்த மலைகாடுகளிலும் காணலாம்.

378. வெல்வெட் நெற்றி மரம் இறங்கி/பசையெடுப்பான்

Velvet-fronted Nuthatch *Sitta frontalis* 10 cm.

சிட்டு குருவி அளவிலான இந்த அழகான பறவைக்கு ஊதா - நீல மேல் பாகங்கள், கறுப்பு நெற்றி, கறுப்பு முனையுடைய சிகப்பு அலகு, மஞ்சள் கண் மற்றும் ஊதா கீழ் பாகங்கள். பெண் ஆணைப் போலவே இருக்கும் ஆனால் கறுப்புக் கண்பட்டை இருக்காது. திறந்த பரந்த சமவெளி காடு மற்றும் மரங்கள் நிறைந்த பகுதி. தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சிமலையில் 3000 அடிக்கு மேல் உள்ள காடுகளில் மட்டும் காணப்படும்.

379. பெரிய பட்டாணி குருவி

Cinereous Tit (Great Tit) *Parus cinereus* 14 cm.

சிட்டுக்குருவியைப் போன்ற மைய மார்பு கறுப்பு மற்றும் அடிவயிற்றில் கீழ் நோக்கி கறுப்புக் கோடு, சாம்பல் கலந்த தோளை மூடிய பகுதி, சாம்பல் கலந்த-வெள்ளை மார்புப் பக்கங்கள் மற்றும் விலாப் பக்கங்கள், வெள்ளை இறக்கைப் பட்டைகள் இருக்கும். இளையபறவைக்கு மஞ்சள் கலந்த

வெள்ளை கன்னங்கள் மற்றும் கீழ் பாகங்கள்,பச்சை மஞ்சள் கலந்த நிறம் பூசினாற் போன்ற நிறம் தோளை மூடிய பகுதிகளில் இருக்கும். திறந்த காடு மற்றும் மரங்கள் நிறைந்த நாட்டுப்புறம், அகலமான இலைகளை உடைய மரக்காடுகளில் காணலாம்.

380. இந்திய மஞ்சள் சிட்டு

Indian Yellow Tit *Machlolophus aplonotus* 13 cm.

சிறிய மஞ்சள் கறுப்பு வண்ணச் சிட்டு. இலையுதிர் மற்றும் பசுமைக் காடுகளில் மற்ற சிட்டுகளுடன் காணப்படும்.இப்பறவைக்கு மேல் பக்கம் கறுப்பு நிறமும், கறுப்பு கொண்டையும் கொண்டிருக்கும். முன்புறம் நீண்டோடும் கறுப்புக் கோடும், மஞ்சள் கறுப்பு அமைப்பும் இதை வேறுபடுத்தும்.அடிபாகம், தொண்டை, வயிறு கரு மஞ்சள் நிறம். குக்குறுவான்களின் பழைய கூட்டைப் பயன் படுத்தி முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். மலைப்பகுதிகளில் மட்டும் காணப்படும்.

381. வெண்தொண்டை நீர்த்தகைவிலான்

Bank Swallow (Sand Martin) *Riparia riparia* 13 cm.

உழவாரன் அளவு இருக்கும். வெள்ளை தொண்டை மற்றும் பாதி கழுத்துப்பட்டை மற்றும் பழுப்பு மார்புப் பட்டை. உடைய சிறிய பறவை மேல் பாகங்கள் கரும்பழுப்பு, மார்புப் பட்டை நன்றாக வரையறுக்கப்பட்டு மற்றும் வால் பிளவு ஆழமாக இருக்கும். ஆறுகள் மற்றும் ஏரிகளில் காணப்படும்.

382. பாறைதகைவிலான்

Dusky Crag-Martin *Ptyonoprogne concolor* 13 cm.

உழவாரனின் அளவு உள்ளது. மேல் மற்றும் கீழ் பாகங்கள் கரும்பழுப்பு நிறத்திலும் மற்றும் சீராகவும் இருக்கும். மலை உச்சிகள், மலையருவி ஓடும் பள்ளத்தாக்குகளில் காணப்படும்.

383. நாட்டுத்தகைவிலான்

Common House-Martin *Delichon urbicum* 12 cm.

நீல-கறுப்பு மேல் பாகங்களுக்கும் மற்றும் வெள்ளை கீழ் பாகங்களுக்கும் இடையே நல்ல வேறுபாடு இருக்கும்,

பிரதானமான வெள்ளை பிட்டம் காணப்படும். ஆழமான பிளவுபட்ட வால். வலசை வரும் பறவை. தகைவிலானை போன்றது.

384. தகைவிலான்

Barn Swallow *Hirundo rustica* 18 cm.

சிகப்புக் கலந்த தொண்டை, நீளமான வால் கொடி, நீல-கறுப்பு மார்புப்பட்டை உடையது. இளையது மங்கலாகவும், வால்கொடி இல்லாமலும் இருக்கும். விளைநிலம், மக்கள் வசிக்கும் பகுதி, ஏரிகள் மற்றும் ஆறுகள். வலசை வருபவை. ஆயிரகணக்கில் மின் கம்பங்களிலும், புதர்களிலும் அமர்ந்திருக்கும்.

385. கம்பிவால் தகைவிலான்

Wire-tailed Swallow *Hirundo smithii* 14 cm.

செம்பழுப்பு உச்சந்தலை, வெள்ளை கீழ் பாகங்கள் மற்றும் நேர்த்தியான வால் நீட்டிக் கொண்டிருக்கும். முழுவளர்ச்சியடையாத பறவைக்கு நீல மேல் பாகங்களில் பழுப்பு நிறம் பூசினாற்போன்று இருக்கும். திறந்த நாட்டுப்புறம் மற்றும் நன்னீருக்கு அருகில் உள்ள விளை நிலங்களில் காணப்படும்.

386. மலைதகவிலான்

Hill Swallow (House Swallow) *Hirundo domicola* 13 cm.

வெளிறிய அடிவயிறு, சிவப்புத்திட்டுள்ள தலை, மேல்புறம் மங்கிய நீலம் மற்றும் வெண்மை கலந்த நிறம் என மலைகளில் காணப்படும்தகவிலான் குருவி. மலைப்பகுதிகளில் காணப்படும் இவை அங்குள்ள பழைய இடிப்பாடுகளில் மண்ணையும் எச்சிலையும் கலந்து கூடுவைக்கும்.

387. சிவந்தபிட்டத்தகைவிலான்

Red-rumped Swallow *Cecropis daurica* 23 cm.

கழுத்துப் பக்கங்கள் மற்றும் வால் பின்புறம் கருஞ் சிகப்பு-மஞ்சள் கலந்த சிகப்பு நிறம், நேர்த்தியான கோடுகளுடைய லேசான பழுப்பு மஞ்சள் நிற-வெள்ளை கீழ்

Renuka Vijayaraghavan

377. Indian Nuthatch

Ebird Gallery

378. Velvet-fronted Nuthatch

Balaji P B

379. Cinereous Tit

Balaji P B

380. Indian Yellow Tit

Balaji P B

381. Bank Swallow

Balaji P B

382. Dusky Crag-Martin

CC Franceso Veronesi

383. Common House-Martin

Balaji P B

384. Barn Swallow

பாகங்கள் மற்றும் கறுப்பு கீழ்வால் இறக்கை இறகுகள். விளை நிலங்கள் மற்றும் புற்பாங்கான மேய்ச்சல் நிலங்கள்.

388. வரிக்கழுத்து தகைவிலான்

Streak-throated Swallow *Petrochelidon fluvicola* 11 cm.

மற்ற தகைவிலானை விடசிறியது. சிறிய பிளவுடைய நீளமான, அகலமான வால் இருக்கும். செம்பழுப்பு உச்சந்தலை, கோடுகளுடைய தொண்டை மற்றும் மார்பு, வெள்ளை தோளை மூடிய கோடுகள் மற்றும் பழுப்பு நிற வால் பின்புறம் காணப்படும். முழுவளர்ச்சியடையாது மங்கலாகவும், பழுப்ட உச்சந்தலையுடன் காணப்படும். ஆறுகள் மற்றும் ஏரிகளில் காணலாம்.

389. சாம்பல் தலை சின்னான்

Grey-headed Bulbul *Brachypodius priocephalus* 19 cm.

கொண்டையற்ற சாம்பல் மற்றும் பச்சை கலந்த சின்னான் சாம்பலும் பச்சையும் கலந்த தலை. பச்சை கலந்த மஞ்சள் முன்நெற்றி, அலகு மற்றும் விழி வண்ணப்படலம் கொண்டவை. வால் உட்கார்ந்திருக்கும் போது சாம்பல் நிறத்தில் இருக்கும். பறக்கும் போது சாம்பல் முனையுடைய கறுப்பு கலந்த வெளி சிறகுகள் காணப்படும். ஈர இலையுதிர் காடுகள், பசுமை மாறா காடுகளிலும், மேற்கு தொடர்சி மலைகளில்2500 முதல் 4500 அடி உயரம் உள்ள இடங்களில் மட்டுமே காணப்படும்.

390. கருங்கொண்டை மஞ்சள் சின்னான்

Flame-throated Bulbul (Ruby-throated Bulbul)
Rubigula gularis 19 cm.

தலை, கொண்டை, மேற்பக்கங்கள் கறுப்பு. வால் சீரான பச்சை நிறத்திலும், அடிப்பாகம், மார்பு, விலா வயிறு பகுதிகள் மஞ்சள் நிறத்திலும், தொண்டையில் ஆரஞ்சு கலந்த சிகப்பும் தெளிவாக தெரியும், விழிபடலம் மஞ்சள் நிறத்திலும் தோற்றமளிக்கும். 2500 முதல் 4000 அடி வரையுள்ள பசுமை மாறாகாடு, ஈர இலையுதிர் காடுகளிலும், பெரும்பாலும் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் காணப்படும்.

391. சின்னான் (அ) செம்புழை கொண்டலாத்தி

Red-vented Bulbul *Pycnonotus cafer* 20 cm.

கறுப்பு கலந்த மிருதுவான கறுத்தக் கொண்டையும் வெள்ளை பிட்டமும் வால் அடிப்பாகம் சிவப்பாகவும் காணப்படும். மேல்பாகம் மற்றும் மார்பில் செதில் போன்ற தோற்றமும் காணப்படுகிறது. தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் தோட்டங்கள், அனைத்து வகை காடுகளில் 6000 அடி உயரம் வரை உள்ள காடுகளிலும் காணப்படுகிறது.

392. கருங்கொண்டை (சிகப்பு மீசை சின்னான்)

Red-whiskered Bulbul *Pycnonotus jocosus* 20 cm.

கறுப்பு தலையில் மேல்நோக்கிய குடுமியுடன் சிகப்பு கன்ன மீசையும், வெள்ளை கீழ்பாகங்கள் மற்றும் சிகப்பு புழையும் இருக்கும். மேற்பக்கம், வாலும் கறுப்பு கலந்த சாம்பல் நிறத்துடன் இருக்கும். முதிர்ச்சி அடையாத பறவைகளுக்கு கன்ன மீசை இருக்காது. வாலடி ஆரஞ்சு கலந்த மஞ்சள் நிறத்தில் இருக்கும். தமிழ்நாட்டில் இவைகள் காடுகளில் மட்டுமே காணப்படுகிறது. சவெளி காடுகளிலிருந்து 6000 அடி உயரம் வரை உள்ள காடுகளில் காணப்படுகிறது.

393. மஞ்சள் தொண்டை சின்னான்

Yellow-throated Bulbul *Pycnonotus xantholaemus* 46 cm.

மிருதுவான குறியீடற்ற மஞ்சள் - பச்சை தலை, சாம்பல் கலந்த பச்சை மேற்பகுதி, பிரகாசமான மஞ்சள் தொண்டை, மஞ்சள் கீழ்வால் இறகுகள், மஞ்சள் நிற வால் நுனிகள் கொண்டிருக்கும். அடிபகுதியும் விலா பகுதியும் சாம்பல் நிறத்தில் காணப்படும். தமிழ்நாட்டில் 2000 அடி முதல் 4000 அடி வரை உயரமுள்ள மலைகாடுகளில் மட்டுமே காணப்படும்.

394. வெண் புருவ சின்னான்

White-browed Bulbul *Pycnonotus luteolus* 20 cm.

மஞ்சள் கலந்த கரும்பச்சையான தலை, மேல்பாகங்கள் வால் பகுதியும் அடிப்பாகமும் சாம்பல் நிறத்திலும், வாலடி மஞ்சள் நிறத்திலும், அலகும் கால்களும் கொம்பு நிறத்திலும்,வெள்ளை கண் புருவம் தெளிவாக தெரியும், புதர்கள் அடங்கிய

Balaji P B

385. Wire-tailed Swallow

Balaji P B

386. Hill Swallow

Balaji P B

387. Red-rumped Swallow

Balaji P B

388. Streak-throated Swallow

Balaji P B

389. Grey-headed Bulbul

Balaji P B

390. Flame-throated Bulbul

Balaji P B

391. Red-vented Bulbul

Balaji P B

392. Red-whiskered Bulbul

நாட்டுபுறங்களிலும், சமவெளிகளிலும் மலைகாடுகளில் 2000 அடி உயரம் வரை காணப்படும்.

395. மஞ்சள் புருவ சின்னான்

Yellow-browed Bulbul *Iole indica* 20 cm.

தலை மார்புபக்கம், வால் மேற்பக்கம் இளம்பச்சை கலந்த மஞ்சள் நிறத்திலும், தொண்டை மற்றும் அடிப்பக்கம் மஞ்சளாகவும், கண் புருவம் மஞ்சள் நிறத்திலும் இருக்கும். கண்கள் கறுப்பாகவும்,கால்கள்சாம்பல் கலந்த கருநிறமாக இருக்கும். தமிழகத்தில் மேற்குதொடர்ச்சி மலை பகுதியில் 3000 அடி முதல் 5000 அடி வரை உள்ள காடுகளில் மட்டும் காணப்படும்.

396. கறுப்பு சின்னான்

Square-tailed Bulbul (Black Bulbul)

Hypsipetes ganeesa 25 cm.

கருஞ்சாம்பல் நிறத்தில் சிறிது பிளவுபட்ட நீள வாலுடனும் கறுப்பு கொண்டையும் கொண்டுள்ள இந்த சின்னான் சிகப்பு நிற அலகுகளையும், கால்களையும் கொண்டது. உயர்ந்த மரக்கிளை களிலும் காணப்படும். அதுவும் பசுமைமாறா மற்றும் ஈர இலையுதிர் காடுகளில் கூட்டம் கூட்டமாக உயரத்தில் பறந்து செல்லும். தமிழ்நாட்டில் மேற்கு தொடர்ச்சிமலைகாடுகளில் மட்டுமே காணப்படும்.

397. நாட்டு விசிறிவால் கதிர்குருவி

Zitting Cisticola *Cisticola juncidis* 10 cm.

குட்டையான கோடுகளடங்கிய வாலில் தெளிவான வெள்ளை முனைகளுடனும், பிடரி மற்றும் மேல் பாகங்களில் அழுத்தமான கோடுகளும், மெல்லிய வெள்ளை கலந்த புருவ கோடுகள் அடங்கிய ஒரு சிறிய கதிர்குருவி. பறக்கும் போது இளஞ்செங்கல் நிறத்தில் பின் முதுகு இருப்பதை தெளிவாக காணலாம். பக்கங்கள் அடிவயிறு இளஞ்சாம்பல் நிறத்தில் தோன்றும். விளை நிலங்கள் புல்வெளிகள் 1000 அடி உயர மலைகளில் காணப்படும். உயர்ந்த புற்கள் அடங்கிய நீர்நிலை ஓரங்களிலும் காணப்படும்.

398. சாம்பல் மார்பு கதிர்க்குருவி

Grey-breasted Prinia *Prinia hodgsonii* 11 cm.

மார்பு பகுதிகளில் சிதறிய சாம்பல் பட்டைகள் காணப்படும். இனப்பெருக்கம் அல்லாத காலத்தில் கறுத்த அலகு, நேர்த்தியான வெள்ளை கலந்த புருவகோடுகள், சாம்பல் பழுப்பு மேல்பாகங்களில் கருஞ்சிவப்பு நிறம் பூசினால் போன்ற கழுத்து பக்கங்கள் மற்றும் மார்பு இருக்கும். காட்டில் ஓரங்களில் உள்ள புதர்கள் இரண்டாம் தர காடுகளிலும் காணப்படும்.

399. காட்டு கதிர்க்குருவி

Jungle Prinia *Prinia sylvatica* 13 cm.

சாம்பல் கதிர் குருவி போன்று நீண்ட வால்களையும் குண்டான அலகு மற்றும் சீரான இறக்கைகளுடன் காணப்படும். இனப்பெருக்க காலத்தில் சாம்பல் மேல்பாகங்கள் கறுத்த கண் அலகிடை பகுதி மற்றும் அலகு, குட்டையான வால் பிரதான வெள்ளை வெளிவால் இறகுகளுடன் காணப்படும். இனப்பெருக்கம் இல்லாத போது மிகவும் கருஞ்சிவப்பாகவும், பிரதானமான வெள்ளை புருவ கோடுகளுடனும், நீளமான வாலுடனும் தோற்றமளிக்கும். புதர்கள் மற்றும் திறந்த காய்ந்த இடங்களிலுள்ள உயரமன புற்கள் அடங்கிய பகுதி, இவை வசிக்கும் முக்கிய இடங்களாகும்.

400. சாம்பல் கதிர்க்குருவி

Ashy Prinia *Prinia socialis* 13 cm.

இது தமிழகத்தின் அனைத்து வகையான வாழ்விடங்களிலும் காணப்படும். இனப்பெருக்க காலத்தில் கருஞ்சாம்பல் கதிர்குருவி கறுப்பு உச்சந்தலையும், காது மூடு தூவிகளையும், சிவந்த கண்களையும், சாம்பல் கலந்த பழுப்பு மேற்பாகங் களையும், நீண்டவால், வெள்ளை கண் அலகிடை கோடு, கொம்பு பழுப்பு நிற அலகு கொண்டிருக்கும். தமிழ் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் 3000 அடி உயரமுடைய காட்டுப் பகுதிகளிலும் காணலாம். நாணல் கரையோரங்களில் அதிகம் காணலாம்.

393. Yellow-throated Bulbul

Balaji P B

394. White-browed Bulbul

Balaji P B

395. Yellow-browed Bulbul

Balaji P B

396. Square-tailed Bulbul

Balaji P B

397. Zitting Cisticola

Balaji P B

398. Grey-breasted Prinia

Balaji P B

399. Jungle Prinia

Balaji P B

400. Ashy Prinia

Balaji P B

401. மங்கல் கதிர்க்குருவி

Plain Prinia *Prinia inornata* 13 cm.

நீண்ட வாலையும், குறுகிய உருண்டை சிறகுகளையும், நீளம் குறைந்த அலகையும் கொண்ட கதிர்குருவி. இனப்பெருக்க காலங்களில் முதிர்ச்சியடைந்த பறவைகளுக்கு சாம்பல் கலந்த பழுப்பு நிறத்தில் மேற்பகுதியும், குட்டையான கண் மேற்கோட்டையும் இளஞ்சிகப்பு விளிம்புகளையும் இறகு மூடி இருக்கும் போது காணலாம். அடிப்பாகம் வெள்ளை கலந்த பழுப்பு நிறத்திலும், இனப்பெருக்கம் இல்லாத காலத்தில் அடிப்பகுதி லேசான மஞ்சள் நிறத்திலும், மேற்பகுதி அடர்ந்த சிகப்பு நிறத்துடன் நீளமான வாலுடன் காணப்படும். விளைநிலங்கள் சமவெளி காடுகளில் இருந்து 1000 அடி உயர காடுகளில் காணப்படும்.

402. வெள்ளைக் கண்ணி

Orietal white-eye *Zossterops palpebrrosus* 10 cm.

சிட்டு குருவியை விட சற்றே சிறிய உருவத்திலுள்ள இந்த வெள்ளை கண்ணி மேற்பக்கம், மேலிறகு, வால் இளம்பச்சை நிறத்தையும், சாம்பல் கறுப்பு நிற அலகும் வெள்ளை கண் வளையம், கறுப்பு கண்ணிடை கோடு போன்ற முக்கிய அம்சங்களை கொண்டுள்ள பறவை. மஞ்சள் தொண்டை, இளம்பழுப்பு கலந்த வெண்மையுடன் கூடிய அடிவயிறு மற்றும் மார்பும், தொண்டையும் உள்ளது. வட இந்தியாவில் சமவெளி புதர்களில் சாதரணமாக காணப்பட்டாலும், தென் இந்தியாவில் இப்பறவை உயர்ந்த மலைகாடுகள் (3000 அடிக்கு மேல்) மட்டும் தான் காணப்படும். கூட்டம் கூட்டமாக மரக்கிளைகளுக்குள் இரைதேடும்.

403. தத்துக்கிளி கதிர்குருவி

Common Grasshopper-Warbler *Locustella naevia* 14 cm.

நீர்நிலைகளின் அருகே காணப்படும் சிறிய பறவை. குத்துச் செடிகளின் மறைவில் பெரும்பாலும் காணப்படும். மேல்புறம் பழுப்பு நிறத்தில் கோடுகளுடன். அடிப்புறம் வெளிறிய

வெண்ணிறமும் கொண்டிருக்கும். வாலினடி கோடிட்டிருக்கும். வலசை வரும் குருவி. தமிழ் நாட்டில் அரிதாக காணப்படும்.

404. வயல் கதிர்குருவி

Paddy - field Warbler *Acrocephalus agricola* 14 cm.

பச்சை கலந்த பழுப்பு சாம்பல் நிற மேற்பாகங்கள் மற்றும் சீரான இறகுகள் கொண்டிருக்கும். அதே நிறத்திலும் அளவிலும் ஒன்று போல் தெரியும் பிலித் நாணல் குருவியுடன் ஒப்பிடும் போது சற்று சிறியதாகவும், மெலிந்தும், கண் மேற்கோடுகள் கூர்மையுடன் நீண்டும் காணப்படும். இந்தியாவில் அனைத்து பகுதிகளுக்கும் வலசை வரும் பறவையாகும்.

405. பிலித் நாணல் கதிர்க்கருவி

Blyth's Reed -warbler *Acrocephalus dumetorum* 14 cm.

பச்சை கலந்த பழுப்பு சாம்பல் நிற மேற்பாகங்கள் மற்றும் சீரான இறகுகள் கொண்டிருக்கும். அதே நிறத்திலும் அளவிலும் ஒன்று போல் தெரியும் வயல் கதிர்குருவியுடன் ஒப்பிடும் போது புருவ கோடுகள் தெளிவற்று இருக்கும். ஐரோப்பா மற்றும் மத்திய ஆசிய பகுதிகளிலிருந்து இந்தியாவில் அனைத்து பகுதிகளிலுள்ள விளை நிலங்களினருகில் உள்ள புதர்காடுகளிலிருந்து, 7000 அடி உயரமுள்ள மலை பகுதி காடுகளுக்கும் அதிக எண்ணிக்கையில் வரும் வலசை குருவி.

406. பெரிய நாணல் கதிர் கருவி

Clamorous Reed-warbler *Acrocephalus stentoreus* 19 cm.

முதிர்ச்சியடைந்த பறவை கோடுகளற்ற பழுப்பு நிற முதுகுபகுதிகளையும், வெள்ளை கலந்த பழுப்பு நிற புருவ கோடுகளையும் கொண்டிருக்கும். சின்னானை விட சற்று பெரிதான நாணல் கதிர்குருவிக்கு முன் தலை தட்டையாகவும், அலகு பருத்தும் கூர்மையானதாகவும் இருக்கும். மத்திய ஆசிய கிழக்கு ஐரோப்பா போன்ற பகுதிகளிலிருந்து வலசை வரும் பறவை. நாணல் கரையோரங்களிலும் புதர்கள் அடங்கிய ஈரப்பத நிலங்களில் காணப்படும்.

407. பருத்த அலகு கதிர்குருவி

Thick - billed Warbler *Acrocephalus aedon* 19 cm.

கிழக்கு ஆசிய மித தட்பவெப்ப காடுகளில் இனப்பெருக்கம் செய்யும் இந்த இனம் குளிர் காலத்தை போக்குவதற்கு நமது நாட்டிற்கு வலசை வரும். பெரும் நாணல் கதிர் குருவிக்கு சமமான அளவில் உள்ள இந்த பறவை கோடுகளற்ற பழுப்பு மேற்புறம், இளஞ்சிவப்பு அடிப்பாகம் கொண்டது. முன்தலை உருண்டும் கட்டையான கூர்மை அலகும் கொண்டது. இது அடர்ந்த காடுகளிலும், புதர்களிலும், மலைக்காடுகிளலும் (3000 அடி உயரம் வரை), தமிழ்நாட்டில் அனைத்து வகை காடுகளுக்குவலசை வரும்.

408. சைபிரிய மரக்கதிர் குருவி

Booted Warbler *Hippolais caligata* 12 cm.

பிலித் நாணல் கதிர்குருவியின் தோற்றத்திலும், நீண்ட வால் சதுரமுனையுடனும் கீழ் வால் இறக்கை இறகுகள் குட்டையாக காட்சியளிக்கும். மூன்றாம் இறக்கை இறகுகள் நெளிநெளியாய் தோற்றமளிக்கும். சற்று தெளிவான புருவ கோடுகள். மத்திய ரஷ்ய பகுதிகளிலிருந்து தமிழகத்தில் அனைத்து பகுதிகளுக்கும் வலசை வரும்.

409. தையல்கார கதிர்குருவி

Common Tailor Bird *Orthotomus sutorius* 18 cm.

பரவலாக அனைத்து இடங்களிலும் காணப்படும். எப்பொழுதும் ஒலி எழுப்பி கொண்டிருக்க கூடிய தோட்ட பறவையாகும். ஆண் பறவைக்கு நீண்ட மேல் நோக்கிய வாலும் பச்சை மேல்பாகமும், துருநிறத்தில் முன் தலையும் உச்சந்தலையும் கொண்டவை. விளைநிலங்கள், காடுகள் (3000 அடி உயர காடுகள் வரை) தோட்டங்களில் காணப்படும் இலைகளை துவாரம் இட்டு துரும்புகளையும் சிலந்திவலைகளையும் கொண்டு தைத்து தொட்டில் வடிவத்தில் கூடுகட்டும். ஆண் பறவைகளுக்கு நடு வால்இறகு இரண்டும் நன்று நீண்டு காணப்படும். முன் தலையில் துரு நிறம் பளிச்சென்று காணப்படும்.

Balaji P B

401. Plain Prinia



Balaji P B

402. Oriental white-eye

Dr Raju Kasumbe

403. Common Grasshopper-Warbler

Rama Neelamegam

404. Paddyfield Warbler

Balaji P B

405. Blyth's Reed Warbler

Balaji P B

406. Clamorous Reed Warbler

Arun Kumar E

407. Thick-billed Warbler

Balaji P B

408. Booted Warbler

410. ய்ஹீம் கதிர்குருவி

Hume's Warbler *Phylloscopus humei* 11 cm.

பச்சை நிற மேல்புறமும், வெளிறிய வெண்ணிற அடிப்பாகமும் கொண்ட மற்றொரு குருவி. ஆயினும், வெகுநீண்ட புருவ மேல்கோடும், சிறகில் காணப்படும் ஒற்றை வெள்ளை கோடும் இதை வேறுபடுத்திக் காட்டும். உருண்டோடுவது போன்ற குரலொலி (லித்தோ) உடையது. வலசை வரும் பறவை.

411. டைட்லேர் கதிர்குருவி

Tytler's Leaf Warbler *Phylloscopus tytleri* 11 cm.

நீண்ட புருவ மேல்கோடு, மெலிந்த உடல், மெலிந்த அலகு இவற்றுடன் காணப்படும் வலசைக் குருவி. சிறகில் பட்டை கிடையது. குட்டையான வால் ஒரு அடையாளம்.

412. கந்தக வயிற்று கதிர்குருவி

Sulphur-bellied Warbler *Phylloscopus griseolus* 11 cm.

கந்தகம் போன்ற மஞ்சள் நிற அடிப்பாகங்கள், பிரதானமான மஞ்சள் மேல்புருவக் கோடுடையது. சீப் என்ற குரல் உடையது. பாறை மற்றும் மலைப் பிரதேசங்களிலும், வறண்ட காடுகளிலும் காணப்படும். வலசை வரும் குருவி.

413. திக்கெல் இலைக் கதிர்குருவி

Tickell's Leaf Warbler *Phylloscopus affinis* 11 cm.

பச்சை கலந்த பழுப்பு மேல்புறம், மஞ்சள் கலந்த அடிப்பாகமும் இதனை மற்ற கதிர் குருவிகளிடம் இருந்து வேறுபடுத்தும். பிரதானமான மேல்புருவக் கோடுடையது. இலைகளின் இடையே மிகச் சுறுசுறுப்பாக கண நேரம் கூட நிற்காது இரை தேடும். வலசை வரும் குருவி. 5000 அடிக்கு மேல் உள்ள மலைக்காடுகளில் மட்டும் காணப்படும்.

414. கரும்பழுப்பு கதிர்குருவி

Dusky Warbler *Phylloscopus fuscatus* 11 cm.

மேற்சொன்ன பழுப்பு கதிர்குருவியைக் காட்டிலும் அடர்ந்த பழுப்பு மேல் பாகமும், இளம்பழுப்பு அடிப்பாகமும் கொண்டது. பிரதானமான மேல்புருவக் கோடுடையது. விசில் போன்ற

குரலும், சக் என்ற அபாய ஒலியும் எழுப்பும். இதை வைத்து அடையாளம் காணலாம்.

415. பச்சை கதிர்குருவி

Green Warbler *Phylloscopus nitidus* 11 cm.

பழைய இனத்திலிருந்து இலைக்கதிர்குருவி இனத்திற்கு மாற்றப்பட்ட பறவை. வில்லோ கதிர்குருவி என்ற பெயரும் உண்டு. மற்ற பச்சை கதிர் குருவியை விடப் பிரகாசமான நிறத்தில் காணப்படும். அடிப்பாகம் நல்ல மஞ்சளாக இருக்கும். ஒரே ஒரு சிறகுக் கோடு காணப்படும். மத்திய ஐரோப்பாவிலிருந்து வலசை வரும் மற்றொரு கதிர்குருவி.

416. இலைக் கதிர்குருவி

Greenish Warbler *Phylloscopus trochiloides* 11 cm.

வெளிறிய பச்சை மேல்புறமும், வெளிறிய வெண்ணிற அடிப்பாகமும் கொண்ட நன்கு தெரியும் மேல்கோடும் கொண்ட குருவி. சிறகின் மேல் ஒரு தீர்க்கமான வெள்ளைக்கோடு இருக்கும். சிலி, சிலி என்று குளறல் ஒலி இதனை அடையாளம் காட்டும். வலசை வரும் குருவி. அனைத்து பகுதிகளிலும் காணப்படும்.

417. பெரிய அலகு கதிர்குருவி

Large-billed Leaf Warbler *Phylloscopus magnirostris* 13 cm.

பெரிய தடித்த அலகு, வெகு நீண்ட மஞ்சள் புருவ மேல்கோடு, (பிடரி வரை நீண்டிருக்கும்) கறுப்பு பின் பகுதி, கால் கறுத்த சாம்பல் நிறம், கரும்பச்சை மேல்பாகம் இவற்றுடன் காணப்படும். ட்டர் ட்ரீ என்ற குரலொலி இதை பச்சை கதிர்குருவியிலிருந்து வேறுபடுத்தும். வலசை வரும் பறவை.

418. பட்டைதலை கதிர்குருவி

Western Crowned Warbler *Phylloscopus occipitalis* 11 cm.

கிட்டதட்ட பிளயித் கதிர்குருவியினைப் போல இருந்தாலும், வெளிறிய பச்சை மேல் பாகங்கள், வெளிறிய வெண்ணிற அடிப்பாகங்களுடன் உச்சந்தலையில் ஒரு பட்டை இதை வேறுபடுத்திக் காட்டும். இறகில் இரண்டு கோடுகள் இருக்கும்.

Balaji P B

409. Common Tailorbird

CC Imran Shah

410. Hume's Warbler

Balaji P B

411. Tytler's Leaf Warbler

Rama Neelamegam

412. Sulphur-bellied Warbler

Renuka Vijayaraghavan

413. Tickell's Leaf Warbler

CC Imran Shah

414. Dusky Warbler

Balaji P B

415. Green Warbler

Thirumoorthy N V

416. Greenish Warbler

பெரும்பாலும் மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளில் காணப்படும். வலசை வரும் பறவை.

419. கருமீசை புல்கதிர்குருவி

Bristled Grassbird *Chaetornis striata* 20 cm.

சிலம்பனைப் போன்ற பெரிய கதிர்குருவி. மேல்புறம் பழுப்பு நிறத்தில் கோடுகளுடனும், கோடிட்ட வால் நுனியில் வெண் புள்ளிகளுடனும் இருக்கும். கால்கள் பழுப்பு நிறத்திலும், அலகு பருத்து, கறுப்பாகவும் இருக்கும். அடி அலகு ஈய நிறத்தில் இருக்கும். உயர்மலை புல்வெளிகளிலும், சதுப்பு நிலங்களிலும் காணப்படும் அரிய குருவி. வாழிட இழப்பால் அருகி வருகின்ற இனம்.

420. பட்டைவால் புல்கதிர்குருவி

Broad-tailed Grassbird *Schoenicola platyurus* 18 cm.

சீரான பழுப்பு மேற்புறம், நீண்ட சதுர முனை கொண்ட வாலும் பெரிய உடலும் இதை எளிதில் இனம் காண உதவும். வாலின் மேல்பகுதி சன்ன வரிகளால் கோடிடப்பட்டிருக்கும். உயர்மலைபுல்வெளிகளிலும், சதுப்பு நிலங்களிலும் காணப்படும் அரிய குருவி. வாழிட இழப்பால் அருகி வருகின்ற இனம்.

421. வெண்தொண்டைகாட்டுக் கதிர்குருவி

Lesser White-throat *Sylvia currucca* 13 cm.

வலசை வரும் குருவி. சாம்பல் மேல்புறம், வெள்ளைத் தொண்டை மற்றும் அடிபாகங்கள் கொண்ட சாம்பல் தலைக் குருவி. கண்ணைச் சுற்றி கறுப்பு முகமூடி போன்ற பட்டை இருக்கும். தரிசு நிலங்கள், கிராமங்கள் போன்ற திறந்த வெளிகளில் காணப்படும்.

422. கருந்தலை காட்டுக் கதிர்குருவி

Eastern Orphean Warbler *Sylvia crassirostris* 16 cm.

வெண்தொண்டை கதிர்குருவியை விட பெரியது. கறுத்த தலையும், கண்ணின் விழி வெள்ளையாகவும் இருக்கும் (முகமூடி கிடையாது). கறுப்பு கலந்த வால், தடித்த பெரிய

அலகு என புல்புல் போல அளவில் பெரிய கதிர்குருவி. நாட்டுப்புறம், வறண்ட காடுகள் போன்றவற்றில் காணப்படும். வலசை வரும் குருவி.

423. வயநாடு சிரிப்பான்

Wayanad Laughingthrush *Ianthocincla delesserti* 23 cm.

சின்னான் பறவையை விட சற்று பெரியது. உச்சந்தலை சிலேட் சாம்பல் நிறத்தில் கறுப்பு கலந்த காது மூடு தூவியுடன் ஒரு முக மூடி அணிந்தது போல தோற்றமளிக்கும். பழுப்பு நிற மேற்பகுதியும் வெள்ளை தொண்டையும் பருமனான அலகு கீழ்பக்கம் மஞ்சள் நிறத்திலும் காணப்படும். மார்பு இளஞ்சாம்பல் நிறத்திலும் அடிவயிறு கீழ் வால் இறகுகளும் இளஞ்சிகப்பு நிறத்திலும், கால் கருமஞ்சள் நிறத்திலும் காணப்படும். மேற்குமலைத் தொடர்ச்சியின் பசுமைமாறா காடுகளில் பரவலாக காணப்படும்.

424. நீலகிரி சிரிப்பான்

Nilgiri Laughingthrush *Montecincla cachinnans* 20 cm.

பச்சை கலந்த பழுப்பு நிறமும், இளஞ்சிவப்பு நிறைந்த இந்த சிரிப்பான் பிரதான வெள்ளை கண் கோடுகளை கொண்டிருக்கும். உச்சந்தலை சாம்பல் கலந்த பழுப்பு நிறமும் வெள்ளை மேற்கண் கோடும் கொண்டது. கண்ணை சுற்றி அரைவடிவ கண் வளையம் காணப்படும். கன்னம் கறுப்பாகவும், மார்பு சிவப்பு கலந்த பழுப்பு நிறத்திலும், அடிவயிறும் விலா பகுதியும் பச்சை கலந்த பழுப்பு நிறத்துடனும் காணப்படும். நீலகிரி மலை தொடரில் மட்டும் காணப்படுவதால் நீலகிரி சிரிப்பான் என்று அழைக்கப்படுகிறது. 3500 அடி உயர காடுகளிலிருந்து மலை உச்சி வரை உள்ள காடுகளில் காணலாம்.

425. பழனி சிரிக்கும் பாடி

Palani Laughingthrush (Palani Chilappan)
Montecincla fairbanki 20 cm.

முன்பு கேரளா சிரிப்பான் இனத்திலிருந்து, இந்தப்பறவை தற்போது தனி இனமாகக் கருதப்படுகிறது. சாம்பல் பழுப்புத்

Gajamohanraj D

417. Large-billed Leaf Warbler

Gajamohanraj D

418. Western Crowned Warbler

Anand Arya

419. Bristled Grassbird

Biju P B

420. Broad-tailed Grassbird

Balaji P B

421. Lesser White-throat

CC Mick Sway

422. Eastern Orphean Warbler

Ramki Srreenivasan

423. Wayanad Laughingthrush

Balaji P B

424. Nilgiri Laughingthrush

தலை, சாம்பல் கண்கோடு, மேலே பெரிய வெள்ளைப் புருவக் கோடு, அடிவயிறு சிவந்த நிறம், தொண்டை, அலகு மங்கிய பழுப்பு, காட்டுச் சிலம்பனை ஒத்த அளவு கொண்டது. பழனி மலைத்தொடரில் பொதுவாக காணப்படும்.

426. அசாம்பு சிரிக்கும் பாடி

Ashambu Laughingthrush (Ashambu Chilappan)
Montecincla meridionalis 20 cm.

முன்சொன்ன பழனி சிரிப்பானை ஒத்த, ஆனால் சிவந்த நிறம் இல்லாது, சிறிய வெள்ளைப் புருவம் கொண்டு, அசாம்பு மலைப் பகுதிகளில் காணப்படும் சிரிக்கும் பாடி. இவை முன்பு சாம்பல் மார்பு சிரிக்கும் பாடிகளுடன் இணைக்கப்பட்டிருந்தது.

427. கருஞ்சிவப்பு வயிற்று சிலம்பன்

Tawny-bellied Babbler *Dumetia hyperythra* 20 cm.

சிட்டு குருவி அளவிலான இந்த சிறு சிலம்பன் பெரும்பாலும் மலைகள் அடர்ந்த காடுகளில் காணப்படும். மேல்புறம் பச்சைகலந்த பழுப்பு நிறத்துடனும் சிவப்பு கலந்த தலை கவசத்தையும் கொண்டுள்ளது. அடிப்பக்கத்தில் வெள்ளை நிற தொண்டைய தவிர ஏனைய பாகங்கள் செம்பழுப்பு நிறத்துடன் காணப்படும். முட்புதர்கள் மற்றும் உயர்ந்த மலைபகுதிகளில் காணப்படும். தமிழ்நாட்டில் சமவெளி காடுகளில் காணப்படுவது இல்லை.

428. கருந்தலை சிறுசிலம்பன்

Dark-fronted Babbler *Rhopocichla atriceps* 13 cm.

சிட்டுக்குருவி அளவிலான சிறு கறுப்பு சிலம்பன். தூரத்தில் இருந்து சிறிய கரும்பறவையாக தெரியும். தலை கறுப்பு கலந்த பழுப்பு நிறத்திலும், மீதி மேல் பாகங்கள் பச்சை கலந்த பழுப்பு நிறத்திலும் காணப்படும். கண்கள் இளம்மஞ்சள் நிறத்தைக் கொண்டது. அடிப்பாகம் வெள்ளையாகவும் அடிவயிறு பச்சை கலந்த பழுப்பு நிறத்திலும் காணப்படும். அடர்காடுகள், பசுமை மாறா காடுகள், நீர் நிலைகளின் கரையோர புதர்களிலும், மூங்கில் காடு மற்றும் ஏலக்காய் தோட்டங்களிலும் காணப்படும்.

429. வாள் அலகு சிலம்பன்

Indian Scimitar-Babbler *Pomatorhinus horsfieldii* 12 cm.

கரும்பச்சை கலந்த பழுப்பும், வெள்ளையும் கலந்த ஒரு சிலம்பன். ஒரு பிரதான வெள்ளை கண் மேற்கோடும் வெள்ளை தொண்டை மார்பு மற்றும் நடுவயிறு, நீண்டு வளைந்த மஞ்சள் நிற அலகு (அரிவாள் போன்ற) கொண்டிருக்கும். வறண்ட மற்றும் ஈர இலையுதிர் காடுகள் அடங்கிய மலை காடுகளில் காணப்படும்.

430. புள்ளி சிலம்பன்

Puff-throated Babbler *Pellorneum ruficeps* 15 cm.

சின்னான் அளவிலுள்ள ஒரு சிலம்பன். மேற்பகுதி பழுப்பு நிறத்திலும், கருஞ்செங்கல் நிறத்தில் தலை கவசமும், வெளிறிய கண் மேற்கோடுகளும், கண்ணிற்கு பின் பக்கம் வரை நீண்டிருக்கும். காது மூடி தூவிகள், பழுப்பு நிறத்தலை, அடிபக்கத்திலே வெண்மையான தொண்டையும், மீதி பாகங்கள் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்துடன் அகன்ற கோடுகளுடனும், பழுப்பு நிற புள்ளிகளையும் கொண்டிருக்கும். கால் வெளிறிய சதை நிறத்திலும் அமைந்திருக்கும். சிறு சிறு கூட்டங்களாக அடர்ந்த காடுகளிலும், மர அடிவளர் தாவரங்களிலும், மூங்கில் காடுகளிலும் காணலாம்.

431. கலகலப்பான் சிலம்பன்

Brown-cheeked Fulvetta *Alcippe poioicephala* 15 cm.

சிட்டுகுருவி அளவிலான இந்த சிலம்பன் பச்சைபழுப்பு நிறமுடையது. சாம்பல் நிற உச்சந்தலை மற்றும் பிடரி, துரு பழுப்பு நிற இறகு மற்றும் வால், வெளிறிய சிகப்பு அடிப்பகுதி, கண்வெளிபடலம் சாம்பல் பழுப்பு நிறத்திலும் அல்லது கொம்பு பழுப்பு நிறத்திலும் காணப்படும். பொதுவாக சிறு சிறு குழுக்களாக காணப்படும். இந்த சிலம்பன் மரத்திற்கு அடியில் வளர்ந்திருக்கும் புதர் செடிகளின்கிளைகளுக்கு இடையே தாவி தாவி இரையை தேடும். மலை அடிவாரத்திலிருந்து 7000 அடி உயரம் உள்ள மலை பகுதிகளில் உள்ள பசுமை மாறாகாடுகள் இலையுதிர் காடுகளில் காணப்படுகிறது.

432. வரி இறகு சிலம்பன்

Common Babbler ***Turdoides caudate*** 23 cm.

சின்னான் அளவிலான ஒடுங்கிய மண்பழுப்பு நிற சிலம்பனுக்கு நீண்ட காலும், நீண்ட அடுக்குகளாக அமையப்பட்ட வாலும், கொண்டிருக்கும். இதன் மேற்பாகத்தில் முதுகு, மங்கிய பழுப்பு நிறத்துடன் அடர்ந்த கரும்பழுப்பு கோடுகளுடன் காணப்படும். வால் ஒடுங்கிய குறுக்கு பட்டைகளால் குறியிடபட்டிருக்கும். கீழ்பகுதி பாலாடை மஞ்சள் அல்லது ஊதா கலந்த மஞ்சள் நிறம் கலந்த கோடுகளுடனும், மார்பின் பக்கப்பகுதி கறுப்பாகவும் அமைந்திருக்கும். இளம்மஞ்சள் நிறத்தில் கால்கள் அமைந்திருக்கும். சிறுபுதர்கள் அடங்கிய சமவெளி பகுதிகளிலிருந்து 2500 அடி உயரமுள்ள மலை காடுகள் வரைக்கும் சிறு சிறு குழுக்களாக காணப்படும்.

433. பெரிய சாம்பல் சிலம்பன்

Large Grey Babbler ***Turdoides malcolmi*** 28 cm.

மைனா அளவிலான இந்த சிலம்பனுக்கு மேற்பகுதி சாம்பல் நிற பழுப்பு நிறமும், கரும்பழுப்பு புள்ளிகளையும் கொண்டிருக்கும். முன்நெற்றி வெளிறிய சாம்பல் அல்லது வெள்ளை நிற கோடுகளுடன் காணப்படும். வாலில் மங்கிய குறுகிய கோடுகள் காணப்படும். அடிப்பக்கம் பாலாடை மஞ்சள் நிறத்திலும் இளம் ஊதா நிறம் தொண்டையிலும், மார்பு பகுதிகளிலும் காணப்படும். இளஞ்சாம்பல் முன் தலை அடர் மஞ்சள் கண்கள், வெள்ளை வெளிர் வாலிறகுகள் முக்கியமான குணாதிசயங்கள். வறண்ட திறந்த பரவலான புதர்கள் உடைய இடங்களிலும், கருவேலங் காடுகளிலும், விளை நிலங்களிலும் காணப்படும். தென் தமிழ்நாட்டிலும் கிழக்கு தெற்கு தமிழகத்திலும் காணப்படுவது இல்லை.

434. கருஞ்சிவப்பு சிலம்பன்

Rufous Babbler ***Turdoides subrufa*** 25 cm.

மைனாவைவிட சற்று சிறிதான இந்த சிலம்பன் பொதுவாக மேற்கு தொடர்ச்சி மலைகளிலும், வட தமிழ்நாட்டில் சேர்வராயன் மலைபகுதிகளில் காணப்படும். பொதுவாக 3000

Balaji P B

433. Large Grey Babbler

Balaji P B

434. Rufous Babbler

Balaji P B

435. Jungle Babbler

Balaji P B

436. Yellow-billed Babbler

Renuka Vijayaraghavan

437. Pin-striped Tit-Babbler

Balaji P B

438. Yellow-eyed Babbler



Balaji P B

439. Rufous-tailed Lark

Balaji P B

440. Ashy-crowned Sparrow-Lark

அடி மேல் உள்ள காடுகளில் காணப்படாமல் இருந்தாலும், சமீபத்தில் 6000 அடி உயரத்தில் இருக்கும் காடுகளிலும் காணப்பட்டன. இந்த சிலம்பனுக்கு அடர் சாம்பல் நிறத்திலும் மீதி மேற்பாகங்கள் இளம்பச்சை கலந்த கருஞ்சிவப்பு, வால் மங்கலான குறுக்கு கோடுகளை கொண்டிருக்கும். அடிப்பகுதி அடர்ந்த கருஞ்சிவப்பாக இருக்கும். கண்விழி படலம் வெண்மையாகவும் மேல் அலகு கொம்பு பழுப்பு நிறத்திலும் கீழ் அலகு கறு மஞ்சள் நிறத்திலும் காணப்படும். காலும் விரல்களும் மங்கலான மஞ்சள் நிறத்தை கொண்டிருக்கும்.

435. காட்டு சிலம்பன்

Jungle Babbler *Turdoides striata* 25 cm.

மைனா அளவிலான நன்கு அடர்ந்த மணற்பழுப்பு நிறமுடைய தாறு மாறான நிறங்களை கொண்ட காட்டு சிலம்பன். பாலாடை வெள்ளை கண்களும், மஞ்சள் அலகு மற்றும் கால்கள், நீண்ட வால் இறகுகள் உடம்பில் ஒட்டிக்கொண்டது போலிருக்கும். மேற்பாகம் மங்கிய சாம்பல் பழுப்பு நிறமும், சிறிது சாம்பல் நிறமும் தலை பிடரியில் காணப்படும். பிட்டமும், வால் மேல் இறகுகளும் மங்கிய மஞ்சள் நிறத்திலும் வால் கருஞ்சிவப்பு பழுப்பு நிறத்திலும், அடிப்பகுதி, தொண்டை, மார்பு, இளஞ்சாம்பல் பழுப்பு நிற கோடுகளுடனும், வயிறு பாலாடை மஞ்சள் நிறத்திலும் தோற்றமளிக்கும். மிகவும் சாதாரணமாக காணப்படும். இந்த இனம் சமவெளி பகுதிகளிலிருந்து 5000 அடி உயர மலைக்காடுகளில் காணப்படும். விளைநிலங்களிலும், இலையுதிர் காடுகளிலும், மலை அடிவாரத்திலும் காணப்படும்.

436. தவிட்டுகுவிரு – பூணியல் குருவி

Yellow-billed Babbler *Turdoides affinis* 23 cm.

மஞ்சள் அலகு சிலம்பன் என்று ஆங்கில பெயரோடு அழைத்தாலும் இப்பறவைக்கு மஞ்சள் நிறத்தில் அலகு காணப்படாமல் வெள்ளை நிறத்தில் காணப்படும். உருவத்தில் காட்டு சிலம்பனை ஒத்து இருந்தாலும், வெண்தலை மற்றும் அலகு, பழுப்பு நிற கோடுகள் அல்லாத மார்பு, வேறுபடுத்தி

காட்டும். மேல்பகுதி கரும்பழுப்பு கலந்த சாம்பல் நிறத்திலும் பிட்டம் மற்றும் மேல் முதுகு மங்கலான பழுப்பு நிறத்தில் அமைந்திருக்கும். வால் குறுக்கு கோடுகள் நடுபகுதியிலும், வால் பின்பகுதி சாம்பல் பழுப்பும், வெளிபகுதி கரும்பழுப்பும் கொண்டிருக்கும். அடிப்பக்கம் தொண்டை மற்றும் மார்பு கரும்பழுப்பு, நிறத்திலும், வயிறு கீழ் வால் இறகுகள் இளஞ்சிவப்பு கலந்த மஞ்சள் நிறத்திலும் காணப்படும். சமவெளிபகுதிகளில் கிராமத்து தோட்டங்களில் விவசாய நிலங்களில் காணப்படுகிறது. மலை அடிவாரத்தில் காணப்பட்டாலும், உயரமான மலை பகுதிகளில் காணப்படாது.

437. மஞ்சள் தொண்டைச் சிலம்பன்

Pin-striped Tit-Babbler *Mixornis gularis* 11 cm.

மலைக்காடுகளில் காணப்படும் சிறிய சிலம்பன். தலை சிவப்பு, தொண்டை, வயிறு மஞ்சளாக கருங்கோடுகளுடன் காணப்படும். புதர்களில் மறைந்து இரைதேடும். கூப்பிடுகுரல் தையல் சிட்டைப் போன்று இருக்கும். உருவத்தில் மஞ்சள் கண்ணியை ஒத்திருக்கும்.

438. மஞ்சள் கண் சிலம்பன்

Yellow-eyed Babbler *Chrysomma sinense* 18 cm.

சின்னான் அளவிலான மஞ்சள் கண்ணுடைய இந்த சிலம்பனுக்கு மேற்பாகம் இளஞ்சிகப்பு கலந்த பழுப்பு நிறத்திலும் இறகுகள் இளஞ்சிவப்பு நிறமும், கறுப்பு அலகும் கொண்டிருக்கும். அடிப்பாகம் வெண்மையாகவும், இளம் மஞ்சள் கலந்த அடி வயிறும் நீண்ட அடுக்குகளாக அமைந்த சிறகுகளுடன் வால் இருக்கும். பொதுவாக 3000 அடிக்கு கீழே உள்ள மலை காடுகளிலும், இரண்டாம் தர காடுகளிலும், நீண்ட புல் அடர்ந்த புதர்களிலும், மூங்கில் காடுகளிலும் காணப்படும்.

439. சிகப்பு வால் வானம்பாடி

Rufous-tailed Lark *Ammomanes phoenicura* 16 cm.

சிட்டுகுருவியை விட சிறிது பெரிய அளவில் உள்ள இந்த வானம்பாடி குந்தியது போன்ற நிலையில் காணப்படும். கருஞ்சிகப்பும் பழுப்பும் கலந்த கட்டை அலகையும் உடையது.

கறுப்பு பட்டை கொண்ட கருஞ்சிகப்பு வால் முக்கிய குணாதிசயம். இது பறக்கும் போது தெளிவாக தெரியும். இது வடக்கு தமிழ்நாட்டில் தென் தமிழ்நாட்டை விட அதிகமாக இருக்கும்.

440. சாம்பல் தலை வானம்பாடி

Ashy-crowned Sparrow-Lark (Ashy-crowned Finch-Lark)

Eremopterix griseus 12 cm.

சிட்டுகுருவி வடிவிலான தலையினை கொண்ட இந்த வானம்பாடியின் ஆணிற்கு சாம்பல் உச்சந்தலை மற்றும் பிடரி பழுப்பு கலந்த கீழ்பாகங்கள் கொண்டிருக்கும். பெண்ணிற்கு சீரான தலை மற்றும் மேல்பாகங்கள், கறுத்த சாம்பல் கீழ் இறக்கைகள் கொண்டிருக்கும். திறந்த வறண்ட புதர்கள், வறண்ட சாலையோரங்களில் காணப்படும். தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் இப்பறவையை காணலாம்.

441. பாடும் புதர் வானம்பாடி

Singing Bushlark

Mirafra cantillans 14 cm.

பழுப்பு நிற பெண் சிட்டுக்குருவி போன்ற திறந்த வெளியில் வாழும் ஒரு வானம் பாடி. கருஞ்சிகப்பு செங்கல் நிற இறகுகளடங்கிய சிறகுகளை கொண்டிருக்கும். இந்த சிறகு நிறம் பறக்கும் போது தெரியும். அதனோடு வெள்ளை வெளி வால் இறகுகளும் தெரியும். அடிப்பாகம் இளஞ்சிகப்பாகவும் மார்பு கோடுகள் அடங்கிய முக்கோண பழுப்பு நிற குறியீடு கொண்டிருக்கும். வானத்தில் பாடி கொண்டு உயரத்தில் பறக்கும் போது இது மற்ற சில வானம்பாடிகளிடமிருந்து பிரித்து கண்டு கொள்வதில் குழப்பமாக இருக்கும். இது தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும் காணப்படும்.

442. ஜெர்டான் புதர் வானம்பாடி

Jerdon's Bushlark ***Mirafra affinis*** 15 cm.

சிவந்த இறக்கை புதர் வானம்பாடி போன்று இறக்கைகளில் கரும்சிவப்பு, மங்கிய மஞ்சள் நிறத்தில் வெளிவால்களும், பறக்கும் போது வெளிவால் இறகுகள் இளம் மஞ்சள் நிறத்தில்

Balaji P B

433. Large Grey Babbler

Balaji P B

434. Rufous Babbler

Balaji P B

435. Jungle Babbler

Balaji P B

436. Yellow-billed Babbler

Renuka Vijayaraghavan

437. Pin-striped Tit-Babbler

Balaji P B

438. Yellow-eyed Babbler

Balaji P B

439. Rufous-tailed Lark

Balaji P B

440. Ashy-crowned Sparrow-Lark

காணப்படும். இது பாடும் வானம்பாடியிலிருந்து வேறுபடுத்தி காட்டுகிறது.

443. சிவந்த இறக்கை புதர் வானம்பாடி
Indian Bushlark (Red-winged Bushlark)
Mirafra erythroptera 14 cm.

சிட்டுகுருவி அளவிலான அமைந்துள்ள இந்த வானம்பாடி மேற்பக்கம் இளஞ்சிவப்பு பழுப்பு நிறத்தில் கறுப்புக் கோடுகளை கொண்டிருக்கும். பிரகாசமான செங்கல் நிற சிறகுகளும், கன்னமும் தொண்டையும், வெண்மையாகவும் மீதி கீழ் பாகம் வெளிறிய சிகப்பு வெண் நிறத்திலும் காணப்படும். மார்பு பகுதி முக்கோண வடிவ புள்ளிகளை கொண்டிருக்கும். தமிழ்நாட்டில் வடக்கு பகுதியில் பொதுவாக காணப்படும். திறந்த புல் வெளிகள் புதர்கள் அடங்கிய சமவெளி பகுதிகளில் காணலாம்.

444. சிறுவிரல் வானம்பாடி
Sykes's Short-toed Lark (Eastern Short-toed Lark)
Calandrella dukhunensis 14 cm.

உச்சந்தலை கொண்டை இல்லாமலும் கருஞ்சிவப்பு பட்டை சிறகுகளில் இல்லாமலும், பிரதான வெள்ளை வால் சிறகுகள் மற்றும் புருவ கோடுகள் காணப்படும். இதன் கீழ்பாகங்களில் குறியீடு இல்லாமலும் கறுத்த திட்டுகள் மார்பின் பக்கங்களின் அல்லது குறுகிய தொண்டையில் கறுத்தக் கோடுகளுடன் காணப்படும். குட்டையான புல் அடங்கிய பகுதி, பயிரிடப்படாத உழவு வயல்களில் காணப்படும். வட இந்திய பகுதியில் இருந்து வலசை வரும்.

445. வானம்பாடி
Oriental Skylark *Alauda gulgula* 16 cm.

மேற்பகுதி பழுப்பு நிறமும் ஒவ்வொரு இறகும் கறுப்பு மையபகுதியையும் பழுப்பு ஓரத்தையும் கொண்டிருக்கும். தெளிவற்ற குடுமி உச்சந்தலையும் தலை இறகுகளை சிலிர்க்கும் போது உயர்ந்து காணப்படும். அடிப்பகுதி வெளிறிய சிகப்பு கலந்த இளம் மஞ்சளும் கறுத்த இளம்பழுப்பு மார்பிலும்,

தெளிவற்ற கோடுகளுடனும் மற்றும் கரும்புள்ளிகளுடன் காணப்படும். தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும், விளை நிலங்களிலும் புற்களை எல்லையாக கொண்ட உப்பளங்கள் மற்றும் கடற்கரை சதுப்புநிலங்களில் காணப்படும்.

446. மலபார் கொண்டை வானம்பாடி

Malabar Lark *Galerida malabarica* 16 cm.

கொண்டை வானம்பாடிற்குரிய குணாதியசங்களை கொண்ட இந்த வானம்பாடிக்கு மேல் நோக்கிய உயர்ந்து நிற்கும் கொண்டை இருக்கும். ஆனால் கொண்டை வானம்பாடியை விட சிறிது சிறியதாகவும் மேல்பாகத்தில் கருஞ்சிவப்பு பழுப்பு நிறம், சாம்பல் பழுப்பு நிறத்திற்கு பதிலாக இருக்கும். இது மேற்கு தமிழ்நாட்டில் மட்டும் சமவெளிகளிலும் 6000 அடி உயரம் உள்ள காடுகளிலும் காணலாம்.

447. சைக் கொண்டை வானம்பாடி

Tawny Lark (Sykes's Lark) *Galerida deva* 14 cm.

கொண்டை வானம்பாடியை போன்று இதற்கும் மேல் உயர்ந்த கொண்டை காணப்படும். மலபார் வானம்பாடிய விட சிறியதாகவும், வெளிறிய கருஞ்சிவப்பு கீழ் பாகங்கள் மற்றும் மார்பில் கோடுகள் குறைவாகவும் காணப்படும். இதனுடைய பாடல் மலபார் கொண்டை வானம்பாடியை விட வேறுபட்டும், பாடும் புதற் வானம் பாடி பாடலுக்கு ஒத்து போவது போன்று இருக்கும். பாறைகள் நிறைந்த புதர் பகுதி வறண்ட விளைநிலங்களில் காணமுடியும். தமிழ்நாட்டில் மேற்கு பகுதியில் காணப்பட்டாலும் இராமேஸ்வரத்தில் வந்ததாக பதிவிடப்பட்டுள்ளது.

448. பருத்த அலகு மலர்கொத்தி

Thick-billed Flowerpecker *Dicaeum agile* 10 cm.

பருத்த அலகும் சிதறி பரவிய தொண்டைகோடும், மார்புக் கோடுகளுடனும் மற்றும் தெளிவற்ற வெள்ளை முனையுடைய குறுகிய வாலும் கொண்டிருக்கும். முன்பு தமிழ்நாட்டில் சேர்வராயன் மலைகளில் மட்டும் காணப்படுவதாக பதிவு

Balaji P B

441. Singing Bushlark

Balaji P B

442. Jerdon's Bushlark

Balaji P B

443. Indian Bushlark

Balaji P B

444. Sykes's Short-toed Lark

Balaji P B

445. Oriental Skylark

Balaji P B

446. Malabar Lark

Balaji P B

447. Tawny Lark

Balaji P B

448. Thick-billed Flowerpecker

செய்யப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டில் பரவலாக பல இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

449. டிக்கெல் மலர்கொத்தி

Pale-billed Flowerpecker ***Dicaeum erythrorhynchos*** 8 cm.

வெளுத்த அலகு, சாம்பல் கலந்த இளம்பச்சை மேற்பாகங்கள், வெளுத்த கீழ்பாகங்கள் கொண்டிருக்கும். சமவெளி பகுதிகளிலுள்ள காடுகள், மரங்கள் அடங்கிய விளைநிலங்கள், தோட்டம் மற்றும் மலை பகுதியில் உள்ள 4000 அடி உயரம் உள்ள காடுகளில் காணப்படும்.

450. நீலகிரிமலர்கொத்தி

Nilgiri Flowerpecker ***Dicaeum concolor*** 9 cm.

கறுத்த பச்சை பழுப்பு மேற்பாகங்கள் மற்றும் வெளுத்த சாம்பல் கலந்த வெள்ளை கீழ்பாகங்கள். தமிழ்நாட்டில் மேற்கு மலை தொடர்ச்சியில் 6000 அடி உயரம் உள்ள மலை காடுகளில் காணப்படும்.

451. ஊதா பிட்ட தேன்சிட்டு

Purple-rumped Sunbird ***Leptocoma zeylonica*** 10 cm.

சிட்டு குருவியை விட சிறியதான இந்த தேன்சிட்டின் ஆண்பறவையின் உச்சந்தலை பளபளக்கும் உலோகம் கலந்த பச்சை நிறத்தையும், செங்கல் பழுப்பு முதுகும், உலோக ஊதா நிற பிட்டமும் கொண்டது. உலோக பச்சை தோள் பட்டையும் காணப்படும். அடிபக்கத்தில் உலோக ஊதா கலந்த தொண்டையும், தலை பக்கங்களில் செம்பழுப்பு நிற தொண்டை பட்டைகளும் காணப்படும். மார்பு மற்றும் நடுவயிறு எலுமிச்சை மஞ்சள் நிறத்திலும், விலா பகுதி சாம்பல் நிறைந்த வெள்ளை நிறத்திலும் தோன்றும். பெண் பறவைக்கு மேற்பகுதி பழுப்பு நிறமும் அதிகமான கருஞ்சிவப்பு பகுதி சிறகுகளிலும் காணப்படும். தொண்டையும் விலாவும் சாம்பல் கலந்த வெள்ளை, மார்பு மற்றும் நடுவயிறு எலுமிச்சை மஞ்சள் நிறத்தை கொண்டவை. விழிவெண்படலம் இளஞ்சிவப்பு நிறத்துடன் காணப்படும். சமவெளிகாடுகள், தோட்டங்கள்,

வறண்ட விளைநிலங்கள் மற்றும் மலைகாடுகளில் 3000 அடி உயரம் வரை காணப்படும்.

452. சின்ன தேன் சிட்டு

Crimson-backed Sunbird (Small Sunbird)

Leptocoma minima 8 cm.

தேன் சிட்டுகளிலேயே மிக சிறிய இந்த பறவை ஊதா பிட்ட தேன்சிட்டு போன்றிருந்தாலும் அதனுடைய பின் முதுகு கருஞ்சிவப்பு செங்கல் பழுப்பு நிறத்திற்கு பதிலாக இருக்கும். மேலும் உலோக தோள் பட்டை இருக்காது. வயிறு மங்கிய மஞ்சள் நிறத்துடனும் காணப்படும். பெண் பறவைக்கு கீழ் பிட்டம் அடர்ந்த சிவப்பு கலந்த பழுப்பு நிறம், அடிப்பாகம் மங்கிய மஞ்சள் நிறம். மேற்கு மலை தொடர்ச்சியில் 2000 அடி முதல் மலை உச்சி வரை உள்ள காடுகளில் காணப்படும்.

453. ஊதா தேன் சிட்டு

Purple Sunbird *Cinnyris asiaticus* 10 cm.

ஆண் உலோகம் கலந்த ஊதா நிறம். பெண்ணிற்கு சீரான மஞ்சள் கலந்த முன் அடிபாகம் மெலிதான புருவ கோடும் கறுத்த முகத்திரையும் காணப்படும். சாம்பல் கலந்த பின் அடிப்பாகம் காணப்படும். ஆண் பறவைக்கு வயிறு இருண்ட ஊதா நிற பகுதி மார்பிலிருந்து ஒரு ஒடுங்கிய தெளிவற்ற சிவப்பு நிறம் கலந்த பழுப்பு பட்டையால் பிரிக்கப்படும். விழிவெண்படலம் சாம்பல் கலந்த கறுப்பு. தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் உள்ள மரங்கள் கொண்ட பகுதியில் காணப்படும். நீலகிரி மலையில் 7000 அடிக்கும் அதிகம் உயரக் காடுகளிலும் காணப்படுகிறது.

454. லோட்டன் தேன் சிட்டு

Loten's Sunbird (Long-billed Sunbird)

Cinnyris lotenius 13 cm.

இந்த தேன் சிட்டு ஊதா தேன் சிட்டை போன்ற அமைப்புடையதாக இருந்தாலும், அதிலிருந்து இந்த தேன் சிட்டை நீண்ட அரிவாள் போன்ற அலகு மூலம் வேறுபடுத்தி காணலாம். உருவத்திலும் ஊதா தேன் சிட்டை விட சற்று

பருமனாக காணப்படும். ஆணிற்கு மங்கலான பழுப்பு அடிவயிறு மற்றும் வாலடி இறகுகள். பெண்ணிற்க்கு கரும்பச்சை நிறம், மேல் பாகங்களிலும் ஊதா தேன் சிட்டை போன்ற புருவ கோடுகள் மற்றும் முகத்திரை போன்ற தோற்றம் இருக்காது. ஆண் பறவைக்கு தலை முழுவதும் முதுகு, தோள், பிட்டம் பகுதிகள் கறுப்புக் கலந்த ஜொலிக்கும் உலோக பச்சையும் ஊதாவும் கலந்து மிக அழகாக காணப்படும். சிறகும் வாலும் மங்கிய கறுப்பு நிறமாக இருக்கும். தொண்டையிலும் மார்பு பகுதிகளிலும் உலோகம் கலந்த ஊதா நிறத்துடன் காணப்படும். சமவெளி காடுகள் மற்றும் மலை அடிவாரத்தில் இருந்து 3000 அடி உயர மலைக்காடுகளில் காணப்படும். தமிழகத்தில் அனைத்து பகுதிகளில் பரவலாக காணப்படும்.

455. சிறு சிலந்தி பிடிப்பான்

Little Spiderhunter *Arachnothera longirostra* 16 cm.

இளம் பச்சையும் மஞ்சளும் கலந்த பெண் தேன் சிட்டை போன்ற பறவை. நீண்ட வளைந்த பருமனான அலகும் மேற்பாகம் ஆணிற்கும் பெண்ணிற்க்கும் இளம் பச்சை நிறத்திலும் வால் கரும்பழுப்பு நிறத்துடன் வெள்ளை நுனியை கொண்டிருக்கும். தொண்டையும், மார்பும் சாம்பல் கலந்த வெள்ளை நிறத்திலும், வயிறு மஞ்சள் நிறத்திலும், ஆரஞ்சு நிற குஞ்சங்கள் விலா பகுதியில் காணப்படும். மேற்கு தொடர்ச்சி மலையில் 2000 அடியிலிருந்து 7000 அடி உயரம் உள்ள மலைகளில் மட்டும் காணப்படும்.

456. காட்டு வாலாட்டி

Forest Wagtail *Dendronanthus indicus* 18 cm.

இமயமலை பகுதியிலிருந்து தமிழ்நாட்டின் அனைத்துபகுதிக்கும் குறிப்பாக வனப்பகுதிகளில் 7000 அடி உயர்ந்த காடுகளிலும் வருகை தரும். இந்த வாலாட்டியின் மேற்பாகங்கள் இளம்பச்சை நிறத்திலும், வெள்ளை கண்மேற்கோடு கண்ணிற்க்கு பின்புறம் வரை நீண்டிருக்கும். அகலமான மஞ்சள் கலந்த வெள்ளை இறக்கை பட்டைகள், கறுப்பு பட்டைகள், மார்பில் கறுப்பு மஞ்சள் குறுக்குப்

Balaji P B

449. Pale-billed Flowerpecker

Balaji P B

450. Nilgiri Flowerpecker

Balaji P B

451. Purple-rumped Sunbird

Balaji P B

452. Crimson-backed Sunbird

Balaji P B

453. Purple Sunbird

Balaji P B

454. Loten's Sunbird

Balaji P B

455. Little Spiderhunter

Rama Neelamegam

456. Forest Wagtail

பட்டைகள் காணலாம். கீழ்பாகங்கள் வெண்மையாக இருக்கும். வலசை வரும் பறவை.

457. கருஞ்சாம்பல் வாலாட்டி

Grey Wagtail *Motacilla cinerea* 19 cm.

மற்ற வாலாட்டிகளை விட நீளமான வால்களை கொண்டது. சாம்பல் நிற மேல்பாகங்கள் மற்றும் மஞ்சள் வாலடியும் கீழ் வால் இறக்கைகளும் காணப்படும். இனப்பெருக்க காலங்களில் தொண்டை கறுப்பாக இருக்கும். குளிர்காலத்தில் நமது நாட்டில் காணும்போது கருந்தொண்டை காணப்படாது. வெள்ளை புருவகோடு எல்லா நேரங்களிலும் காணப்படும். சாலையோரம் மற்றும் ஆற்று ஓரம் தனி தனியாக ஓடி இரைதேடும். சமவெளியிலிருந்து 7000 அடி உயரமுள்ள காட்டுபகுதியில், திறந்த வெளி பகுதிகளில் காணலாம். மத்திய ஆசிய சீனா ஜப்பான் நாடுகளிலிருந்து வலசை வரும். தமிழகத்தில் அனைத்து பகுதிகளில் சில எண்ணிக்கையில் காணலாம்.

458. மஞ்சள் வாலாட்டி

Western Yellow Wagtail *Motacilla flava* 18 cm.

எலுமிச்சை தலை வாலாட்டியை ஒத்திருக்கும் இந்த மஞ்சள் வாலாட்டியின் ஆண்பறவை இனப்பெருக்கத்திற்கு தயாராகும் பருவத்தில் கரும் பச்சை நிறத்திலும், கீழ்பக்கம் மஞ்சள் நிறத்திலும் காணப்படும். ஆணிற்கும் பெண்ணிற்கும் புருவ மேற்கோடுகள் இருக்கும். பகல் நேரங்களில் தனியாக அல்லது ஒன்று இரண்டு எண்ணிக்கையில் இரைதேடும். அந்தி நேரத்தில் இரவு உறக்கத்திற்கு ஒன்று கூடி கரும்பு தோட்டம், நாணல், கோரைகள் நிறைந்த நந்நீர் நிலங்களுக்கு பறந்து செல்லும். தமிழ்நாட்டில் வடக்கு மாநிலங்களில் தான் ஓரளவு காணப்படும். மத்திய ஆசிய பகுதிகளிலிருந்து குளிர்காலத்திற்கு வலசை வரும் பறவை.

459. எலுமிச்சை தலை வாலாட்டி

Citrine Wagtail *Motacilla citreola* 19 cm.

சிட்டுகுருவி அளவிலான இந்த வாலாட்டி, எலுமிச்சை மஞ்சள் நிற தலையையும், முதுகும் பிட்டமும், சாம்பல் கலந்த சிறகுகள்

பழுப்பு நிறத்துடன் வெள்ளை விளிம்புகளை கொண்டிருக்கும். இப்பறவையின் ஆணிற்கு வால் இறக்கைகள் வெளிவிளிம்பில் வெள்ளையாக இருக்கும். பெண் பறவை ஆண் பறவை ஒத்து இருந்தாலும் தலையில் வெளிரிய மஞ்சள் நிறமும், சாம்பல் நிற உச்சந்தலை, கழுத்து முன் முதுகு மஞ்சள் முன் நெற்றி கண்மேற்கோடுகள், காது மூடு தூவிகள் மஞ்சள் நிறத்தில் இருக்கும். இமயமலை பகுதிகளிலிருந்து வலசை வரும். மிதக்கும் தாவரம் உள்ள நீர் நிலைகள். புல் தரை, ஈரமுள்ள நீர் நிலைகளில் காணலாம்.

460. கறுப்பு வெள்ளை வாலாட்டி

White-browed Wagtail (Large Pied Wagtail)

Motacilla maderaspatensis 21 cm.

சின்னான் அளவிலான கறுப்பு வெள்ளை வாலாட்டி குருவிக்கு மேற்புறம் கறுப்புடன் பிரதான வெள்ளை கண்மேற்கோடுகள், கண்ணிற்கு பின் புறம் நீண்டு காணப்படும். அடிப்பக்கத்தில் தொண்டை மார்பு கறுப்பாகவும் ஏனைய கீழ்பகுதி வெள்ளை நிறத்திலும், சாம்பல் நிற விலா பக்கத்தையும் கொண்டிருக்கும். தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் காணப்படும். குளம் மற்றும் மலைகாடுகளில் காணப்படும். ஒரே இடத்தில் வசிக்க கூடியவை.

461. வெள்ளை வாலாட்டி

White Wagtail *Motacilla alba* 19 cm.

முதிர்ச்சியடைந்த ஆணின் முன் தலை மற்றும் தலைபக்கங்கள் வெள்ளையாகவும் உருண்ட கண்களுடன் காணப்படும். அகன்ற கறுப்பு பகுதி பின் உச்சந்தலையிலும் பிடரியிலும் காணப்படும். முதுகும் பிட்டமும் சாம்பல் நிறத்திலும், இறகுகள் பழுப்பு நிறத்திலும் மூன்றாம் நிலை சிறகு இறகுகளும், சிறகு மூடிகளும் வெள்ளை விளிம்பினை கொண்டிருக்கும். வால் கரும்பழுப்பு நிறத்துடன் வெள்ளை வெளி இறகுகளுடன் காணப்படும். கீழ் பக்கம் வெள்ளை நிறத்துடன் அகன்ற பிறை வடிவத்தில் கறுப்பு பகுதி மார்பில் காணப்படும். ஆண், பெண் உருவ வேறுபாடுகள் இல்லை. சைபிரியா பகுதியிலிருந்து

வலசை வரும் இந்த வாலாட்டி குருவி தமிழ்நாட்டிற்கு ஒரு சில எண்ணிக்கையில் வருகை தரும். குளக்கரைகள், ஆற்றங்கரைகள் மற்றும் மலைகாடுகளில் 4500 அடி உயரம் வரை உள்ள பகுதிகளுக்கு வலசை வரும்.

462. ரிச்சர்டு நெட்டைக்காலி

Richard's Pipit *Anthus richardi* 17 cm.

சின்னான் அளவிலுள்ள நெடுங்காலி. தெளிவான கோடுகளுடைய மேற்பாகங்களும், மார்பும், வெளுத்த அலகிடை பகுதி, சற்று நீண்ட பருத்த அலகு, நீளமான பின்நோக்கி வளைந்த நகம் பின் விரலில் இருக்கும். வலசை வரும் வகைகளும் தமிழ்நாட்டிலேயே வசித்து வரும் பறவைகளும் கலந்து காணப்படுகின்றன.

463. வயல் நெட்டைக்காலி

Paddyfield Pipit *Anthus rufulus* 15 cm.

சின்னானை விட சற்று சிறிதாக காணப்படும். இந்த வயல் காட்டு நெட்டைக்காலி சிறிய ரிச்சர்டு நெட்டைக்காலியை போன்று தோற்றமளிக்கும். கட்டையான கால்களை கொண்டிருக்கும். மேற்பகுதி அடர்பழுப்பு நிறத்தில் செம்பழுப்பு குறியீடுகளை கொண்டிருக்கும். வால் அடர்பழுப்பு நிறத்திலும், வெள்ளை வெளிவால் இறகுகள் பறக்கும் போதும், தரை இறங்கும் போதும் தெளிவாக தெரியும். மார்பு இளம் மஞ்சள் கீறல்கள் அடங்கிய பழுப்பு நிறத்துடன் காணப்படும். பொதுவாக ஒரே இடத்தில் தங்கி வசிக்கும் பறவை. வயல் கரையோரங்கள், புல் மற்றும் குறுகிய தாவரங்களை கரைகளில் கொண்டுள்ள உப்பளங்களில் காணலாம்.

464. கருஞ்சிவப்பு மலை நெட்டைக்காலி

Long-billed Pipit *Anthus similis* 20cm

சின்னான் அளவிலான இந்த நெடுங்காலியை பழுப்பு மஞ்சள் நெடுங்காலியுடன் ஒப்பிடும் போது குறிப்பிட தக்க அளவு பெரியதாகவும், பெரிய அலகும், குட்டையான தோற்றமுடைய கால்களும் காணப்படும். வெள்ளை தொண்டை, சிகப்பு படிந்தாள் போல், அடிவயிறு, பழுப்பு மஞ்சள் புருவக்கோடு,

Balaji P B

457. Grey Wagtail

Balaji P B

458. Western Yellow Wagtail

Balaji P B

459. Citrine Wagtail

Balaji P B

460. White-browed Wagtail

Balaji P B

461. White Wagtail

Balaji P B

462. Richard's Pipit

Balaji P B

463. Paddyfield Pipit

Biju P B

464. Long-billed Pipit

கறுப்பு கண் அலகிடை பகுதி இருக்கும். குறிப்பிட்ட இடத்திலேயே வசிக்கும் பறவை. பெரும்பாலும் 3000 அடி உயரம் உள்ள நீலகிரி, பழனி மலை தொடர்களில் சற்று அரிதாகவே காணலாம்.

465. பிளீத் நெட்டைக்காலி

Blyth's Pipit *Anthus godlewskii* 16.5 cm.

வயக்காட்டு நெடுங்காலி அளவிலேயே அமைந்துள்ள இந்த நெடுங்காலியை வயக்காட்டு நெடுங்காலியிலிருந்து அறிவது மிகவும் கடினம். பழுப்பு மஞ்சள் நெட்டைக்காலியிலிருந்து கீறல் கோடுகள் அடங்கிய மார்பு மற்றும் வெளுத்த கண் அலகிடை பகுதியை வைத்து பிரித்து காணலாம். கிழக்கு ஆசியா பகுதியிலிருந்து வலசை வரும் நெடுங்காலி. தமிழகத்தில் அரிதாக காணப்படும்.

466. பழுப்பு மஞ்சள் நிற நெட்டைக்காலி

Tawny Pipit *Anthus campestris* 16 cm.

வயக்காட்டு நெடுங்காலியின் அளவிலான இந்த நெடுங்காலி மேற்பக்கம் வெளிறிய பழுப்பு நிறத்துடன் மங்கலான கீறல்களையும் கொண்டிருக்கும் வெளிவால் இறகுகள் வெண்மையுடன் இருக்கும். அடிப்பக்கம் சீரான வெள்ளை கலந்த இளம் மஞ்சள் நிறத்திலும், அடர்ந்த கீறல்கள் (எப்போதாவது) மார்பு பகுதியிலும் இருக்கும். அடிப்பக்கம் கீறல்கள் இல்லாமல் இருப்பதை வைத்து இந்த நெடுங்காலியை வயல்காட்டு நெடுங்காலியிலிருந்து பிரித்து உணரலாம். வலசை வரும் நெடுங்காலி. தமிழகத்தில் பரவலாக வயல் காட்டு நெடுங்காலிகளுடன் சேர்ந்து காணப்படும். பொதுவாக தரிசு நிலங்களிலும், உழுத வயல்களிலும், மேய்ச்சல் நிலங்களிலும் காணலாம்.

467. நீலகிரி நெட்டைக்காலி

Nilgiri Pipit *Anthus nilghiriensis* 17 cm.

மேற்கு மலை தொடர்சியில் உள்ள மிக உயர்ந்த 6000 அடி மேற்பகுதியில் மட்டும் காணப்படும். மற்ற எல்லா நெடுங்காலியை விட அதிக பழுப்பு நிறம் இருக்கும். மார்பில்

காணப்படும் கீறல்கள் விலா பகுதி வரைக்கும் நீண்டு இருக்கும். மேற்பாகம் இளம்மஞ்சள் நிறத்துடன் அகன்ற பழுத்த கோடுகளையும் கொண்டிருக்கும். இளம் மஞ்சள் மேற்கண்கோடு கொண்டிருக்கும். காப்பி தோட்டங்களிலும் மேல் மலைபகுதியில் உள்ள கட்டை புற்களை கொண்ட புல்வெளிகளில் காணலாம்.

468. மர நெட்டைக்காலி

Tree Pipit *Anthus trivialis* 15 cm.

முதிர்ச்சியடைந்த பறவைக்கு பழுப்பு மஞ்சள் நிறம் கலந்த நிறத்திலிருந்து சாம்பல் கலந்த நிற மேல்பாகங்கள், மார்பு பகுதி, கால்களையும் கொண்டிருக்கும். தெளிவற்ற பழுப்பு மஞ்சள் நிறம் கலந்த நெளிவுகள்; மூன்றாம் நிலை இறக்கை இறகுகளில் லேசான பழுப்பு மஞ்சள் நிற நெளிவுகள் காணப்படும். வலசை வரும் பறவை. பெரும்பாலும் மரங்களடங்கிய மலை பகுதியில் உள்ள திறந்த வெளியில் காணப்படும். மரக்கிளையில் அமர்ந்து கொண்டு உணவு உண்ண தரை இறங்கும்.

469. கரும்பச்சை முதுகு நெட்டைக்காலி

Olive-backed Pipit *Anthus hodgsoni* 15 cm.

மரநெட்டைகாலி போன்று தோன்றத்தில் ஒத்திருந்தாலும் இதனுடைய முதுகு பகுதி அதிக பச்சையாகவும் கீறல்கள் குறைந்தும் காணப்படும். தலைபகுதியில் நன்கு வரையறுக்கப்பட்ட கண் மேற்கோடுகள் காணப்படும். கிழக்கு ஆசியா, ஐரோப்பா, ரஷ்யா, பகுதியிலிருந்து வலசை வரும் பறவை. மரங்களை கரையோரங்களில் கொண்டுள்ள விளைநிலங்களிலும், காடுகளிலும், முற்புதர்களிலும் காணப்படும். தமிழ்நாட்டில் மலைபகுதி காடுகளில் மட்டும் காணப்படும்.

470. சிட்டுகுருவி

House Sparrow *Passer domesticus* 15 cm.

உலகின் பல பாகங்களில் பரவலாக வியாபித்துள்ள ஒரு இனம். ஆணிற்கு தொண்டையிலிருந்து மேல் மார்பு வரைகறுப்பு காணப்படும். உச்சந்தலை சாம்பல் நிறத்திலும், பிடரி

செம்பழுப்பு நிறத்திலும், பழுப்பு கலந்த தோள் பட்டை கொண்டிருக்கும். பெண்ணிற்கு இளம் மஞ்சள் நிற புருவ கோடுகள், மற்றும் கோடுகளற்ற சாம்பல் கலந்த வெள்ளை கீழ் பாகங்கள் கொண்டிருக்கும். வெள்ளைத் தோள்பட்டை ஆணிற்க்கும் பெண்ணிற்கும் இருக்கும். மனித குடியிருப்பு பகுதியில் அதிக எண்ணிக்கையிலும் விளை நிலங்கள் 5000 அடி உயரமுள்ள மலை பகுதிகளிலும் காணப்படும்.

471. மஞ்சள் தொண்டை சிட்டுக்குருவி

Yellow-throated Sparrow (Chestnut-shouldered Petronia)

Gymnoris xanthocollis 13.5 cm.

சிட்டுகுருவியை விட சற்றே குறைந்த அளவிலான இந்த பறவைக்கு மேற்பகுதி சாம்பல் கலந்த பழுப்பு நிறமாகவும், சிறகு மற்றும் வாலும் கறுப்புடனும் செங்கல் நிற தோள்பட்டையும், இரண்டு வெண் இறகு பட்டைகளையும், கீழ் பகுதி வெளிறிய பழுப்பு நிற பகுதியையும், மஞ்சள் தொண்டை பகுதியும் கொண்டிருக்கும். வெள்ளை வயிற்றுப்பகுதிகள் மட்டும் வால் தெளிவாக பிளவுப்பட்டிருக்கும். ஆண் பெண் ஒன்று போல் தோன்றினாலும் மஞ்சள் தொண்டையும் செங்கல் தோள்பட்டையும் ஆணை விட மங்கலாக காணப்படும். இந்தியாவின் வடக்குப்பகுதியிலிருந்து தமிழகத்திற்கு வலசை வரும் பறவை. சமவெளி பகுதி மற்றும் சமவெளிகாடுகளிலிருந்து 3000 அடி உயரத்தில் உள்ள காட்டு பகுதியில் காணப்படும். பறவையியலின் தந்தை என்று அழைக்கப்படும் சாலிம்அலி பறவைகளின் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இந்த பறவை தான் காரணம்.

472. கருங்கீற்று தூக்கனாங்குருவி

Streaked Weaver *Ploceus manyar* 14 cm.

சிட்டுகுருவி அளவிலான இந்த இனத்தின் ஆண்பறவை இனப்பெருக்க காலத்தில் மஞ்சள் உச்சந்தலைகளும், பழுப்பு நிறத்தில் தலை பக்கங்கள் தொண்டை, கனமான கோடுகளுடைய மார்பை கொண்டிருக்கும். இனப்பெருக்கம் இல்லாத காலத்தில் மார்புபட்டை அழுத்தமான கோடுகளுடைய கீழ்பாகங்கள், மஞ்சள் புருவ கோடுகள் மற்றும் கழுத்து திட்டு,

Balaji P B

465. Blyth's Pipit

Balaji P B

466. Tawny Pipit

Biju P B

467. Nilgiri Pipit

Balaji P B

468. Tree Pipit

Balaji P B

469. Olive-backed Pipit

Balaji P B

470. House Sparrow

Balaji P B

471. Yellow-throated Sparrow

Rama Neelamegam

472. Streaked Weaver

கோடுகளுடைய உச்சந்தலை, கறுத்த கோடுகளுடைய காது மூடு தூவிகள், துருத்திக் கொண்டிருக்கும். தொண்டை மைய பட்டையும் மீசை பட்டையும் கொண்டிருக்கும். வளர்ந்த சம்பு, கோரை, நாணல் போன்ற நீர்தாவரங்களின் வளைந்த நுனி இலைகளை சேர்த்து தைத்து நெருக்கமற்று முடிக்கப்படாத கூடுகளை போன்று (தூக்கனாங்குருவி கூடுகளை) குழாய் காணப்படும். தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் புதர்களுடைய நன்னீர் நிலைகளில் காணப்படும்.

473. தூக்கனாங்குருவி

Baya Weaver *Ploceus philippinus* 15 cm.

கருங்கீற்று தூக்கனாங்குருவியை விட சற்று பெரிய இந்த பறவையின் பெண்ணிற்கு உச்சந்தலை மஞ்சள் நிறத்திலும், கரும்பழுப்பு நிற காது மூடுதூவிகள், மற்றும் தொண்டை, மார்பு பகுதி கோடுகளற்ற மஞ்சள், தோள்பட்டை மற்றும் தோளை மூடிய சிறகுகளில் மஞ்சள் நிறம் கொண்டிருக்கும். இனப்பெருக்கம் அல்லாத காலத்தில் கோடுகளற்ற இளம்பழுப்பு மஞ்சள் நிறத்திலிருந்து வெளுத்த மஞ்சள் கலந்த கீழ்பாகங்கள் தெளிவற்ற இளம் மஞ்சள் நிற கோடுகளும் உடையதாக இருக்கும். ஒரே இடத்தில் வசிக்க கூடியதும் பரவலாக காணப்படும் தூக்கணாங்குருவிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்பதை அவற்றின் கூடுகளை அரிதாகவே காண்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். கூடுகள் தலைகவச வடிவத்தில் கீழ்நோக்கிய குழாய் வடிவத்தில் அமைந்திருக்கும் உயர்ந்த தென்னை, பனை, தாழ்ந்த பெரம்பு இலைகளிலும் ஓங்கி உயர்ந்த நாணல் புற்களிலும் கூடுகள் அமைக்கும்.

474. கருமார்பு தூக்கணாங்குருவி

Black-breasted Weaver (Bengal Weaver)
Ploceus benghalensis 14 cm.

ஆண் பறவை இனவிருத்திக் காலத்தில் நல்ல மஞ்சள் தலையுடன் காணப்படும். தலையிலும், மார்பும் கூடுதல் கறுப்பு காணப்படும். மற்றபடி தூக்கணாங் குருவியைப் போன்றே கூடு கட்டும். இது அல்லாது, வெள்ளைப் புருவக் கோடும், மீசைக் கோடுகளுமிருக்கும். அரிதாகக் காணப்படும்.

475. சிவப்பு சில்லை

Red Avadavat *Amandava amandava* 10 cm.

ஆண்பறவை இனவிருத்தி காலத்தில் மேற்பக்கம் பழுப்பு நிறத்திலிருந்து கருஞ்சிவப்பு நிறம் வரையில் காணப்படும். இறகுகள் அடர்ந்த பழுப்பு நிறத்துடன் ஒரு சில வெள்ளை புள்ளிகளை கொண்டிருக்கும். வால் அடர் பழுப்பு நிறத்துடன் நுனிகள் ஒடுங்கிய வெள்ளை பின்பக்க கருஞ்சிவப்பும், விலாபகுதி வெண் புள்ளிகளுடனும், கீழ் வயிறு கரும் பழுப்புடனும் காணப்படும். இனப்பெருக்கம் அல்லாத காலத்தில் ஆண், பெண் பறவை போன்று தோற்றமளித்தாலும், மார்பு சாம்பல் நிறத்தில் இருக்கும். பெண் பறவை மேல்பக்கம் பழுப்பு நிறத்துடன் சில வெண்புள்ளிகளை அடங்கிய இறகுகளையும் மேல்வால் இறகுகள் சிகப்பு வெள்ளை புள்ளிகளையும் கொண்டிருக்கும். தொண்டையும், மார்பும் சாம்பல் கலந்த இளம் மஞ்சள் நிறத்தில் இருக்கும். வயிறு காவி கலந்த மஞ்சள் நிறத்தில் இருக்கும். ஒரே இடத்தில் வசிக்க கூடியது. இது தமிழ்நாட்டின் கடற்கரை மாவட்டங்களிலும், மதுரைக்கு தெற்கேயும் காணப்படுவதில்லை. கரும்பு தோட்டத்தில் பரவலாக காணலாம். தமிழ்நாட்டின் மலைப் பகுதிகளில் 1000 அடி உயரம் வரைக்கு காணப்பட்டுள்ளது.

476. வெண் தொண்டைச்சில்லை

Indian Silverbill (White-throated Munia)

Euodice malabarica 11.5 cm

சீரான மண்பழுப்பு நிறத்தையும் கூர்மையான கறுப்பு வாலையும் வெள்ளை அடிப்பாகத்தையும், வெள்ளை பிட்டத்தையும் கொண்டது. அடிப்பாகம் பாலாடை வெண்மையையும் விலாபக்கம் பழுப்பு கலந்த இளம் மஞ்சள் நிறத்தில் இருக்கும். ஆண்பெண் வேறுபாடு கிடையாது. தமிழ்நாட்டில் அனைத்துபகுதிகளிலும் பெரும்பாலான வாழ்விட வகைகளிலும், மலைக்காடுகளில் 4000 அடி உயரம் வரை இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. விளை நிலங்கள் புல்வெளிகள், கருவேலங்காடுகளில் அதிகம் காணப்படும்.

477. வெண்முதுகுச்சில்லை

White-rumped Munia *Lonchura striata* 10-11 cm.

சிட்டுகுருவியை விட சிறிய இந்த சில்லை, பழுப்பு வெள்ளை கலந்தும், பலம் வாய்ந்த நீல நிற அலகையும் கூர்மையான வாலையும் கொண்டவை. முன்தலை, இறகுகள் மற்றும் வால் கரும்பழுப்புநிறத்திலும், முதுகு பகுதி பழுப்பும் வெளிறிய கோடுகளும், பிட்டம் வெண்மையாக காணப்படும். அடிப்பக்கத்தில் தொண்டையும் மார்பு பகுதி பழுப்பு நிறத்திலும். அடி வயிறு பாலாடை வெண்மை நிறத்திலும் இருக்கும். ஆண் பெண் வேறுபாடு கிடையாது. சமவெளிபகுதிகளிலும் 5000 அடி உயரமுள்ள மலை பகுதிகளிலும் இதைக் காணலாம்.

478. கருந்தொண்டை சில்லை

Black-throated Munia *Lonchura kelaarti* 12 cm.

வெண் முதுகுச்சில்லை அளவிலான இந்த சில்லை முன்தலை, சிறகுகள் மற்றும் வால்பகுதி சாக்லேட் பழுப்பு நிறத்திலும், முதுகு பழுப்பு நிறத்துடன் வெளிறிய கீறல்களையும், பிட்டம் அடர்ந்த சாக்லேட் பழுப்பு நிறத்தையும் மேல் இறகு மூடிகள் செம்பழுப்பு நிறத்திலும் காணப்படும். கன்னம், தொண்டை, மார்பு பகுதிகள் கரும்பழுப்பு நிறத்துடனும் மீதி அடிப்பாகங்கள் ஊதா கலந்த பழுப்பு நிறத்துடன் காணப்படும். மேற்கு தொடர்ச்சி மலையிலும் கிழக்கு தொடர்ச்சி மலையிலும் சில பகுதிகளில் மட்டும் பொதுவாக காணப்படும். தரிசு நிலங்கள், சுத்தப்படுத்தப்பட்ட காடுகள், குடியிருப்பு பகுதிகள் விவசாய நிலங்களில் காணலாம். பொதுவாக மலைபகுதியில் காணப்படும் இந்த சில்லை 6500 அடி உயரம் பகுதி வரைக்கும் வாழக்கூடியவை.

479. புள்ளிச்சில்லை

Scaly-breasted Munia (Spotted Munia)
Lonchura punctulata 10.7-12 cm.

தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பரவலாக காணப்படும். இந்த சில்லையின் முதிர்ச்சி அடைந்த பறவைகள் இனப்பெருக்க காலத்தில் சாக்லேட் பழுப்பு மேற்பகுதி வெளிறிய

கோடுகளையும், வால் மேல் மூடு இறகுகள் செம்பழுப்பு நிறத்துடன் பிட்டம் வெள்ளை கோடுகளை கொண்டும், கீழ்பகுதியில் தலையின் பக்கங்கங்கள் கழுத்து கீழ் தொண்டை செங்கல் பழுப்புடன் இருக்கும். மார்பு விலா பகுதிகள் கறுப்பு வெள்ளை கலந்து செதில் அடுக்குகள் போன்று காணப்படும். கூட்டம் கூட்டமாக (100 அல்லது அதற்கு மேற்பட்டும்) காணப்படும். மலை பகுதியில் 6500 அடி உயரம் வரை காணப்படும்.

480. கருந்தலைச்சில்லை

Tricolored Munia (Black-headed Munia)

Lonchura malacca 11.5 cm.

மேற்பகுதியில் தலை கறுப்பாகவும், மீதி பாகங்கள் கருஞ்சிவப்பு செங்கல் நிறத்திலும் பிட்டப்பகுதி அடர் செம்பழுப்பு நிறத்திலும் அமைந்திருக்கும். கீழ்பகுதியில் தொண்டையும் மார்பும் கறுப்பு நிறத்திலும், முன் வயிறும் மற்ற பாகங்கள் செங்கள் நிறத்திலும், நடுவயிறும், வால்கீழ் இறகுகளும் கறுப்பாக இருக்கும். ஒரே இடத்தில் வசிப்பது. சாதாரணமாக கண்டறியும் பறவை ஆனாலும் மழை காலத்திற்கு ஏற்ப சில அண்மை இடங்களுக்கு இடம்பெயரும். தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும் புதர்களை கொண்ட நீர் நிலைகளிலும், விவசாய நிலங்களிலும் சமவெளி காடுகளிலிருந்து 6000 அடி உயரம் வரை உள்ள மலை காடுகளில் காணப்படும்.

481. செங்கூம்பலகுச்சில்லை

Common Rosefinch *Carpodacus erythrinus* 14.5-15 cm.

சிட்டுகுருவியை விட சற்று பெரிதான இந்த செங்கூம்பலகு சில்லை, நல்ல ரோஜா நிறமாய் இருக்கும். முதிர்ச்சியடைந்த ஆணிற்கு உச்சந்தலையில் கருஞ்சிவப்பும், வெளிறிய ஊதா நிற கண்கோடு கண்களுக்கு பின் நீண்டிருக்கும். கழுத்து பக்கங்களும் பிடரியும் கருஞ்சிவப்பு கலந்த பழுப்பு நிறத்துடனும், முதுகும் இறகுகளும் கருஞ்சிவப்பும் பழுப்பும் கலந்து காணப்படும். பிட்டமும் கருஞ்சிவப்பு நிறம் கொண்டவை. அடிப்பாகத்தில் ஊதா கன்னம் மற்றும்

Balaji P B

473. Baya Weaver

Rama Neelamegam

474. Black-breasted Weaver

Balaji P B

475. Red Avadavat

Balaji P B

476. Indian Silverbill

Balaji P B

477. White-rumped Munia

Balaji P B

478. Black-throated Munia

Balaji P B

479. Scaly-breasted Munia

Balaji P B

480. Tricolored Munia

தொண்டை, கருஞ்சிவப்புமார்பு விலா மற்றும் வயிற்றுப்பகுதி வெளிரிய சிகப்பு, வெள்ளை கலந்த இளம்மஞ்சள் அடிப்பாகத்தில் காணப்படும். பெண் பறவை சிட்டுகுருவி போன்ற நிறத்தில் மேற்பக்கம் கரும்பச்சை நிறத்துடனும் இரண்டு வெளிறிய இறக்கை பட்டைகளை கொண்டிருக்கும் தொண்டை வெள்ளை நிறத்தில் பழுப்பு நிற கோடுகளுடனும், மார்பு பகுதி நிறைந்த கோடுகளுடனும், வயிறு வெள்ளையாக காணப்படும். தமிழகத்தில் அனைத்து பகுதிகளில் ஆங்காங்கே காணப்படலாம். மலைபகுதியில் 7000 அடி வரைக்கும் காணப்படும். வலசை வரும் பறவை.

Stragglers & Rarities

அபூர்வமாக அல்லது எப்போதாவது தென்படும் பறவைகள்

கீழ்க்கண்ட பறவையினங்கள் தமிழ்நாட்டில் எப்போதாவது காணப்பட்டதாக மின்னணு பறவை (Ebird) தரவுகளிலிருந்தும், புகைப்படங்களிலிருந்தும், மற்றைய தளங் களிலிருந்தும் காணலாம். ஆயினும், தொடர்ச்சியாகவோ அல்லது பரவலாகவோ, காணப்பட்டதாகச் சான்றுகள் இல்லாததால், இவற்றைத் தனியாக எப்போதாவது காணப்படும் இனங்களில் சேர்த்து மொத்தமாக தந்திருக்கிறோம்.

இதிலும், சில கருத்து மாறுபாடுகள் இருக்கலாம். ஆயினும், ஒரு நிலைப்பாடு எடுக்க வேண்டியிருப்பதால், இம்முடிவு.

Biju H

Bridled Tern

CC Laura Wolf

Falcated Duck

CC Ron Knight

Common Swift


Rama Neelamegam

South Polar Skua


CC Francesco Veronesi

Brown Skua

CC Melanie C Underwood

Pomarine Jaeger

Biju P B

Parasitic Jaeger

CC Alan Schmierer

Long-tailed Jaeger

CC born1945

Black-necked Grebe

CC Kanacharo

Streaked shearwater

Udhayakumar

Flesh-footed shearwater

CC Mike Prince

Wedge-tailed Shearwater

CC Thomas

Christmas island frigatebird

CC aniam2626

Great Frigatebird



Amish Parekh

Great white Pelican

Balaji P B

Chinese Pond heron

Balaji P B

Marshall's Iora

Rama Neelamegam

Brown-rumped Minivet

Balaji P B

Isabelline Shrike

Amish Parekh

White-naped Tit

Balaji P B

Yellow-browed warbler

Rama Neelamegam

Palla's Grasshopper warbler

Balaji P B

Sykes's warbler

CC Andy Morrfew

Spotted Flycatcher

Balaji P B

Dark sided flycatcher

Dr. Sumit Sengupta

Eye-browed thrush

Balaji P B

Daurian Starling

Balaji P B

Black-headed Bunting

Balaji P B

Grey-necked Bunting

Sundaravel

Grey-tailed tattler

CC Peder Toftegaard Olsen

Brown Noddy



Sundaravel

Lesser Noddy



CC Feroze Omardeen

Sooty Tern

தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒருங்கிணைந்த நீர்வாழ்ப் பறவைகளின் கணக்கெடுப்பு
(Synchronized Water Bird Count/ Estimate in Tamil Nadu)

வடதுருவத்தில் நிலவும் கடுங்குளிரிலிருந்து தற்காத்துக் கொள்ள இந்தியா போன்ற மிதமான தட்பவெப்பநிலை நிலவும் தென் துருவத்தில் உள்ள ஈரப்புலங்களை நோக்கி நீர்வாழ்ப் பறவைகள் இடம் பெயர்கின்றன. பின்னர் கோடைக்காலத்தின் ஆரம்பத்தில் மீண்டும் வடதுருவத்திற்கே திரும்பிச் செல்கின்றன. இதுபோல், தன்னுடைய வாழ்நாளில் 25 சதவீதம் தாங்கள் தோன்றிய இடத்திலும் 40 சதவீதம் வலசை வந்த இடங்களிலும் போக்கு கின்றன. பறவைகள் இனப்பெருக்கத்திற்காகவும், கடுங்குளிரிலிருந்து தப்பிப்பதற்காகவும் சில ஆயிரம் கிலோமீட்டரில் இருந்து 13,000 கி.மீ. வரை பறந்து செல்கின்றன. தங்களின் வாழ்நாளில் 30-40 சதவீத நேரத்தை வலசை பயணத்திலேயே செலவிடுகின்றன. இது ஒவ்வொரு பறவையினத்திற்குள்ளேயே வேறுபடுவது மட்டுமில்லாமல் ஒரே இனத்தின் வெவ்வேறு புவியமைப்புகளில் வாழும் பறவைகளின் இனத்தொகையிலும் வேறுபடுகின்றது.

நீர்ப்பறவைகள் இடப்பெயர்வின் போது காணக்கூடிய ஈரப்புலங் களைத் தங்களின் தங்குமிடங்களாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள பெரிய ஏரிகள், அணைக்கட்டுகள், ஆற்றோரங்கள், கடற்பகுதிகள், கரையோரங்கள், சதுப்பு நிலங்கள், உப்பங்கழிகள் போன்ற ஈரப்புலப் பகுதிகளை வலசைப் பறவைகள் இரை தேடும் இடமாகவும், ஓய்வெடுக்கும் இடங்களாகவும் பயன்படுத்திக் கொள்கின்றன. குளிர்காலத்தில் இவை ஈரப்புலங்களில் உள்ள உள்நாட்டுப் பறவைகளுடன் சேர்ந்து பெரிய இனத்தொகையை உடைய பகுதிகளாக காணப்படுகின்றன. உள்நாட்டு ஈரப்புலப் பகுதிகளில் சமூக காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக வளர்க்கப்பட்டுள்ள கருவேல மரங்கள் (Acacia nilotica) நீர்வாழ் பறவைகள் கூடுகட்டி இனப்பெருக்கம் செய்யவும், பகல் நேரத்தில் ஓய்வெடுக்கவும், இரவு நேரங்களில் தங்கவும் பயன்படுத்துகின்றன. இப்பறவைகளின் எச்சங்கள் நல்ல உரமாகும். இவை நீருடன் கலந்து பாசனப் பகுதிகளுக்குப் பாயும் போது

அங்கு நல்ல விளைச்சலைத் தருகின்றன. நீர்ப்பறவைகள் ஈரப்புலங்களின் திறந்த வெளிப்பகுதிகளையே அதிகம் விரும்புகின்றன. இதனால் பறவைகளை எண்ணுவது மிக எளிதாக உள்ளது. ஜனவரி மாதத்தில் கடுங்குளிர் நிலவுவதால் பெரும்பாலான வலசைப் பறவைகள் ஈரப்புலங்களில் தங்களுக்கான வாழிடப் பகுதிகளைத் தேர்வு செய்து வாழ்கின்றன. அதனால் ஒவ்வொரு ஜனவரி மாதத்திலும் உலக நாடுகள் அனைத்திலும் நீர்வாழ்ப் பறவைகள் கணக்கெடுப்பு நடைபெறுகின்றது. ஆசிய நீர்ப்பறவை கணக்கெடுப்பு ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தின் இரண்டாவது வாரத்தில் இருந்து மூன்றாவது வாரம் வரை ஆசியாவின் அனைத்து பகுதிகளிலும் நடத்தப்படுகிறது. எனவே, தமிழ்நாட்டிலும் ஒருங்கிணைந்த நீர்வாழ்ப் பறவை கணக்கெடுப்பு நடத்த வனத்துறையினர் மூலமாக திட்டமிடப்பட்டது.

ஒருங்கிணைந்த பறவைக் கணக்கெடுப்பின் முக்கிய நோக்கம்

1. தமிழ்நாட்டில் உள்ள ஈரப்புலங்கள் மற்றும் பறவைகள் சரணாலயங்களில் ஆண்டு தோறும் பறவை இனத்தொகை கணக்கிடப்பட்டு அதன் மூலம் மேலாண்மை திட்டங்கள் வகுக்க வகை செய்தல்.
2. பறவைகள் கணக்கெடுப்பின் போது கணக்கெடுத்த பறவைகளை மீண்டும் மற்றொரு இடத்தில் கணக்கெடுப்பதைத் தவிர்த்தல்.
3. தமிழ்நாட்டின் நீர்ப்பறவை கணக்கெடுப்பின் முடிவுகளைக் கொண்டு எதிர்கால ஆய்வு, பறவை கண்காணிப்பு, மேலாண்மை போன்றவற்றிக்குத் தேவையான அடிப்படைத் தகவல்களைப் பெறுதல்.

ஒருங்கிணைந்த நீர்ப்பறவை கணக்கெடுப்பானது தகுந்த வல்லுனர்களையும், ஆர்வலர்களையும் கொண்டு ஒரு குறிப்பிட்ட தேதியில் நடத்தப்பட்டது. இதன் மூலம் தமிழ்நாட்டு நீர்ப்பறவைகளின் பல்வகைமை மற்றும் அடர்வை மட்டுமே அறிந்துகொள்ள முடிந்தது. தமிழ்நாட்டில் உள்ள ஈரப்புலங்கள் மற்றும் பறவைகள் சரணாலயங்களில் நீர்ப்பறவைகளின் வலசை வரும் காலம், கூடு கட்டும் பறவைகள் அவை கூடு கட்ட

ஆரம்பிக்கும் நேரம் போன்ற தகவல்களைப் பெற தகுந்த விஞ்ஞான முறைப்படி தினமும் அல்லது வாரம் ஒருமுறை கணக்கெடுப்பு செய்ய வேண்டும்.

கணக்கெடுப்பு முறைகள் (Methodology)

வரைபடம் (Mapping)

நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பில் பல்வேறுபட்ட ஈரப்புலங்கள் மற்றும் சரணாலயங்களின் வரைபடங்கள் பயன்படுத்தப்பட்டன. வரைபடத்தில் கணக்கெடுப்பு செய்யப்பட வேண்டிய பகுதிகள் மற்றும் நடந்து செல்ல வேண்டிய பாதைகள் போன்றவற்றைக் கண்டுப்பிடித்து அடையாளமிட்டு பின்பு அப்பகுதிகளில் பயன் படுத்தப்படும்.

நீர்ப்பறவை கணக்கெடுப்பில் பயன்படுத்தக்கூடிய முறைகள் பல்வேறுபட்ட காரணிகளை உள்ளடக்கியது. எடுத்துக்காட்டாக:

1. கண்காணிக்கப்பட வேண்டிய பறவையினங்கள்.
2. இடத்தின் மொத்த பரப்பளவு.
3. கரையோரப் பகுதிகளை அணுகக்கூடிய வழிகளின் அமைப்பு.
4. கணக்கெடுப்புச் செய்யப்பட வேண்டிய பகுதிகளில் உள்ள உயரமான பிரதான இடங்கள்.
5. எண்ணிக்கையை முழுமையாக முடிக்க தேவைப்படும் நேரம்.
6. பங்கெடுப்பவர்களின் எண்ணிக்கை.
7. பயன்படுத்தக் கூடிய கருவிகள்.
8. சூரியன் இருக்கும் திசை போன்றவையாகும்.

நிலவழி எண்ணிக்கை (Ground Count)

இது மிகவும் எளிமையான மற்றும் அதிகமாகப் பயன்படுத்தக் கூடிய முறை. (வானஊர்தி மற்றும் படகு மூலம் செய்யப்படும் கணக்கெடுப்பிற்கு எதிர்மறையானது.) ஈரப்புலங்களின் பரப்பளவை பொறுத்து நடந்தோ, மிதிவண்டி மூலமாகவோ, மற்ற வாகனங்கள் மூலமாகவோ கணக்கெடுப்பை மேற்கொள்ளலாம்.

இம்முறையில் பொதுவாக ஈரப்புலங்களின் கரையோரங்களில் நடந்து சென்று பார்க்கக்கூடிய பறவைகளை தொலைநோக்கியின் மூலமாக இனங்கண்டு பதிவு செய்யப்படும். அதே பாதையைத் திரும்ப கணகெடுப்பிற்குப் பயன்படுத்தலாம். நீர்வாழ்ப் பறவைகள் பெரும்பாலும் ஒரே இனத்தைக் சார்ந்தோ அல்லது பல்வேறு இனங்கள் ஒன்று சேர்ந்தோ பெருங்கூட்டமாக காணப்படும். அச்சமயம் அவற்றை சிறுபகுதிகளாக பிரித்து இனவாரியாக தொலைநோக்கியின் உதவியுடன் பதிவு செய்ய வேண்டும். அதே கூட்டத்தைத் திரும்பத் திரும்பக் கணக்கிடும் போது சிறு பறவைகளோ, அரிதான பறவைகளோ விடுபடாமல் சரியாக பதிவுசெய்யலாம்.

படகு மூலம் கணக்கெடுத்தல் (Boat Survey)

ஆறு, ஏரி, நீர்த்தாவரங்கள் அதிகமாக உள்ள கரையோரப் பகுதிகள், சதுப்பு நிலக்காடுகள் போன்ற ஈரப்புலங்களில் நடந்து செல்ல முடியாத பகுதிகளில் பறவைகள் கணக்கிட படகுகள் பயன்படுத்தப்படுகிறது. படகுகள் மூலம் கணக்கெடுப்பை மேற் கொள்ளும் போது அதிக இடப்பரப்பில் உள்ள பறவைகளைத் துல்லியமாக பார்க்க முடியும். படகு மூலம் கணக்கிடும்போது பறவைகளுக்குத் தொந்தரவு வராத வகையில் கவனமாக படகைச் செலுத்த வேண்டும். வானூர்தி மூலமாக கணக்கிடுவதை ஒப்பிடும்போது இது மிகவும் எளிதானதும், குறைவான செலவு உடையதுமாகும்.

துல்லியமாக எண்ணும் முறைகள்

(Methods for accurate counting)

1. பார்க்கக் கூடிய பறவைகளைத் தனித்தனியாக 1,2,3,4,5.. என்று எண்ணுதல்.
2. பெருங்கூட்டமாகச் சிதறிக் காணக்கூடிய பறவைகளைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து, பின்னர் 3, 7, 4, 2, 1 என்று கணக்கிட்டுப் பின்பு மொத்தமாக மதிப்பிட வேண்டும்.

3. பெருங்கூட்டமாகக் இருக்கக் கூடிய பறவைகளைத் தனித்தனியாக எண்ணுவதைவிட காணக்கூடிய பறவைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து 2, 4, 6, 8, 10, 12 மற்றும் 100, 200, 300 என்று பெருக்கி வேகமாக எண்ணலாம்.

எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்கான முறைகள் (Methods for Estimating Numbers)

பறக்கும் போதோ, அமர்ந்திருக்கும் போதோ பெருங்கூட்டமாக காணப்படும பறைவகளின் எண்ணிக்கையைக் கணக்கிடும் முறைக்குப் பகுதி (Block) முறை என்று பெயர். இம்முறையில் பறவை கூட்டத்தின் அமைப்பையும், எண்ணிக்கையையும் சரியான முறையில் கணக்கிடலாம். ஒவ்வொரு பகுதியும், 10, 20, 100 என்று முழு நம்பராக இருக்க வேண்டும். இது போல் பல பகுதிகளின் கூட்டுத்தொகையை வைத்து ஒரு கூட்டத்திற்குள் உள்ள பறவைகளின் எண்ணிக்கையைச் சரியாக கணக்கிட முடியும்.

Shaded circle = number accurately counted
Unshaded circles = number estimated

This flock contains an estimated 60 - 70 birds (i.e. 6 blocks of 10 birds plus several left over). (NB actual flock size is 66 birds.)



This flock contains an estimated 450 - 500 birds (i.e. 9 blocks of 50 birds plus several left over). (NB actual flock size is 491 birds.)

கலப்பினக் கூட்டத்தை எண்ணும் முறைகள்
(Counting Mixed Flocks)

பல இனங்களைக் கொண்ட கலப்பினப் பறவைகள் கூட்டத்தை எண்ணுவதற்கு இரண்டு வகையான அடிப்படை முறைகள் பயன் படுத்தப்படுகின்றன.

இனவாரியாக மதிப்பீடு செய்தல்
(Species by Species)

பல்வேறு வகையான பறவையினங்கள் ஒன்றுகூடி காணப்படும் போது அக்கூட்டத்தில் உள்ள பறவைகளை இனவாரியாக பிரித்துக் கணக்கிட வேண்டும். இம்முறையில் அதிக எண்ணிக்கையில் காணக்கூடிய பறவைகள் முதலிலும் குறைவாக இருக்கக்கூடிய பறவைகள் அடுத்தடுத்தும் எண்ணப்பட வேண்டும். எடுத்துக் காட்டாக 613 அரிவாள் மூக்கு உள்ளான்கள் மற்றும் அவற்றில் பாதி எண்ணிக்கையுடைய கொசு உள்ளான்கள் இக்கூட்டத்தில் உள்ளன எனக்கணக்கிடலாம்.

பூஜ்ய முறை எண்ணிக்கை (Zero Count)

ஒரு குறிப்பிட்ட பகுதியைக் கணக்கிடச் செல்லும் போது அப்பகுதியில் கடும் வறட்சி, கடுங்குளிர் அல்லது இடையூறுகள் காரணமாக எந்த பறவையினமும் காணப்படவில்லையெனில், அப்பகுதியில் பூஜ்ய எண்ணிக்கை என்று கணக்கிடப்பட வேண்டும். இல்லையெனில், பறவையினங்களின் மொத்த இனத்தொகையை மதிப்பீடு செய்யும்போது, இப்பகுதிகளில் பறவைக் கணக்கெடுப்பு நடைபெறாதது போல் தோன்றும். இப்பகுதிகளை உடனடியாக பறவை கணக்கெடுப்பு ஒருங்கிணைப் பாளர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

தங்குமிட எண்ணிக்கை மதிப்பீடு (Roost Count)

வாத்தினங்கள், உள்ளான்கள், நாரைகள், கொக்குகள், கடற்காகங்கள் மற்றும் ஆலாக்கள் இனப்பெருக்கம் இல்லாத காலங்களில் இரவு நேரங்களில் பெருங்கூட்டமாக தங்கும். இவ்விடங்களைக் கண்டறிந்து மேற்குறிப்பிட்டக் கணக்கெடுப்பு

முறையில் தகுதியான முறையினைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யலாம்.

குழுக்களாக கூடுகட்டும் இனங்களை எண்ணுதல்

(Counts of Colonially Nesting Species)

கூழைக்கிடா, நீர்க்காகம், நாரை, கொக்கு, அரிவாள் மூக்கன், கரண்டிவாயன், பூநாரை, கடற்காகம், ஆலா குடும்பத்தைச் சார்ந்த பறவைகள் இனப்பெருக்க காலத்தில் மரங்களிலோ, கரையிலோ பெருங்கூட்டமாக கூடுகட்டி இனப்பெருக்கம் செய்யும். இவ்விடங்களில் நடந்தோ, வாகனங்கள் மூலமாகவோ அல்லது படகுகள் மூலமாகவோ கணக்கீடு செய்யலாம். இவ்விடங்களில் கணக்கீடு செய்யும்போது கூடுகளில் உள்ள முட்டைகள், குஞ்சுகள் போன்ற வற்றுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாத வண்ணம் கணக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பாக, ஓரிடத்தில் பறவைகள் கணக்கிடும்போது, அவ்விடத் திற்குத் தகுந்த எண்ணிக்கை முறைகளையே ஒவ்வொரு கணக் கெடுப்பின்போதும் பயன்படுத்த வேண்டும்.

பறவைகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதன் முக்கியத்துவம்

பறவைகளின் சிறப்பியல்புகளில் இனப்பெருக்கம் செய்யும் இடத்திலிருந்து குளிர்காலப் புகலிடங்களுக்கு வலசை சென்று பின் மீண்டும் கோடையில் தமது பிறப்பிடத்திற்கு மீளும் விதம் குறிப்பிடத்தக்கது. ஆண்டுதோறும் பெரும்பாலான பறவைகள் வடபுலத்திலிருந்து குளிர்காலத்தில் தனியாகவோ, கூட்டமாகவோ வான்வழியாகத் தென்பகுதிக்கு வலசை செல்கின்றன. சிறிது காலம் இங்கு தங்கி, இரை உண்டு, வளர்ந்து வடபகுதிக்கு மீண்டும் திரும்புகின்றன. இதுவே வலசை எனப்படுகிறது. வலசை இல்லாத பறவைகள் நிலையான வாழிடப் பறவைகள் என்றழைக்கப்படும்.

சில இனப்பறவைகள் மட்டும் ஏன் இடம் பெயர்கின்றன? ஏனெனில் வலசைப் பறவைகளுக்கு இயற்கையுடன் ஏற்படும் போராட்டத்தில் வெற்றியடைய இடப்பெயர்ச்சி அவசியமாக உள்ளது என்பதுதான் காரணம். சில பறவையினங்களில் ஒரு கூட்டத்தில் ஒரு பகுதி மாத்திரமே இடம்பெயர மற்ற பகுதி அங்கேயே இருப்பதும் உண்டு. வடதுருவத்தில் கூடுகட்டி இருக்கும் இடங்களிலிருந்து, வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும், வெப்பநாட்களுக்கு மலை உச்சிகளிலிருந்து கீழ் நோக்கியும் பறவைகள் வலசை வருகின்றன. வெப்பநாடுகளில் வேனிற் காலத்தில் வெப்பம் அதிகரிக்கும் போது கடும் வெப்பத்திலிருந்து தப்புவதற்கும் இடப்பெயர்ச்சி உதவியாக இருக்கிறது. வேனிற்காலத்தில் நேர்மாறான (தெற்கிலிருந்து வடக்கு நோக்கி) திசையில், பறவைகள் இடம்பெயரும். தகைவிலான், வாத்தினங்கள், உள்ளான்கள் மற்றும் பருந்துகள் போன்ற பறவைகள் வடபகுதிகளில் இருந்து வலசை வருவன. பலவகையான வாத்து இனங்கள் கடும் பனிப்பொழிவிலிருந்து தப்புவதற்காகவே தெற்கு நோக்கி வலசை வருகின்றன. ஊசிவால் சிறவி என்ற பறவை இதற்கு நல்ல உதாரணம். பட்டைவால் மூக்கன் (Bar-tailed Godwit) என்ற பறவை அலாஸ்காவிலிருந்து, நியூசிலாந்திற்கு 11,000 கி.மீ. தூரம் தரையிறங்காமல் உணவு மற்றும் ஓய்வின்றி வலசை வருகின்றன. வலசை தொடங்குவதற்கு முன்பு தனது உடல் எடையில் 55 சதவீத அளவிற்கு ஆற்றலளிக்கும் கொழுப்பை உடலில் சேமித்து வைப்பதன் மூலம் இவை தடையில்லாமல்

பறக்க முடிகிறது. பெரும்பாலான வாத்தினங்கள் வடஐரோப்பிய தீவுகள், நார்வே, இங்கிலாந்து, வடஅயர்லாந்து, வடகிழக்கு சைபீரியா, அலஸ்கா ஆகிய பகுதிகளில் கூடுகட்டி இனப் பெருக்கம் செய்கின்றன. செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் தென்பகுதியை நோக்கி வலசை செல்லும் இவை மீண்டும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் தன் இருப்பிடம் திரும்புகின்றன. இந்தியாவில் கூடுகட்டி இனப்பெருக்கும் செய்யும் சில வாத்தினங்கள் வெகு தூரத்திற்கு குடிபெயராமல் இங்கும், அங்கும் இடம் பெயர்கின்றன. தகுந்த மழை பெய்தபின் மீண்டும் தங்கள் இடங்களுக்குக் கூடு கட்ட திரும்புகின்றன.

பருவகாலங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களால்தான் பறவைகள் வலசை போகின்றன என்பது எல்லோரும் அறிந்த கருத்து. இது மட்டுமல்லாமல், இனத் தொகையில் ஏற்படும் வேறுபாடுகள் இனப்பெருக்கம், நேர மாற்றம் போன்றவைகளும் வலசையைத் தூண்டுகின்றன என்று ஆய்வுகள் கூறுகின்றன. பறவைகள் வலசை வரும் போது தன்னுடலில் சில புற ஒட்டுண்ணிகளையும் எடுத்துச் செல்கின்றன. உன்னி, பேன், நுண்ணுயிரிகள் போன்றவை பறவைகளின் சிறகுகளில் ஒட்டி இருக்கும். இவை மற்ற நாடுகளுக்குச் செல்லும் போது தன்னுடலுடன் எடுத்துச் செல்லப்பட்டு எளிதில் பரவுகின்றன. மனிதனைத் தாக்கக்கூடிய பறவை காய்ச்சல் (Avian influenza) நோய்ப்பரவலில் வலசை பறவைகளின் பங்கு பற்றி நம்நாட்டில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. தாவரங்களின் மகரந்தத் தூள்களையும், மிதவை உயிரினங்களையும் பறவைகள் வலசையின்போது ஒரு நாட்டிலிருந்து பல நாடுகளுக்கு எடுத்துச் செல்கின்றன என்று ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. உள்ளான், சிட்டு போன்ற வலசை பறவைகளுக்கு வௌவால், பருந்து போன்ற பறவைகளால் வலசை பாதையில் ஆபத்து உருவாவதும் உண்டு.

மேலும் இதுபோன்ற விபரங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் பறவைகளை ஆண்டுதோறும் கணக்கிடுதல் மிக அவசியம். அதிக எண்ணிக்கையில் பறவைகளை அடையாளம் கண்டு ஆராய்ச்சி செய்வதால் நாம் மேலும் பல விபரங்களைத் தெரிந்து கொள்ள இயலும்.

நிலவாழ் பறவைகளை கணக்கெடுக்கும் விஞ்ஞான முறைகள்:

சாதாரணமாக, தரைப் பறவைகளைக் கணக்கெடுக்க, இரண்டு முறைகள் பெரிதும் பயன்படுகின்றன. அதாவது, கோட்டுப்பாதை முறை மற்றும் குறிப்பிட்ட இட முறை என (Line Transect & Point Count) இவை பண்டு தொட்டே புழக்கத்தில் உள்ள முறைகள். அவ்வப்பொழுது மேம்படுத்தப்பட்டு செயல்படுகின்றன.

1. கோட்டுப்பாதை முறை: இம் முறையில் ஒரு தெரிந்தெடுக்கப்பட்ட பாதையில் நிதானமாக நடந்து சென்று இருபுறமும் காணப்படும் பறவை இனங்களின் எண்ணிக்கைகளை இனவாரியாக எண்ணப்படுவது. பெரும்பாலும் இம்முறை குறைந்த நேரத்தில் பெரிய அளவிலான வாழிடங்களைக் கணக்கெடுக்க உதவும். இது நன்கு காணக்கூடிய பறவைகளைத்தான் துல்லியமாக கணக்கெடுக்க உதவும். ஆயினும், ஒரே வாழ்விடத்தில் வசிக்கக்கூடிய பறவைகளுக்குத் தான் இதன் பயன்பாடு நல்ல விளைவுகளைக் கொடுக்கும். பல்வகைப் பட்ட வாழிடங்களுக்கு இம்முறை பொருந்தாது.
2. குறிப்பிட்ட இடமுறை: இது ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து குறிப்பிட்ட நேரக் கெடுவில் பறவைகளைக் கணக்கெடுப்பது. பின் அடுத்த குறிப்பிட்ட இடம் சென்று தொடர்வது. இது வாழிடத்தில் பல இடங்கள் அணுக இயலாத நிலையில் மற்றும் எளிதில் காண இயலாத இனங்கள் உள்ள போது பெரிதும் பயன்படும்.

பறவைகளுக்கு வளையமிடுதல்

பறவைகளின் வலசை குறித்து அறியவும், ஆராயவும் பெரிதும் பயன்படுவது அவற்றுக்கு வளையமிடுதலாகும். அதாவது, வலசைப் பறவைகளைக் கண்ணி வைத்துப் பிடித்து அவற்றின் கால்களில் குறியிடப்பட்ட (Marked) வளையங்களைப் பொருத்திப் பின் சுதந்திரமாக விட்டுவிடுவது. மற்ற இடங்களில் பிடிபடும்போது அவைகளின் வலசைப் பாதை, பயண மார்க்கம், மற்றும் இனப்பெருக்கம் செய்யுமிடம் போன்றவற்றை அறியலாம். ஏனெனில், உலக நாடுகளில் பல, இது போன்ற குறியிடப்பட்ட வளையங்களையே உபயோகிக்கின்றன. அவற்றுக்கு ஒவ்வொரு குறிப்பான் (Code) உண்டு. அதை வைத்து அப்பறவை எவ்விடம் வளையமிடப்பட்டது என்று அறியலாம்.

இதை ஒரு பெரும் பணியாக, பம்பாய் இயற்கை வரலாற்று சங்கத்தின் கோடிக்கரை மையம் பல ஆண்டுகளாகச் செய்து வருகிறது. இதன் மூலம் வலசை வரும் பெரும்பாலான பறவைகளின் வலசைப் பாதையைக் கண்டறிய இயன்றது. அதைக் குறித்து ஒரு அரிய புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. (Indian Bird Migration Atlas) அதன் பெயர் வலசைப் பறவைகளின் இந்திய நிலப்பட ஏடு.

பறவையியலில் ஆர்வமுள்ளவர்கள் கோடியக்கரையில், முனைவர் திரு. பாலச்சந்திரன் தலைமையில், பம்பாய் இயற்கை வரலாற்றுக் சங்க மையம் நடத்தும் பறவைகள் வளையமிடுதல் பயிற்சியை மேற்கொள்ளுதல் மேலும் அவர்களது அறிவாற்றலை வளர்த்துக் கொள்ள உதவும்.



பறவைகள் கணக்கெடுப்பு பயிற்சி முகாம்



வளையங்கள் மீட்பு இடங்கள்
(Recovery Maps)

Caspian Tern Recovery Location Map



Common Tern Recovery Location Map



வளையங்கள் மீட்பு இடங்கள்

(Recovery Maps)

Curlew Sandpiper Recovery Location Map



Little Stint \Recovery Location Map



வரைபடத் தொகுப்பு: **துஹினா கட்டி**

டிரான்ஸ்மீட்டர் பொருத்துதல்

கணக்கெடுப்பு மற்றும் வளையமிடும் பயிற்சி



வளையமிடுதல்

பயிற்சி முகாம்



மேற்கோள் நூல்கள்:

1. இந்திய மற்றும் இந்திய துணைக்கண்டப் பறவைகள் 10 தொகுப்பு - சாலிம் அலி மற்றும் தில்லான் ரிப்ளி.

2. தென் இந்திய பறவைகள். BNHS பீல்டு கைடு - ரிச்சர்ட் கிரமிட், டிம் இன்ஸ்கிப், கோபிநாதன் மகேஷ்வரன்.

ஆசிரியர்களைப் பற்றிய சிறுகுறிப்பு

முனைவர் **சி.பாலசந்திரன்**

இணை இயக்குநர், பம்பாய் இயற்கை வரலாற்று சங்கம்
38 வருடங்களாக பறவை ஆராய்ச்சியில் அனுபவம் உள்ளவர்.
வலசை வரும் பறவைகளின் ஆராய்ச்சியில்
இந்திய அளவில் முன்னிலையில் இருப்பவர்.

பு.பா. பாலாஜி

சிறந்த பறவை ஆர்வலர்
மற்றும் புகைப்பட கலைஞர்.
கோவையில் முன்னணி தொழில்
முனைவோரில் ஒருவர்.

வே.திருநாவுக்கரசு இ.வ.ப.

முதன்மை வன பாதுகாவலர்.
ஈரப்புல நிலங்கள்,
பறவைகள் சரணாலயங்கள்
பாதுகாப்பிலும், மேலாண்மையிலும்
திறமையும் பெயரும் பெற்றவர்.

BNHS India CONSERVING NATURE SINCE 1883

பம்பாய் இயற்கை வரலாற்று சங்கம்